சமய சஞ்சீவி

அல்லது

வெளுப்பானுக்கு வெளுப்பான் ஜாதி வண்ணான்

வடுவூர் - கே. துரைஸாமி ஐயங்கார் B. A.

எம். எஸ். ராமுலு கம்பெனி
286, அப்பா பில்டிங்ஸ்
எஸ்பிளனேட் :: மதராஸ்

PRINTED AT THE
ORIENTAL HOME UNIVERSITY PRESS
TRIPLICANE, MADRAS.

ஸ்ரீ

சமய சஞ்சீவி

அல்லது

வெளுப்பானுக்கு வெளுப்பான் ஜாதி வண்ணான்

அத்தியாயம்—1

கோட்டான் மர்மம்—குண்டன் கர்வம்

"பொறுத்தது பொறுத்தோம்; இன்னம் கொஞ்ச நேரம்தான் பொறுத்துப் பார்ப்போமே. தலை போவதானாலும், நம் ஸப்-இன்ஸ்பெக்டர் சமய சஞ்சீவி ஐயர் சொன்ன சொல் தவறமாட்டார். அவர் எப்படியும் வந்தே தீருவார். நாம் சாப்பிட்ட பிறகு அவர் வந்தால், நம்முடைய நிலைமை சங்கடமானதாகிவிடும். நம்மை நாம் அவமரியாதைப் படுத்தியதாக அவர் நினைத் கொள்வார். அதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது"

மிஸ்டர் ராமநாதன் தமக்கெதிரில் எரிந்துகொண் ந்த மின்சார விளக்கைச் சுற்றிலும் பறந்த ஈசல்களைப் த்துக் கூறினார்.

அவருக்கெதிரில் நாற்காலியில் உட்கார்ந்திருந்த வேறொருவர், "நீங்கள் சொல்வது சரியானதே. நான் சம்பந்தப்பட்ட வரையில், எனக்கு வயிற்றில் பசியுமில்லை; அவசரமுமில்லை. எவ்வளவு நேரம் வேண்டுமானாலும், நான் காத்திருக்கத் தயார். நிலாச்சாப்பாடு சாப்பிடுவதென்றால், குறைந்தது ஆண்களில் பத்துப் பேர்கள், பெண்களில் பத்துப் பேர்களாவது வேடிக்கையும் விளையாட்டுமாய் இருந்து சாப்பிடுவதுதான் சுகம். அதை நாம் மூவர் சாப்பிட ஏற்பாடுசெய்தோம். அதிலும் ஒரு புள்ளி குறைந்து போனால், அதில் சுவாரஸ்யமே இல்லை. அவரும் வரட்டும்" என்று கூறிவிட்டு ஆகாயத்தில் காணப்பட்ட சந்திரனையும், அதற்கு சிறிது தூரத்தில் ஓடிய வெண் மேகப் படலங்களையும் மாறி மாறி வியப்போடு பார்த்து, "இன்று நிலவு நிரம்பவும் ஜோகுஸாகத்தான் இருக்கிறது. இன்னொரு வேடிக்கையைப் பார்த்தீர்களா! சூரிய சந்திராள் தெற்கு வடக்காய்ப் போனால்கூட, நான் சொன்ன சொல் தவறமாட்டேன் என்று ஜனங்கள் பழமொழி சொல்லுகிறார்களே! அதாவது, சூரியனும், சந்திரனும் ஒருநாளும் தெற்கு வடக்காய்ப் போவதில்லை என்பது சர்வ சாதாரணமாய் எல்லோரு மறிந்த விஷயம். இதோ ஆகாயத்தைப்பாருங்கள். சந்திரன் தெற்கு திசையை நோக்கி ஓடுவதுபோல் தோன்றுகிறது!" என்றார்.

மிஸ்டர் ராமநாதன் :—ஆம். அப்படித்தான் தெரிகிறது. வெள்ளை மேகங்கள் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி ஓடுகின்றன. அதனால் சந்திரன் தெற்கு நோக்கி ஓடு போல் தோன்றுகிறது. நாம் ரயிலுக்குள் உட்கா பார்த்தால், இரண்டு பக்கங்களிலும் உள்ள மரங்கள் ர போவதற்கு எதிர்த்திசையில் ஓடுவதுபோல் தெரிகி

வல்லவா. நம் கண்கள் உண்மையைக் கண்டாலும் சில சமயங்களில் பொய் மயக்கம் கொள்ளுகின்றன.

மற்றவர்:—மெய்தான். இன்று பௌர்ணமி திதிபோல் இருக்கிறது. சந்திரன் பூர்ண வடிவமா யிருக்கிறது. பௌர்ணமி நிலவில் பலர் கூடிக்கொண்டு சாப்பிடுவது ஒரு தனியான ஆநந்தமென்று முன்னோர்கள் தெரியாமலா ஏற்படுத்தி யிருக்கிறார்கள்! முன்னோர்கள் எல்லா சுகங்களையும் அநுபவித்து அநுபவித்துக் கரைகண்டுதான் இன்னது, நல்லது, இன்னது கெட்டது என்று வழி காட்டி இருக்கிறார்கள்.

மிஸ்டர் ராமநாதன்:—(தமது மணிக்கட்டு கடிகாரத்தைப் பார்த்து) சே! மணி ஒன்பதாகிவிட்டதே! இன்று மாலையில் ஸப்-இன்ஸ்பெக்டர் இங்கே வந்திருந்தபோது, சரியாய் எட்டு மணிக்கு வந்துவிடும்படி நான் சுமார் இருபது தடவைகள் சொல்லியிருப்பேன். அவர் அவசியம் எட்டு மணிக்கே வந்துவிடுவதாக ஒப்புக்கொண்டார்; அதன்படி வரவில்லை. இதுதான் வெள்ளையர்களுக்கும் கருப்பர்களுக்கும் உள்ள வித்தியாசம். தமக்காக மற்றவர்கள் காத்திருப்பார்களே என்று வெள்ளையர்கள் உணர்ந்து நிமிஷக் கணக்கின்படி வருவார்கள்; கருப்பர்கள் தமது காரியத்திலேயே கண்ணாயிருப்பரன்றி, அதனால் அயலாருக்கு ஏற்படும் அசௌகரியத்தை எண்ணிப் பார்ப்பதில்லை. கருப்பருக்கும் கடிகார ஒழுங்கிற்கும் வெகுதூரம். ஆனால், நாம் உள்ளதைச் சொன்னால் கருப்பருக்கு உடனே மூக்கின் மேல் கோபம் உண்டாவது நிச்சயம்.

மற்றவர்:—மணி ஒன்பதாய் விட்டதா! நான் இப்போதுதான் வந்தமாதிரி இருக்கிறது. அப்படியானால், நான் இனி இங்கே அதிகநேரம் இருப்பதற்கில்லை.

மிஸ்டர் ராமநாதன் :—என் ?

மற்றவர் :—சங்கதி உங்களுக்குத் தெரிந்ததுதானே. நான் ஒரு கிழவியின் வீட்டில் குடியிருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியாதா ! அவள் முழுச்செவிடு. ஓசையினல், அவளிடம் விஷயத்தைத் தெரிவிக்கவே முடியாது ; சைகையின் மூலமாய்த்தான் அவளுக்கு எதையும் தெரிவிக்க வேண்டும். $9\frac{1}{2}$ மணியானல் அவளுக்குத் தூக்கம் வந்துவிடும். அதற்குமேல் அவளை எழுப்புவதென்பது கூடாத காரியம். நான் பொழுது விடியும் வரையில் கதவை இடித்துக்கொண்டிருந்தாலும், அவள் அதை உணரமாட்டாள்.

மிஸ்டர் ராமநாதன் :—நீங்கள் வெளியில் போயிருந்தால், கதவைத் திறந்துவைக்கச் சொல்லுகிறதுதானே !

மற்றவர் :—ஐயோ ! அவளுக்கு பயம் அதிகம். அவள் எழுபது வயது யௌவனக் குமரி. கதவைத் திறந்து வைத்தால் அவளுடைய கற்பிற்கு அபாயம் வந்துவிடுமாம்.

மிஸ்டர் ராமநாதன் :—(சிரித்துக்கொண்டு) நன்றாய்ச் சொல்லுகிறீர்கள் ! அவள் கதவைத் திறக்காவிட்டால், நீங்கள் இங்கேயே படுத்துக் கொள்ளுங்களேன்—என்று கூறிய வண்ணம் எழுந்து எதிரிலிருந்த மொட்டை மாடத்தில் உலாவத் தொடங்கினர்.

அடுத்த நிமிஷம் மற்றவரும் எழுந்து உலாவத் தொடங்கி, முன்புறத்திலிருந்த கைப்பிடிச் சுவரண்டை போய் நின்றுகொண்டு வீதிப்பக்கம் பார்த்தார். வீதியில் ஜன நடமாட்டம் ஓய்ந்துபோயிருந்தது. அந்த வீதியில் அவர்கள் இருந்த வீடு எந்தப் பக்கத்தில் இருந்ததோ அந்தப் பக்கத்தில் மாத்திரம் வீடுகள் இருந்தன. எதிர்ப்பக்கத்தில் ஒரு பெரிய தென்னந்தோப்பு இருபுறங்களிலும் வீசா

லித்திருந்தது. அதில் பெரும்பாலும் தென்னை மரங்களும், மிகுதி பாகங்களில் மாமரங்கள், ஆலமரங்கள் முதலியவை களும் அடர்ந்தும், பின்னிக்கொண்டும் காணப்பட்டன. ஆகவே, தோப்பின் தரை பெரும்பாலும் இருளடைந்ததாய்க் காணப்பட்டது.

ஆனால் சில இடங்களில் மாத்திரம் இடை இடையே சந்திரனுடைய கிரணம் மரக்கிளைகளின் வழியாகவும், இலைச் சந்துகளின் வழியாகவும் கீழேபடிந்த தாகையால், அதனால் சொற்ப வெளிச்ச முண்டாயிருந்தது. அந்த மனிதர் நின் றிருந்த இடத்திற்கு நேர் எதிரில் காணப்பட்ட இடத்தில் மரக்கிளைகளின் வழியாகக் கீழே வெளிச்சம் ஓர் இடத்தில் தெரிந்தது. அங்கு காணப்பட்ட ஏதோ ஒரு வடிவத்தைப் பார்த்துவிட்டு அவர் வியப்புடன் அந்த இடத்தையே பார்த்தபடி யிருந்தார்.

சந்திரனுடைய வெளிச்சத்தில் காணப்பட்ட ஒரு மனிதனுடைய வடிவம் இருளில் மறைந்ததைஅவர்காணவே, அவன் தோட்டத்தின் ஆளாயிருக்க வேண்டுமென்றும், அந்த இருளில் அவன் அங்கே யிருக்க அதுவே காரணமா யிருக்க வேண்டுமென்றும், அவர் முடிவு செய்துகொண்டு மறுபடியும் வீதியின் இரண்டு பக்கங்களையும் பார்த்து ஸப் இன்ஸ்பெக்டர் வருகிறாரா என்பதை கவனித்தார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் காணப்படவில்லை யாகையால், அவர் உடனே பின்புறம் திரும்பி ராமநாதனை நோக்கி, “ஏதாவது கேஸ் விஷயமாய் அவசரமாக எங்கேயாவது போயிருப்பாரோ என்னவோ!” என்று கூறிவிட்டுத் தாம் முன்னர் உட்கார்ந்திருந்த நாற்காலியினருகில் சென்று அதில் உட்கார்ந்து கொண்டார். ராமநாதன் உலாவுவதை நிறுத்தி

விட்டு அவரைப் பார்த்தபடி நின்றுகொண்டு, "அப்படித் தானிருக்கவேண்டும். அதிருக்கட்டும்; உங்களிடம் நேற்றைய தினம் முதல் நான் ஒரு விஷயத்தைப்பற்றிக் கேட்கவேண்டுமென்று எண்ணி யிருந்தேன். அந்த விஷயம் இப்பொழுது தான் நினைவிற்கு வருகிறது. இரண்டு நாட்களாக இந்த ஊரில் பல இடங்களிலும் ஒரு பைத்தியக்காரனை அநேகர் பார்த்ததாய்ச் சொல்லிக் கொள்ளுகிறார்களே! அது வாஸ்தவந்தானா?" என்று வினவினார்.

மற்றவர்:— என்னிடத்திலும் அதைப்பற்றிப் பலர் சொன்னார்கள். ஆனால் பைத்தியக்காரனை யாரும் பார்க்கவில்லை.

ராமநாதன்:— (வியப்பைத் தோற்றுவித்து) என்ன! யாரும் பார்க்கவில்லையா!

மற்றவர்:—ஆம். யாரும் பார்த்திருக்க மாட்டார்கள்; ஆனால் அவனுடைய குரலை மாத்திரம் கேட்டிருப்பார்கள்; அவன் வாயில் வந்தபடி பிதற்றுவதையும், ஏதோ ஒரு பாட்டின் ஓர் அடியைத் திருப்பித் திருப்பி பாடுவதையும் கேட்டார்களாம்.

ராமநாதன்:—ஓகோ! பைத்தியத்திற்குப் பாட்டுகூடவா!

மற்றவர்:—ஏன்! பாடுகிற பைத்தியம் இல்லையா!

ராமநாதன்:—(நெற்றியில் கைக் கட்டைவிரலை வைத்து ஏதோ யோசனை செய்தபிறகு) இதோ வருகிறேன். இருங்கள்—என்று கூறிவிட்டு அருகிலிருந்த படியின் வழியாகக் கீழே வேகமாகப் போய் ஐந்தே நிமிஷகாலத்தில் கையில் ஒரு புஸ்தகத்துடன் திரும்பிவந்து சேர்ந்து, அதை மேஜையின் மேல் வைத்துப் பக்கங்களை மள மளவென்று புரட்டினார். அது ஒரு பெரிய நோட்டுப் புஸ்தகமாகக் காணப்

பட்டது. அதில் மிகவும் நெருக்கமாக விஷயங்கள் எழுதப் பட்டிருந்தன. ஒரு பக்கத்தில் காணப்பட்ட ஏதோ ஒரு விஷயத்தை அவர் படித்துவிட்டு மற்றவரிடம், "அவன் தெலுங்குப்பாட்டா பாடுகிறான் ?" என்று வினவினார்.

மற்றவர் :—(வியப்புடன்) அந்த விஷயம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது? நான் உங்களிடம் அதைச் சொல்லவில்லையே!

ராமநாதன் :—நீங்கள் சொல்லாவிட்டால் என்ன? அது எனக்குத் தெரியாமல் போய்விடுமா? இந்தப் புஸ்தகமல்லவா எனக்கு எல்லா விஷயங்களையும் காட்டுகிறது. அவன் பாட்டுப் பாடுவதை மாத்திரம் இது சொல்லவில்லை; இன்னும் எத்தனையோ விஷயங்களைச் சொல்லுகிறது. நீங்களே படித்துப் பாருங்களேன்—என்று கூறியபடி அந்தப் புஸ்தகத்தை மற்றவரருகில் நகர்த்திவைத்து, வலது கைவிரலால் ஒரு வரியைக் காண்பித்து, "இங்கிருந்து படியுங்கள்" என்றார்.

மற்றவர் உடனே படிக்க வாரம்பித்து, சுமார் அரைப் பக்கம் எழுதப்பட்டிருந்த விஷயங்களையெல்லாம் வாசித்துவிட்டு, "ஓஹோ! அப்படியா! இந்தப் பைத்தியக்காரன் உண்மையில் பைத்தியக்காரனில்லை யென்பது இப்பொழுது விளங்கிவிட்டது. இவன் பழைய கேடி. இதற்கு முன்பு ஒரு திருட்டுக் குற்றத்திற்காக இவன் ஒரு வருஷ தண்டனையடைந்தவ னென்பதும் தெரிகிறது. அதோடு இவன் தனக்குத்தானே பேசிக்கொண்டும், பாடிக்கொண்டு மிருப்பது வழக்கமென்றும் எழுதியிருக்கிறீர்கள். இது சரியாய்த் தான் இருக்கிறது. இந்த விஷயம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்றார்.

ராமநாதன் :—(புன்சிரிப்புடன்) இதுதானா ஒரு பெரிய காரியம். பத்திரிகையில் இந்த விஷயம் வெளிவந்தது. நான் அதைப் பார்த்து அப்படியே எழுதி வைத்திருக்கிறேன்.

மற்றவர் :—இதை எதற்காக எழுதினீர்கள் ?

ராமநாதன் :—ஒரு துரும்பும் பல் குத்த உதவுமல்லவா-பின்னால் ஒரு காலத்தில் இது உதவுமென்றுதான் இதை எழுதிவைத்தேன். இப்பொழுது இது உதவியதைப் பார்த்தீர்களல்லவா—என்று கூறிவிட்டு நோட்டுப் புஸ்தகத்தை மற்றவரிடமிருந்து வாங்கி மூடி எடுத்துக்கொண்டு படிகளின் வழியாகக் கீழே போய்விட்டார். அதே சமயத்தில் எதிர்பக்கத்திலிருந்த தோப்பிலிருந்து திடீரென்று யாரோ தெலுங்கு பாஷையில் பாடும் குரல் கேட்டது. மாடியில் உட்கார்ந்திருந்த அந்த மனிதர் திடுக்கிட்டு வேகமாய் மாடியின் முன்புறத்திலிருந்த கைப்பிடிச் சுவரினருகில் சென்று, தெருவைப் பார்த்தார். அடுத்த வீட்டுப் பக்கத்திலிருந்து ஹெட்கானிஸ்டேபில் பொன்னுசாமி பிள்ளை ரஸ்தாவை வேகமாகக் கடந்து தோப்பினுள் செல்லுவதைப் பார்த்தார். அவன் எதற்காக அம்மாதிரி செய்தான் என்பதைப்பற்றி அவர் வியப்புற்றவராய் தோப்பை பார்த்தவண்ண மிருந்தார். பொன்னுசாமி பிள்ளை தோப்பினுள் சென்று மறைந்துவிட்டான். அப்பொழுது பாட்டு திடீரென்று நின்றுவிட்டது. ஆனால் தோப்பிற்குள் ஒரு கோட்டான் பயங்கரமாகக் கூவிய ஓசை கேட்டது. அப்போது, "ஸப்-இன்ஸ்பெக்டர் வருகிறாரா ?" என்று மிஸ்டர் ராமநாதன் கேட்டது காதில் விழவே, மற்றவர் திரும்பிப் பார்த்தார். மிஸ்டர் ராமநாதன் நாற்காலியில் உட்கார்ந்துகொண் டிருந்தார். உடனே மற்றவர் மறுபடியும் தெருவைப் பார்த்துவிட்டு, " அவர் வரும் வழியைக் காணோம் " என்று கூறிவிட்டுத் திரும்பிவந்து

தமது ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டார். மிஸ்டர் ராமநாதன், "இப்பொழுது மணி ஒன்பதே காலுக்கு மேலாய்விட்டது. அநேகமாக ஸப்-இன்ஸ்பெக்டர் இனி வரமாட்டார் என்று நினைக்கவேண்டி யிருக்கிறது. நாமிருவரும் சாப்பிடுவோமே" என்றார்.

அதற்கு மற்றவர் இணங்க, இருவரும் சாப்பிட ஆரம்பித்தனர். மணி ஒன்பதரையாயிற்று. அந்த சமயத்தில் தெருக்கதவு இடிக்கப்பட்ட சப்தம் கேட்டது. மிஸ்டர் ராமநாதன், "ஸப்-இன்ஸ்பெக்டர்தான் வருகிறார்போ லிருக்கிறது" என்று மற்றவரிடம் கூறினார்.

உடனே தெருக்கதவு திறக்கப்படும் ஓசை கேட்டது. இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு, தமது உத்தியோக உடையிலிருந்த ஸப்-இன்ஸ்பெக்டர் மிஸ்டர் சமயசஞ்சீவி அங்கு பிரசன்னமானார். அவருக்கு வயது சுமார் முப்பதிருக்கலாம். அவர் ஆஜானுபாகுவாயும், உயரமாயும், அழகாயும் காணப்பட்டார். அவர், "மிஸ்டர் ராமநாதன், அநாவசியமாக உங்களைக் காக்கவைத்துவிட்டேன். ஒரு கேஸ் காரணமாய் நான் வரச் சற்று தாமதமாய்விட்டது. நீங்களிருவரும் சாப்பிட்டிருக்கலாமே" என்றார்.

ராமநாதன் :—(புன்சிரிப்புடன்) நாங்கள் சாப்பிட்டுவிட்டோம். உங்களை விட்டுவிட்டு சாப்பிட எங்களுக்கு மனமில்லையானாலும்—என்று கூறி மேலே ஏதோ கூறுவதற்குள்......

ஸப்-இன்ஸ்பெக்டர் :—(இடைமறுத்து) தப்பு என்மேலல்லவா யிருக்கிறது. அப்படி இருக்க, நான் வருவதற்குள் நீங்கள் சாப்பிட்டுவிட்டதற்காக நான் வருத்தப்படுவது

நியாயமல்ல. இன்றைய தினம் எனக்கு நிலாச்சாப்பாடு பிராப்தமில்லை. என்ன செய்கிறது.

ராமநாதன் :—(வியப்புடன்) ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்? உங்களுக்காக சித்திரான்னங்களையும் மற்ற பல க்ஷாரங்களையும் இதோ வைத்திருக்கிறோம். நீங்கள் சாப்பிடலாமே.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—நான்தான் எனக்குப் பிராப்தமில்லையென்று சொல்லிவிட்டேனே! உங்களைப் பார்த்துவிட்டுப் போனேனல்லவா; அதன் பிறகு அரை மணி நேரத்திற்கெல்லாம் தலைவலி உண்டாய்விட்டது. அதோடு வயிற்றிலும் ஒரு விதமான குமட்டல் ஏற்பட்டிருக்கிறது. அதனால் இன்றைய தினம் லங்கணம் போட்டால்தான் நாளைய தினம் உடம்பு நல்ல நிலைமைக்கு வரும்.

ராமநாதன் :—அடாடா! நல்ல சமயத்தில் உங்களுக்கு உடம்பு இப்படியாய்விட்டதே! அடுத்த பௌர்ணமியன்று மறுபடியும் நாம் அவசியம் நிலாச்சாப்பாடு வைத்துக் கொள்ளவேண்டும்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அப்படியே செய்துவிடலாம்—என்று கூறிவிட்டு மிஸ்டர் ராமநாதனோடிருந்த இன்னொரு மனிதரை நோக்கி, "ஏன் ஸார்! இன்றைய தினம் கோர்ட்டில் பெரிய அமர்க்களமாய்விட்டதாமே! என்ன விசேஷம்?" என்று வினவினர்.

மற்றவர் :—இன்றையதினம் உங்களுடைய ஜெவான்கள் ஒருவனை ஆஜர்செய்து, அவன் சந்தேககரமான ஆஸாமியென்றும், அவன் திருடும் எண்ணத்துடன் தெருவில் அலைந்துகொண்டிருந்தானென்றும் சொல்லி அவன்மேல் கேஸ் தொடர்ந்தார்கள். உங்களுடைய ஆஸாமிகள் கொடுத்த

தகவல்களிலிருந்தே அவன் எவ்விதமான குற்றத்தையும் செய்யவில்லையென்பது நன்ருக விளங்கியதாகையால், நான் உள்ளதை உள்ளபடி எடுத்து விளக்கினேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அப்படியா! அம்மாதிரி நீங்கள் செய்ததாயும், தெருவோடு போவோர் வருவோர்களையெல்லாம் அநாவசியமாகப் பிடித்திழுத்து வந்து அவர்கள்மேல் கேஸ் துடர்ந்து, கோர்ட்டாருடைய அரிய பொழுதை போலீஸார் வீணுக்குவதைப்பற்றி தாம் வருந்துவதாயும், இனியேனும் அவர்கள் அம்மாதிரி செய்யாதிருப்பார்களென்று நம்புவதாயும் மாஜிஸ்டிரேட் சொன்னதாகக் கேள்விப்பட்டேன். அதனுல் அங்கிருந்த ஜெவான்களெல்லோரும் குன்றிப்போய்விட்டார்களாம்.

மற்றவர் :—அவர்கள் கிலேசமடைந்திருக்கலாம். நான் கவர்ன்மெண்டு பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரா யிருந்தாலும், போலீஸார் கொண்டுவரும் கேஸ்கள் எல்லாம் ஜெயிக்கும்படி செய்வது என்னுடைய வேலையல்ல. இருக்கும் விஷயமெதையும் மறைக்காமல் எடுத்து விளக்கி, ஞாயமாக வாதாடவேண்டிய விஷயங்களில்தான் வாதாடவேண்டும். எதிராளிக்கு அநுகூலமாகவிருக்கும் விஷயங்களை மறைப்பது என்னுடைய சுபாவமல்ல.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அடாடா! இதற்குள் கோபித்துக்கொண்டுவிட்டீர்களே! நான் உங்களுடைய கடமையை உங்களுக்குக் கற்றுக்கொடுக்கவில்லை. அந்தக் கேஸ் கொண்டுவந்த ஜெவான்கள் தப்பிதம் செய்திருக்கிருர்கள் என்பது வாஸ்தவந்தான். எவனே ஒருவன் செய்த தப்பிதத்திற்காக, எங்களுடைய இலாகா மனிதர்கள் எல்லோருமே தவறு செய்துவிட்டதைப் போல மாஜிஸ்டிரேட்

பேசினராம். அதுதான் எனக்கு வருத்தமா யிருக்கிறது. மெஷி ஜெவான்களுக்கு பிளாக்கு மார்க்கு கிடைத்திருக்கிறது. அவர்கள் இனி தவறான காரியத்தைச் செய்யமாட்டார்கள்.

ராமநாதன் :—(ஸப்-இன்ஸ்பெக்டரை நோக்கி) இது தான் உங்களுக்கும் எனக்குமுள்ள வித்தியாசம். நான் இம்மாதிரி கேஸ்களைத் கொண்டுபோகவே மாட்டேன். எனக்கு பிளாக்கு மார்க் கொடுக்க யாராலும் முடியாது.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—வாஸ்தவமான விஷயம். என்னுடைய உத்தியோகத்தை ராஜீனமாச் செய்துவிட்டு, உங்களைப் போல் துப்பறிய ஆரம்பிக்கலாமா வென்று அநேக தடவைகளில் நானும் நினைத்திருக்கிறேன். என்ன செய்கிறது; நாம் நினைப்பதெல்லாம் பலிக்கிறதா!

ராமநாதன் :— நீங்கள் என்னைப்போல் துப்பறிய வேண்டுமானல் அதற்காக நீங்கள் உங்களுடைய உத்தியோகத்திலிருந்து எதற்காக விலகவேண்டும்?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—இந்த பிளாக் மார்க்குக்குதான் நான் பயப்படுகிறேன். எனக்கு நேரமாகிறது. நான் வருகிறேன்—என்று கூறிவிட்டுப் புறப்படலானர்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரும் தாமும் வீட்டிற்குப் போவதாய்க் கூறிவிட்டு அவர் மிஸ்டர் ராமநாதனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டார். இருவரும் வீட்டின் கீழ் பாகத்தை யடைந்து தெருவின் கதவைத் திறந்துகொண்டு வெளியில் சென்றனர். சென்றவர்கள் தெருக்கோடியை யடையும் வரையில் மௌனமாகவே சென்றனர். அப்போது இன்ஸ்பெக்டர் பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரிடம், "நீங்கள் ராமநாதனுடைய வீட்டிற்கு வந்து எனக்காக வெகு நேரமாய்க் காத்திருந்தீர்களா?" என்று வினவினர்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:— நான் ஏழேமுக்கால் மணிக்கெல்லாம் வந்துவிட்டேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— அப்படியா! உங்களுக்குப் பொழுதே போயிருக்காதே!

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :— ஆம். பொழுதுதான் போகவில்லை. அதனால் ஊர்க்கதைகளை யெல்லாம் பேசிக் கொண்டிருந்தோம். அதோடு......(சற்று தயங்கி மௌன மாகவிருந்த பிறகு) ஆம் ஊர்க் கதைகளைத்தான் பேசிக் கொண்டிருந்தோம்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—'அதோடு' என்று ஆரம்பித்து மேலே எதையோ சொல்ல எண்ணினீர்கள். ஆனால் விஷயத்தை மறைக்கிறீர்களே! என்னிடம் தெரிவிக்கக்கூடாத விஷயமாக விருந்தால் விட்டுவிடுங்கள்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—உங்களிடம் தெரிவிக்க லாமா கூடாதாவென்று ராமநாதன் என்னிடம் சொல்ல வில்லை; அதனால்தான் விஷயத்தைச் சொல்லத் தடங் கினேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— எந்த விஷயத்தையும் என்னி டம் தெரிவிப்பதைப் பற்றி அவர் என்ன சொல்லப் போகிறார்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :— நான் ஏழேமுக்கால் மணிக்கெல்லாம் வந்தேனல்லவா! நான் வந்த சமயத்தில் ராம நாதன் ஏதோ யோசனை செய்தபடி உட்கார்ந்துகொண் டிருந்தார். நான் வந்து எதிரில் நின்றதைக்கூட அவர் கவ னிக்காதிருந்த தாலால் நான் அவரிடம் "என்ன பல மாக யோசனை செய்கிறீர்கள்?" என்று கேட்டேன். அதற்கு, அவர், "ஒன்றுமில்லை. இதைப் படியுங்கள்" என்று

சொல்லி ஒரு காகிதத்தை என்னிடம் கொடுத்தார். நான் அதை வாங்கிப் பார்த்தேன். அது ஒரு கடிதமாக விருந்த துடன் அதில் விஷயம் விநோதமாக எழுதப்பட் டிருந்தது.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— அப்படியா! அந்தக் கடிதம் உங்களிட மிருக்கிறதா?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—அது என்னிடமில்லை. ராமநாதனிடம்தா னிருக்கிறது.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— சரி; அதன் விஷயத்தைச் சொல்லுங்களேன்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—அதில் என்ன எழுதப் பட்டிருந்ததென்றால் :—

> இதுதான் கடைசி எச்சரிக்கை. இனி எச்சரிக்கை கிடையாது. மறுதடவை நீ பிணமாவது நிச்சயமென் பதைக் கண்டிப்பாய் மனதில் வைத்துக்கொள்.
>
> குண்டோதரன்.

என்று அதில் விஷயம் காணப்பட்டது. நான் உடனே ராமநாதனிடம், "இந்த கடிதம் உங்களுக்கா வந்தது? குண் டோதரன் என்பது யார்?" என்று கேட்டேன். அதற்கு அவர், "இது எனக்கு வரவில்லை. என்னிடம் குமாஸ்தா ஒருவ னிருக்கிறான். அவனுக்கு இது வந்திருக்கவேண்டும்" என்றார்.

நான் :—(வியப்புடன்) என்ன! சபேசனுக்கா? அவன் இதை உங்களிடம் காட்டினனா?—என்று கேட்டேன்.

ராமநாதன் :—இல்லை. இது வேறு ஒருவிதமாக என் னிடம் வந்தது. நான் வீட்டிலில்லாத சமயத்தில் தபால் காரன் எனக்குக் கொண்டுவரும் கடிதங்களை சபேசன்

வாங்கித் தன்னுடைய சட்டைப்பையில் வைத்துக்கொண்டிருந்து நான் வீட்டிற்குத் திரும்பி வந்தவுடன் என்னிடம் அவைகளைக் கொடுப்பது வழக்கம். இன்று காலையில் தபால்காரனிட மிருந்து வாங்கின கடிதங்களை அவன் சட்டைப்பையிலேயே வைத்துக்கொண்டிருந்தான். நான் பகல் முழுவதும் வீட்டிலில்லை. நான் திரும்பி வந்தபொழுதும் அவன் வீட்டிலில்லை. இந்த வீட்டின் முன்புறக் கதவைப் பூட்டும் பூட்டிற்கு என்னிடம் ஒரு சாவியும், அவனிடம் ஒரு சாவியு மிருக்கின்றன. அவன் கதவைப் பூட்டிக் கொண்டு வெளியில் போயிருந்தானானாலும், நான் என்னிட மிருந்த சாவியால் பூட்டைத் திறந்துகொண்டு உள்ளே வந்தேன். அதன் பிறகு நீங்களும் ஸப்-இன்ஸ்பெக்டரும் வந்தீர்கள். உங்களுடன் பேசிக்கொண்டிருந்து உங்களை அனுப்பினேன். அதன் பிறகு வெளியிலிருந்து சபேசன் வந்து காலையில் தபால்காரன் கொடுத்த கடிதங்களை என்னிடம் கொடுத்தான். அவைகளில் ரிப்ளை கார்டு ஒன்று இருந்தது. அதன் மடிப்பிற்கு நடுவில் இது சிக்கிக்கொண்டிருந்தது. இதை என்னிடம் கொடுத்ததை அவன் கவனிக்கவில்லை. கடிதங்களைக் கொடுத்தபிறகு அவன் மறுபடியும் வெளியில் போய்விட்டு சற்று முன்புதான் வந்தான். இந்தக் கடிதம் என்னிடம் வந்தவிதம் இப்பொழுது உங்களுக்குத் தெரிந்துவிட்டதல்லவா?—என்றார்.

நான் :—(வியப்போடு) அப்படியா! இதைப்பற்றி அவனிடம் விசாரித்தீர்களா?—என்றேன்.

அவர் :—நல்லவேலை செய்தீர்கள்! இது என்னிடம் அகப்பட்டதை நான் சொல்லலாமோ? இது அவனுக்குத் தான் வந்ததோ, அல்லது, அவனேதான் வேறு யாருக்காவது அனுப்ப எண்ணி இம்மாதிரி எழுதினானோ என்பது

நிச்சயமாய்த் தெரியவில்லை. அப்படி இருக்க, இதைப்பற்றி நான் பிரஸ்தாபம் செய்வது பிசகல்லவா! அதனால் நான் இந்தக் கடிதம் என்னிடம் அகப்பட்டதாகக் காட்டிக்கொள்ளாமல், அவனுடைய முகம் ஒருவிதமாய் இருப்பதாயும், மனதில் ஏதாவது கவலையிருக்கும் பக்ஷத்தில் என்னிடம் தெரிவித்தால், நான் அதைத் தீர்க்க என்னலான உதவி செய்வதாயும் நான் ஜாடையாகத் தெரிவித்தேன். அதற்கு அவன் பதிலெதுவும் சொல்லாமல், என்னை முறைத்துப் பார்த்துவிட்டு அப்பால் போய்விட்டான்—என்றார்.

நான்:—ஓஹோ! அவன் அந்தமாதிரி செய்ததால் தன்னுடைய விஷயமெதையும் வெளியிட விரும்பவில்லை யென்பது நன்றாக விளங்குகிறது. அப்படியானால் நீங்கள் இதைப் பற்றி அவனிடம் கேட்பதுகூடப் பிசகுதான். நீங்கள் ஏன் ஸப்-இன்ஸ்பெக்டரிடம் இந்த சங்கதியைத் தெரிவிக்கக் கூடாது?—என்றேன்.

அவர்:—நல்லவேலை செய்தீர்கள்! அவர் என்ன செய்யப்போகிறார்? என் கையில் சிக்கிய கேஸை நான் வெளியில் விடலாமோ! தற்செயலாய் இது என்னிடம் அகப்பட்டிருக்கிறது. குண்டோதரன் என்பது யாரென்பதையும், இந்தக் கடிதம் யாருக்கு எதற்காக எழுதப்பட்டது என்பதையும் கண்டுபிடிக்க என்னால் ஆகாதென்று நினைக்கிறீர்களா? சபேசனை நீங்கள் கண்டால் இந்த விஷயத்தை அவனிடம் எந்தக் காரணத்தை முன்னிட்டும் தெரிவிக்கவேண்டாம்—என்றார்.

நான்:—இப்பொழுது மேலே என்ன செய்யப் போகிறீர்கள்?—என்றேன்.

அவர்:—என்ன செய்யப்போகிறேனு! அந்தக் கேள்வியை சுலபமாகக் கேட்டுவிடலாம். ஆனல் அதற்கு பதில்

சொல்வது அவ்வளவு சுலபமான காரியமாய்ப் படவில்லை. இதில் ஒரு விஷயம். இனிமேல் சபேசனை ஜாக்கிரதையாக கவனித்துக் கொண்டிருக்கும் பக்ஷத்தில் குண்டோதரனைப் பற்றி ஆராய ஏதாவது துப்பு ஏற்படும். நாளைய தினம் அவனை என்னுடைய இன்னொரு வீட்டிற்கு அனுப்பப் போகிறேன். அவன் போய் நாளைய தினத்திற்கு மறுதினம் தான் திரும்பி வருவான். அவன் திரும்பி வந்துசேரும் நிமிஷம் முதல் நான் அவனை ஜாக்கிரதையாக கவனிக்கப் போகிறேன்—என்றார்.

நான் :—அப்படியா! உங்களுடைய இன்னொரு வீடு எங்கே இருக்கிறது?—என்றேன்.

அவர்:—அது என் ஊரில் இருக்கிறது—என்றார்.

நான் :—அது எங்கே இருக்கிறது?—என்றேன்.

அவர் :—அது இங்கிருந்து முப்பது மைல் தூரத்தில் இருக்கிறது. அவன் தன்னுடைய சைக்கிளிலேயே போகப் போகிறான்; காலையில் 6 மணிக்குப் புறப்பட்டால் பகல் 12 மணிக்குள்ளாகவே அங்கே போய்விடுவான்—என்றார்.

நான் :—எதற்காகப் போகிறான்?—என்றேன்.

அவர் :—அந்த வீட்டிற்கு ஒருவர் குடிவரப்போகிறார். அதற்கு வெள்ளையடித்துக் கொடுக்கவேண்டும். சபேசன் போய் அந்த ஊரிலிருக்கும் கொல்லத்துக்காரர்களை அமர்த்தி வெள்ளையடிப்பதற்கு வேண்டிய சுண்ணும்பு முதலியவற்றை நாளை மாலைக்குள் வாங்கிப்போட்டுவிட்டு, மறுநாள் திரும்பி விடுவான். ஆட்கள் வேலை செய்து முடிக்க சுமார் பத்து நாட்களாகும். வேலை முடியும்வரையில் கொல்லத்துக்காரர்களே வீட்டை ஜாக்கிரதையாகப் பார்த்துக்

கொள்ளுவார்கள். வேலை முடியும் சமயத்தில் மறுபடியும் சபேசனை யனுப்புவேன்—என்றார்.

சபேசனுடைய விஷயம் இம்மாதிரி யிருக்கிறது. அதன் பிறகு இந்த ஊரில் தெலுங்குப் பாட்டை பாடிக் கொண்டு அலைபவனை நாம் பைத்தியக்காரன் என்று எண்ணிக்கொண் டிருந்தோ மல்லவா? அவன் ஒரு கேடி யென்பதையும், ஒரு வருஷம் ஜெயிலில் இருந்தா னென்பதையும் அவர் தகுந்த ஆதாரத்துடன் வெளிப்படுத்தினார். அது மாத்திர மல்ல. சற்று முன்பு இந்தத் தோப்பில் அதே தெலுங்குப்பாட்டு கேட்டது. அப்பொழுது ஹெட்கான்ஸ் டேபிள் பொன்னுசாமி பிள்ளை தெருவோடு வந்துக்கொண் டிருந்தவன் என்ன காரணத்தினாலோ தோப்பினுள் சென் றான்—என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:— ஓஹோ! அப்படியா! நமக் கிருக்கும் வேலையே நமக்குப் போதும். அந்த குண்டோ தரனை மிஸ்டர் ராமநாதனே கண்டுபிடித்து பெருமை யடை யட்டும். தெலுங்குப் பாட்டுப் பாடுபவன் கே. டி. என்று சொன்னார்? இதை நீங்கள் முன்பே சொல்லியிருந்தால், நாம் அந்தத் தோப்பிற்குள் போய்ப் பார்த்திருக்கலாமே!—என்றார்.

அதே சமயத்தில் அவர்களுக்குப் பின்புறத்தில் யாரோ வந்து, "ஸார்!" என்று கூப்பிட்ட குரலோசை உண்டாகவே, இருவரும் திடுக்கிட்டு நின்று பின்புறம் திரும் பிப் பார்த்தனர். ஹெட்கான்ஸ்டேபிள் பொன்னுசாமி பிள்ளை அவர்களுக்கருகில் வேகமாக வந்து சேர்ந்து ஸப்- இன்ஸ்பெக்டரிடம், "அந்தப் பைத்தியக்காரன் கொஞ்ச நேரத்திற்குமுன் தோப்பிற்குள் இருந்து பாடியது கேட் டது. நான் போய்த் தேடிப் பார்த்துவிட்டு வந்தேன்.

அவனை எங்கேயும் காணோம். அவன் எங்கேயோ பதுங்கி விட்டான்" என்றான்.

ஸப்-இன்ஸ்பெக்டர், "சரி; நீ போ. வேறு ஏதாவது வேலையிருந்தால் பார். குழந்தைகள் தங்களுடைய நிழலையே துரத்திக்கொண்டு ஓடுவதைப்போல் பைத்தியக் காரனைப் பிடிக்க நீ ஓடுகிறாய்" என்று கூறிவிட்டு பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரை நோக்கி, "வாருங்கள் போவோம். இவன் ஏதாவது அவசர காரியமாகக் கூப்பிடுகிறானோ வென்று நினைத்தேன். அநாவசியமாக நம்மை நிறுத்திப் பைத்தியக்காரனைப்பற்றிப் பேசுகிறான்" என்று கூறிவிட்டு நடக்கலானார்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் அவர் கூறியதன் கருத்தை அறியாமல் வியப்புடன் தலைமை ஜெவானையும், ஸப்-இன்ஸ் பெக்டரையும் மாறி மாறிப் பார்த்தார். பொன்னுசாமி பிள்ளை அங்கு அதற்குமேல் நிற்காமல் வந்த வழியிலேயே போய்விட்டான். அதனால் பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரும் ஸப்-இன்ஸ்பெக்டருடன் செல்லலானார். சிறிது தூரம் சென்றவுடன் அவர் ஸப்-இன்ஸ்பெக்டரிடம், "நீங்கள் பொன்னுசாமியிடம் சொன்னீர்களே! அதன் கருத்தென்ன வென்பது எனக்கு விளங்கவில்லையே!" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் புன்சிரிப்புடன், "ஒன்றுமில்லை. அநாவசியமாகப் பைத்தியக்காரனைத் துரத்திக்கொண் டலை கிறா னென்பதை விளக்கவே அப்படிச் சொன்னேன். நாளைய தினம் ஞாயிற்றுக்கிழமை யல்லவா?" என்றார்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—ஆம். அதற்கென்ன?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—இன்றைய தினம் மிஸ்டர் ராம நாதனுடைய வேண்டுகோளின்படி நிலாச் சாப்பாடு சாப்பிட

அவருடைய வீட்டிற்குப் போனீர்கள். நாளையதினம் என்னோடு ஓர் இடத்திற்கு வருகிறீர்களா? நாம் தமாஷாகப் போய்விட்டு வருவோம். நீங்கள் நடக்கவேண்டு மென்னும் அவசியமில்லை.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :— எங்கே வரச்சொல்லு கிறீர்கள்?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—நாம் புறப்பட்டுப் போகவேண்டு மென்று அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்துவிட்டேனே யொழிய, இன்ன இடத்திற்குப் போவதென்று இன்னும் முடிவு செய்யவில்லை. நாளையதினம் புறப்பட்டுப் போகும் போது நமக்கென்ன தோன்றுகிறதோ அதன்படி செய் வோம்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—எப்பொழுது புறப்பட வேண்டும்?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—பகல் சாப்பாட்டை முடித்துக் கொண்டு புறப்படுவோம்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—திரும்பி வர எவ்வளவு நேரமாகுமோ?

ஸப்-இன்ஸ்பெக்டர் :— அதை இப்போதே எப்படிச் சொல்ல முடியும்? அது நாம் போகுமிடத்தைப் பொறுத் தது. எதற்கும் நான் என்னுடைய மோட்டார் சைக்கி ளுடன் உங்களுடைய வீட்டிற்கு வருகிறேன்—என்றார்.

அதன் பிறகு அவர்களிருவரும் பிரிந்தனர். பிராசி கூடிங் இன்ஸ்பெக்டர், அருகில் ஒரு தெருவிலிருந்த தமது வீட்டை நோக்கி நடந்தார்.

நடந்தவர் சிறிதுநேரத்தில் தமது வீட்டின் முன் புறத்தையடைந்து தெருவுக்கதவை இடித்தார். உட்புறத்தி

லிருந்து யாரும் குரல் கொடுக்கவில்லை யாகையால், அவர் மேன்மேலும் கதவை இடித்த வண்ண மிருந்தார். அப்பொழுது வீட்டி னுட்புறத்திலிருந்து, "குண்டோதரா! என்னைப் பிடிக்காதே." என்று உரக்க யாரோ கூவிய குரலோசை கேட்கவே, பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் வியப்படைந்து, அது யாருடைய குரலென்று நினைத்துப் பார்த்தார். அது அவருக்குப் பழக்கமில்லாத யாரோ ஓர் அன்னிய மனிதனுடைய குரல் போல் இருந்தது. அதனல் அவர் கலக்கமடைந்தவராய்க் கதவைத் தட்டுவதை நிறுத்திவிட்டு, உட்புறத்திலிருந்து இன்னம் என்ன ஓசையுண்டாகிறது என்று கவனித்துப் பார்த்தார். மறுபடியும் அதே குரல், "குண்டோதரா! நீ யாரென்பது இப்போது தெரிந்துவிட்டது. நீ மறுபடியும் இங்கே வராதே! வரும் பக்ஷத்தில் நிச்சயமாய்ப் போலீஸ் கான்ஸ்டேபிளைக் கூப்பிடுவேன்" என்று கூறியது கேட்டமையால் பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் மேலே என்ன நடக்கிறது என்பதையறிய எண்ணி ஆவலுடன் கதவி னருகில் நெருங்கி அதன்மேல் சாய்ந்துகொண்டு நின்ருர். அப்பொழுது திடீரென்று அவர் எதிர்பாராத விதமாய்த் தெருவுக் கதவின் தாள் விலக்கப்பட, கதவு தடாரென்று திறந்துகொள்ளவே அவர் உட்புறத்தில் குப்புற விழுந்துவிட்டார். அங்கு இருள் சூழ்ந்திருந்தாகையால், கதவைத் திறந்தது யார் என்பதையறிய அவரால் முடியவில்லை. அவர் எழுந்திருப்பதற்குள் அவருடைய தலையில் ஓர் அடி விழுந்தது. அவருக்கு உடனே ஸ்மரணை தப்பிப்போக வாரம்பித்தது. அப்போது தம் உடம்பில் யாரோ கால்களை வைத்துக்கொண்டு வெளியில் சென்றதாக அவர் உணர்ந்தார். மறுபடி அவருடைய பிரக்ஞை திரும்பியபோது நன்ருகப் பொழுதுவிடிந்துபோ

யிருந்தது. வெளியில் வெயில் காய்ந்துகொண் டிருந்தது தெரிந்தது. உடனே அவர் உட்கார்ந்துக்கொண்டு பார்க்க, தாம் கடையிலேயே அப்போதும் இருந்ததையறிந்தார். அவர் உடனே எழுந்திருந்து உட்புறத்தில் சென்று வீட்டின் சொந்தக்காரியான செவிட்டுக் கிழவி என்ன செய்து கொண் டிருக்கிறு ளென்பதைப் பார்த்தார். உட்புறத்தில் ஓர் இடத்தில் அந்தக் கிழவி கீழே விழுந்துகிடந்தாள். அவளுடைய கைகால்கள் கட்டப்பட் டிருந்தன. அவள் மூர்ச்சித்துக் கிடப்பதாய்த் தோன்றியது. அதோடு அவளுடைய முகமெல்லாம் இரத்தமா யிருந்தது. அவர் உடனே அவளுக்கருகில் சென்று குனிந்து உற்றுப் பார்க்க, அவள் உயிருடனிருந்தது தெரிந்தது. அவளுடைய முகத்தில் எதனல் இரத்தம் காணப்பட்டதென்பதை யறியவும், அவளுடைய மயக்கத்தைத் தெளியவைக்கவும் அவர் அவளுடைய முகத்தில் தண்ணீரை விட்டுக் கழுவ ஆரம்பித்தார். முகம் வெளுத்துப்போ யிருந்தது. எவ்விடத்திலும் காய மெதுவு மிருந்ததாகத் தெரியவில்லை. கண்களில் தோய்ந்திருந்த இரத்தத்தை எப்படிக் கழுவதென்று அவர் யோசிக்கலானுர். அப்போது கிழவி, "யாரையா அது! குண்டோதரன் அகப்பட்டான! அவனை விடாதீர்கள். பிடியுங்கள். என்னுடைய கண்களைக் கத்தியால் குத்திவிட்டான். கண்களின் பாதை பொறுக்க முடியவில்லையே! ஐயோ! அம்மா! காதுதான் செவிடென்றல் கண்ணும் போய்விட வேண்டும்!" என்று கதறத் தொடங்கினள்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் தாம் யாரென்பதை அவளுக்கு எப்படித் தெரிவிப்பது என்பதை யறியாமல் விழிக்கலானுர். ஏனெனில் அவள் முழுச் செவிடாதலால் தாம் சொல்வதை அவள் அறியமாட்டாள். அவள் குருடாகப்

போய்விட்டமையால் சைகை காட்டுவதும் பலியாததாயிற்று. அதோடு கிழவியின் கையில் விரலால் எழுதினால் ஒரு வேளை அவள் அதை அறிந்துகொள்ளுவாளோ என்னும் சந்தேகத்திற்கும் இடமில்லாதபடி அவள் எழுத்து வாசனை யறியாதவளா யிருந்தாள். எனவே, கிழவி பேசினால் அதைக்கேட்டுக் கொள்ளுவதைத் தவிர தாம் அவளிடம் பேசமுயல்வது கூடாத காரியமென்று அவர் உணர்ந்த வராய், வீட்டின் ஒரு மூலையிலிருந்த டெலிபோன் வழியாக ஆஸ்பத்திரிக்கு விஷயத்தைத் தெரிவித்தார். சிறிது நேரத் திற்குப் பிறகு ஆஸ்பத்திரியிலிருந்து மோட்டார்வண்டி யொன்று வந்துசேர, அதில் கிழவியை ஏற்றி அனுப்பி வைத்தபிறகு அவர் மறுபடி டெலிபோன் மூலமாய் ஸப்-இன்ஸ்பெக்டரைக் கூப்பிட்டார். அவர் போலீஸ் ஸ்டேஷனிலில்லை.

வீட்டுக்காரியே அவருக்கு சமயல் செய்தவ ளாதலா லும், அன்று அவள் சமயல் செய்யமாட்டாத நிலைமையிலிருந் தமையாலும், அவர் ஒட்டலுக்குச் சென்றுத் தமது சாப் பாட்டை முடித்துக்கொள்ள வேண்டுமென்றுநினைத்து சுமார் பத்து மணிக்கு ஓர் ஒட்டலையடைந்து, அதற்குள் நுழைந்த போது அதன் முன்புறத்திலிருந்த வெற்றிலை பாக்குக் கடை யில் ஸப்-இன்ஸ்பெக்டர் நின்றுகொண் டிருந்ததைக் கண்டு உடனே அவரண்டை சென்று, "கொஞ்ச நேரத்திற்குமுன் நான் உங்களை டெலிபோன் மூலமாய்க் கூப்பிட்டேன். நீங் கள் ஸ்டேஷனிலில்லை யென்று சொன்னார்கள்" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:— (மற்றவருடைய முகத்தைப் பார்த்து) என்ன விசேஷம்?

ப்ராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—விசேஷம் இருக்கிறது. வாருங்கள். பேசிக்கொண்டே போவோம்—என்றார். அருகி

லிருந்த கடைக்காரனுக்கெதிரில் அவர் விஷயத்தைக் கூற விரும்பவில்லை யென்று யூகித்துக்கொண்ட ஸப்-இன்ஸ்பெக்டர் வெற்றிலை போட்டுக்கொண்டபடி அங்கிருந்து புறப்பட்டு பிராசிகூடிங் இன்ஸ்பெக்டருடன் நடக்கலானார். சிறிது தூரம் சென்றவுடன் பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் நிகழ்ந்த விஷயங்களையெல்லாம் கூறினார். அதைக் கேட்ட ஸப்-இன்ஸ்பெக்டர் வியப்போடு, "அப்படியா நடந்தது! இதை மிஸ்டர் ராமநாதனிடம் தெரிவித்தீர்களா?" என்றார்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—அவரிடம் நான் தெரிவிக்கவில்லை. அப்படியானால், தெரிவிக்கச் சொல்லுகிறீர்களா?

ஸப்-இன்ஸ்பெக்டர்:— அவரிடம் தெரிவிக்க உங்களுக்கு விருப்பமானால், தெரிவிக்கலாம். இல்லாவிட்டால், வேண்டாம். இதில் இன்னொரு முக்கியமான பாயிண்டை கவனித்தீர்களா? குண்டோதரனைப்பற்றிய சங்கதி உங்களிடம் முதலில் கூறப்பட்டது. சிறிது நேரத்திற்குப் பிறகு குண்டோதரன் உங்களுடைய வீட்டிற்கு வந்து உங்களுடைய வீட்டுக் கிழவியின் கண்களைக் குத்தியிருக்கிறான்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—அதனால்?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அதனால் குண்டோதரன் தன்னுடைய கண்ணோட்டத்தை உங்கள்பேரில் திருப்பியிருக்கிறான் என்று அர்த்தமாகிற தல்லவா?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:— ஆம். அப்படித்தான் அர்த்தமாகிறது. அந்தக் கிழவிக்கும் குண்டோதரனுக்கும் இதுவரையில் ஏதோ சம்பந்த மிருந்திருக்க வேண்டுமென்பது நன்றாய் விளங்குகிறது.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—இப்பொழுது கண்களைக் கத்தியால் குத்திவிட்டானதலால் அந்த சம்பந்தம் இப்பொழுது அற்றுப்போய்விட்டது. குண்டோதரனைப்பற்றிய செய்தி எதையும் கிழவி வெளியிடாம லிருக்கவே அவன் அம்மாதிரி செய்திருக்கவேண்டும். அதிருக்கட்டும். இந்தக் கிழவியின் வீட்டில் எவ்வளவு காலமாக நீங்கள் குடியிருக்கிறீர்கள் ?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—சுமார் நான்கு வருஷ காலமா யிருக்கிறேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:--கிழவிக்குச் சொந்தமான சாமான்கள் என்னென்ன இருக்கின்றன ?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—அதிகமாக எதுவுமில்லை. சமையல் செய்வதற்கு உபயோகப்படக் கூடிய பாத்திரங்கள், ஒரு டிரங்கு பெட்டி ஆகியவைகள் தான்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— அந்த டிரங்கு பெட்டியில் என்னவிருக்கிற தென்பதைப் பார்த்தீர்களா ? குண்டோதரன் அவளுக்கு ஏதாவது கடிதங்கள் எழுதியிருந்தால், அவைகள் அதிலிருக்கலா மல்லவா.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—ஆம். என் மனதிலும் அந்த எண்ணம் உண்டாயிற்று. அதனல் கிழவியை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிய பிறகு முதல் காரியமாக அதைத்தான் செய்தேன். அப்பொழுது பெட்டி பூட்டப்பட் டிருக்கவில்லை; திறந்தது கிடந்தது. உட்புறத்தில் நான்கு புடவைகளும், சில நகைகளும், பத்து ரூபாய்களும் இருந்தன. அவைகளைத் தவிர வேறு எதுவும் காணப்படவில்லை.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—கிழவி எப்பொழுதும் பெட்டியை அப்படித்தான் திறந்து வைத்திருப்பாளா ?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:-இல்லையில்லை. எப்பொழுதும் அந்த பெட்டியை அவள் பூட்டியே வைத்திருப்பது வழக்கம். அந்தப் பெட்டி திறந்துகிடந்தது எனக்கே ஆச்சரியத்தை உண்டாக்கியது.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—கிழவி ஏதோ காரியமாகப் பெட்டியைத் திறந்து வைத்துக்கொண்டிருந்த சமயத்தில் குண்டோதரன் அவளைப் பார்ப்பதற்கு வந்திருக்கவேண்டும். அதனால் அவள் பெட்டியை மூடாமல் அப்படியே விட்டுவிட்டு வந்து அவனுடன் பேசிக்கொண் டிருந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் குண்டோதரன் தன்னை மாட்ட வைக்கக்கூடிய ஆதாரங்களதையாவது கிழவி பெட்டிக்குள் வைத்திருப்பாளென் றெண்ணி அதை எடுத்துக் கொண்டு போவதற்காகத் திறந்திருக்கவேண்டும்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:— குண்டோதரன்தான் அதைத் திறந்திருக்க வேண்டுமென்ற அபிப்பிராயமே என் மனதில் படுகிறது.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—எதனால் உங்களுக்கு அப்படித் தோன்றுகிறது?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:— ஏனென்றால் அந்தக் கிழவி அதிக ஜாக்கிரதையாயிருப்பவள் என்பதை நான் எத்தனையோ தடவைகளில் கண்கூடாய்த் தெரிந்துகொண்டிருக்கிறேன். ஆகையால் அன்னியனான குண்டோதரன் அங்கே வந்திருக்கும்போது அவள் பெட்டியைத் திறந்து வைத்திருக்கக் காரண மெதுவுமில்லை. சில சமயங்களில் அவள் பெட்டியைத் திறந்து வைத்துக்கொண்டு ஏதோ செய்துகொண்டிருந்த சமயத்திலெல்லாம் நான் கூப்பிட்டிருக்கிறேன். அப்பொழுதெல்லாம் அவள் பெட்டியைப் பூட்டியபிறகே என்னிடம் வந்திருக்கிறாள்.

ஸப்-இன்ஸ்பெக்டர்: நீங்கள் சொன்னபடியே குண்டோதரன் பெட்டியைத் திறந்ததாய் வைத்துக் கொள்ளுவோம். அந்தப் பெட்டியைத் திறப்பதற்கு சாவிக்கு என்ன செய்தான்? கிழவியினுடைய சாவியையே உபயோகப் படுத்தி அவன் திறந்திருக்க வேண்டுமென்று நீங்கள் சொல்லலாம். கிழவி எந்த இடத்தில் சாவியை வைத்திருந் தாள் என்பது அவனுக்கு எப்படித் தெரியும்? இன்னொரு முக்கியமான விஷயமிருக்கிறது. நீங்கள் வீட்டையடைந்த சமயத்தில் உட்புறத்தில் கிழவியும் குண்டோதரனும் வாக்கு வாதம் செய்ததாகவும் உடனே குண்டோதரன் கதவைத் திறந்ததாகவும் சொன்னீர்களே. அப்படியானால் அவளுடன் பேசியபடியே பெட்டியைத் திறந்தானா? அம்மாதிரி செய்ய அவகாசமில்லை. அதோடு கிழவியின் எதிரிலேயே அவன் அவளுடைய பெட்டியைத் திறந்து பார்க்க அவள் அநுமதிப்பாளா?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:— அப்படியானால் நான் ஸ்மரணையற்றுக் கிடந்தபோது குண்டோதரன் அப்படிச் செய்திருக்கவேண்டும்.

ஸப்-இன்ஸ்பெக்டர்: அப்படிச் செய்யவில்லை என்பதற்கு ஆதாரமிருக்கிறது.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—(வியப்புடன்) என்ன ஆதாரமிருக்கிறது? அந்த சமயத்தில் அவன் கிழவியின் கண்களைக் குத்தாவிட்டால் வேறு எப்பொழுது குத்தியிருப்பான்?

ஸ்ப்-இன்ஸ்பெக்டர்:— எந்த விஷயத்தையும் நிச்சயமாயறியாமல் சொல்லக்கூடாது, கண்டதும், கேட்டதும் பொய்யாகி விடலாம் என்னும் கருத்துடைய ஒரு பாட்டு

இருப்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். நீங்களிருந்த இடத்திற்கும் குண்டோதரனிருந்த இடத்திற்கும் இடையில் குறுக்கே ஒரு கதவு மறைத்துக்கொண் டிருந்திருக்கிறது. ஆகையால் உள்ளே என்ன நடந்தது என்பதை யூகத்தினாலேயே நாம் கண்டுபிடிக்க முடியாது.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:— (ஸப்-இன்ஸ்பெக்டருடைய முகத்தை வியப்புடன் பார்த்து) ஏது நீங்கள்கூட வேதாந்தத்தில் திரும்பிவிட்டீர்கள்!

ஸப்-இன்ஸ்பெக்டர்:—நான் இப்பொழுது சொன்னது வேதாந்தம் என்று நீங்கள் நினைத்தால், என் கருத்தை நான் உங்களுக்கு சரியாகத் தெரிவிக்க வில்லையோ, அல்லது, நீங்கள் என் கருத்தை சரியாக அறிந்துகொள்ள வில்லையோ என்றுதான் எண்ணவேண்டும். மோசம் எப்படியும் அதற்குரிய முடிவை என்றையதினமாவது அடைந்தே தீரும்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—அது வாஸ்தவந்தான். நீங்கள் சொல்வதெல்லாம் எனக்கு விளங்கவில்லை.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—விளங்கா விட்டால், நீங்கள் சுலபமாக ஒரு காரியம் செய்யலாமே! நீங்கள் துப்பறிபவராக மாறவேண்டுமானால், அதற்குத்தேவையான சந்தர்ப்பம் இப்போது கிடைத்திருக்கிறது.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—ஏற்கனவே இருக்கும் துப்பறிபவர்களுக்குத் துணையாக நானும் துப்பறிபவனாய் மாறவேண்டுமா!

ஸப்-இன்ஸ்பெக்டர்:—ராமநாதன் உங்களுக்கு நிரம்பவும் வேண்டியவரல்லவா! ஒருவேளை அவரைப்போல நீங்களும் துப்பறிய ஆரம்பிப்பீர்களோவென்று நினைத்தேன்.

அதிருக்கட்டும். குண்டோதரன் யாரென்று கிழவியிடம் கேட்டீர்களா?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:— எப்படிக் கேட்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. வயதான ஒரு கிழவியை அந்தப் பாவி அப்படிக் குத்திவிட்டது எனக்கு வருத்தமாயிருக்கிறது. இன்றையதினம் நாம் எங்கேயோ தமாஷாகப் போய்விட்டு வரவேண்டுமென்று சொன்னீர்களல்லவா? அப்படிச் செய்ய இது சமயமல்ல. இப்போது என் மன நிலைமை சரியாக இல்லை.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—நல்ல வேளையாக நீங்களே அதை முதலில் சொல்லிவிட்டீர்கள். நானே அதைச் சொல்ல நினைத்தேன்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:— அப்படியா! நல்லதாயிற்று. நாம் இன்னொரு நாள் அதை வைத்துக்கொள்ளலாம்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—வைத்தியரை அழைத்து வந்து கிழவியின் நிலைமையைத் தெரிவிக்கச் சொன்னீர்களா?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:--வைத்தியரை அழைத்து வரவில்லை. நடந்த விஷயத்தை டெலிபோன்மூலம் ஆஸ்பத்திரிக்குத் தெரிவித்தேன். அவர்கள் மோட்டார் வண்டியையனுப்பி, அதில் கிழவியை ஏற்றிக்கொண்டு போயிருக்கிறார்கள். அவர்களிடம் சொன்ன சங்கதிகளை எவரிடத்திலும் வெளியிட வேண்டாமென்று ஆஸ்பத்திரி அதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கிறேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—நல்ல வேலை செய்தீர்கள். நீங்கள் சொல்லுகிறபடி குண்டோதரனைப்பற்றி அவளிட

மிருந்து எதையு மறிய முடியாதென்பது நிச்சயம். நான் ஒரு புதிய மோட்டார் சைக்கில் வாங்கப் போகிறேன். இன்றையதினம் கம்பெனிக்காரர்கள் பரீட்சை பார்க்கும் பொருட்டு ஓட்டிப் பார்ப்பதற்காக என்னிடம் அதைக் கொடுக்கப் போகிறார்கள். அதில் நீங்களும் உட்கார்ந்து கொள்ளுங்கள். தமாஷ் பிரயாணம் செய்யமுடியாமல் போனதற்கு இந்த மாதிரியாகவாவது சிறிதுதூரம் போய் விட்டு வரலாம். சாப்பாடான பிறகு நான் உங்களுடைய வீட்டிற்கு மோட்டார்சைக்கிளில் வருகிறேன்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—அதை வேண்டுமானால் செய்யலாம், நான் சாப்பிடுவதற்காக ஓட்டலிற்குப் போகிறேன். சாப்பிட்ட பிறகு வீட்டிற்குப் போய் உங்களுக்காகக் காத்திருக்கிறேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— அப்படியே செய்யுங்கள்— என்று கூறிவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் வந்த வழியாகவே திரும்பி சிறிது நேரத்தில் ஓட்டலை யடைந்து தமது சாப்பாட்டை முடித்துக்கொண்ட பிறகு வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தார். ஒரு மணி நேரத்திற்குப் பிறகு ஸப்-இன்ஸ்பெக்டர் தமது மோட்டார் சைக்கிளில் அங்கே வந்து சேர்ந்தார். பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் உடனே வெளியில் வந்து தெருக்கதவை மூடிப் பூட்டிவிட்டு வண்டியைப் பார்த்தார். மோட்டார் சைக்கிள் ஸப்-இன்ஸ்பெக்டருடைய பழையவண்டியா யிருந்ததை பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் கண்டு வியப்புடன் ஸப்-இன்ஸ்பெக்டருடைய முகத்தைப் பார்த்தார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் புன் சிரிப்புடன், "இது புது வண்டியல்ல; பழைய வண்டிதான். இதில் ஏறிக்கொண்டு கம்பெனிக்குப் போய்ப் புதுவண்டியை வாங்கவேண்டும்" என்று சமாதானம் கூறிவிட்டு மோட்டார் சைக்கிளில் ஏறி உட்கார்ந்து கொண்டார். அவருடைய ஆசனத்திற்குப் பக்கத்திலிருந்த கூடைக்குள் பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் உட்கார்ந்த உடன் வண்டி புறப்பட்டது. வண்டி வேகமாக ஓடி ராமநாதனுடைய வீடிருந்த தெருவின் வழியாகச் சென்றது. அந்த வீட்டினருகில் வண்டி சென்ற சமயத்தில் ராமநாதன் தெருவின் வாசற்படியில் நின்றுகொண்டிருந்தாராகையால், அவர் கையமர்த்தி வண்டியை நிறுத்தச் சொல்ல, ஸப்-இன்ஸ்பெக்டர் வண்டியை நிறுத்திவிட்டுப் புன் சிரிப்புடன், "என்ன விசேஷம்?" என்றார்.

ராமநாதன், "ஒன்றுமில்லை. பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரோடு ஒரு வார்த்தை பேசவேண்டும். அதனால் தான் நிறுத்தச்சொன்னேன்" என்று கூறியபின் பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரிடம், "சபேசன் புறப்பட்டுப் போய் விட்டான்" என்றார்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், "எத்தனை மணிக்குப் புறப்பட்டுப் போனான்" என்றார்.

ராமனாதன், "அவன் விடியற்காலம் 6 மணிக்குப் போக விருந்தான். அப்படிப் புறப்பட்டால் அங்கே போய்ச் சேருவதற்குள் வெயிலாய்விடுமாதலால், அவன் 4 மணிக்கே புறப்பட்டுப் போய்விட்டான். நீங்கள் எங்கே அவசரமாகப் போய்க்கொண் டிருக்கிறீர்களோ தெரியவில்லை! உங்களை நான் அநாவசியமாக நிறுத்திவிட்டேன். மறுபடியும் சாவ

காசப்படும்பொழுது உங்களைப் பார்க்கிறேன்" என்று கூறி விட்டு வீட்டிற்குள் போய்விட்டார்.

அப்போது அடுத்த வீட்டு ஜன்னலிற்கப்பாலிருந்து இருவர் அங்கே நடந்த சம்பாஷணையை கவனித்துக்கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் மற்றவரிடம், "இரண்டு பயல்களும் எங்கே போனாலும் ஒன்றாய்ப் போகிறார்களே! என்ன கேடுகாலம்?" என்றார்.

மற்றவர், "அவர்கள் எக்கேடு கெட்டால் நமக்கென்ன! எனக்கு இன்னும் 25 ரூபாய் மறுபடியும் வேண்டும்" என்றார்.

முதல் மனிதர்:—என்ன அப்பா போன வாரந்தானே 25 ரூபாய் கொடுத்தேன். மறுபடியும் 25 ரூபாய் கேட்டால், அதற்கு நான் எங்கே போகிறது! என் வீட்டில் பணம் செடியிலா காய்க்கிறது?

மற்றவர்:—நான் இனாமாகக் கேட்கவில்லை; கடனாகக் கேட்கிறேன்.

முதல் மனிதர்:—போலீஸாருக்குக் கடனாக எதைக் கொடுத்தாலும் அதோடு எள்ளும் தண்ணீரையும் சேர்த்துக் கொடுக்கவேண்டும் என்பது எனக்குத் தெரியாதா?

மற்றவர்:—அது உண்மையாயிருக்கலாம். ஆனால் என் வரையில் அது செல்லக்கூடிய வார்த்தையல்ல.

முதல் மனிதர்:—நேற்றிரவு தோப்பில் யாரோ பாடிய குரலோசை கேட்டதே! யார் அது?

மற்றவர்:—நான் உடனே ஓடிப்போய்ப் பார்த்தேன். ஆள் அகப்படாமல் எப்படியோ மாயமாய் மறைந்துவிட்

டான். அந்தப் பைத்தியக்காரனை நீங்கள் எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா?

முதல் மனிதர்:—இவன் யாரென்பது தெரிந்தாலல்லவா, அதை நான் சொல்வதற்கு. ஆனால் இவனுடைய குரல் பழகிய குரலா யிருக்கிறது. இவனை நீ பிடித்திருந்தால் இவனைப் பார்த்து இவன் யாரென்பதைக் கண்டுபிடிக்கலாம்— என்றார்.

அதேசமயத்தில் தெருவிலிருந்த மோட்டார் ஸைக்கிலின் பெடலை ஸப்-இன்ஸ்பெக்டர் உதைத்து அதை ஓட்ட ஆரம்பித்தார்.

அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் தற்செயலாய் ராமநாதனுடைய வீட்டிற்கு அடுத்த வீட்டைப் பார்த்தார். அந்த வீட்டின் ஒரு ஜன்னலுக்கப்பால் அதுவரையில் இருவர் நின்றுகொண்டிருக்க, ஒருவர் மாத்திரம் சடக்கென்று அப்பால் மறைந்ததைக் கண்டு வியப்புடன் ஸப்-இன்ஸ்பெக்டரிடம், "அடுத்த வீட்டில் ஹெட்கான்ஸ்டேபிள் பொன்னுசாமி பிள்ளை இருக்கிறானே! அவன் அங்கே என்ன செய்கிறான்?" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் உடனே ஜன்னலைப் பார்த்துவிட்டு, "அதோ நிற்பவரா பொன்னுசாமி பிள்ளை? இதற்குள் அவனுடைய அடையாளம் உங்களுக்கு மறந்து போய்விட்டதா?" என்றார்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், "அங்கே நிற்பவர் பொன்னுசாமி பிள்ளையென்று நான் சொன்னேன். அவருக்குப் பக்கத்தில் பொன்னுசாமி பிள்ளை நின்றுகொண்டிருந்

ச—5

தான்; என்னைக் கண்டவுடன் அவன் என்ன காரணத்தி னாலோ மறைந்துவிட்டான்" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் வியப்பைக் காட்டிய முகத் துடன், "அவன் இங்கே யிருக்கவேண்டிய காரணமென்ன வென்பது எனக்கு விளங்க வில்லையே. அங்கே நிற்பவரிடம் கேட்கிறேன்" என்று கூறிவிட்டு, பக்கத்து வீட்டி னருகில் சென்று, "பொன்னுசாமி இங்கே என்ன செய்கிறான்?" என்றார்.

ஜன்னலின் அருகில் நின்ற மனிதர், "பொன்னு சாமியா! யாரவன்? அந்தப் பெயருள்ள மனிதர் யாரும் இங்கே இல்லையே! அடுத்த வீட்டில் விசாரித்துப் பாருங் கள்" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர், "இப்போது அவன் உம்மோடு நின்றுகொண் டிருந்தானே! அவன் யாரோ என்கிறீரே" என்றார்.

மற்றவர், "அப்படியானால், நான் பொய்யன் என்கிறீர் களா? இந்த வீட்டில் இப்பொழுது என்னைத் தவிர வேறு யாருமில்லை என்பது நிச்சயம்" என்று கூறிவிட்டு அப்பால் போய்விட்டார். ஸப்-இன்ஸ்பெக்டர் ஜன்னலையே சிறிது நேரம் வியப்புடன் பார்த்துக்கொண் டிருந்த பிறகு மோட் டார் சைக்கிளின் அருகில் வந்து சைக்கிளின்மேல் ஏறி பெடலை உதைத்துவிட்டு உட்கார்ந்துகொண்டார். உடனே வண்டி புறப்பட்டது.

அத்தியாயம்—2

விருந்தினிடையில் வெடிகளின் ஓசை

உடனே பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், "இது பெரிய ஜாலவித்தையாகத்தா னிருக்கிறது! நிச்சயமாய் நான் ஹெட்கான்ஸ்டேபிள் பொன்னுசாமி பிள்ளையைப் பார்த்தேன். அப்படி யிருக்க, அந்த மனிதன் ஏன் இப்படிப் புளுகுகிருன் என்பது தெரியவில்லையே!" என்ருர்.

ஸப்-இன்ஸ்பெக்டர் தமது கையில் பிடித்திருந்த ஓசைக்குழாயை (Motor Horn) அழுத்தி அழுத்தி ஓசை செய்தபடியே, "அதுதான் எனக்கும் ஆச்சரியமா யிருக்கிறது. அவன் சொன்னது நிஜமா யிருக்கலாமென்றே நான் நினைக்கிறேன்" என்ருர்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், "இல்லவே இல்லை. நிச்சயமாய் நான் என் கண்களால் பார்த்தேன். அவன் வேண்டுமென்றே உண்மையை மறைக்கிருன்" என்ருர்.

அதோடு பொன்னுசாமி பிள்ளையைப்பற்றிய சம்பாஷணை முடிந்தது. அப்பொழுது அவர்களுடைய மோட்டார் சைக்கிள் அந்த ஊரைக் கடந்து செல்லவே, பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், "வண்டியை ஊருக்கு வெளியில் எங்கே கொண்டுபோகிறீர்கள்?" என்ருர்.

ஸப்-இன்ஸ்பெக்டர் புன்சிரிப்புடன், "சைக்கிள் விற்கும் கம்பெனிக்குப் போகிறேம்" என்ருர்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—ஊருக்குள்ளல்லவா அந்தக் கம்பெனி யிருக்கும். ஊருக்கு வெளியில் போகிறீர்களே!

ஸப்-இன்ஸ்பேக்டர் :—இந்த ஊரிலுள்ள கம்பெனிக்குப் போகிறோம் என்று நான் சொன்னேனா? நான் அப்படிச் சொல்லவில்லையே!

பிராசிகூடிங் இன்ஸ்பேக்டர் :— அப்படியானால் அது வெளியூரி லிருக்கிறதா?

ஸப்-இன்ஸ்பேக்டர் :—ஆம்—என்றார்.

அதே சமயத்தில் பின்புறத்தில் வந்த ஒரு மோட்டார் வண்டியின் பூம்பூம் ஓசை கேட்கவே, ஸப்-இன்ஸ்பெக்டர் சைக்கிளை இடது பக்கம் விலக்கி விடுத்துக்கொண்டு செல்லலானார். பின்னால் வந்த வண்டி அடுத்த நிமிஷம் அவர்களை மிக வேகமாகக் கடந்து சென்றது. வண்டியிலிருந்தவர்கள் யாரென்பதைப் பார்க்கமுடியாதபடி அது அவ்வளவு வேகமாய்ப் பறந்தது. அதைக் கவனித்த பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், "என்ன இது! வண்டி இவ்வளவு வேகமாகப் போகிறதே!" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் உடனே, "டேய், வண்டியை நிறுத்து" என்று கூச்சலிட்டபடி தம்முடைய மோட்டார் சைக்கிளின் வேகத்தைப் படிப்படியாகக் குறைத்துக் கொண்டே வந்து கடைசியில் நிறுத்தினார். ஆனால் மோட்டார் நிற்கவில்லை. அது வேகமாகச் சென்று சிறிது தூரத்தில் ரஸ்தாவில் காணப்பட்ட திருப்பத்தின் வழியாகத் திரும்பி கண்களுக்குத் தெரியாமல் மறைந்து போய்விட்டது. ஸப்-இன்ஸ்பெக்டர் உடனே, "வண்டியை வேகமாய் ஓட்டியதற்காக இந்த வண்டிக்காரனை சார்ஜ் செய்ய எண்ணி வண்டியை நிறுத்தச் சொன்னேன். அவன் நிறுத்தாமல் ஓட்டிக்கொண்டு போய்விட்டான். வண்டியின் நம்பரை நீங்கள் கவனித்தீர்களா?" என்றார்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், "அடாடா! நான் கவனிக்கவில்லையே." என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர், "நான் நம்பரைக் கவனிக்க முயன்றேன். ஆனால் நமக்கருகில் வந்ததும் வண்டியின் பின்புறத்திலுள்ள குழாயின்வழியாகப் புகை வெளியில் வந்தது. அந்தப் புகை நம்பர் தகட்டை மறைத்துவிட்டது. இல்லாவிட்டால் நான் நம்பரைத் தெரிந்துகொண்டிருப்பேன்" என்று கூறிவிட்டு, மறுபடியும் தமது சைக்கிளை விடுத்துக்கொண்டு சென்றார். சுமார் ஐந்து மைல் தூரம் போகும் வரையில் அவர்களிருவரும் மௌனமாகவே இருந்தனர்.

அதன்பிறகு பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், "நாம் இப்பொழுது எந்த ஊருக்குப் போய்க்கொண்டிருக்கிறோமென்பது தெரியவில்லையே." என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர், "இப்பொழுதுதானே புறப்பட்டிருக்கிறோம். இன்னும் சிறிதுநேரத்தில் அந்த விஷயம் தானாகவே தெரிந்துவிடும்" என்றார்.

வண்டி சென்றுகொண்டே இருந்தது. அப்பொழுது பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், "என்னுடைய விஷயம் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லையே! பணம் போனது போனதுதானே! நான்கு வருஷகாலமாய்விட்டதே" என்றார்.

அதற்கு ஸப்-இன்ஸ்பெக்டர், "ஆம். சரியாக நான்கு வருஷங்களாய்விட்டன. உங்களுடைய தகப்பனார் ஓடும் ரயிலிலிருந்து ஏதோ காரணத்தினால்தான் ஆற்றில் விழுந்திருக்கவேண்டும். அவருடைய மனதில் எதைப்பற்றியாவது கவலையிருந்ததா?" என்றார்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :— அவருக்குக் கவலை யெதுவு மிருந்ததாகத் தெரியவில்லை. அவர் உத்தியோகத்தி லிருந்த ஊருக்கு நான் போய் அங்கிருந்த அவருடைய சிநே கிதரிடம் விசாரித்தேன். அவர் இந்த ஊரில் தம்முடைய கடைசிக் காலத்தைக் கழிக்கவேண்டுமென்று தீர்மானித்து, அந்த ஊரில் தாம் வாங்கியிருந்த நிலம், வீடுகள் முதலிய வைகளையெல்லாம் விற்றாராம். அவை முப்பதாயிரம் பெறு மாம். அவைகளை விற்றதில், 20 ஆயிரம் ரூபாய் தேறியதாம். அதை எடுத்துக்கொண்டு அவர் இங்கே வந்தாராம். அவ ருக்கு எவ்விதமான கவலையும் இருந்ததாகத் தெரியவில்லை என்று அவருடைய சிநேகிதர் சொன்னார். ஆகையால் அவரே ஆற்றில் குதிப்பதற்குக் காரணம் இல்லை. இந்த விஷயத்தை உங்களிடம் ஏற்கனவே நான் பல தடவைகள் சொல்லியிருக்கிறேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—மெய்தான். அதனால் விஷயங் கள் சடக்கென்று நினைவிற்கு வரவில்லை. எனக்கென்ன தோன்றுகிறது தெரியுமா ? முப்பதாயிரம் ரூபா பெறுமான முடைய சொத்துகளை இருபதினாயிரம் ரூபாய்க்கு விற்ற தால், மனவருத்த மடைந்து டிரங்கு பெட்டியில் கொண்டு வந்திருந்த பணத்துடன் ஆற்றில் குதித்துவிட்டாரோ என் னவோ !

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—(வியப்புடன் பார்த்து) நீங்கள் சொல்வது வேடிக்கையா யிருக்கிறதே. பைத்தியக் காரன்கூட அப்படிச் செய்யமாட்டானே.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—இப்பொழுது நான் வெளியிட் டது என்னுடைய அபிப்பிராயமல்ல. மிஸ்டர் ராமநாதனும் நானும் இதைப்பற்றிப் பேச நேரிட்டது. அப்பொழுது,

காரியம் இப்படித்தான் நடந்திருக்க வேண்டுமென்று அவர் என்னிடம் சொன்னார். அவர் சொன்னதைத் தவிர வேறு எதுவும் எனக்கு அந்த சமயத்தில் தோன்றவில்லையாகையால், நான் அதை ஆமோதித்தேன்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:— நீங்கள் பேசும் தோரணை, அது சரியான காரணமில்லையென்னும் முடிவிற்கு நீங்கள் இப்பொழுது வந்திருக்கிறீர்களென்று காட்டுகிறது. அப்படியானல் நீங்கள் வேறு காரணம் எதையாவது கண்டுபிடித்திருக்க வேண்டுமல்லவா?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—மிஸ்டர் ராமநாதன் சொன்னது சரியானதல்ல என்பது சாதாரணமாய் எல்லோருக்கும் தெரியக்கூடியது. ஆனல் அதைத் தவிர வேறு காரணம் எதுவும் என் மனதில் படவில்லை.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—என்னுடைய தகப்பனர் வந்த சமயத்தில் வண்டியில் ராமநாதனும் பிரயாணம் செய்துகொண்டிருந்தாரல்லவா? அவர்களிருவரும் அந்த வண்டியில் ஒருவரையொருவர் சந்திக்காததுதான் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—இப்போது உங்களுடைய தகப்பனர் உயிரோடு வந்துவிடுவதாக வார்த்தைக்கு வைத்துக்கொள்ளுவோம். அவர் என்ன சொல்லுவாரோ தெரியவில்லை.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:— அது நடக்கக்கூடிய காரியமில்லை—என்றார்.

அதோடு அவர்களுடைய சம்பாஷணை ஓய்ந்து போயிற்று. இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு அவர்கள்

ஓர் ஊரை யடைந்தனர். ஸப்-இன்ஸ்பெக்டர், "இந்த ஊரில்தான் நான் குறித்த கம்பெனி இருக்கிறது" என்றார்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், "இந்த ஊரில்தான் ராமநாதன் தம்முடைய இன்னொரு வீடு இருப்பதாயும், சபேசன் இங்கே வர விடியற்காலை 4 மணிக்கே புறப்பட்டு விட்டதாயும் சொன்னார்" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:— ஓஹோ! அப்படியா! அந்த விஷயம் எனக்கு நினைவே இல்லை. ராமநாதனுடைய வீடு எங்கே இருக்கிறதாம்?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்—அதை நான் கேட்டுத் தெரிந்துகொள்ளவில்லை.

ஸப்-இன்ஸ்பெக்டர்:— அதைத் தெரிந்துகொள்வது பிரயாசையான காரியமல்ல. யாரிடத்திலாவது விசாரிப்போம்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:— அப்படி வேண்டுமானால் செய்யலாம். மோட்டார் சைக்கிள் வாங்க நீங்கள் இவ்வளவு தூரம் வரவேண்டிய அவசியமில்லையே! நம்முடைய ஊரிலேயே ஏராளமான கம்பெனிகள் இருக்கின்றன. அங்கேயே வாங்கி யிருக்கலாமே.

ஸப்-இன்ஸ்பெக்டர்:— அப்படியே செய்திருக்கலாம். வேறொரு காரணத்தைக் கருதி நான் இங்கே வந்தேன். சுமார் நான்கு வருஷ காலமாய் நான் ஒரு கேஸ் விஷயமாய் உளவுகள் சேகரித்து வருகிறேன். அது சம்பந்தமாய் நான் இந்த ஊருக்கு வர விரும்பினேன். அதற்கு மோட்டார் சைக்கிள் வாங்கும் வியாஜத்தை வைத்துக்கொண்டேன்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—நாலு வருஷங்களாகவா ஒரு கேஸைப்பற்றி துப்பு விசாரித்து வருகிறீர்கள்? என்ன கேஸ் அது?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—வேறெதுவுமில்லை. நான்கு வருஷங்களுக்கு முன்பு நம்முடைய ஊர் சோமு முதலியார் ஒருநாள், தம்முடைய வீட்டிற்கு வந்து தம்மை உடனே பார்க்கும்படி டெலிபோன்மூலம் என்னை கூப்பிட்டார். நான் காரணம் கேட்க, அதைப்பற்றி டெலிபோனில் பேசுவது சரியல்லவென்றும், நேரில் பேசலாமென்றும் அவர் சொன்னார். நான் அரைமணி நேரத்திற்குப் பிறகு அவருடைய வீட்டை யடைந்தேன். அவர் வீட்டில் காணப்படவில்லை. அவருடைய வேலைக்காரன் என்னிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து, தன் எஜமான் அதைக் கொடுத்துவிட்டுப் போனதாகச் சொன்னான். நான் அதை வாங்கிப் பார்க்க, அநாவசியமாக என்னை அங்கே வரும்படி செய்து, எனக்குப் பிரயாசை கொடுத்துவிட்டதாயும், அப்பொழுது என்னிடம் தெரிவிக்கக்கூடிய விஷய மெதுவுமில்லை யாகையால், திரும்பிப் போகும்படியும் சோமு முதலியார் அதில் எழுதி இருந்தார். நான் உடனே திரும்பி வந்துவிட்டேன்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—அப்படியா! அதற்குப் பிறகு அவரை நீங்கள் மறுபடியும் பார்க்கவில்லையா?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—பார்க்க முயற்சிக்காமலா இருப்பேன். நாலைந்து தடவைகள் நான் அவருடைய வீட்டிற்கு மறுபடியும் போய் அவரைப் பார்க்க முயன்றேன். அவர் என் கண்களில் படவே இல்லை. அவர் வெளியில் போயிருப்பதாகவோ, அல்லது, அவர் தூங்கிக்கொண் டிருப்பதாகவோ வேலைக்காரன் சொல்லிவிட்டான்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—உங்களை வரச்சொல்லி விட்டு சங்கதி ஏதுவுமில்லையென்று கடிதத்தில் எழுதி வைத்துப் போனதற்கு ஏதாவது காரணம் இருக்கவேண்டுமே! அதை நீங்கள் அறிய முடியவில்லையா?

ஸப்-இன்ஸ்பெக்டர்:— அறிந்துகொள்ளாமல் விட்டு விடுவேனு! முதலில் கூப்பிட்டார்; பிறகு விஷயத்தை என்னிடம் சொல்ல இஷ்டப்படவில்லை. அதனுல் அப்படிச் செய்தார் என்று தெரிந்துகொண்டேன்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:— அப்படியானுல் நாம் இப்போது எதற்காக இந்த ஊருக்கு வந்திருக்கிறேம்?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அந்தக் கேஸைப்பற்றி மேலும் விசாரிக்கத்தான்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்: -எந்த கேஸைப்பற்றி? சோமு முதலியாரைப்பற்றியா? அதில் நீங்கள் செய்யக் கூடிய காரிய மெதுவு மிருப்பதாகத் தெரியவில்லையே!

ஸப்-இன்ஸ்பெக்டர்:— நான் செய்யக்கூடிய காரியம் ஏதாவது இருக்கிறதா என்பதை யறியவே நான் இப்பொழுது இங்கே வந்திருக்கிறேன்—என்றூர்.

அப்போது அவர்களுடைய மோட்டார் சைக்கிள் கடைத்தெருவின் வழியாகச் சென்றுகொண் டிருந்தது. கடைத் தெருவில் ஓர் இடத்தில் ஹெட்கான்ஸ்டேபிள் பொன்னுசாமி பிள்ளை நின்றுகொண் டிருந்ததைக் கண்ட பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் வியப்படைந்தவராய், ஸப்-இன்ஸ்பெக்டரைப் பார்த்து வண்டியை நிறுத்தும்படி கூறினுர். வண்டி உடனே நிறுத்தப்பட்டது. ஸப்-இன்ஸ்பெக்டர் உடனே ஹெட்கான்ஸ்டேபிள் பொன்னுசாமி பிள்ளை

யைக் கூப்பிட்டார். அவன் வண்டியி னருகில் வந்து நின்று போலீஸ் சலாம் வைத்தான்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:— ராமநாதனுடைய வீட்டிற்கு அடுத்த வீட்டில் நீ என்ன செய்துகொண் டிருந்தாய்?

பொன்னுசாமி பிள்ளை:— (வியப்பைத் தோற்றுவித்த முகத்துடன்) ராமநாதனா! யார் அவர்?

ஸப்-இன்ஸ்பெக்டர்:— அவர்தானப்பா, நம்முடைய ஊரிலிருக்கிறாரே துப்பறிபவர். அவரைப்பற்றிதான் பேசுகிறேன்.

பொன்னுசாமி பிள்ளை:— ஓஹோ! அவரைப்பற்றியா பேசுகிறீர்கள்! அவரையாவது, அவருடைய வீட்டிற்கு இரண்டு பக்கங்களிலுமுள்ள வீடுகளில் இருக்கும் மனிதர்களையாவது நான் அறியேன். நான் அவர்களுடன் பேசியதே இல்லையே! மிஸ்டர் ராமநாதனுடைய வீட்டிற்கு அடுத்த வீட்டில் நான் எப்படி யிருக்க முடியும்?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:— சுமார் இரண்டு மணி நேரத்திற்கு முன்பு, நம்முடைய ஊரில் ராமநாதனுடைய வீட்டிற்கு வடக்கிலுள்ள அடுத்த வீட்டில் ஒரு ஜன்னலருகில் நீ நின்றதை நான் பார்த்தேன். என்னைப் பார்த்தவுடன் நீ அப்பால் மறைந்துகொண்டாயே!

பொன்னுசாமி பிள்ளை:— நான் இந்த ஊருக்குக் காலை 6 மணிக்கெல்லாம் வந்துவிட்டேன். அப்படி இருக்க, இரண்டு மணி நேரத்திற்கு முன்பு நம்முடைய ஊரில் என்னை நீங்கள் எப்படிப் பார்த்திருக்க முடியும்?

ஸப்-இன்ஸ்பெக்டர்:— (பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் பக்கம் திரும்பி) பார்த்தீர்களா? நான் சொன்னது சரியாய்

விட்டது. ராமநாதனுடைய வீட்டிற்கு அடுத்த வீட்டிலிருப்பவன் சொன்னது சரியாயிருக்கும் என்று நான் சொல்லவில்லையா! நீங்கள் வேறு யாரையோ பார்த்திருக்கவேண்டும். ஒரு வேளை அவன் இவனைப்போல் இருக்கலாம்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—(சற்று மௌனமாக இருந்தபிறகு) அப்படித்தா னிருக்கவேண்டும்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— (பொன்னுசாமி பிள்ளையை நோக்கி) எதற்காக நீ இந்த ஊருக்கு வந்தாய்?

பொன்னுசாமி பிள்ளை :— ஒரு காரியமாய் வந்தேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—ஒரு தகவல் தெரியவேண்டியிருக்கிறது. அதை யாரிடம் விசாரிக்கலாமென்று எண்ணிக்கொண் டிருந்த சமயத்தில் நல்ல வேளையாக நீ அகப்பட்டாய். இந்த ஊரில் மிஸ்டர் ராமநாதனுக்கு ஒரு வீடு இருக்கிறதாம்! அது எங்கே இருக்கிறது என்பது உனக்குத் தெரியுமா?

பொன்னுசாமி பிள்ளை :—தெரியும். சுமார் ஒரு மாதத்திற்குமுன் நான் இந்த ஊருக்கு வந்தேன் அப்போது ராமநாதனுடைய குமாஸ்தாவான சபேசன் என்பவரை ஒரு வீட்டில் கண்டேன். அது ராமநாதனுடைய வீடென்று அவர் சொன்னார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அப்படியானால் சபேசன் என்பவரை உனக்குத் தெரியும்போ லிருக்கிறது! அந்த வீட்டின் பக்கம் இன்றைய தினம் நீ போனாயா?

பொன்னுசாமி பிள்ளை :— போனேன். அந்த வீட்டின் வெளிக்கதவு பூட்டப்பட் டிருக்கிறது.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—(வியப்புடன்) என்ன! கதவு பூட்டப்பட் டிருக்கிறதா! இருக்காதே!

ஸப்-இன்ஸ்பெக்டர்:—எப்போது போய்ப் பார்த்தாய்?

பொன்னுசாமி பிள்ளை:— ஒரு மணி நேரத்திற்குமுன் பார்த்தேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:-அவன் விடியற்காலை 4-மணிக்கே இந்த ஊருக்கு வரப் புறப்பட்டு விட்டதாக ராமநாதன் சொன்னாரே! இன்னுமா அவன் வந்துசேரவில்லை! மணிக்கு 5-மைல் வீதம் வந்தால்கூட, பத்துமணிக் கெல்லாம் அவன் இங்கே வந்திருக்க வேண்டுமே! இப்பொழுது மணி இரண்டல்லவா ஆகிறது.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:— அவன், ஒரு வேளை, இந்த ஊருக்கு வந்தபின் கொல்லத்துக்காரர்கள் தச்சர் முதலியோரைக் கண்டு பேசுவதற்காகப் போயிருக்கிறானோ என்னவோ! அதனால் வீட்டின் கதவு பூட்டப்பட் டிருக்கலாம். இவன் ஒருமணி நேரத்திற்கு முன்பல்லவா போய்ப் பார்த்திருக்கிறான். இவன் அங்கிருந்து புறப்பட்டு வந்த பிறகு சபேசன் அங்கே வந்திருக்கலா மல்லவா?

ஸப்-இன்ஸ்பெக்டர்:- அப்படியும் இருக்கலாம். அதையும் பார்த்துவிடுவோம். நீயும் சைக்கிளின் பின்புறத்தில் உட்கார்ந்துகொள். வண்டியை விட்டுக்கொண்டு போவோம்-என்றார். தலைமை ஜெவான் உடனே மோட்டார் சைக்கிளின் பின்புறத்தில் சாமான்கள் வைத்துக் கட்டுவதற்காக ஏற்படுத்தப்பட் டிருந்த இடத்தின்மேல் உட்கார்ந்து கொண்டு, அதே தெருவில் வண்டியை விட்டுக்கொண்டு போகும்படி கூறினான். சைக்கிள் உடனே புறப்பட்டது. வண்டி செல்லவேண்டிய வழியை தலைமை ஜெவான் அடிக்கடி குறிப்பிட, ஸப்-இன்ஸ்பெக்டர் அதன்படி வண்டியை விட்டுக்கொண்டு சென்றார். சிறிது நேரத்தில் வண்டி

ஊருக்கு வெளியில் போயிற்று. அந்த ஊரிலிருந்து வெளி யூர்களுக்குச் செல்லும் ஒரு ரஸ்தாவில் தனியாக ஒரு வீடு அமைந்திருந்தது; அதுவே ராமநாதனுடைய வீடு. அவர்கள் சென்றுகொண் டிருந்த ரஸ்தா கிழக்கு மேற்காக இருந்ததுடன், ரஸ்தாவில் அவர்களுக்கு முன் சிறிது தூரத்தில் சுமார் கால் பர்லாங்கு அகலமுள்ள ஒரு சிறிய ஆறு தெற்கு வடக்காய்க் காணப்பட்டது. ஆற்றைக் கடப்பதற்குக் கட்டப்பட்டிருந்த பாலம் வீட்டின் முன்புறத்திலிருந்து பார்த்தாலே நன்றாகத் தெரிந்தது. வீட்டின் முன்புறத்தில் மோட்டார் சைக்கிள் நிறுத்தப்பட்டது. உடனே பொன்னுசாமி பிள்ளை, "பார்த்தீர்களா! நான் சொன்னபடியே கதவு பூட்டப்பட்டிருக்கிறது. சம்பசன் இன்னும் இங்கே வந்துசேரவில்லை" என்று கூறிக்கொண்டே வண்டியை விட்டுக் கீழே இறங்கினான். ஸப்-இன்ஸ்பெக்டரும் பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரும் உடனே வீட்டின் பக்கம் தங்களுடைய பார்வையைச் செலுத்தினர். பொன்னுசாமி பிள்ளை கூறியபடியே வீட்டின் வெளிக்கதவு ஒரு பெரிய பூட்டினால் பூட்டப்பட் டிருந்தது. அந்தக் கட்டிடத்தைச் சுற்றி மூன்று பக்கங்களிலும் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் பலவித மரங்கள் அடர்த்தியாயும் பின்னிக்கொண்டு மிருந்தன. அதோடு அங்கங்கே பல காட்டாமணக்குப் புதர்களும், வேறு பல செடிகளுள்ள புதர்களும் காணப்பட்டன. வீட்டின் முன்புறத்திலிருந்த ரஸ்தாவின் இன்னொரு புறத்திலும் அதேபோல மரங்கள், புதர்கள் முதலியவை காணப்பட்டன. ஸப்-இன்ஸ்பெக்டர் மோட்டார் சைக்கிளை விட்டிறங்கி வீட்டினருகில் சென்று பூட்டை இழுத்துப் பார்த்தார். பூட்டு ஒழுங்காகவே பூட்டப்பட்டிருந்தது தெரிந்தது. உடனே அவர் வீட்டைச் சுற்றிலும் காணப்பட்ட

ஜன்னல்களின் கதவுகளின் மூலம் கட்டிட அமைப்பு எப்படி யிருந்தது என்று பார்க்கப் போவதாய் கூறிவிட்டு ஜன்னல் கதவுகளைத் திறக்க முயன்றார். ஆனால் எந்தக் கதவும் திறக்கமுடியாதபடி எல்லாம் உட்புறத்தில் தாளிடப்பட்டிருந்தன. கட்டடத்தை ஒரு சுற்றுச் சுற்றி வந்தபிறகு ஸப்-இன்ஸ்பெக்டர் மோட்டார் ஸைக்கிளினருகில் வந்து சேர்ந்து, "நாம் ஆற்றங்கரைக்குப் போவோம். அங்கே போய் ஆநந்தமாய் மர நிழலில் உட்கார்ந்திருப்போம். அதற்குள் பொன்னுசாமி பிள்ளை மோட்டார் சைக்கிளில் ஊருக்குப் போய் பலகாரங்களும் பழங்களும் வாங்கிவரட்டும். அதை நாம் ஆற்றங்கரையில் வைத்து சாப்பிட்டு விட்டு சாயங்காலம் ஊருக்குள் போய் நம்முடைய காரியங்களை முடித்துக்கொண்டு அதன் பிறகு நம்முடைய ஊருக்குப்போவோம்" என்று கூறினார். அதை பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் ஆமோதிக்க, மற்றவர் தமது சட்டைப்பையிலிருந்து ஒரு ரூபாயை எடுத்து பொன்னுசாமிபிள்ளையிடம் கொடுக்க, அதை அவன் வாங்கித் தன்னுடைய சட்டைப்பையில் வைத்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் உட்கார்ந்துகொண்டு அதைத் திருப்பி வந்த வழியே ஓட்டிக்கொண்டு செல்லலானான். ஸப்-இன்ஸ்பெக்டரும் பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரும் ரஸ்தாவோடு மெல்ல நடந்து சென்று சிறிது நேரத்தில் பாலத்தை யடைந்தனர். ரஸ்தாவைவிட ஓர் ஆள் ஆழத்திற்குக் கீழ் இருந்த ஆற்றங்கரையை யடைய ரஸ்தாவின் வலது புறத்திலிருந்த சரிவின் வழியாக ஓர் ஒற்றையடிப்பாதை கீழ்நோக்கிச் சென்றது. அவர்கள் அதன் வழியாகக் கீழே சென்றனர். ஆற்றங்கரையில் தண்ணீரின் ஓரமாகவே ஒரு பெரிய ஆலமரத்தின் நிழல் இருந்ததாகையால் அவர்கள் அந்த நிழலை யடைந்து ஜிலுஜிலுப்பா

யிருந்த மணலின்மேல் உட்கார்ந்துகொண்டனர். மிஸ்டர் ராமநாதனுடைய வீடு முழுதும் அங்கு நன்றாகத் தெரிந்தது. இருவரும் சிறிதுநேரம் மௌனமாய் உட்கார்ந்திருக்க, பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் சல சலவென்ற சப்தத்துடன் அருகில் ஓடிக்கொண்டிருந்த தண்ணீரைப் பார்த்தபடி, "ஆநந்தமாய்ப் பொழுது போக்க இதுதான் தகுந்த இடம். இப்பொழுது வெயில் கடுமையாக அடித்துக்கொண் டிருந்தாலும், இங்கே மிகவும் குளிர்ச்சியா யிருக்கிறது. மணலும் ஜில்லென்றிருக்கிறது" என்று கூறிவிட்டு எதிரிலிருந்த தண்ணீரின் நடுவில் தெரிந்த கூழாங்கற்களையும் அடியில் பளிங்குபோல் வந்த தண்ணீரையும் பார்த்துவிட்டு, "ஆற்றில் தண்ணீர் அதிகமாயில்லைபோ லிருக்கிறது!" என்றார். அவருக்கு எதிர்ப் புறத்தில் தண்ணீரைப் பார்த்தபடி சற்று தூரத்தில் உட்கார்ந்துகொண் டிருந்த ஸப்-இன்ஸ்பெக்டர், "ஆம். கணைக்கால் ஜலந்தான் இருக்கும்" என்றார். அப்போது யாரோ ஒருவன் ஆற்றின் நடுவில் தண்ணீரில் நின்றுகொண் டிருந்ததை அவர்கள் பார்த்தனர்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :— அவன் யாரா யிருப்பான்? ஆற்றின் நடுவில் என்ன செய்துகொண் டிருக்கிறானென்பது தெரியவில்லையே!—என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— அவன் மீன் பிடிக்கிறான்போ லிருக்கிறது. அதனால்தான் நடு ஆற்றில் நின்றுகொண் டிருக்கிறான்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—ஆற்றில்தான் தண்ணீர் அதிகமாக இல்லையே! அப்படியிருக்க இந்தத்தண்ணீரில் மீன் எங்கிருந்து அகப்படும்?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—இவன் மீன் பிடிப்பதிலிருந்து ஏதோ அகப்படுகிறது என்பது நன்ருகத் தெரிகிறது. இல்லாவிட்டால் இவன் இப்படி நிற்கவேண்டிய அவசிய மில்லையல்லவா?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :— (பாலத்தைப் பார்த்து விட்டு) இது மிகவும் பழமையான பாலம்போ லிருக்கிறதே!

ஸப்-இன்ஸ்பெக்டர் :—இந்தப் பாலம் கட்டப்பட்டு சுமார் ஐம்பது வருஷங்களாவது ஆயிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :— (ஸப்-இன்ஸ்பெக்டரின் முகத்தைப் பார்த்து) இந்த இடத்தை எப்படித்தேடிப் பிடித்தீர்கள்? இதற்குமுன்பு இங்கே வந்திருக்கிறீர்களா?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—உங்களுக்கு எப்படித் தோன்று கிறது? நான் இதற்கு முன்பு இங்கே வந்திருப்பேனு? வந்திருக்கமாட்டேனு?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—அந்த விஷயம் எனக்கு எப்படி நிச்சயமாய்த் தெரியும்? ஹெட்கான்ஸ்டேபிள் பொன்னுசாமி நாம் வந்தபோது வழியைக் காட்டிகொண்டே வந்ததிலிருந்து நீங்கள் இந்த இடத்திற்குப் புதியவர் என்று தோன்றுகிறது.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அப்படி உங்களுக்கே தோன் றும்போது என்னிடம் கேட்ட கேள்விக்கு அர்த்த மிருப் பதாய்த் தெரியவில்லையே—என்ருர்.

அப்பொழுது நடு ஆற்றில் காணப்பட்ட மனிதன் அவர்களிருந்த கரையை நோக்கி வரலானன். அவன் வந் ததை கவனித்த பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், "இவனை

இதற்குமுன்பு நான் எங்கேயோ பார்த்தமாதிரி யிருக்கிறதே. யாரிவன்?'' என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டரும் உடனே அவனை கவனிக்கலானார். அந்த மனிதன் அப்போது ஆற்றோடு வலது புறத்தில் செல்லலானான். கரைக்கு வருபவனைப்போல் முதலில் காணப்பட்ட அவன் அவ்வாறு பாலமிருந்த திக்கில் செல்லவே பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், "யாரப்பா அது?" என்று உரக்கக் கூப்பிட்டார். அதற்கு அந்த மனிதன் மறுமொழி கூறாமல் பாலத்தினடியிலிருந்த கண்வாய் வழியாய் அப்பால் சென்று மறைந்துபோனான். ஸப்-இன்ஸ்பெக்டர் உடனே ராமநாதனுடைய வீடிருந்த பக்கம் திரும்பினார். எனெனில், அதே சமயத்தில் ரஸ்தாவில் ஊரிருந்த திக்கிலிருந்து ஒரு மோட்டார் வண்டி வந்த ஓசை கேட்டது. பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரும் அந்த திக்கில் பார்த்தார். மோட்டார் திடீரென்று நிறுத்தப்பட்டு, மறுபடியும் வந்ததாய்த் தோன்றியது. அதன் பிறகு அது வேகமாய் வந்து ஆற்றின் பாலத்தைக் கடந்து அப்பால் போய்விட்டது. அதில் வண்டியோட்டியைத் தவிர வேறு எவரும் காணப்படவில்லை. வண்டி அப்பால் சென்று மறைந்தவுடன், "இந்த ரஸ்தாவில் ஜன நடமாட்டத்தையே காணோம்" என்று பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் கூறினார்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:— ஆம். இந்த வண்டியை கவனித்தீர்களா?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—கவனித்தேன்; அதற்கென்ன?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—இதில் ஒரு வேடிக்கை யிருக்கிறது. நாம் ஊரிலிருந்து புறப்பட்டு சிறிது தூரம் வந்த

வுடன் நம்மை வேகமாகக் கடந்து ஒரு மோட்டார் வந்த தல்லவா; அதேபோல இந்த வண்டி இருக்கவில்லையா? அதே வர்ணம், அதே மாதிரியான அமைப்பு முதலியவைக ளுட னிருக்கிறதல்லவா?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:-ஆம். இந்த மோட்டா ரைத் தயாரித்த கம்பெனிக்காரர்கள் இதைப்போல ஏராள மான மோட்டார் வண்டிகளைத் தயாரித்திருக்கிறார்கள். நாம் பார்த்த மோட்டார் இதுதான் என்று நிச்சயமாய் எப்படிச் சொல்ல முடியும்?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அதைத்தான் நான் உங்களிடம் கேட்கிறேன். மோட்டார் நிறுத்தப்பட்ட மாதிரி யிருந் ததே! எதற்காக நிறுத்தப்பட்டிருக்கும்?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—வண்டி நிறுத்தப்பட்ட தாய்த் தெரியவில்லையே! எஞ்சின் சப்தம் திடீரென்று நின்று மறுபடி வந்ததே ஒழிய மோட்டார் நிறுத்தப்பட்ட தாகத் தெரியவில்லையே.

ஸப்-இன்ஸ்பெக்டர்:— அப்படியு மிருக்கலாம்—என் றார். அதே சமயத்தில் மோட்டார் சைக்கிள் வந்துசேர்ந் தது. பொன்னுசாமி பிள்ளை பாலத்தினருகில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு ஒரு பெரிய மூட்டையுடன் அவர்களிடம் வந்துசேர்ந்தான். அந்த மூட்டையை ஸப்-இன்ஸ்பெக்டர் வாங்கிக்கொண்டு, "மோட்டார் சைக்கிளை மறைவான ஓர் இடத்தில் நிறுத்து. இல்லாவிட்டால் ரஸ் தாவில் யாருமில்லாததைப் பார்த்துவிட்டு மோட்டார் சைக் கிளை எவனாவது கொண்டு போய்விடப்போகிறான்" என்றார். பொன்னுசாமி பிள்ளை மறுபடி ரஸ்தாவிற்குப் போய்விட் டான். உடனே ஸப்-இன்ஸ்பெக்டர் மூட்டையை

அவிழ்த்து வைத்துக்கொண்டு அதிலிருந்த பலகாரப் பொட்டலங்களையும், ஆரஞ்சுகள், வாழைப்பழங்கள் முதலியவை களையும் எடுத்து மணலில் கடை பரப்பினர். பொன்னுசாமி பிள்ளை மோட்டார் சைக்கிளை மறைவான ஓர் இடத்தில் நிறுத்திவிட்டுத் திரும்பி வந்துசேர்ந்தான்.

உடனே பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், "இதேது தடபுடலா யிருக்கிறதே! எதற்காக இவ்வளவு வாங்கி வரச் சொன்னீர்கள் ?" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் புன்சிரிப்புடன், "அப்படி என்ன அதிகமாய் வாங்கிவிட்டான்; கொஞ்சம்தான் வாங்கி வந்திருக்கிறான்" என்றார்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், "இது தமாஷ் பிரயாண மில்லையென்று சொல்லி என்னை ஏமாற்றி அழைத்து வந்து விட்டீர்களென்பது இப்போது நன்றாகத் தெரிந்துவிட்டது. நான் வருவதற்கு என் மனது சரியான நிலைமையி லில்லை யென்று சொன்னேன். அதற்கு ஒத்தபடி ஒத்தூதிக் கொண்டே சாமர்த்தியமாக என்னை இங்கே கொண்டுவந்து விட்டீர்களே!" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர், "அப்படியானால் நல்ல வேளை யாக என்னுடைய கவலை யொழிந்தது. ஒருவேளை கொள்ளை கிள்ளை யடிப்பதற்கோ, இல்லாவிட்டால் வேறு ஏதாவது செய்வதற்கோ உங்களைத் தனிமையான இடத்திற்கு அழைத்து வநததாய்ச் சொல்லுவீர்களோவென்று பார்த்தேன்" என்றார்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் புன்சிரிப்புடன், "பேஷ்! என்னிடம் கொள்ளையடிப்பதானால் தற்சமயம் என்னிடம் ஒரு பைசாகூட இல்லை. அதனால் உங்களுக்கு எந்த வித்

மான ஆதாயமு மேற்படப்போவதில்லே. வண்டியைப் பரீட்சை பண்ணுவதற்காக என்னேயும் உங்களோடுகூட வண்டியில் அழைத்துப் போவதாய்ச் சொல்லவே, நான் அவசர அவசரமாக வெறுங்கையோடு புறப்பட்டேன். ஊருக்குத் திரும்பிப் போவதற்கு உங்களுடைய வண்டியில் தான் போகவேண்டும். அதிருக்கட்டும். மீன் பிடித்துக் கொண்டிருந்த இந்த ஆளைக் கூப்பிட்டேன். அவன் ஏன் வரவில்லே ?" என்ருர்.

ஸப்-இன்ஸ்பெக்டர், "அது உங்களுக்குத் தெரியாம லிருக்கும்போது உங்களோடிருக்கும் எனக்கு மாத்திரம் எப்படித் தெரியும்! நானென்ன ஜோசியனு" என்ருர்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், அந்த ஆள் பாலத்தி னடியிலிருந்த கண்வாயில் எந்தக் கண்வாயின் வழியாக மறைந்தானே அதை மறுபடியும் பார்க்க, ஒரு மனித னுடைய தலைமாத்திரம் சுவரினருகில் தெரிந்தது. யாரோ ஒரு மனிதன் தன்னுடைய உடம்பு முழுவதையும் சுவரிற் கப்பால் மறைத்து வைத்துக்கொண்டு தலையை மாத்திரம் நீட்டி எதையோ பார்க்கிருன் என்பது விளங்கியது. அவர் வியப்புடன் ஸப்-இன்ஸ்பெக்டரை நோக்கி, "கண்வாயினடி யில் மறைந்தபடி நின்றுகொண்டு எவனே நம்மைப் பார்க் கிருன்" என்ருர். ஸப்-இன்ஸ்பெக்டர் உடனே கண் வாயைப் பார்த்தார். உடனே அந்தத் தலை மறைந்தது.

அவர் பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரை நோக்கி, "யாரையும் காணுமே." என்ருர்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், "ஆள் மறைந்துவிட் டான். அவன் யாவனென்பது தெரியவில்லே" என்ருர். ஸப்-இன்ஸ்பெக்டர் கண்வாயைப் பார்த்தபடி பொட்டலங்

களை அவிழ்த்துத் தின்பண்டங்களை மூன்று பாகங்களாகப் பிரித்து வைத்துக்கொண்டபிறகு பழங்களையும் அப்படியே பிரித்து மற்ற இருவருக்கும் இரண்டு பாகங்களைக் கொடுத்தார்; அதன் பிறகு மூவரும் சாப்பிட ஆரம்பித்தனர். அவர்கள் பாதி சாப்பிட்டுக்கொண் டிருக்கையிலேயே ரஸ்தாவில் ஒரு சைக்கிள் வந்தது தெரிந்தது. அதிலிருந்து சபேசன் இறங்கியதை மூவரும் பார்த்தனர். சபேசன் வீட்டின் முன்புறத்தில் சைக்கிளைச் சார்த்தி வைத்துவிட்டு வீட்டின் முன்புறக் கதவைப் பூட்டியிருந்த பூட்டைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்து மறைந்துபோனான். அதைப் பார்த்தபடியே மூவரும் சாப்பிட்டுக்கொண் டிருந்தனர்.

சுமார் கால்மணி நேரம் சென்றது. அப்போது வீட்டிற்குள்ளிருந்து 'படாரென்று' ஒரு வெடி ஓசை கேட்டது. உடனே மூவரும் திடுக்கிட்டனர். ஸப்-இன்ஸ்பெக்டர் உடனே, "துப்பாக்கியால் சுட்டமாதிரியல்லவா ஓசை கேட்டது. நாம் போய் அதை கவனிப்போம்" என்றார். அதே நொடியில் மறுபடியும் வெடியோசை உண்டாயிற்று. உடனே ஸப்-இன்ஸ்பெக்டர் சடக்கென்று எழுந்திருந்தார். அடுத்த நிமிஷம் ராமநாதனுடைய வீட்டிலிருந்து, ஒரு சால்வையைப் போர்த்திக்கொண்டு தலையில் ஒரு பெரிய முண்டாசைக் கட்டிக்கொண்டிருந்த ஒரு மனிதன் வெளியில் வந்து கதவைப் பூட்டிக்கொண்டு சைக்கிளின் மேலேறி ரஸ்தாவின் வழியாக ஊரிருந்த திக்கில் வேகமாகச் செல்லலானான். ஸப்-இன்ஸ்பெக்டர், "யாரையா அது? நில் அப்படியே" என்று உரக்கக் கூவியபடி ஒரே ஓட்டமாய் ஓடி ரஸ்தாவை யடைந்து சைக்கிளைத் துரத்திக்கொண்டு செல்லலானார். ஆனால் சைக்கிளில் சென்ற மனிதன் அவர் கூவியதைக் காதில் வாங்கியதாகவே தெரியவில்லை. அடுத்த விநாடியில்

பாலத்தின் வழியாக முன்பு சென்ற அதே மோட்டார் மறுபடி திரும்பிவந்து ஸப்-இன்ஸ்பெக்டரின்மேல் மோதி அவரைக் கீழே தள்ளிவிட்டு அப்பால் போய்விட்டது. அது சைக்கிளில் சென்ற மனிதருக்கு முன்னால் போய்விட்டது. உடனே மோட்டாரிலிருந்து ஒரு பெரிய கயிற்றின் ஒரு நுனி மாத்திரம் பின்புறத்திலிருந்த திறப்பின் வழியாக வெளியில் தூக்கி யெறியப்பட்டது. அந்தத் தலைப்பை சைக்கிளிலிருந்த மனிதர் சடக்கென்று பிடித்துக்கொண்டு சைக்கிளின் முன்புறத்திலிருந்த கைப்பிடியில் கட்டிக் கொண்டுவிட்டார். உடனே மோட்டார் வேகமாய்ப் பறந்தது. சைக்கிளும் அதனுடனேயே போய்விட்டது. ஸப்-இன்ஸ்பெக்டர் மோட்டாரால் இடித்துத் தள்ளப்படவே, அவருக்கு சற்று பின்னால் ஓடிவந்த பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரும், ஹெட்கான்ஸ்டேபிள் பொன்னுசாமி பிள்ளையும் சடக்கென்று அவரருகில் சென்று அவரைத் தூக்கினர். ஸப்-இன்ஸ்பெக்டர் உடனே, "நல்லவேளையாக எனக்கு பலமாய் அடிபடவில்லை. நாம் அந்த சைக்கிள்காரனை விடக்கூடாது. பொன்னுசாமீ! மோட்டார் சைக்கிளை இங்கே கொண்டுவா" என்றார்.

உடனே பொன்னுசாமி பிள்ளை அதை அவருக்கருகில் கொண்டுவரவே, அவர்களிருவரையும் அவர்கள் ஊரிலிருந்துவந்த சமயத்தில் எப்படி ஏற்றிக்கொண்டு வந்தாரோ அதேபோல ஏற்றிக்கொண்டு சைக்கிள் சென்ற திக்கில் மோட்டார்சைக்கிளை வேகமாக விட்டுக்கொண்டு செல்லலானார். சுமார் ஒரு மைல் தூரம் சென்றும் முன்னால் சென்ற மோட்டார் கண்ணில் தென்பட வில்லை. ஆனால் ரஸ்தாவின் நடுவில் ஒரு போர்வை கிடந்தது. ஸப்-இன்ஸ்பெக்டர் உடனே வண்டியை நிறுத்தி அதை யெடுத்து பக்

கத்தில் உட்கார்ந்திருந்த பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரிடம் கொடுத்து, அதை வைத்துக்கொண்டிருக்கும்படி கூறிவிட்டு மறுபடியும் வண்டியை விட்டுக்கொண்டு சென்றார். மேலும் கால்மைல் தூரம்செல்ல, சைக்கிளில் போன மனிதருடைய தலைப்பாகை ரஸ்தாவில் கிடந்தது. அதையும் ஸப்-இன்ஸ்பெக்டர் எடுத்துக்கொண்டு மறுபடியும் வண்டியை வேகமாய் ஓட்டிக்கொண்டு போக அரைமைலுக் கப்பால் ஒரு சைக்கிள் விழுந்துகிடந்தது. அதனருகில் ஒரு மனிதர் ஸ்மரணையற்றுக் கிடந்தார். உடனே பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், "இவன் மோட்டாரிலிருந்து விடப்பட்ட கயிற்றைப் பிடித்துக்கொண்டு சென்றபொழுதே இம்மாதிரி அபாய மேதாவது ஏற்படுமென்பது எனக்குத் தெரியும். கயிறுதான் அறுந்துபோய் விட்டதோ! இல்லாவிட்டால் வண்டி நிறுத்தப்பட்டவுடன் சைக்கிள் கீழே விழ, அதிலிருந்த இவனுக்கு அடிபட்டுவிட்டதோ என்னவோ! இது யார் என்பதைப் பார்ப்போம்" என்று கூறியபடி கீழே கிடந்த மனிதருக்கருகில் சென்று தரையில் மண்டியிட்டு முகத்தைக் குனிந்து கவனித்துப் பார்த்தார். என்ன ஆச்சரியம்! கீழே கிடந்த மனிதர் துப்பறியும் ராமநாதன் என்பது தெரிந்தது; ஸப்-இன்ஸ்பெக்டர், பொன்னுசாமி பிள்ளை ஆகிய இருவரும் கீழே கிடந்த மனிதரைப் பார்த்துவிட்டு, அவருடைய மயக்கத்தைத் தெளியவைக்க முயன்றனர். சிறிது நேரத்தில் ராமநாதன் சுயநினைவை யடைந்து எழுந்து உட்கார்ந்துகொண்டு, "அடாடா! நீங்களா! நீங்கள் இங்கே எதற்காக வந்தீர்கள்? அந்த மோட்டார் வண்டி அகப்பட்டதா?" என்றார்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—எந்த மோட்டாரைப் பற்றிக் கேட்கிறீர்கள்? நீங்கள் இங்கே வரவேண்டிய காரணமென்ன?

ராமநாதன் :— இன்றைய தினம் நீங்கள் என்னைப் பார்த்துவிட்டுப் போனபிறகு சபேசனுடைய பெயருக்கு தபால் மூலமாய் ஒரு கடிதம் வந்தது. அதைத் தபால்காரன் என்னிடம் கொடுத்தான். உங்களிடம் நான் ஏற்கனவே தெரிவித்த காரணத்திற்காக சபேசனை இனி நான் கவனிக்கப் போகிறேனென்று சொன்னேனல்லவா? தபால் மூலமாய் அவனுக்கு வந்த கடிதத்தில் எனக்கு உதவக்கூடிய விஷயமேதாவது இருக்கிறதா என்பதையறிய எண்ணி நான் அந்த உறையை சாமர்த்தியமாகத் திறந்து உள்ளே இருந்த கடிதத்தை எடுத்துப் பார்த்தேன். அது இதோ இருக்கிறது; இதைப் படித்துப்பாருங்கள்—என்று கூறியவண்ணம் தமது சட்டைப் பையில் கையை விட்டுப் பார்த்துவிட்டு, வியப்பைத் தோற்றுவித்த முகத்துடன், "இந்தப் பையில்தானே வைத்திருந்தேன். காணேமே!" என்று கூறிவிட்டு அதில் நன்ருகத் தேடிவிட்டு மற்ற பைகளையும் பார்த்து, "எதிரில் வந்த மோட்டாரிலிருந்த மனிதர்கள் தான் அதைக் கொண்டு போய்விட்டார்கள்போ லிருக்கிறது" என்ருர்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :— அந்தக் கடிதத்தில் என்ன எழுதப்பட் டிருந்தது?

ராமநாதன் :—அதில் அதிகமாப் எதுவும் எழுதப்பட் டிருக்கவில்லை.

> சபேசா! என்னுடைய கடைசி எச்சரிக்கை ஏற்கனவே உனக்குக் கிடைத்துவிட்டது. அப்படியிருந்தும் நீ என் விருப்பப்படி நடக்கவில்லையாகையால் இந்தக் கடிதம் உனக்குக் கிடைக்கும் தினத்தின் மாலை 6-மணிக்குள் நீ பிண மாய்விடுவாய் என்று எச்சரிக்கும்
>
> குண்டோதரன்.

என்று எழுதப்பட்டிருந்தது. நான் உடனே அதை முன் போலவே உறையினுள் வைத்த பிறகு சபேசனுக்கு அபாயம் நேராமல் காப்பாற்றவேண்டுமென்றெண்ணி இந்த ஊர் வரையில் என்னுடைய மோட்டாரில் வந்தேன். என்னுடைய மோட்டார் பழுதுபட்டுவிட்டபடியால் அதை மோட்டார் ரிப்பேர் செய்யும் ஒரு கம்பெனியில் விட்டுவிட்டு அங்கிருந்து என் வீட்டை நோக்கி நடந்து வந்துகொண்டிருந்தேன். இந்த இடத்தில் ஒரு மோட்டாரும் அதன் பின்னுல் ஒரு சைக்கிளுமாய் வந்தன; சைக்கிளின்மேல் ஓர் ஆளிருந்தான். சைக்கிளும் மோட்டாரும் ஒரு கயிற்றினுல் சம்பந்தப் படுத்தப்பட்டிருந்தன. அந்த சைக்கிளைப் பார்த்தவுடன் எனக்கு ஆச்சரியமாய்விட்டது. அது எனக்குச் சொந்தமான சைக்கிள்போலிருந்தது. சபேசன் அதன்மேலேறிக்கொண்டு இங்கே வந்திருந்தானுதலால், அது அவனிடமிருந்து யாரோ ஓர் அன்னியனுக்கு எப்படிக் கிடைத்தது என்று விசாரிக்க எண்ணி கையமர்த்தி மோட்டாரை நிறுத்தும்படியாக சைகை செய்தேன். ஆனுல் வண்டி நிறுத்தப்படவில்லை. மோட்டார் என்னை நோக்கி வேகமாய் ஓடிவந்தது. சடக்கென்று நான் ரஸ்தாவின் ஓரத்தில் நகர்ந்துகொண்டேன். வண்டியும் அந்தப் பக்கம் திருப்பப்பட்டது. அப்பால் சப்பாத்துப்புதர் இருந்ததாகையால், அதற்கு அப்பால் ஒதுங்கமுடியாதபடி அது தடையாகிவிட்டது. உடனே நான் நடுரஸ்தாவிற்கு ஓடினேன். ஆனுல் அது பலிக்கவில்லை. மோட்டாரிடமிருந்து தப்பித்துக்கொள்ள என்னுல் முடியவில்லை. வண்டி என்பக்கம் திருப்பப்பட,அது என்மேல் வந்து வேகமாய் மோதி என்னைக் கீழே தள்ளியது. அடுத்த நொடியில் நான் கீழே விழுந்தேன். என் தலையில் பலமாக அடிபட்டதாகையால் அதன் பிறகு

என்ன நடந்ததென்பதை என்னால் அறிய முடியவில்லை. நான் சுய நினைவற்றிருந்த சமயத்தில்தான் அவர்கள் வண்டியை நிறுத்தி என்னுடைய சட்டைப்பையை சோதனை செய்து பார்த்து சபேசனுக்கு வந்திருந்த கடிதத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்போ லிருக்கிறது.

ஸப் - இன்ஸ்பெக்டர் :— (தலையை அசைத்துவிட்டு பொன்னுசாமி பிள்ளையின் பக்கம் திரும்பி) சைக்கிளில் சென்ற ஆளைத் தேடுவதில் பயன் ஏற்படாது. நாம் திரும்பிப் போகலாம். அதிருக்கட்டும். நீ சாமான்களை யெல்லாம் எப்படி எப்படி வாங்கினாய்? கணக்கெழுத மறந்து விட்டேன்!—என்று கூறியபடி ஒரு நோட்டுப் புஸ்தகத்தை வெளியில் எடுத்து அதில் ஏதோ எழுதிய பிறகு, "இன்றைய தேதி போட்டுவிட்டேன். ஆரஞ்சு டஜன் என்ன விலை?—என்றார்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—கணக்கெழுதுவ திருக்கட்டும். நாம் ஊர் வரையிலும் சென்று சைக்கிள் பேர் வழியையும் மோட்டாரையும் பிடிக்கவேண்டாமா? பாதியிலேயே விட்டுவிடுகிறதா?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—சைக்கிள் இதோ கிடந்து அகப்பட்டுவிட்டது. சைக்கிளில் சென்ற மனிதனைக் கண்டு பிடிக்க, அவன் எப்படி யிருப்பா னென்பதாவது, அவனுடைய அடையாளமாவது நம் யாருக்கும் தெரியாது. அவன் சைக்கிளிலேயே சென்றிருந்தால், நாம் அவனைப் பிடிக்கலாம். அவன் சைக்கிளை இங்கேயே போட்டுவிட்டு மோட்டார் வண்டியில் போயிருக்கிறான். அதைப்போல ஏராளமான மோட்டார் வண்டிக ளிருப்பதாய் நீங்களே சற்றுமுன்பு என்னிடம் சொன்னீர்கள். அதனால் அந்த மோட்டாரையாவது,

சைக்கிளில் சென்ற மனிதனையாவது பிடிக்க முடியாது. ஆகையால் நாம் மிஸ்டர் ராமநாதனுடன் அவருடைய வீட்டிற்குப் போய் சபேசனுக்கு—என்று கூறி மேலே ஏதோ கூறுவதற்குள்,

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—(இடைமறித்து) சபேசனைத்தான்—என்று கூறி மேலே ஏதோ கூறுவதற்குள்,

ஸப்-இன்ஸ்பெக்டர்:—(இடைமறித்து) யார் பயமுறுத்தினார்கள் என்பதைப் பார்ப்போம்—நாம் அங்கே போய்க் காவல் காத்திருந்தால்தானே—என்று கூறி மேலே ஏதோ கூறுவதற்குள்,

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—(இடைமறித்து) நான் சொல்லவாரம்பித்த விஷய மதுவல்ல. நாம் இரண்டு—என்று கூறி மேலே ஏதோ கூறுவதற்குள்,

ஸப்-இன்ஸ்பெக்டர் :— (இடைமறித்து) ஆம். நாம் இரண்டு பேருமிருப்போம். வேண்டுமானால் பொன்னுசாமியை நிறுத்திக்கொள்ளலாம். ஆகையால்—என்று கூறி மேலே கூறுவதற்குள்,

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—(இடைமறித்து) அதல்ல. நாம் சற்றுமுன்பு இரண்டு—என்று கூறி மேலே ஏதோ கூற முயல, ஸப்-இன்ஸ்பெக்டர் தமது முழங்கையால் அவரை இடித்து ஏதோ சைகை காட்ட, தாம் பேசியபொழுது ஸப்-இன்ஸ்பெக்டர் குறுக்கில் பேசியதன் காரண மின்னதென்பதை யறிந்துகொண்டார். என்ன காரணத்தினாலோ சபேசன் வீட்டிற்குள்ளிருந்தபொழுது உண்டான இரண்டு வெடி ஓசைகளைப்பற்றிய விஷயமெதையும் ராமநாதனிடம் வெளியிட வேண்டாமென்று தெரிவிக்கிறார் என்று யூகித்துக் கொண்டார். அதனால் அவர் சடக்கென்று மாற்ற எண்ணி

அவசர அவசரமாக, "நாம் சற்றுமுன்பு இரண்டுபேரும் சாப்பிட்டுக்கொண் டிருந்தோ மல்லவா. அப்பொழுதே எனக்கு ஏதோ விசேஷம் நடக்கப்போகிறது என்று ஒரு வித உணர்ச்சி உண்டாயிற்று. அது உண்மையாய்விட்டது. அதேபோல நாம் எதிர்பார்க்காத விதமாய் நம்முடைய நண்பரான ராமநாதனை சந்தித்துவிட்டோம்—என்றார்.

ராமநாதன் :—நீங்கள் மூவரும் இங்கே எப்படி வந்தீர்க ளென்பதை இன்னும் சொல்லவில்லையே! பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் சொல்வதிலிருந்து நீங்க ளிருவரும் எங் கேயோ சற்றுமுன்பு சாப்பிட்டுக்கொண் டிருந்தீர்களென்பது வரையில் தெரிகிறது. நீங்கள் ஆற்றுப் பக்கத்திலிருந்து வந்தபடியால்—இல்லை. அது எனக்கெப்படித் தெரியும்? நீங் கள் ஆற்றுப் பக்கத்திலிருந்துதான் வந்திருக்க வேண்டு மென்று உங்களுடைய மோட்டார் சைக்கிள் நிற்கும் விதத்திலிருந்து தெரிகிறது. ஆகையால் ஆற்றங்கரைக் கப்பா லிருக்கும் எந்த ஊரிலிருந்து வந்தீர்கள்?" என்று புன்னகை ததும்பிய முகத்துடன் வினவினார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—நாங்கள் நேராக நம்முடைய ஊரிலிருந்து புறப்பட்டு வந்தோம்; ஆற்றங்கரைக்குப் போய் அங்கே பலகாரங்கள் சாப்பிட்டோம்; அதன் பிறகு அங் கிருந்து புறப்பட்டு ரஸ்தாவை யடைந்த சமயத்தில் எங் களைத் தாண்டிக்கொண்டு நீங்கள் சொன்னபடி ஒரு மோட் டார் வண்டியும், அதன் பின்னால் ஒரு சைக்கிளும் வரவே, அம்மாதிரி சைக்கிளை மோட்டாரால் அவ்வளவு வேகத் துடன் இழுத்துச் செல்லவேண்டிய காரணமென்ன வென்று நான் அவர்களிடம் கேட்டேன். ஆனால் அவர் கள் மறுமொழி தரவில்லை. என்னுடைய மோட்டார் சைக்கிள் வண்டியிலேயே நாங்கள் பின்தொடர்ந்து வந்தோம்.

வழியில் இங்கே உங்களையும், இந்த சைக்கிளையும் கண்டோம். அதன் பிறகு நடந்த சங்கதிகள் உங்களுக்கே தெரியும். இது உங்களுடைய சைக்கிள்தானா என்று பாருங்கள்— என்றார்.

ராமநாதன் அதைப் பார்த்துவிட்டு, "ஆம், இது என்னுடையதுதான். இது என்னுடைய தென்பதை மோட்டார் வண்டியி லிருந்தவன் எப்படியோ தெரிந்துகொண்டு, அதனால் என்மேல் வண்டியை ஏற்றிவிட்டு சைக்கிளையும் எனக்கருகிலேயே போட்டுவிட்டுப் போயிருக்கவேண்டும். ஆற்றின் சமீபத்தில் என்னுடைய வீடிருக்கிறதே! அதைப் பார்த்தீர்களா ?" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— ரஸ்தாவில் தனியாக ஒரு வீடு ஆற்றிற்கு இந்தப் பக்கத்திலேயே இருக்கிறதே! அதுவா உங்களுடைய வீடு?

ராமநாதன் :— ஆம்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— கட்டிடத்தி னருகில் நாங்கள் போய்ப் பார்க்கவேண்டிய அவசியமே ஏற்படவில்லை. ஏனென்றால், அது உங்களுடைய வீடென்பது எங்களுக்குத் தெரியாது.

ராமநாதன் :— ஓஹோ! அப்படியா! அங்கு நாம் சீக்கிரமாய்ப் போகவேண்டும். சபேசனுக்கு பெரிய அபாயம் நேரவிருக்கிறது. அதை நாம் தடுக்கவேண்டும்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— ஆம். அவசியம் போகவேண்டும். நாமோ நான்கு பேர்களிருக்கிறோம். என்னுடைய மோட்டார் சைக்கிளில் மூன்று பேர்கள் ஏறிக்கொள்ளுவதற்குத்தான் இடமிருக்கிறது. ஆகையால் நான்காவது மனிதரை

எப்படி நம்மோடு அழைத்துக்கொண்டு போவது என்பது தெரியவில்லை.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—நாம் ஒரு காரியம் செய்வோம். பொன்னுசாமியைப் பின்னல் விட்டுவிடுவோம். அவன் சைக்கிளில் வந்துசேரட்டும். நாம் மூவரும் மோட்டார் சைக்கிளில் போய்விடலாம்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:— அது நல்ல யோசனையாகத் தோன்றுகிறது. ஆனாலும் நாம் நால்வரும் ஒன்றாகப் புறப்பட்டுப் போக ஏதாவது வழியிருக்கிறதா?

பொன்னுசாமி:—பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் எஜமான் சொல்லுகிறபடியே நான் சைக்கிளில் ஏறிக்கொள்ளுகிறேன். சற்றுமுன்பு மோட்டாருக்கும் சைக்கிளுக்கும் கயிறு கட்டப்பட்டிருந்ததைப்போல மோட்டார் சைக்கிளுக்கும், சைக்கிளுக்கும் ஒரு கயிற்றைக் கட்டிவிட்டால் நால்வரும் ஒன்றாகப் போய்விடலாம்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—உனக்கு சுய மூளை கிடையாது போல் இருக்கிறதே! இன்னொருவன் செய்வதைப் பார்த்துக் காப்பியடிக்க எண்ணுகிறாயே!

ராமநாதன்:—சாமர்த்தியமாக யாராவது ஏதாவதொரு காரியத்தைச் செய்தால், அதைப்போலவே தாங்களும் செய்யவேண்டுமென்று மற்றவர்கள் எண்ணுவது இயல்புதானே.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அது இயல்புதான். ஆனாலும் இது முட்டாள்தனமான காரியமல்லவா. மோட்டார் திடீரென்று நிறுத்தப்படவேண்டிய நிலைமை ஏற்படுகிறதென்று வைத்துக்கொள்ளுவோம். அப்பொழுது பின்னல் கட்டப்பட்டிருக்கும் சைக்கிள் என்னவாகும்? உடனே அது

மோட்டாரின் பின்புறத்தின்மேல் வேகமாக மோதிக் கொண்டு கவிழ்ந்துவிடும். சைக்கிளின்மேலுள்ள மனிதர் உடனே கீழே விழுந்துவிடுவார். அது மாத்திரமில்லை. மோட்டார் எதன்மேலாவது ஏறிவிடுவதாக வைத்துக் கொள்ளுவோம். அப்பொழுது பின்னாலிருக்கும் சைக்கிள் என்னவாகும்? அது அப்பொழுதே கவிழ்ந்துபோய்விடுவதுடன் அதன்மே லேறியிருக்கும் மனிதரும் விழுந்து விடுவார்.

ராமநாதன்:—அடாடா! என் மனதில்கூட அந்த விஷயம் இதுவரையில் படவில்லை.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—ஆகையால் நாம் அந்த யோசனையை விட்டுவிட வேண்டியதுதான். அதிருக்கட்டும். உங்கள்மேல் மோட்டார் ஏறியதாகச் சொன்னீர்களே! அடி பலமாகப் பட்டிருக்கிறதா?—என்று கூறியபடி அவருக்கருகில் வந்து பார்த்தார்.

ராமநாதன்:—நல்ல வேளையாக எனக்கு அவ்வளவாக அடிபடவில்லை. உடம்பிலும் எந்த இடத்திலும் காயமேற்படவில்லை.

ஸப்-இன்ஸ்பெக்டர்:— நாங்கள் உங்களைப் பார்த்த போது உங்களுக்கு ஸ்மரணை தப்பிப்போயிருந்தது. உங்களுக்குத் தலையில் அடிபட்டிருக்கவேண்டுமே! தலையில் காயமிருக்கிறதா வென்று பார்க்கிறேன்—என்று கூறிவிட்டு ராமநாதனுடைய தலையைப் பார்த்தார்.

ராமநாதன்:—எனக்கு ஸ்மரணை உண்டானபோது தலையில் வலி யிருந்தது. அப்போதே நான் தலையைத் தொட்டுப் பார்த்துக்கொண்டேன். தலையில் காயம் எதுவும் படவில்லை. உள்ளுக்குள் காயம் பட்டிருக்கலாம்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—ஆம். அப்படித்தான், இருக்க வேண்டும். வெளியில் அடிபட்ட அடையாளம் எதையும் காணோம். உள்ளேதான் காயம் பட்டிருக்கிறது.

ராமநாதன் :—நேரமாகிறது; நாம் போகலாமே!—என்றார். அதுவரையில் கையில் நோட்டுப் புஸ்தகத்தை வைத்திருந்த ஸப்-இன்ஸ்பெக்டர், "ஆம் போகவேண்டும்" என்று கூறிவிட்டு நோட்டுப் புஸ்தகத்தை சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டு, மோட்டார் சைக்கிளின்மேலேறி உட்கார்ந்துகொண்டார். பொன்னுசாமி பிள்ளை சைக்கிளிலேறிக்கொண்டு போய்விட்டான். ராமநாதன் கூடையிலும், ஸப்-இன்ஸ்பெக்டருக்குப் பின்னால் பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரும் ஏறிக்கொண்டனர். உடனே மோட்டார் சைக்கிள் திருப்பப்பட்டு ராமநாதனுடைய வீட்டை நோக்கிச் சென்றது. கூடைக்குள் கால்கள் வைக்கப்படுமிடத்தில் இருந்த போர்வையையும் உருண்டையாகக் காணப்பட்ட துணியையும் பார்த்த ராமநாதன் வியப்புடன் ஸப்-இன்ஸ்பெக்டரை நோக்கி, "இப்போது வெயில் நன்றாகக் காய்கிறதே! எதற்காகப் போர்வையை எடுத்துக்கொண்டு வந்தீர்கள்?" என்று வினவினார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— சைக்கிளில் ஏறிக்கொண்டு போன மனிதன் தன்னுடைய உடம்பை இதனால்தான் மறைத்துக்கொண் டிருந்தான். இதோடிருக்கும் துணி தான் அவனுடைய தலைப்பாகை. இவைகளிரண்டையும் அவன் நடுரஸ்தாவில் இரண்டிடங்களில் போட்டிருந்தான்.

ராமநாதன் :—அவனுடைய கருத்து நன்றாக விளங்குகிறது. இவைகளைக் கீழே போட்டுவிட்டுப்போனால் இவைகளை யெடுப்பதற்காக இரண்டிடங்களில் வண்டியைநிறுத்து

வீர்கள். அதற்குள் இன்னும் கொஞ்சதூரம் போக அவகாச மேற்படுமல்லவா. அவன் எதிர்பார்த்தபடியேதான் இப்போது காரியமும் நடந்திருக்கிறது. நீங்கள் வண்டியை இரண்டிடங்களில் நிறுத்தியபடியால்தான் அவன் உங்களை ஏமாற்றிவிட்டான். அடாடா! நான் உங்களோடு இல்லாமல் போய்விட்டேனே! நானிருந்திருக்கும் பக்ஷத்தில் இப்படியெல்லாம் நடந்திருக்க விட்டிருக்க மாட்டேன்

ஸப்-இன்ஸ்பேக்டர் :—இம்மாதிரி குற்றம் செய்கிறவர்கள் எவ்வளவுதான் ஜாக்கிரதையான பேர்வழிகளா யிருந்தாலும், என்றையதினமாவது ஒரு தடவை தவறு செய்து மாட்டிக்கொள்வது வழக்கம் என்று எல்லோரும் சொல்லுவதைக் கேட்டிருக்கிறேன். அதோடு **பலநாளைய திருடன் ஒருநாள் அகப்படுவான்** என்னும் மொழியும் இப்போது என்னுடைய நினைவிற்கு வருகிறது.

ராமநாதன் :—(வியப்புடன் ஸப்-இன்ஸ்பெக்டருடைய முகத்தைப் பார்த்து) நீங்கள் சொல்வதிலிருந்து அவன் ஏதோ தவறு செய்திருக்கிறான் என்றல்லவா அர்த்தமாகிறது! எனக்குத் தெரிந்தவரையில் போர்வையையும் தலைப்பாகையையும் போடுவது தவறாகாது. அது தவறல்லவென்று வைத்துக்கொண்டாலும் வேறு என்ன தவறு செய்திருக்கிறான்?

ஸப்-இன்ஸ்பேக்டர் :— போர்வையையும் தலைப்பாகையையும் போட்டதுதான் அவன் செய்த தவறு.

ராமநாதன் ;—(சால்வையைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துவிட்டு) அப்படியே வைத்துக்கொண்டாலும், இந்த சால்வையை வைத்துக்கொண்டு அவனை உங்களால் எதுவும் செய்ய முடியாது. இது இன்னாருடையது என்பதைக் காட்

டக்கூடிய அடையாள மெதுவுமில்லை. இது யாருடைய தென்பதைக் கண்டுபிடிப்பதும் பலியாத காரியம். இந்நிறத்தில் இதேபோல பலர் சால்வைகள் வைத்திருப்பார்கள். (தலைப்பாகையைப் பிரித்துப் பார்த்துவிட்டு) இது நல்ல வெள்ளைத்துணி; அதோடு புதுத் துணியாக இருக்கிறது. வண்ணான் குறியும் இல்லை. ஆகையால் இந்தத் துணியும் உங்களுக்கு உதவப்போவதில்லை. அப்படியிருக்க, இவைகளிரண்டையும் அவன் போட்டது தவறு என்று எதனால் சொல்லுகிறீர்கள்?

ஸப-இன்ஸ்பெக்டர்:— இவைகளிரண்டும் இவைகளினுடைய சொந்தக்காரரைக் கண்டுபிடிக்க உதவுமென்றோ உதவாதென்றோ நான் சொல்லவேயில்லை. அப்படியிருக்க, நீங்களே எல்லாவற்றையும் சொல்லி முடிவு கட்டுகிறீர்கள்!

ராமநாதன்:— அப்படியானால் இவைகளிரண்டையும் அவன் போட்டதில் என்ன தவறு இருக்கிறது? விஷயத்தைச் சொல்லமாட்டேனென்கிறீர்களே!

ஸப்-இன்ஸ்பெக்டர்:—உங்களுக்கு விஷயம் தெரியாமல் போய்விடப் போகிறதா. எப்படியும் அதை நான் தெரிவிக்காமலிருக்க மாட்டேன்—என்றார்.

அவர்களுடைய சம்பாஷணையை பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் கவனித்துக்கொண்டிருந்தாராதலால், ஸப்-இன்ஸ்பெக்டர் விஷயத்தை வெளிப்படையாகக் கூறாமல் எதற்காக மறைக்கிறார் என்று எண்ணினார். அதன்பிறகு அவர்கள் அந்த விஷயத்தைப்பற்றிப் பேசாமலிருந்தனர்; பத்து நிமிஷங்களுக்குப் பிறகு ராமநாதனுடைய வீட்டையடைந்தனர். அவர்கள் பொன்னுசாமியைப் பாதி வழியிலேயே கடந்து வந்துவிட்டனராதலால், அவன் அப்போது அங்கே இல்லை.

வீட்டின் முன்புறத்தை யடைந்தவுடன் மோட்டார் சைக்கிள் நிறுத்தப்பட்டது. உடனே மூவரும் கீழே இறங்கி வீட்டினருகில் சென்றனர். முன்புறக் கதவைப் பார்த்தவுடன் ராமநாதன் "சபேசன் காலை 4 மணிக்கே புறப்பட்டு வந்தானே! அவன் இன்னும் இங்கே வரவில்லையா, இல்லாவிட்டால் வந்துவிட்டுத் தான் மறுபடியும் எங்கேயாவது வெளியில் போயிருக்கிறானா என்பது தெரியவில்லையே" என்று கூறிவிட்டு, முன் கதவில் பூட்டப்பட்டிருந்த பூட்டைத் தமது சட்டைப்பையிலிருந் தெடுத்த ஒரு சாவியால் திறந்தார். கதவு திறக்கப்பட்ட உடன் மூவரும் உள்ளே நுழைந்தனர். அவர்களுக்கு முன்பு சிறிது தூரத்தில் இன்னொரு கதவு காணப்பட்டது. அந்தக் கதவு மூடப்பட்டிருக்கவே, அதனருகில் ராமநாதன் சென்று அதைத் திறக்க முயன்றார். கதவு என்ன காரணத்தினாலோ திறந்துகொள்ளவில்லை. ராமநாதன் அதை இழுத்து இழுத்துப் பார்த்துவிட்டு வியப்பைக் தோற்றுவித்த முகத்துடன், "இதென்ன! கதவைத் திறக்க முடியவில்லையே! கதவு கெட்டியாக வாசற்படியோடு பிடித்துகொண் டிருக்கிறதோ என்னவோ தெரியவில்லையே!" என்று கூறிவிட்டு கதவை அசைத்து அசைத்து இழுக்க முயன்றார். கதவு திறந்துகொள்ள மறுத்துவிட்டது. உடனே ஸப்-இன்ஸ்பெக்டர், "கதவு கெட்டியாக நிலையில் பிடித்துக்கொண் டிருப்பதாய் எனக்குத் தோன்றவில்லை. நீங்கள் இவ்வளவு தூரம் அதை உலுக்கியும் வராததால், அது உட்புறம் தாளிடப்பட்டிருக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது" என்றார்.

ராமநாதன் :—(வியப்புடன்) இது எப்படி உட்புறம் தாளிடப்பட் டிருக்கும்? வெளியில் இருந்தபடியே உட்

புறத்தில் யாரும் தாளிடமுடியாதே! கதவு வெளிப்புறம் பூட்டப்பட் டிருக்கிறது. அப்படியிருக்க இந்தக் கதவின் தாள் எப்படி உட்புறத்தில் போடப்பட்டிருக்கும்?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அதுதான் எனக்கும் ஆச்சரியமாயிருக்கிறது. இந்த வீட்டிற்குள் நுழைய வேறு வழி ஏதாவது இருக்கிறதா?

ராமநாதன்:—இந்த ஒரு வழியைத் தவிர வேறு வழி கிடையாது. நாம் இந்தக் கதவை எப்படியாவது திறந்தால் ஒழிய உள்ளே போக முடியாது—என்றார்.

அதே சமயத்தில் அங்கு ஹெட்கான்ஸ்டேபில் பொன்னுசாமி பிள்ளை வந்துசேர்ந்தான். அவன் ராமநாதன் சொன்னதைக் கேட்டுக்கொண்டே வந்தானாதலால் உடனே, "இந்தக் கதவை நான் எப்படியாவது திறக்கிறேன்" என்று கூறிவிட்டு, ஸப்-இன்ஸ்பெக்டரை நோக்கி, "நான் சைக்கிளில் ஏறிக்கொண்டு வந்தே னல்லவா. வரும்போது தற்செயலாய் சைக்கிளின் முன்புறத்திலுள்ள கைப்பிடியை கவனித்தேன். அதனுடைய இடது பக்கத்துப் பிடியி லிருக்கவேண்டிய மூடி காணப்படவில்லை. பிடி இரும்புக் குழாயாகையால் அந்த குழாயில் வெளியில் சிறிது தெரியும்படியாக ஒரு காகிதம் சொருகப்பட் டிருந்தது. அதை நான் எடுத்துப் பார்த்தேன். இதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதைப் பாருங்கள்" என்று கூறிவிட்டு கசங்கிக்கிடந்த காகிதமொன்றை தன்னுடைய சட்டைப் பையிலிருந்து வெளியில் எடுத்து அவரிடம் கொடுத்தான்.

ஸப்-இன்ஸ்பெக்டர் உடனே அதை வாங்கிப் பார்த்தார்., அதில்:—

"என்னைத் துடர்ந்து வரும் போலீஸ்காரர்களுக் கும், என்னெதிரில் தற்செயலாய் வந்துசேர்ந்த ராம நாதனுக்கும் இதன் மூலம் தெரிவிக்க விரும்புவது என்னவென்றால், நான் ராமநாதனுடைய வீட்டை யடைந்து பார்த்தபோது தெருவின் கதவு திறந்து கிடந்தது. உடனே உள்ளே புகுந்தேன். அப்பா லிருந்த இரண்டாவது கதவு உட்புறம் தாளிடப்பட் டிருந்தது. கதவைத் தட்டி அதைத் திறக்கச்செய்து சபேசனைத் துலைக்க எண்ணிய சமயத்தில் திடீரென்று, தாளிடப்பட் டிருந்த கதவிற்கப்பால் என்ன காரணத் தினாலோ இரண்டு வெடி ஓசைகள் கேட்டன. என்ன காரணத்திற்காகவோ சபேசன் தற்கொலை செய்து கொண்டான் என்று நான் உடனே யூகித்துக்கொண் டேன். அதற்கு மேல் அங்கே எனக்கு வேலையெதுவு மில்லை யாகையால் நான் வெளியில் வந்துசேர்ந்தேன். நான் புறப்பட்டுப் போக ஏற்கனவே ஏற்பாடுகள் செய்திருந்தபடியே உங்களிடமிருந்து தப்பித்துக் கொண்டு வந்துவிட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ளும்.

குண்டோதரன்.

என்று எழுதப்பட்டிருந்தது. அதை ஸப்-இன்ஸ்பெக்டர் மற்றவர்களிடம் காட்டினார். எல்லோரும் அதைப் பார்த்த பிறகு ஸப்-இன்ஸ்பெக்டர் அதைத் திரும்பவும் பெற்று தமது சட்டைப்பையில் பத்திரப்படுத்திக் கொண்டு பொன்னுசாமி பிள்ளையை நோக்கி, "கதவைத் திறப்பதாகச் சொன்னாயே; கதவைத்திற" என்றார்.

உடனே பொன்னுசாமி வெளியில் போய் மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட் டிருந்த ஆயுதப்பெட்டியி லிருந்து

ஒரு குறட்டை யெடுத்துவந்து, உட்புறத்தில் மாட்டப்பட்டிருந்த சங்கிலியின் அடிபாகத்திலிருந்த கதவை அவர்களிருந்த பக்கத்தில் மடக்கிவிடப்பட்டிருந்தபடியால், அவைகளைப் பிடித்து நிமிர்த்திவிட்டு துளையின்வழியாக உட்புறத்திற்குத் தள்ளிவிட்டு, கதவைப் பிடித்து வலுவாய் உலுக்கி இழுக்க, கதவு திறந்துகொண்டது. சங்கிலி அதிலிருந்து கழன்றுபோய் உட்புறத்தில் மேலே இருந்த நாதாங்கியில் தொங்கியது. உடனே அவர்கள் நால்வரும் வேகமாய் உள்ளே நுழைந்தனர்.

அத்தியாயம்—3

முழி இருக்கையில் முதலுக்கு மோசம்

வாசற்படியைக் கடந்து அப்பால் சென்றதும் ஸப்-இன்ஸ்பெக்டர், "நீங்களெல்லோரும் இப்படியே நில்லுங்கள். நான் சொல்லும்போது வரலாம். நான் மாத்திரம் உள்ளே நுழைந்து முதலில் பார்க்கவேண்டும்" என்று கூறிவிட்டு, தான் மாத்திரம் உள்புறம் சென்று வீடு முழுதையும் சுற்றிப் பார்த்தார். ஓர் அறையில் சபேசன் கழுத்தின்மேல் கையை வைத்தபடி மல்லாந்து விழுந்து கிடந்தான். அவனுடைய வலது தோளின்மேலும், வலது கன்னத்திலும் உராய்ந்தபடி இரண்டு துப்பாக்கி ரவைகள் சென்றிருக்க வேண்டுமென்பது நன்றாக விளங்கியது. சுவரில் ஷை இரண்டு குண்டுகளும் பதிந்திருந்தன. அவர் அவைகளை எடுத்து ஒரு காகிதத்தில் பொட்டலமாகக் கட்டித் தமது சட்டைப்பையில் வைத்துக்கொண்டார். அதன் பிறகு சபேசனது காயங்களை கவனித்தார். வலது கன்னத்தி

லிருந்த காயம் கண்ணின் பக்கத்திலிருந்து காதின் கீழ் பாகம்வரையில் நீளமாகச் சென்றிருந்ததாகையாலும், சபேச னுடைய தலைப்பக்கச் சுவரில் குண்டுகள் பதிந்திருந்தமை யாலும் சபேசனுடைய கால்புறம் இருந்த திக்கிலிருந்து ஷை குண்டுகள் வந்திருக்கவேண்டுமென்றும் அவர் யூகித் துக்கொண்டு உடனே சபேசனுடைய உயரத்தைக் கையால் அளந்து பார்த்தார்.

சபேசன் ஐந்தரையடி உயரமிருந்தது தெரிந்தது. அவ் வளவு உயரமான மனிதன் நின்றுகொண்டிருந்தபோது சுடப்பட்டிருப்பதாலும், காயம் கண்ணின் பக்கத்திலிருந்து காதின் கீழ்பக்கம் நோக்கிச் சென்றமையாலும், இன்னும் உயரமான இடத்திலிருந்து ரவை வந்திருக்கவேண்டு மென்று அவர் யூகித்துக்கொண்டு சபேசனுடைய தலை பாகத்தில் சுவரில் ஆறடிக்குமேல் என்னவிருந்தது என் பதை கவனித்தார். அங்கு சுமரில் 9 அடி உயரத்தில் ஒரு காற்றுவாரியைத் தவிர வேறெதுவுமில்லை யாகையால் அவர் ஒரு மூலையிலிருந்த ஒரு நாற்காலியைக் கொண்டுவந்து அதை சுவரோரமாகப் போட்டுக்கொண்டு அதன்மேலேறிப் பார்த்தார். அப்பால் ஓர் அறை காணப்பட்டது. காற்று வாரியில் குறுக்கேயிருந்த கம்பியில் ஒரு சாண் நீளமிருந்த ஒரு கயிறு தொங்கிக்கொண் டிருந்தது. அதைத் தவிர அங்கு வேறு எதுவும் காணப்படவில்லை யாகையால் அவர் அதை மாத்திரம் அவிழ்த்து எடுத்துக்கொண்டபிறகு நாற் காலியை விட்டுக் கீழே இறங்கி முன்போல நாற்காலியை அது இருந்த மூலையிலேயே வைத்தபிறகு சபேசனருகில் சென்று குனிந்து அவனை கவனித்தார். சபேசனுக்கு மெது வாக சுவாசம் வந்துகொண்டிருந்தது. அவர் உடனே சபேசனுடைய முகத்தைப் பார்க்க, அது சற்று வெளுத்

திருந்தது. அவர் அந்த அறை முழுதையும் இன்னொரு முறை சுற்றிப்பார்த்தார். அந்த அறையில் ஒரு மூலையில் ஒரு மேஜையையும், அவர் எடுத்து உபயோகித்த நாற்காலியையும் தவிர வேறு எந்த விதமான சாமான்களும் காணப்படவில்லை. அவர் மேஜையினருகில் சென்று மூடப்பட்டிருந்த அதனுடைய சொருகு பெட்டியை வெளியில் இழுத்தார். உள்ளே ஒரு காகிதம் நான்காக மடித்து வைக்கப்பட்டிருந்தது. அதைத் தவிர வேறு எந்த வஸ்துவும் மேஜையில் இல்லையாகையால், அவர் அந்தக் கடிதத்தை எடுத்துப் பிரித்துப் பார்த்து அதில் காணப்பட்ட விஷயத்தைப் படித்துவிட்டு அதைத் தமது சட்டைப்பையில் வைத்துக் கொண்டபிறகு சபேசனுடைய சட்டைப்பையில் என்ன இருந்ததென்று ஆராய்ந்து பார்த்தார்.

சாவிகள் கோக்கப்பட்டிருந்த ஒரு சிறிய வளையமும், ஒரு சிறிய பணப்பையும் அகப்பட்டன. பணப்பையில் 2 முழு ரூபாய்களும் மூன்றணாவிற்கு சில்லரையும் காணப்பட்டன. அதைத் தவிர வேறு எதுவும் காணப்படவில்லை. அவைகளிரண்டையும் அவர் தமது சட்டைப்பையில் வைத்துக்கொண்டு சபேசன் எந்தத் துப்பாக்கியால் சுடப்பட்டானோ அந்தத் துப்பாக்கியைத் தேடினார். அது எங்கும் காணப்படவில்லையாகையால் அறைக்கு வெளியில் வந்து ராமநாதனிடம் போய், "நீங்கள் ஒரு காரியம் செய்யவேண்டும். என்னுடைய மோட்டார் சைக்கிளில் நீங்கள் ஏறிக்கொண்டு பக்கத்திலிருக்கும் ஊருக்குப் போய், அந்த ஊர் ஸப்-இன்ஸ்பெக்டரையும், இரண்டு ஜெவான்களையும் அழைத்துவாருங்கள்" என்றார். மிஸ்டர் ராமநாதன் "சபேசனுடைய நிலைமை எப்படி யிருக்கிறது என்பது எனக்குத் தெரியவேண்டாமா? நான் அவனைப் பார்த்து விட்டுப் போகவேண்டும்" என்றார்.

உடனே ஸப்-இன்ஸ்பெக்டர், "நீங்கள் வீணுகக் காலதாமதம் செய்கிறீர்கள். சபேசன் உயிருடனிருக்கிறுனு இறந்துவிட்டானு என்பதே நிச்சயமாய்த் தெரியவில்லை. நீங்கள் வேகமாய்ப் போய் கால்மணியில் திரும்பி வாருங்கள். வரும்போது ஒரு டாக்டரையும் அழைத்து வாருங்கள்" என்ருர்.

உடனே ராமநாதன் வெளியிற் சென்ருர்; இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு மோட்டார் சைக்கிள் புறப்பட்டுப் போன ஓசை கேட்டது. மோட்டார் சைக்கிள் வெகுதூரம் சென்று மறைந்தவரையில் மௌனமாக நின்ற ஸப்-இன்ஸ் பெக்டர் பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரை நோக்கி, "வீட்டின் பின்புறத்தில் யாராவது மனிதர்க ளிருக்கிருர்களா வென் பதைப் பாருங்கள்" என்ருர். பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் உடனே புறப்பட்டுப் போய்விட்டார்.

அவர் பின்புறத்திலிருந்த அறைகளை யெல்லாம் ஒவ் வொன்ருகத் திறந்து ஓர் இடம்கூட விடாமல் நன்ருகத்தேடிஞர். ஐந்து நிமிஷத்திற்குப் பிறகு ஸப்-இன்ஸ்பெக்டரும் அவருடன் வந்து சேர்ந்துகொண்டார். ஸப்-இன்ஸ்பெக்டர் உடனே அவரை சபேசனிருந்த அறைக்குப் பின்புறத்தி லிருந்த அறைக்கு அழைத்துச் சென்று மேலே இருந்த காற்றுவாரியைக் காட்டி, "இதைப் பார்த்தீர்களா?" என்று வினவிஞர்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் அதைப் பார்த்துவிட்டு, "இதற்கென்ன?" என்று வியப்புடன் ஸப்-இன்ஸ்பெக் டரை நோக்கி வினவிஞர்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:-இந்தக் காற்றுவாரி இருக்குமிடத் திலிருந்துதான் சபேசன்மேல் குண்டு வந்து பாய்ந்திருக்

கிறது. காற்றுவாரியிலிருந்து குண்டு வருவது எப்படி சாத்தியப்பட்டிருக்கும்?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—இந்த அறையிலிருந்து யாராவது காற்றுவாரியின் வழியாகப் பக்கத்து அறைக்குள் சுட்டிருக்க வேண்டும்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அது முடியக்கூடிய காரியமா! சாதாரணமாக ஒரு மனிதன் எவ்வளவு உயரமிருக்கிறான்?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—குறைந்தது 5 அடியாவது இருப்பான்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அதிக உயரமானவனா யிருந்தால்?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :— அநேகமாக ஆறடி இருப்பான்?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—இந்தக் காற்றுவாரி எவ்வளவு உயரத்தி லிருக்கிறது?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :— ஒன்பதடியாவது இருக்கலாம்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அப்படியானால் சுட்ட மனிதன் அதிக உயரமானவன் என்று வைத்துக் கொண்டாலும், ஒன்பதடி உயரத்திற்குமே லிருக்கும் காற்றுவாரியின் வழியாய் அவன் எப்படி சுடமுடியும்? குறி பார்ப்பதற்கு கண்களை உபயோகப்படுத்த வேண்டுமே! துப்பாக்கியால் சுடும்பொழுது துப்பாக்கியின் பின்னால் அவனுடைய முக மிருக்கவேண்டுமானால் அவன் என்ன செய்ய வேண்டும்?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :— அடியில் நாற்காலி முதலிய சாமான் எதையாவது போட்டுக்கொண்டு, அதன் மேல் ஏறி நின்றுகொண்டு சுட்டிருக்க வேண்டும்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அப்படியே நடந்ததாய் வைத்துக்கொள்ளுவோம். நாம் இங்கே வந்தபோது எப்படி வந்தோம் ?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :— (வியப்புடன் ஸப்-இன்ஸ்பெக்டரின் முகத்தைநோக்கியபடி) எதற்காக இந்தக் கேள்வியைக் கேட்கிறீர்களென்பது எனக்கு விளங்கவில்லையே !

ஸப்-இன்ஸ்பெக்டர் :— (புன்சிரிப்புடன்) இதுவரையில் கொலைக்கேஸெதுவும் என்னிடம் வந்ததில்லை. இதுதான் முதல் தடவை. ஆகையால் பின்னால் கோர்ட்டில் பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரொருவர் கேட்கும் கேள்விகளுக்கு எப்படி பதில் சொல்லுகிறது என்பதைப் பற்றி இப்பொழுது முதலே நான் தயாராகிறேன்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—ஓஹோ! அப்படியா! போனவருஷம்கூட ஒரு கொலைக்கேஸ் விஷயமாய் ஆராய்ச்சி செய்து கொலையாளியை சாமர்த்தியமாகக் கண்டுபிடித்ததற்காக உங்களை கவர்ன்மெண்டார் மெய்ச்சி உங்களுக்கு மெடல் கொடுத்தார்களே! கொலைக்கேஸ்களைப் பற்றியே எதுவும் தெரியாது என்று சொல்லி முழுப்பூசனிக்காயை இலைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறீர்களே !

ஸப்-இன்ஸ்பெக்டர் :—ஓஹோ அப்படியா! எனக்கு அந்த விஷயம் சுத்தமாய் மறந்தே போய் விட்டது. நல்ல வேளையாக நீங்கள் அதை நினைவுபடுத்தினீர்களே ! அது என்ன கேஸ் ? உங்களுக்கு நினைவிருக்கிறதா ?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :-நன்றாகப் புரளி பண்ணுகிறீர்களே !

ஸப்-இன்ஸ்பெக்டர் :— (புன்சிரிப்புடன்) அடாடா! நான் சொன்னதைத் தவறாகவல்லவா அர்த்தம் செய்து கொண்டு விட்டீர்கள். நிச்சயமாய் இந்த விஷயம் எனக்கு நினைவிற்கு வரவே இல்லை. அதிருக்கட்டும். நான் கேட்ட கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லவில்லையே! நாம் இந்த வீட்டிற்குள் வந்தபோது எப்படி வந்தோம்?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :— (வியப்போடு ஸப்-இன்ஸ்பெக்டரின் முகத்தைப் பார்த்தபடி) நாம் வந்தபோது கதவு உட்புறம் தாளிடப்பட்டிருந்தது. அதைத் திறந்து கொண்டு வந்தோம். அதற்கென்ன?

ஸப்-இன்ஸ்பெக்டர் :— அதில்தான் விஷயமெல்லாம் அடங்கியிருக்கிறது. இந்த அறை இந்த வீட்டின் எந்தப் பக்கத்திலிருக்கிறது?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :— இது பின்பக்கத்திலிருக்கிறது. இது இரண்டாம் கட்டு. முதல் கட்டிலுள்ள ஓர் அறையில்தான் சபேசன் சுடப்பட்டிருக்கிறான்.

ஸப்-இன்ஸ்பெக்டர் : முதல் கட்டிலிருந்து இரண்டாவது கட்டிற்கு வருவதற்கு சந்துபோல் ஒரு வழியிருக்கிறதல்லவா. அந்தச் சந்தைத் தவிர இரண்டாம் கட்டிற்கு வர வேறு ஏதாவது வழியிருக்கிறதா?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :— வேறு வழி ஏதுவுமில்லை.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— பின்புறம் போய்ப் பாருங்களென்று சொல்லி நான் உங்களை அனுப்பினேனல்லவா! அப்பொழுது அந்தச் சந்தின் வழியாக எப்படி வந்தீர்கள்? முன்கட்டுப் பக்கம் போடப்பட்டிருந்த தாளை விலக்கிக் கொண்டுதானே இங்கே வந்தீர்கள்?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:— (வியப்புடன்) கதவு தாளிடப்பட்டிருந்தது உங்களுக்கு எப்படித் தெரியும்? நீங்கள் அந்தக் கதவினருகில்கூட வரவில்லையே!

ஸப்-இன்ஸ்பெக்டர்:—(புன்சிரிப்புடன்) நான்கு வருஷங்களாய்த் துப்பறியும் ராமநாதருடன் நான் பழகுகிறேன். அப்படியிருக்க அவருக்கிருக்கும் சாமர்த்தியத்தில் ஆயிரத்தில் ஒரு பங்காவது எனக்கிருக்காதா.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—கதவு முன்கட்டுப் பக்கம் தாளிடப்பட்டிருந்தது வாஸ்தவந்தான். ஆனால் நான் அதைத் திறக்கவில்லை. ராமநாதன் இரண்டாம் கட்டிலிருக்கும் கக்கூஸிற்கு ஒன்றுக்குப் போய்விட்டு வருவதாகக் கூறிவிட்டு முன்கட்டிலேயே என்னை நிற்க வைத்துவிட்டு, மூடப்பட்டிருந்த கதவினருகில் சென்று அது மூடித் தாளிடப்பட் டிருந்த தென்பதை என்னைக் கூப்பிட்டுக் காண்பித்த பிறகு கதவை மூடிக்கொண்டு இரண்டாம் கட்டிற்குப் போய்விட்டு இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு வந்துவிட்டார். அவர் சொல்லாதிருந்தால், நான் அந்த விஷயத்தை கவனித்திருக்க மாட்டேன். இந்த இரண்டு கதவுகளும் முன்கட்டுப் பக்கம் தாளிடப்பட் டிருந்தமையால் சபேசன் தற்கொலைசெய்து கொண்டானென்பது நிச்சயமாய் விளங்குகிறது.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அப்படியா! ராமநாதன் கதவினருகில் போனாரல்லவா! கதவு தாளிடப்பட் டிருப்பதாக உடனே சொன்னாரா? இல்லாவிட் டால் சற்றுபொறுத்துச் சொன்னாரா?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—அவர் முதலில் அதை கவனிக்கவில்லைபோ லிருக்கிறது. அவர் தமது நினைவை வேறு

எங்கேயோ வைத்துக்கொண்டு தாமிருந்த இடத்திற்கு சரியாகக் கையை வைத்துத் தள்ளினார்; கதவு திறந்துகொள்ளாதபடியால் தாளை கவனித்தார்; கதவு தாளிடப்பட்டிருந்ததை அப்போதுதான் அவர் பார்த்தார்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அவர் தாளின்மேல் கையை வைத்துப் பார்த்தாரென்று நீங்களே யூகித்துச் சொல்லுகிறீர்களா?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—நான் எதற்கு யூகம் பண்ணப் போகிறேன்? ராமநாதன்தான் என்னிடம் அம்மாதிரி சொன்னார்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அப்படியா! அவர் சொன்னால் அதைப்பற்றி சந்தேகப்பட வேண்டிய அவசியமில்லை. அதிருக்கட்டும். அவர் இரண்டாங்கட்டிற்குப் போனபோது கதவை மூடிக்கொண்டு போனாரா?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—இப்படியெல்லாம் நீங்கள் குறுக்குவிசாரணை செய்வதன் கருத்து எனக்கு விளங்கவில்லை. கதவு மூடிக்கொண்டதை நான் பார்த்தேன். ஆனால் அவர்தான் மூடினாரா, இல்லாவிட்டால், காற்றடித்ததால் கதவு தானே மூடிக்கொண்டதா என்பதை நான் நிச்சயமாய்ச் சொல்லுவதற்கில்லை.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அவர் திரும்பி வந்தபோது அவருடைய முகம் எப்படி இருந்தது? சந்தோஷகரமாக இருந்ததா? விசனகரமாக இருந்ததா?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்: சந்தோஷக் குறியுடன்தான் காணப்பட்டது. (சற்று மௌனமாகவிருந்து ஏதோ யோசித்தபிறகு) இப்பொழுதுதான் எனக்கு விளங்குகிறது. எனக்கு இந்தக் காற்றுவாரியைக் காட்டினீர்களல்லவா!

இந்த இடத்தில் இந்தக் காற்றுவாரி இருக்கும் விஷயம் அவருக்கு நினைவிற்கு வந்திருக்கிறது. நீங்கள் அறையினுள் உங்களோடு யாரும் வரக்கூடாது என்று சொல்லிவிட்ட படியால் உங்களுக்குத் தெரியாமல் அறையினுள் என்ன நிலைமையில் சபேசனிருக்கிறு னென்பதையும், நீங்கள் தனியாக இருந்துகொண்டு என்ன செய்கிறீர்க ளென் பதையும் கவனிக்கவே என்னிடம் ஒன்றுக்குப் போய் விட்டு வருவதாய்ச் சொல்லிவிட்டு இரண்டாம் கட்டிற்குப் போயிருக்கிறுர். துப்பறிபவர்களுடைய சங்கதியே இப்படித் தான். உங்களுக்கு முன்பு இந்த விஷயத்தில் தாம் சாமர்த் தியமாக ஆராய்ச்சி செய்து விஷயத்தை வெளிப்படுத்த வேண்டுமென்பது அவருடைய கருத்துபோ லிருக்கிறது.

ஸப்-இன்ஸ்பெக்டர்:— அது நன்றுகத் தெரிகிறது. ஒவ்வொரு கேஸிலும் போலீஸாரைவிட சாதாரணத் துப் பறிபவர்கள் சாமர்த்தியமாக வேலைசெய்வதாகச் சொல்லி யும், போலீஸ்காரர்களை முட்டாள்களாக்கியும், முன்னவரை இந்திரன் சந்திரன் என்று புகழ்ந்து உயர்த்தியும் எல்லோ ரும் கதை யெழுதுகிறுர்களல்லவா! அது இப்போது நிஜ மாகிவிடும்போ லிருக்கிறது. துப்பறியும் ராமநாதன் என் னேடு போட்டிபோட ஆரம்பித்து விட்டார்; யார் ஜெயிப் போம்? சொல்லுங்கள்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—(அசட்டுச் சிரிப்புடன்) அதெப்படி இப்போதே தெரியும். ஆனல் இதில் ராம நாதன் செய்யக்கூடிய காரிய மெதுவுமில்லை.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அதைச் சொன்னல் அவர் காதில் வாங்கிக்கொள்ளுவாரா! இன்னெரு முக்கியமான விஷய மிருக்கிறது. காற்றுவாரியின் வழியாக அவர் பார்த்

தார் என்று சொன்னீர்களே! அதில் ஒரு அசம்பாவித மிருக்கிறதே! அதை நீங்கள் கவனிக்கவில்லையே. காற்று வாரி அவருக்கு எப்படி எட்டி இருக்கும்?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:— அவர் எப்படியாவது தொற்றி ஏறிப் பார்த்திருப்பார். அதைத் தவிர வேறு விதமாய் எட்ட வகை இல்லை—என்று கூறிய சமயத்தில் தூரத்தில் ஒரு மோட்டார் சைக்கிள் வந்த ஓசை கேட்கவே, அவர், "ராமநாதனும் போலீஸாரும் வருகிறார்கள்போ லிருக்கிறது" என்று கூறிவிட்டு ஸப்-இன்ஸ்பெக்டருடன் முன்புறத்திற்குச் சென்றார். அப்போது அங்கு பொன்னு சாமி பிள்ளை காணப்படவில்லை.

இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு ஒரு மோட்டார் சைக்கிள் வந்து அந்த வீட்டின் முன்புறத்தில் நின்றது. அதிலிருந்து ராமநாதனும், ஒரு டாக்டரும், ஒரு ஜெவானும் இறங்கினர். அதன்பிறகு இரண்டு நிமிஷகாலத்தில் இன்னொரு மோட்டார் சைக்கிள் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு மகம்மதிய சப்-இன்ஸ்பெக்டரும், ஒரு ஜெவானும் இறங்கினர். ஸப்-இன்ஸ்பெக்டர்க ளிருவரும் ஒருவரை யொருவர் சந்தித்தவுடன் மகம்மதிய ஸப்-இன்ஸ்பெக்டர், "அடாடா! நீங்களா! போனவருஷம் கொலைக் கேஸ் ஒன்றில் நீங்கள் மிகவும் சாமர்த்தியமாய்த் துப்பு துலக்கியதாய்க் கேள்விப்பட்டேன். எனக்குக் கொலைக் கேஸ்களில் அவ்வளவாக அநுபவம் கிடையாது. நல்ல வேளையாக இந்தக் கேஸில் நீங்கள் சம்பந்தப்படுவது எனக்கு சந்தோஷத்தை உண்டாக்குகிறது. பிணம் எங்கே இருக்கிறது?" என்றார்.

மற்றவர்:—வீட்டிற்குள் ஓர் அறையி லிருக்கிறது.

மகம்மதிய ஸப்-இன்ஸ்பெக்டர்:—நீங்கள் யாரும் பிண மிருக்கு மறைக்குள் போய்ப் பார்க்கவில்லையே?

டாக்டர் :—தற்கொலை செய்துகொண்டவர் இறந்து விட்டாரா, இல்லாவிட்டால் உயிருட னிருக்கிறாரா என்பதே இன்னும் தெரியவில்லை. இதற்குள் அவ்வரைப் பிணமாக்கிவிட்டீர்களே!

ம. ஸப்-இன்ஸ்பெக்டர் :—ஆம். அது வாஸ்தவந்தான். (சமயசஞ்சீவியை நோக்கி) அந்த அறைக்குள் முதன் முதலாக நுழைந்து பார்த்தது யார்?

சமயசஞ்சீவி :—நான்தான் பார்த்தேன்.

ம. ஸப்-இன்ஸ்பெக்டர் :— உள்ளே இருந்தவைகளெதையும் யாரும் தொடவில்லையே?

சமயசஞ்சிவி :—இல்லை இல்லை.

ம. ஸப்-இன்ஸ்பெக்டர் :—தற்கொலை செய்துகொண்டவருடைய நிலைமை எப்படியிருக்கிறது? அவர் உயிருடனிருக்கிறாரா? இல்லையா?

சமயசஞ்சீவி :—நான் பார்த்தவரையில் ஒன்றைல் எவ்வித முடிவிற்கும் வர முடியவில்லை. அதனுல்தான் டாக்டரையும் கையோடு அழைத்து வரச் சொன்னேன்.

டாக்டர் :—(புன்சிரிப்புடன்) பேஷ்! நல்ல வேலை செய்தீர்கள். அந்த அறை எங்கே?-என்று வினவினுர். சமயசஞ்சீவி உடனே, "வாருங்கள். போகலாம்" என்று கூறியபடி உட்புறத்தை நோக்கி நடந்தார். எல்லோரும் அவரைப் பின்துடர்ந்து செல்ல, அவர்கள் சபேசனிருந்த அறையையடைந்தனர். முன்னுல் அறையினுள் நுழைந்த ஸப்-இன்ஸ்பெக்டர், "அடாடா! என்ன இது! இந்த அறையிலிருந்த சபேசனுடைய சரீரம் எங்கே போய்விட்டது!" என்று வியப்புடன் கூறினுர். எல்லோரும் திடுக்கிட்டு அந்த அறையினுள் பார்த்தனர். சபேசனுடைய உடம்பு காணப்பட்

வில்லை. உடனே பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், "இங்கே காவலாயிருந்த ஹெட்கான்ஸ்டேபிள் பொன்னுசாமி என்னவானன்?" என்று வினவினர். ஏனெனில் அங்கே பொன்னுசாமி அப்போது காணப்படவில்லை; ஆனாலும், அதே சமயத்தில் அவன் அங்கே வந்துசேர்ந்து, "நானிதோ இருக்கிறேனே! என்ன விசேஷம்?" என்றான்.

சமயசஞ்சீவி:—நீ இதுவரையிலும் எங்கே போயிருந்தாய்?

பொன்னுசாமி:— ஆற்றங்கரைப்பக்கம் தேகபாதை நிவர்த்திக்காகப் போய்விட்டு இப்போதுதான் வருகிறேன்.

சமயசஞ்சீவி:—உன்னை நம்பி இங்கே காவல் வைத்துவிட்டு, நான் பின்புறம் போனதால், பெரிய தண்டாவல்லவா வந்துவிட்டது.

பொன்னுசாமி:—நான் போய் இரண்டு நிமிஷ காலம் கூட ஆகவில்லை எசமானே.

சமயசஞ்சீவி:—நீ சொல்வது உண்மையா யிருக்கலாம். இங்கே இருந்த சரீரத்தைக் காணோமே! அது எப்படி மறைந்தது?

பொன்னுசாமி:-நீங்களிருவரும் இருக்கிறீர்களே என்று நினைத்து, இரண்டே நிமிஷத்தில் திரும்பி வந்துவிடலாமென்று போனேன். அதுபோலவே வந்துவிட்டேன்.

சமயசஞ்சீவி:—ஆமப்பா! நம் எல்லோர்மேலும் தப்பு கொஞ்சம் கொஞ்ச மிருக்கிறது.

ம. ஸப்-இன்ஸ்பெக்டர்:—இந்தக் கேஸ் மிக விநோதமா யிருக்கிறது. (ராமநாதனைச் சுட்டிக் காட்டி) இங்கே தற்கொலை யொன்று நடந்துவிட்டதாயும், நீங்கள் இங்கே

இருப்பதாயும் சொல்லி மிஸ்டர் ராமநாதன் என்னை அழைத்து வந்தார். இங்கே வந்து பார்த்தால் எதையும் காணோம். இங்கே உண்மையில் ஒரு சரீரம் கிடந்தது என்று நீங்கள் எல்லோரும் வாக்குமூலம் கொடுக்கிறீர்களா?

சமயசஞ்சீவி:—ஆம். அது அவசியமானதுதான்.

ம. ஸப்-இன்ஸ்பெக்டர்:—அப்படியானால் நீங்கள் முதலில் வாக்குமூலம் கொடுங்கள்—என்று கூறியபடி தமது நோட்டுப் புஸ்தகத்தை எடுத்தார்.

சமயசஞ்சீவி:—நான் அவசரமாய் ஊருக்குப் போக வேண்டும். அங்கே போய் வாக்குமூலத்தை என்னுடைய கையாலேயே எழுதி அனுப்புகிறேன்.

ம. ஸப்-இன்ஸ்பெக்டர்:—என்ன காரணத்தினால் இப்போது வாக்குமூலம் கொடுக்க மறுக்கிறீர்கள் என்பதைச் சொல்லுங்கள்.

மற்றவர்:—அதையும் நான் அந்த வாக்குமூலத்திலேயே எழுதி அனுப்புகிறேன்.

ம. ஸப்-இன்ஸ்பெக்டர்:— ஊருக்குப் போனவுடன் வாக்குமூலத்தை அனுப்புவதாய் ஒரு காகிதத்தில் எழுதிக் கொடுங்கள்.

சமயசஞ்சீவி:—அதை வேண்டுமானால் செய்யத் தடையில்லை—என்று கூறிவிட்டு ஒரு காகிதத்தில் அம்மாதிரியே எழுதிக் கொடுத்தார். அதை மகம்மதிய ஸப்-இன்ஸ்பெக்டர் பெற்றுக்கொண்ட பிறகு பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரை நோக்கி, "உங்களுடைய வாக்குமூலம் வேண்டுமே." என்றார்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் பதில் கூறுவதற்குள் சமயசஞ்சீவி ஐயர், "இவர்கள் எங்களுடைய ஊரிலிருக்கும்

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர். இவர்களுடைய வாக்குமூலம் என்னுடையதோடு வரும். அதுபோலவே ஹெட்கான்ஸ் டேபிள் பொன்னுசாமி பிள்ளையும் அனுப்புவான்" என்றார்.

ம. ஸப்-இன்ஸ்பெக்டர் :—இது என்ன, பெரிய சதியாலோசனையா யிருக்கிறதே! நீங்கள் மூவருமேயா அப்படிச் செய்யப் போகிறீர்கள்? நான் சும்மாவா போகிறது?

சமயசஞ்சீவி :—சும்மா போக விரும்பாவிட்டால், என்னிடம் ஒரு காகிதத்தில் எழுதி வாங்கிக்கொண்டதுபோல இவர்களிருவ ரிடத்திலும் வாங்கிக்கொள்ளுங்கள்.

ம. ஸப்-இன்ஸ்பெக்டர் :— (முகத்தைச் சுளித்துக் கொண்டு) நீங்கள் நடந்துகொள்ளும் விதம் சரியானதாகப் படவில்லை. வாக்குமூலம் கொடுக்க வேண்டியவர்கள் நான்கு பேர்கள். அதில் மூவர் இப்படிச் சொல்லிவிட்டால் இந்தக் கேஸ் என்னவாகிறது? (புரளியாக ராமநாதனைப் பார்த்து) நீங்கள்கூட ஊருக்குப் போய்தான் வாக்குமூலத்தை எழுதியனுப்பப் போகிறீர்களா?

ராமநாதன் :— நான் இப்போதே வாக்குமூலம் கொடுக்கத் தடையில்லை. ஆனால் எங்களூர் ஸப்-இன்ஸ்பெக்டர் என்ன சொல்லுகிறா ரென்பது எனக்கு முதலில் தெரிய வேண்டும்.

ம. ஸப்-இன்ஸ்பெக்டர் :— (சமயசஞ்சீவி ஐயரைப் பார்த்துப் புரளியாக) என்ன சொல்லுகிறீர்கள் என்று கேட்கிறாரே! அவரிடத்திலும் ஒரு காகிதம் எழுதி வாங்கிக் கொண்டு அவரையும் அனுப்பிவிட வேண்டுமா?

சமயசஞ்சீவி :—நீங்கள் குத்தலாகவும் புரளியாகவும் பேசுவது எனக்குத் தெரியாமல் போய்விடவில்லை. உங்கள்

விருப்பம்போல் இவரிடம் வாக்குமூலம் வாங்கிக்கொள்ளலாம். அதைப்பற்றி என்னிடம் கேட்க வேண்டுமென்பதில்லை.

ம ஸப்-இன்ஸ்பெக்டர் :— சரி. நீங்கள் நிரம்பவும் கோபித்துக் கொள்ளுகிறீர்கள். (தாடியை உருவியபடி) நீங்கள் மூவரும் வாக்குமூலம் கொடுக்க மறுப்பதால், இதை நான் ஸர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் தெரிவித்து அவருடைய அநுமதியின்மேல்தான் உங்களை அனுப்பவேண்டும். ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் நல்ல வேளையாக இப்போது ஸ்டேஷனுக்கு வந்திருக்கிறார்; நான் திரும்பிப் போகும் வரையில் அங்கேயே இருப்பார். எந்த இடத்தில் சரீரம் கிடந்தது என்பதைக் காட்டுங்கள்—என்றார். ஸப்-இன்ஸ்பெக்டர் சரீரம் கிடந்த இடத்தைக் காட்டினார். அதைப் பார்த்துக்கொண்ட மகம்மதிய ஸப்-இன்ஸ்பெக்டர், "இறந்து கிடந்தவர் யார் என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று சமயசஞ்சீவியை நோக்கி வினவினார்.

உடனே மற்றவர், "அதற்குத்தான் வாக்குமூலம் என்று பெயர். நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு நான் பதில் கூற முடியாது என்று ஏற்கனவே சொல்லிவிட்டேனே!" என்றார்.

அதைக் கேட்ட மகம்மதிய ஸப்-இன்ஸ்பெக்டர் ராமநாதனை நோக்கி, "உங்களுக்கு என்ன உத்தியோகம்?" என்றார்.

ராமநாதன் :—நான் துப்பறிபவன்.

ம. ஸப்-இன்ஸ்பெக்டர் :—நீங்கள் நால்வரும் இங்கே வந்த காரணமென்ன?

ராமநாதன் :— இது என்னுடைய வீடு; இவர்களும் என்னோடு இங்கே வந்தார்கள்—என்று கூறி நடந்த விஷயங்களை யெல்லாம் விவரமாகத் தெரிவித்தார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு அவர்கள் அங்கிருந்து புறப்பட்டனர்; ஊரை யடைந்தவுடன், ஸர்க்கிள் இன்ஸ்பெக்டரும், வாக்குமூலம் கொடுக்க மறுத்த ஸப்-இன்ஸ்பெக்டரும் தனிமையில் சுமார் அரைமணி நேரம் பேசிக் கொண்டிருந்த பிறகு, ராமநாதனிடம் மாத்திரம் வாக்கு மூலம் வாங்கும்படியும் மற்ற மூவரையும் வாக்குமூலம் வாங்காமல் அனுப்பும்படியும் மகம்மதிய ஸப்-இன்ஸ்பெக்டருக்கு ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் உத்தரவு கொடுத்தார். பொன்னுசாமி பிள்ளை தான் என்ன் காரியமாய் அந்த ஊருக்கு வந்தானோ அந்தக் காரியத்தை முடித்துக்கொண்டு மறு நாள் ஊருக்கு வருவதாய்க் கூறிவிட்டு அந்த ஊரிலேயே தங்கிவிட்டான். ராமநாதனிடம் வாக்குமூலம் வாங்குவதற்காக அவரை போலீஸார் நிறுத்திக்கொண்டனர். அதன் பிறகு சமயசஞ்சீவியும், பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரும் ஸ்டேஷனை விட்டு வெளிப்பட்டனர். பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், "நீங்கள் ஏதோ கேஸ் சம்பந்தமாக ஆராய்ச்சி செய்யும் பொருட்டு இந்த ஊருக்கு வந்ததாகத் தெரிவித்தீர்களே! அதை கவனிக்கவேண்டாமா?" என்றார். அதற்கு ஸப்-இன்ஸ்பெக்டர், "ஆம். கவனிக்க வேண்டும். அதைப்பற்றி நானே உங்களிடம் பேச எண்ணியிருந்த சமயத்தில் நீங்கள் சொல்லிவிட்டீர்கள். நான் இன்றைய முழுவதும் அநேகமாய் இங்கேயே இருப்பேன்; அல்லது, இன்னும் கொஞ்சநேரத்தில் கூட புறப்பட்டு விடுவேன். என்னுடைய வேலை முடிவடைவதற்கு எவ்வளவு நேரமாகுமென்று எனக்கே நிச்சயமாகத் தெரியவில்லை. ஆகையால்

நீங்கள் ஒரு காரியம் செய்யுங்கள். உங்களிடம் என்னுடைய மோட்டார் சைக்கிளைக் கொடுக்கிறேன். நீங்களதிலேறிக்கொண்டு ஊருக்குப் போய் வண்டியை என்னுடைய வீட்டில் சேர்த்துவிடுங்கள். நான் நம்முடைய ஊருக்கு வந்தவுடன் உங்களை மறுபடியும் பார்க்கிறேன். நீங்கள் வாக்குமூலம் கொடுக்க வேண்டாமென்று கூறித் தடை செய்ததன் காரணத்தை நான் அப்போது சொல்லுகிறேன்" என்றார். அதற்கு பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், "நான் உங்களுடைய வண்டியில் போய்விட்டால் நீங்கள் ஊருக்கு எப்படித் திரும்பி வருவீர்கள்?" என்று வினவினார். ஸப்-இன்ஸ்பெக்டர், "அதைப்பற்றி பரவாயில்லை. நான் எப்படியாவது வந்து சேர்ந்துவிடுவேன்" என்றார். உடனே பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் ஸப்-இன்ஸ்பெக்டரை விட்டுப் பிரிந்து மோட்டார் சைக்கிளில் ஏறிக்கொண்டு தமது ஊரை நோக்கி வேகமாய்ச் சென்றார். ஊருக்கு சுமார் 5 மைல் தூரத்தில் அவர் வந்தபோது பின்னால் துரிதமாய் ஒரு மோட்டார் வண்டி வந்ததை அவர் பார்த்துவிட்டு இடதுபக்கத்தில் ஒதுங்கினார். மோட்டார்வண்டியில் வந்தவர் அவருக்கு சமீபத்தில் நெருங்கியதும், "ஸார்! வண்டியை நிறுத்துங்கள்" என்றார்.

அதைக் கேட்ட பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் திரும்பிப் பார்த்தார். அதில் ராமநாதனும், போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர் சமயசஞ்சீவி ஐயரும் உட்கார்ந்திருந்ததை கவனித்து வண்டியை நிறுத்தினார். மோட்டார் வண்டியும் உடனே நிறுத்தப்பட்டது. உடனே ஸப்-இன்ஸ்பெக்டர் பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரை நோக்கி, "என்னுடைய வேலையை முடித்துக்கொண்டு வரலாமென்று நினைத்தேன். மறுபடி யோசனை செய்து பார்த்ததில்,

அதற்கு வேண்டிய அவகாசமில்லையென்று தோன்றியதாகை யால், அதற்காக இன்னொரு நாள் வரலாமென்று முடிவு செய்துகொண்டேன். அதற்குள் ராமநாதனுடைய மோட்டார்வண்டி நல்லவேளையாக ரிப்பேர் செய்யப்பட்டுப் போன தாகையால் நானும் அதிலேறிக் கொண்டு வர, அவர் ஒத்துக்கொண்டார். உடனே இருவரும் புறப்பட்டு வந்தோம். நீங்கள் இந்நேரம் ஊருக்குப் போயிருப்பீர்களென்றல்லவா நினைத்தேன். வண்டியை மெதுவாக விட்டுக் கொண்டு வந்திருக்கிறீர்கள்போ லிருக்கிறது?" என்றார்.

அதற்கு பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், "நான் வேகமாய்த்தான் வந்துகொண் டிருக்கிறேன்; நடுவில் எங்கேயும் நான் வண்டியை நிறுத்தக்கூட இல்லையே!" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர், "அப்படியா! ராமநாதனுடைய வண்டியோட்டி கெட்டிக்காரன்தான்; அவன்வேகமாய் வண்டியை ஓட்டிக்கொண்டு வந்திருக்கிறான். நீங்கள் வண்டியை விட்டுக்கொண்டு ராமநாதனுடைய வீட்டிற்குப் போங்கள்" என்றார்.

உடனே பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் மோட்டார் சைக்கிளை ஓட்டிக்கொண்டு போய்விட்டார். மோட்டார் வண்டியும் புறப்பட்டது.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— (புன்சிரிப்புடன் ராமநாதனை நோக்கி) இந்த இடம் நம்முடைய ஊரா யிருக்குமானால் இவ்வளவு வேகமாய் வண்டியை விடுவதற்காக நானே இந்த வண்டியோட்டியை சார்ஜ் செய்திருப்பேன்.

ராமநாதன் :—(புன்சிரிப்புடன்) அப்படியானால் சார்ஜ் செய்யுங்கள்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:-(புன்சிரிப்புடன்) உங்களை விட்டு விடுவேன் என்று நினைத்தீர்களா? எப்படியும் ஒரு நாள் அவசியம் பிடித்துக்கொள்ளுகிறேன். அதிருக்கட்டும். உங்களுடைய வண்டியோட்டி நிரம்பவும் அநுபவசாலி போல இருக்கிறது. அப்படித்தானே?

ராமநாதன்:—ஆமாம். இவனைப் போல இவ்வளவு வேகமாய் வண்டியை ஓட்ட வேறுயாராலும் முடியாதென்று நான் பந்தயம் கட்டுவேன். இதைவிட இன்னும் வேகமாய்க்கூட இவன் வண்டியை ஓட்டுவான்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:-(முன்புறத்திலிருந்த வண்டியோட்டியை நோக்கி) ஏனப்பா சாவியர், (Chauffeur) இப்போது வண்டி மணிக்கு எத்தனை மைல் வேகத்தில் போகிறது?

வண்டியோட்டி:—மணிக்கு 60 மைல் வேகத்தில் போகிறது.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—(ராமநாதனை நோக்கி) இந்தக் கேஸைப்பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன?

ராமநாதன்:—இதில் இரண்டுவிதமான அபிப்பிராயங்கள் இருக்க இடமில்லை. இது தற்கொலை என்பது நன்றாகத் தெரிகிறதே. உங்களுக்கு எப்படிப் படுகிறது?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—நானும் உங்களைப்போலத்தான் எண்ணினேன். சபேசனுடைய விஷயம் இப்போது இப்படி ஆய்விட்டதே! இனி குண்டோதரனுடைய கவனம் யார்மேல் செல்லுமோ தெரியவில்லையே. அதுதான் எனக்குக் கவலையா யிருக்கிறது.

ராமநாதன்:—குண்டோதரன் யாரென்பதே ஒருவராலும் கண்டுபிடிக்க முடியாத விஷயமாயிருக்கிறது. அப்படி இருக்க, அவன் இனி என்ன செய்யப்போகிறான் என்பதை

நம்மால் எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? அவன் ஒருவேளை தன்னைப்பற்றி நான் ஆராய்ச்சி செய்கிறேனென்பதை யறிந்துகொண்டு என்னை கவனிப்பானே என்னவோ!

ஸப்-இன்ஸ்பெக்டர்:— அப்படி உங்களுக்குக் கவலையாயிருக்குமானால், உங்களுடைய பந்தோபஸ்திற்கு நான் எப்போதும் ஒரு ஜெவானை உங்களுடைய வீட்டினருகில் நிறுத்தி வைக்கிறேன்.

ராமநாதன்:— அப்படிச் செய்யவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. நானே என்னைப் பாதுகாத்துக்கொள்ளக் கூடுமென்று நம்புகிறேன். ஆகையால் ஜெவானை யனுப்பவேண்டாம். சபேசன் காணமல் போனவிதம்தான் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

ஸப்-இன்ஸ்பெக்டர்:— அந்த விஷயம் உங்களுக்கு மாத்திரமல்ல; எல்லோருக்குமே ஆச்சரியத்தை உண்டாக்கக்கூடியதுதானே. நாம் அதைப்பற்றித் திருப்பித் திருப்பிப் பேசிக்கொண்டிருப்பதில் உபயோக மெதுவுமில்லை. இதில் காரியத்திற்கு இடமிருக்கிறது; பேச்சிற்கு இடமில்லை. அதிருக்கட்டும். உங்கள் வண்டியை ரிப்பேர் செய்த கம்பெனிக்காரன் எவ்வளவு பணம் சாப்பிட்டான்?

ராமநாதன்:— அதிகமில்லை. சொற்பம்தான். பத்து ரூபாய்தான் வாங்கிக்கொண்டான். நான் இந்த ஊருக்கு வந்ததில் சபேசனையும், 10 ரூபா பணத்தையும் இழந்தேன். இன்றைய தினம் யார் முகத்தில் விழித்தேனே தெரியவில்லை.

ஸப்-இன்ஸ்பெக்டர்:— ஆம். நீங்கள் சொல்வது வாஸ்தவமான விஷயம். (வண்டியோட்டியை நோக்கி) ஏனப்பா சாவியர், நாம் இப்போது எவ்வளவுதூரம் வந்திருப்போம்?

வண்டியோட்டி :—நாம் வெகுதூரம் வந்துவிட்டோம். அநேகமாக 25 மைலிருக்கலாம். இங்கிருந்து நம்முடைய ஊர் இன்னும் ஐந்து மைல் தூரத்திலிருக்கிறது. இன்னும் ஐந்து நிமிஷத்தில் நாம் ஊரை யடைந்துவிடலாம்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— இன்னும் எவ்வளவு வேகமாய் ஓட்ட முடியும்?

வண்டியோட்டி :—மணிக்கு 90 மைல்வரையில் என்னால் ஓட்டமுடியும். இதே வண்டியை அவ்வளவு வேகத்தில் ஓட்டிக் காட்டுகிறேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— ஹா! அப்படியா !—என்றார்.

அதோடு அவர்களுடைய சம்பாஷணை முடிவடைந்தது. வண்டியோட்டி கூறியபடி வண்டி அப்பொழுது 60 மைல் வேகத்தில் சென்றுகொண்டிருந்தது. ஒரு மைல் தூரம் போனபோது பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளை அவர்கள் கடந்துவிட்டனர். அதன்பிறகு சிறிதுநேரத்தில் மோட்டார் வண்டி ராமநாதனுடைய வீட்டின் முன்னால் போய் நின்றது. ஸப்-இன்ஸ்பெக்டரும் ராமநாதனும் வண்டியை விட்டு இறங்க, வண்டியை காடிகானாவிற்குக் கொண்டுபோகும்படி ராமநாதன் சாவியருக்கு உத்தரவிட்டார். அவன் வண்டியை ஓட்டிக்கொண்டு போய்விட்டான்.

உடனே ராமநாதன் கதவைத் தட்டவே, கதவு திறக்கப்பட்டது. சுமார் 30 வயது மதிக்கக்கூடிய ஒரு ஸ்திரீ அப்பால் சென்று மறைந்தது தெரிந்தது. அதனால் அந்த ஸ்திரீயே கதவைத் திறந்திருக்க வேண்டுமென்பது நிதரிசனமாக விளங்கியது. ராமநாதன், ஸப்-இன்ஸ்பெக்டருடன் உள்ளே சென்று கூடத்தையடைந்து அவரை ஒரு

நாற்காலியில் உட்காரவைத்தார். அப்போது மணி 6 அடிக்கும் சமயம் ஆய்விட்டதாகையால், வீட்டினுள் வெளிச்சம் மங்கலாயிருந்தது. அதனால் ராமநாதன், "விளக்கை ஏற்றி வை! இருளாய்விட்டது தெரியவில்லையா ?" என்று சுவரைப் பார்த்து உத்தரவிட்டார்.

கதவைத் திறந்துவிட்ட ஸ்திரீ உடனே ஒரு விளக்கை யேற்றி கூடத்தில் கொண்டுவந்து வைத்தாள். ராமநாதன் இங்கிலீஷிலேயே பேசத் துடங்கி ஸப்-இன்ஸ்பெக்டரை நோக்கி, "நாம் சில விஷயங்களைப்பற்றிப் பேசவேண்டியிருக்கிறது. இங்கிலீஷிலேயே பேசவேண்டும். இந்த வேலைக்காரியை வைத்திருப்பது பெரிய தொந்தரவா யிருக்கிறது. இவளைத் தன் சொந்த ஊருக்கு அனுப்பிவிட வேண்டுமென்று முடிவு செய்துவிட்டேன்" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— (இங்கிலீஷிலேயே பேசத் துடங்கி) ஏன் ? வேலைக்காரியால் என்ன தொந்தரவு ஏற்பட்டிருக்கிறது ?

ராமநாதன் :—நான் எந்த வேலையைச் சொன்னாலும் இவள் ஒழுங்காகச் செய்வதில்லை. அதோடு வாயாடித்தனம் அசாத்தியமா யிருக்கிறது. என்னைப்பற்றி புரளியாக என்னென்னவோ சொல்லுகிறாளாம்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—உங்களைப்பற்றிப் புரளி பண்ண என்ன இருக்கிறது ?

ராமநாதன் :—மற்றவர் என்னைக் கேவலமாக நினைக்கும்படி எதையெதையோ சொன்னாளாம். நான் ஏராளமாய்ப் பணம் வைத்திருக்கிறேனாம்; ஆனால் பெரிய கருமியாம்; நான் எச்சில் கையால்கூட காக்கை ஓட்ட மாட்டேனாம். இவள்மேல் நான் மோகங்கொண் டிருக்கிறேனாம்; இவளு

டைய கற்பைக் கெடுக்க முயற்சிக்கிறேனும். இப்படியெல்லாம் தாறுமாறாய் உளறுகிறாளாம்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—இவள் என்ன கருத்தோடு இப்படி யெல்லாம் சொல்லுகிறாள்? ஒருவேளை நீங்கள் சரியானபடி சம்பளம் கொடுக்கிறதில்லையோ என்னவோ?

ராமநாதன்:—அதெல்லா மொன்றுமில்லை. இவளுக்கு சாப்பாடு போட்டு மாதம் 5 ரூபா கொடுக்கவேண்டு மென்றும், வருஷத்திற் கொரு தடவை இரண்டு புடவைகள் எடுத்துக் கொடுக்க வேண்டுமென்றும் எங்களுக்குள் ஒப்பந்தம். நான் ஒழுங்காய் 4 வருஷங்களாய் அதேபோல் செய்து கொண்டு வந்திருக்கிறேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அப்படியானால் இப்போது திடீரென்று இவள் மாறவேண்டிய காரணமென்ன?

ராமநாதன்:—இன்றையதினம் காலையிலேயே நான் இவளிடம் நாளைக்குப் புறப்பட்டுப் போய்விடும்படி சொல்லிவிட்டேன். நாளைய தினம் இவள் ஊருக்குப் போகிறாள்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—எந்த ஊருக்குப் போகிறாள்?

ராமநாதன்:—தன்னுடைய சொந்த ஊருக்குத்தான்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அந்த ஊர் இங்கிருந்து அதிக தூரத்தில் இருக்கிறதோ?

ராமநாதன்:—இங்கிருந்து 150 மைல் தூரத்தில் இருக்கிறதென்று சொன்னாள்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அப்படியானால் ரயில் மார்க்கமாய்த்தான் போவாள்.

ராமநாதன்:—ஆம். அதிருக்கட்டும். நீங்கள் போர்வை யொன்றையும், ஒரு தலைப்பாகைத் துணியையும் வைத்திருக்கிறீர்களே! அவைகளை என்ன செய்யப் போகிறீர்கள்?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அவைகளை என்ன செய்வ தென்பதைப்பற்றி நான் இன்னும் எவ்வித முடிவிற்கும் வர வில்லை.

ராமநாதன்:—(புன்சிரிப்புடன்) அப்படியானால் அதைப் பற்றி இப்போதே ஒரு வித முடிவு செய்துகொள்ளுங்கள். அந்தத் துணியை இடுப்பில் கட்டிக்கொள்ளுங்கள். போர் வையை இரவில் போர்த்துக்கொள்ளுங்கள். குளிருக்கு அடக்கமாயிருக்கும்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—ஆம். நல்ல யோசனை சொல்லு கிறீர்கள். அப்படியே செய்கிறேன். அதிருக்கட்டும். இந்த வேலைக்காரிக்கும் சபேசனுக்கும் ஏதாவது சம்பந்த மிருக் குமோ? இவர்களிருவரும் ஒருவருக்கொருவர் சொந்தக் காரர்களில்லையே?

ராமநாதன் :—இவள் சபேசனுடைய தமக்கை. அவனே தான் இவளை இங்கே கொண்டுவந்து வைத்தவன்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— அப்படியானால் சபேசனைப் பற்றிய விஷயத்தை இவளிடம் சொல்ல வேண்டாமா?

ராமநாதன் :—அதற்கென்ன, நான் சந்தர்ப்பம் பார்த்து விஷயத்தை வெளியிடுகிறேன். ஏனென்றால் சில சமயங்க ளில் திடீரென்று பெருத்த சந்தோஷ சங்கதியோ அல்லது துக்க சங்கதியோ வருமானால், அதைக் கேட்டவுடன் சிலர் இறந்துவிடுவார்களாம். இந்த விசன சங்கதி அதிகமாய் இவளை பாதிக்காதபடி நான் வெளியிடுகிறேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர் —அப்படியே செய்யுங்கள். இப் போது இங்கிருக்கும் வேலைக்காரிக்கு சாப்பாடு போடுவ துடன், 5 ரூபா சம்பளமும் கொடுப்பதாய்ச் சொன்னீர் களே! வீடு கூட்டுவதற்கும் சமையல் செய்யும் பாத்திரங்

களை விளக்குவதற்கும்தானே அவ்வளவு கொடுக்கிறீர்கள்? சம்பளம் அதிகமாயிருக்கிறதே!

ராமநாதன்:—இல்லை. இவள் சமையலும் செய்து போடுகிறாள்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—என்ன! சமையலா! இந்த அம்மாள் என்ன ஜாதியைச் சேர்ந்தவள்?

ராமநாதன்:—எங்கள் ஜாதியைச் சேர்ந்தவள்தான்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:— அப்படியா! அப்படித்தான் இருக்குமென்று நானும் நினைத்தேன். இந்த அம்மாளுடைய புருஷர் எங்கே இருக்கிறார்?

ராமநாதன்:—அவர் இறந்துபோய் சுமார் 7 வருஷங்களாகின்றன.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—இந்த அம்மாள் விதவை என்கிறீர்களே. உங்கள் ஜாதியில் விதவைகள் தலைமயிரை எடுப்பதில்லையோ?

ராமநாதன்:—அது அவ்வளவு கண்டிப்பானதல்ல. இந்த விஷயங்களெல்லாம் அவரவருடைய மனப்போக்கைப் பொருத்தது. முன்காலத்தில் தலைமயிரை எடுக்காதவரை ஜாதி பிரஷ்டம் செய்துவிடுவதாய் பயப்படுத்தினார்கள். இந்தக் காலத்தில் அந்த பயமுறுத்தலெல்லாம் மலையேறி விட்டது.

ஸப்-இன்ஸ்பெக்டர்:— மெய்தான். சபேசன் அந்த வீட்டிற்குப் புறப்பட்டுப் போனது இந்த அம்மாளுக்குத் தெரியுமல்லவா?

ராமநாதன்:—அதுகூடவா தெரியாமலிருக்கும்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—இந்த அம்மாள் எப்போதும் இங்கேயே இருப்பது வழக்கமோ?

ராமநாதன் :—சமையல் செய்து வைத்துவிட்டுப் போய் விடுவாள்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—எங்கே போவாள்?

ராமநாதன் :—சபேசனுக்கு இந்த ஊரில் ஒரு ஜாகை யிருக்கிறது. அங்கே போய்விடுவாள்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—தினம் இந்நேரத்திற்கு இந்த அம்மாள் இங்கேயே இருப்பாளல்லவா?

ராமநாதன் :—இல்லாமல் என்ன செய்கிறது. இராச் சாப்பாட்டைத் தயாரிக்க வேண்டாமா!

ஸப்-இன்ஸ்பெக்டர் :—நேற்றைய தினம் நானும் பிராசி கூடிங் இன்ஸ்பெக்டரும் இந்நேரத்திற்குத்தானே வந்தோம்?

ராமநாதன் :—ஆம்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— அப்போது இந்த அம்மாள் காணப்படவில்லையே?

ராமநாதன் :—நேற்றையதினம் முழுவதும் இந்த அம் மாள் தேக அசௌக்கியத்தினுல் வரவில்லை.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— ஓகோ அப்படியா! என்ன இன்னும் பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் வரவில்லையே!

ராமநாதன் :—என்னுடைய வண்டியோட்டிக்கு இருக் கும் தைரியம்கூட அவருக்கில்லை. அதனுல் வண்டியை அவர் மெதுவாக விட்டுக்கொண்டு வருகிருர்போ லிருக் கிறது.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அப்படித்தா னிருக்கவேண்டும்.

ராமநாதன் :—சபேசனைப்பற்றி இன்னொரு விஷயம் எனக்குத் தெரியவேண்டும். அவன் எப்படித் தற்கொலை செய்துகொண்டான்? கத்தியால் குத்திக்கொண்டானா? துப்பாக்கியால் சுட்டுக்கொண்டானா?

ஸப்-இன்ஸ்பெக்டர் :— நான் பார்த்தபோது முதலில் எனக்கே விஷயம் இன்னதென்று விளங்கவில்லை. துப்பாக்கியால் ஏற்பட்ட காயமா, இல்லாவிட்டால் கத்தியால் ஏற்பட்ட காயமா என்று யோசித்தேன்.

ராமநாதன் : — முதலில் விளங்காமல் போனாலும் இப்போது அது உங்களுக்குத் தெரிகிறதல்லவா?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அப்படித்தான் எண்ணுகிறேன்.

ராமநாதன் :—அப்படியானால் விஷயத்தைச் சொல்லுங்கள். நானும் இதைத் தெரிந்துகொண்டிருப்பது பின்னால் பயன்படலாம்—என்றார். அதே சமயத்தில் ஒரு மோட்டார் சைக்கிள் வந்து நின்ற ஓசை கேட்கவே, அவர், "பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் அதோ வந்துவிட்டார்" என்றார். அடுத்த நிமிஷம் பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் அங்கே வந்துசேர்ந்தார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரை வரவேற்று ஒரு நாற்காலியில் உட்கார வைத்துவிட்டு தமிழிலேயே பேசத்துடங்கி, "நீங்கள் வந்துசேர ஏன் இவ்வளவு நேரமாய்விட்டது?" என்றார்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—அப்படியானால் நீங்கள் இங்கே வந்து அதிக நேர மாய்விட்டதென் றல்லவா அர்த்தமாகிறது.

ராமநாதன் :—நாங்கள் இங்கே வந்து கால் மணி நேரத்திற்குமே லாகிவிட்டது.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—வழியில் மோட்டார் சைக்கிள் எவ்வித இடைஞ்சலும் செய்யவில்லையே?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:— அதெல்லா மொன்று மில்லை. மோட்டார்தான் வேகமாய் வந்திருக்கிறது—என்றார். அப்போது மனிதருடைய முகம் நன்றாகத் தெரியாதபடி சற்று மங்கலான இருளாய்விட்டது. அப்போது திடீரென்று வீட்டின் எதிர்ப்பக்கத்தில் யாரோ பாடிய குரலோசை கேட்டது. மூவரும் திடுக்கிட்டு பாட்டை கவனித்தனர். ஸப்-இன்ஸ்பெக்டர் ஓரே ஓட்டமாய் ஓடித் தெருவை யடைந்தார். அப்போதும் எதிர்ப்புறத்துத் தோப்பில் யாரோ ஒரு தெலுங்குப்பாட்டைப் பாடியது கேட்டது. ஸப்-இன்ஸ்பெக்டர் வேகமாக ரஸ்தாவைக் கடந்து தோப்பி னுள் நுழைந்து பாட்டுக் குரல் உண்டான திக்கில் செல்ல லானார். அவர் சிறிது தூரம் செல்வதற்குள் பாட்டு நின்று விட்டபடியால், பாட்டுப்பாடிய மனிதர் அதிக தூரம் செல்லு வதற்குள் தாம் போய்ப் பிடித்துக்கொண்டு அவர் யாரென் பதை யறியவேண்டு மென்று முடிவு செய்துகொண்டு வேக மாய்ப் பாய்ந்தார்.

அவர் நெடுந்தூரம் வரையில் சென்று பார்த்தா ரானு லும், மனிதர் எங்கும் அவர் கண்ணில் தென்படவில்லை. அதற்குள் இருள் அதிகரித்துவிட்டது. அவர் தோப்பினுள் இருளில் குருடனைப்போல் கையை முன்புறத்தில் நீட்டித் தடவியபடி செல்லவேண்டியவரானார். ஏனென்றால் மரங் களின் அடிக்கட்டைக ளிருந்த இடம் தெரியாதபடி மரங் களின் கீழ் இருள் சூழ்ந்துகொண் டிருந்தது. அப்போது ஒரு மூலையில் ஓர் ஊமைக்கோட்டான் கத்திய ஓசை கேட் டது. அவர் அதோடு தமது ஆராய்ச்சியை நிறுத்திவிட்டு உடனே ரஸ்தாவை யடைய எத்தனித்தார்.

அதற்குள் பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், ராமநாதன் ஆகிய இருவரும் ஒரு லாந்தரைக் கையில் பிடித்துக்கொண்டு தம்மைத் தேடிக்கொண்டு வந்ததை விளக்கு வெளிச்சத்தால் தெரிந்துகொண்டு அவர்களிடம் போய்ச் சேர்ந்தார். உடனே ராமநாதன், "அந்தப் பாதகன் அகப்பட்டானா?" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர்: அவன் அகப்படவில்லை. அவன் யாரென்பதும் தெரியவில்லையே!

ராமநாதன்:—நான் உங்களைப்போல் அலையாமல் அந்த விஷயத்தை நேற்றிரவே கண்டுபிடித்துவிட்டேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—ஓஹோ! அப்படியா! யாரவன்? பைத்தியக்காரன்தானே?

ராமநாதன்:—அவன் பைத்தியக்காரனில்லை. ஆனால் அவன் பைத்தியக்காரனைப் போல் தனக்குத்தானே பேசிக் கொண்டும் பாடிக்கொண்டு மிருக்கும் ஒரு பழைய கேடி. அவனுக்கு ஏற்கனவே ஒரு வருஷக் கடினக்காவல் தண்டனை கிடைத்திருக்கிறது.

ஸப்-இன்பெக்டர்:—நேற்றிரவே பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் என்னிடம் இதைச் சொன்னார். நான் உடனே அவனுடைய ரிகார்டுகளைப் பார்த்தேன். அவன் பத்து மாதத்திற்கு முன்புதான் ஒரு வருஷக் கடினக்காவல் தண்டனையடைந்திருக்கிறான். ஆகையால் அவன் விடுதலை அடைய இன்னும் இரண்டு மாதங்க ளிருக்கின்றன.

ராமநாதன்:— விடுதலை செய்யப்பட்ட பிறகுதான் வெளியே வர முடியுமென்பதென்ன? அவன் ஜெயிலிலிருந்து தப்பித்துக்கொண்டு வந்துவிட்டானோ என்னவோ?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அந்த சந்தேகத்தையும் நிவர்த்தி செய்துகொள்ளாம லிருப்பேனு! அவன் அடைக்கப்பட்டிருக்கும் ஜெயிலதிகாரிக்கு நான் நேற்றிரவே தந்தி யனுப்பினேன். அவன் ஜெயிலிலேயே இருப்பதாய் அங்கிருந்து மறு தந்தி வந்தது.

ராமநாதன்:— அப்படியானல் இது பெருத்த வேடிக்கையாகத்தா னிருக்கிறது. இவன் யாராயிருப்பான்? உண்மையிலேயே பைதியக்காரனு யிருப்பானே?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அப்படித்தா னிருக்கவேண்டும்—என்றார்.

அவர்கள் அதற்குள் ரஸ்தாவைக் கடந்து ராமநாதனுடைய வீட்டின் தெரு வாசற்படியை யடைந்தனர். அப்பொழுது தோப்பில் சமீபத்திலேயே மறுபடியும் ஊமைக் கோட்டான் கத்திய ஓசை கேட்டது.

உடனே அவர்கள் ஓசை வந்த திக்கைப் பார்த்தனர். ஸப்-இன்ஸ்பெக்டர், "இந்தத் தோப்பில் கோட்டான்கள் கூட இருக்கின்றன. எனக்கு நேரமாய்விட்டது. நான் வருகிறேன்" என்றார். பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரும் ராமநாதரிடம் செலவு பெற்றுக்கொண்டார். இருவருமாக மோட்டார் சைக்கிளி லேறிக்கொண்டனர். ஸப்-இன்ஸ்பெக்டர் உடனே, "நீங்கள் வீட்டிற்குப் போகவேண்டுமா? இல்லாவிட்டால் வேறு எங்கேயாவது போகவேண்டுமா?" என்றார். அதற்கு பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், "நான் ஆஸ்பத்திரிக்குப் போய் வீட்டுக்காரக் கிழவி என்ன நிலைமையி லிருக்கிருளென்பதை கவனிக்கவேண்டும். என்னிடமேதோ தெரிவிப்பதாய்ச் சொன்னீர்களே?" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— (வண்டியை ஓட்டியபடியே) இப்போது அதைப்பற்றிப் பேச எனக்கு உண்மையிலேயே அவகாசமில்லை.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—அப்படியானல் அவகாசம் கிடைக்கும்போது பேசிக்கொள்ளலாம். சபேசனை யார் சுட்டிருப்பார்கள் என்று உங்களுக்குத் தோன்றுகிறது?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அவனை யாரும் சுடவில்லை.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—அப்படியானல் அவன் தற்கொலை செய்துகொண்டான?

ஸப்-இன்ஸ்பெக்டர் :— நான் அம்மாதிரி சொல்லவில்லையே !

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—சபேசன் என்ன காரணத்திற்காகவோ தன் கையில் துப்பாக்கியை வைத்திருந்த சமயத்தில் அது தற்செயலாய் வெடித்திருக்குமோ ?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அதுவுமில்லை. அவனிடம் துப்பாக்கி இருப்பதற்கே காரணமில்லை.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :— நீங்கள் குண்டோதரனைப் பற்றிய விஷயத்தை மறந்துவிட்டீர்கள். குண்டோதரனுக்கு பயந்து அவன் என் தற்காப்பிற்காக அதை வைத்திருக்கக்கூடாது ?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அம்மாதிரி இருக்காது என்பதற்கு இரண்டு காரணங்களிருக்கின்றன. முதலாவது அவனுக்குத் துப்பாக்கி கிடைக்கவே வழியில்லை. இரண்டாவது அவன் குண்டோதரனைப்பற்றி பயப்படவேண்டிய அவசியமில்லை.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:— (சற்று யோசித்து விட்டு) இப்பொழுதுதான் எனக்கு ஒரு விஷயம் நினைவிற்கு வருகிறது. அவனே குண்டோதரனென்று வைத்துக் கொண்டால், அப்போது உங்களுடைய காரணங்கள் சரியானவை அல்ல என்றாய்விடு மல்லவா?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அவனே குண்டோதரனாயிருந்தால், அவன் தனக்குத்தானே மிரட்டல் கடிதங்களை எழுதிக்கொள்ளுகிறான் என்றல்லவா அர்த்தம் ஆகும்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—தனக்குத் தானே கடிதங்களை எழுதிக்கொண்டால் பிறர் யாரும் தன்மேல் சந்தேகங் கொள்ளமாட்டார்க ளல்லவா.

ஸப்-இன்ஸ்பெக்டர்:— இப்படி நாம் ஒருவரோடொருவர் வாக்குவாதம் செய்வதில் அநுகூல மெதுவுமில்லை.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:- சபேசனை யாரும் சுடவில்லை யென்று சொன்னீர்களே! அப்படி யிருக்க சால்வை யொன்றைப் போர்த்திக்கொண்டு பெரிய முண்டாசுடன் சைக்கிளில் போன மனிதரை ஏன் துரத்தினீர்கள்?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அவர் துப்பாக்கியால் சுட்டுவிட்டார் என்ற எண்ணத்தினால் அவரை நான் துரத்தவில்லை. அவர் யாரென்பதைப் பார்க்க எண்ணியே துரத்தினேன். ஆனால் அந்த மனிதர் ஓடிவிட்டார்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:— அவரைக் கடைசிவரையில் ஏன் பின்தொடரவில்லை? சிறிது தூரம் வரையில் துரத்திக்கொண்டு போய் நடுவில் திரும்பிவிட்டீர்களே!

ஸப்-இன்ஸ்பெக்டர்:— உங்களுடைய கேள்விகளுக்கெல்லாம் நான் ஒழுங்காயும், உங்களுக்கு அர்த்தமாகும்படி

யாயும் உத்தரம் சொன்னால்தான் அது உங்களுக்கு விளங்கும்—என்றார். அப்போது அவர்கள் ஆஸ்பத்திரியின் முன்புறத்தை யடைந்தனர். பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரை அங்கேயே இறக்கிவிட்டு ஸப் இன்ஸ்பெக்டர் மோட்டார் சைக்கிளில் வேகமாய்ப் போய்விட்டார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு அவர் போலீஸ் ஸ்டேஷனை யடைந்து மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு உள்ளே சென்றார்; உட்புறத்தில் ஒரு பவர்லைட் எரிந்து கொண் டிருந்தது. அதன் வெளிச்சத்தில் ஒரு ஜெவான் டைரி எழுதிக்கொண்டிருந்தான். அவன் அவரைக் கண்டவுடன் திடுக்கிட்டு எழுந்திருந்து சலாம் செய்துவிட்டு நின்றான். அவர் தமது தலையை ஒரு தடவை அசைத்துவிட்டு சிறிது தூரத்தில் ஒரு மேஜையின்மேல் காணப்பட்ட டெலிபோன் யந்திரத்தினருகில் சென்று ரிஸீவரைக் காதில் வைத்துக்கொண்டு ஏதோ ஒரு நம்பரைக் கூப்பிட்டுவிட்டு, "ஹலோ! யாரது? போஸ்டுமாஸ்டரா?" என்றார்.

மறுபக்கத்திலிருந்தவர் :—ஆம்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— நான் போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர்; ஸ்டேஷனிலிருந்து பேசுகிறேன். நான் நேற்றையதினம் இரவு உங்களிடம் சொன்ன விஷயம் நினைவிருக்கிறதல்லவா?

போஸ்ட்மாஸ்டர் :—நன்றாக நினைவிருக்கிறது. என்ன விசேஷம்?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—வேறொன்றுமில்லை; நான் சபேசன் என்னும் பெயருள்ள ஒருவருடைய விலாஸத்தைக் கொடுத்து, அந்த விலாஸத்திற்கு கடிதமேதாவது வந்தால் அதை சாமர்த்தியமாகத் திறந்துபார்த்து அந்தக் கடிதத்திற்கு

நகல் எடுத்துக்கொண்டு உடனே எனக்கு அறிவிக்கும்படி சொன்னேனல்லவா? அந்த ஏற்பாட்டை ரத்துசெய்து விட்டேன்.

போஸ்டுமாஸ்டர் :—இனிமேல் கடிதங்கள் அநத விலாசத்திற்கு வருமானல் திறக்காமல் அனுப்பவேண்டுமா?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—இனிமேல் அநேகமாய் அவருக்குக் கடிதமெதுவும் வராது. தவறி, வந்தாலும் அதைப் பிரிக்காமல் என்னிடம் அனுப்பிவிடுங்கள். ஏனென்றால், விலாசதாரரைக் கண்டுபிடிக்க உங்களால் முடியாது; அவருக்கு இன்றைய தினம் கடிதமேதாவது வந்ததா?

போஸ்டுமோஸ்டர் :—இன்றைய தினம் ஒரு கடிதம் வந்தது. அதற்கு நகல் எடுத்து வைத்திருக்கிறோம். நகல் எடுத்த பிறகு இன்றையதினம் சுமார் 10 தடவைகள் உங்களைக் கூப்பிட்டேன். நீங்கள் ஸ்டேஷனிலில்லை யென்று சொல்லி விட்டார்கள்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—ஆம். நான் இன்றைய தினம் ஸ்டேஷனி லில்லை. வேறொரு காரியமாய் வெளியில் அலைந்துகொண் டிருந்தேன். நான் இன்னும் கொஞ்சநேரத்தில் உங்களைப் பார்ப்பதற்கு வருகிறேன்.

போஸ்ட்மாஸ்டர் :— அப்படியே செய்யுங்கள்—என்றார். அதோடு அவர்களுடைய டெலிபோன் சம்பாஷணை முடிவடைந்தது. ஸப்-இன்ஸ்பெக்டர் ரிஸீவரைக் கொக்கியில் மாட்டிய பிறகு தமது மேஜையி னருகில் சென்று அன்றையதினம் கடிதங்கள் முதலியவை வந்திருக்கின்றனவா வென்று பார்க்கலானர். ஏனெனில், அவரில்லாத சமயத்தில் வந்த கடிதங்களையெல்லாம் அந்த மேஜையின்

மேல் ஜெவான்கள் வைத்திருப்பதும், அவர் ஸ்டேஷனுக்கு வந்தவுடன் அவைகளைப் பார்ப்பதும் வழக்கம். ஆகவே, அவர் வழக்கம்போல், அந்த மேஜையின்மேல் பார்க்க, அவருக்காகக் கடிதம் வைக்கப்பட்டிருக்கவில்லை.

ஆகவே, அவர் தம்முடைய நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு தமது சட்டைப்பையில் இருந்த ஒரு நோட்புஸ்தகத்தை எதிரிலிருந்த மேஜையின்மேல் எடுத்து வைத்துக் கொண்டு சபேசனைப்பற்றிய குறிப்புகளையும் ராமநாதன் கூறிய விஷயங்களையும் எழுத வாரம்பித்தார். அவைகளை எழுதிமுடிக்க சுமார் கால்மணி நேரம் பிடித்தது. அதன் பிறகு அவர் அந்த நோட் புஸ்தகத்தை முன்போலவே சட்டைப் பையினுள் வைத்துக்கொண்டு சிறிது தூரத்திலிருந்த ஜெவானை கவனித்தார். அவன் அப்போதும் டைரி எழுதிக்கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு சுவரில் மாட்டப் பட்டிருந்த பெரிய கடியாரத்தை கவனித்துவிட்டு தன் இடது கை மணிக்கட்டில் இருந்த கடியாரத்தின் முள்களைத் திருத்திக்கொண்ட பிறகு மறுபடியும் ஜெவானின் பக்கம் திரும்பி, “இன்றையதினம் ஏதாவது விசேஷமுண்டா?” என்று வினவினார். அதற்கு ஜெவான், “இன்றையதினம் காலைமுதல் ஒருவர் உங்களைத் தேடிக்கொண்டு சுமார் இருபது தடவைகளுக்குமேல் வந்துவிட்டுப் போனார். அவர் யாரென்பதை நான் விசாரித்ததற்கு அவர் தான் இன்னாரென்பதையும், என்ன காரியமாக வந்தாரென்பதையும் தெரிவிக்க மறுத்துவிட்டார்” என்று கூறி மேலே எதோ கூறுவதற்குள், “இன்னும் ஸப்-இன்ஸ்பெக்டர் வரவில்லையா?” என்று வினவியபடி ஒரு மனிதர் அங்கே வந்து சேர்ந்தார். உடனே ஜெவான், “இவர்தான் உங்களைத் தேடிக்கொண்டு வந்தவர்” என்றான்.

வந்தவரை நாற்காலியில் உட்காரச் சொல்லியபிறகு ஸப்-இன்ஸ்பெக்டர் அவரை நோக்கி, "என்ன செய்தி?" என்று வினவினர். அதற்கு அந்த வயோதிக மனிதர், "ஸப் இன்ஸ்பெக்டர் வந்துவிட்டாரல்லவா?" என்று மறுபடியும் வினவினர்.

சமயசஞ்சீவி :—(புன்சிரிப்புடன்) என்னைப் பார்த்தால் ஸப்-இன்ஸ்பெக்டர்போல் தோன்றவில்லையா?

வயோதிகர் :—(புன்சிரிப்புடன்) ஓஹோ! நீங்கள்தான் ஸப்-இன்ஸ்பெக்டரா! மன்னிக்கவேண்டும். உங்களை வேறு யாரோவென்று நினைத்துவிட்டேன். நான் என்ன நினைத்துக்கொண்டேன் தெரியுமா? ஸப்-இன்ஸ்பெக்டர் என்றால் ஆள் பயங்கரமாய், சுமார் 45 வயதுள்ளவராய், கோரா, கிருதா மீசைகள் முதலியவற்றுடன், கடுவன் பூனையைப்போல முகமுள்ளவராய் இருப்பார் என்று எண்ணிக்கொண்டு வந்தேன்.

சமயசஞ்சீவி :— (புன்சிரிப்புடன்) ஸப்-இன்ஸ்பெக்டரென்பவர் இப்படி யிருப்பார் என்று என்ன காரணத்தினால் நினைத்தீர்கள்?

வந்தவர் :—ஏனென்றால், அம்மாதிரி இருக்கும் அநேக தலைமை ஜெவான்களை நான் பார்த்திருக்கிறேன். ஸப்-இன்ஸ்பெக்டரும் அதேபோல இருக்கவேண்டுமென்று நினைத்தேன். இங்கே நம்முடைய பையன்கூட இருக்கிறானே!

சமயசஞ்சீவி :— (வியப்புடன்) அப்படியா! உங்களுடைய பையனென்றால், யார் அவர்?

வந்தவர் :—அவனுடைய பெயர் பொன்னுசாமி.

சமயசஞ்சீவி :—ஓஹோ! ஹெட்கான்ஸ்டேபிளைப் பற்றிச் சொல்லுகிறீர்களா? அவன் உங்களுடைய பிள்ளையா?

வந்தவர் :—அவன் என்னுடைய தம்பியின் பிள்ளை. அவனை இந்தப் போலீஸில் சேர்க்க எனக்கு இஷ்டமே இல்லை. ஆனால் அவன் வீட்டில் யாருடைய வார்த்தையையும் கேட்காமல் அவனே போலீஸில் சேர்ந்துகொண்டான். அதுமுதல் அவனுக்கும் எனக்குமிருந்த சம்பந்தம் அடியோடு நீங்கிவிட்டது.

சமயசஞ்சீவி :—போலீஸ் டிபார்ட்மெண்டில் வேலை செய்வது அவ்வளவு இழிவானது என்பது உங்கள் எண்ணமா ?

வந்தவர் :—எனக்குப் பள்ளிக்கூட சிநேகிதர் ஒருவரிருக்கிறார். அவரைக்கூட உங்களுக்குத் தெரிந்திருக்கும். அவருடைய பெயர் சோமு முதலியார். அவரும் நானும் பேசும்போதெல்லாம் போலீஸ் டிபார்ட்டுமெண்டைப்பற்றி அவர் சொல்லுவார், சொல்லுவார், வாய் ஓயாமல் சொல்லுவார். போலீஸாரே பெரிய அயோக்கியர்களாம்; லஞ்சம் வாங்குவதில் அவர்களுக்கு மிஞ்சியவர்கள் வேறு யாருமிருக்க மாட்டார்களாம்.

சமயசஞ்சீவி :—எல்லோரும் அப்படி இருக்க மாட்டார்கள். கொசுவை மலையாக வளர்த்து அவர் சொன்னது எனக்கு ஆச்சரியமா யிருக்கிறது.

வந்தவர் :—எனக்கும் முதலில் அதில் நம்பிக்கை ஏற்படவில்லை. அதனால் நான் என்னுடைய இன்னொரு சிநேகிதரான கந்தசாமி பிள்ளையிடம் விசாரித்தேன். அவரும் அதேமாதிரி சொன்னார். யோக்கியனா யிருப்பவன்கூட போலீஸ் டிபார்டுமெண்டில் சேர்ந்தவுடன் கிராதனாகவும், கல் நெஞ்சனாகவும் மாறிவிடுவதாக அவர் சொன்னார்.

சமயசஞ்சீவி:—நீங்கள் சொல்லுகிறபடி சிலர் நடந்து கொள்ளுகிறார்கள் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். லஞ்சம் வாங்கும் ஆசாமிகளுக்கெல்லாம் உத்தியோகம் போய்விடுகிறது. அது மாத்திரமல்ல. கைதிகளிடமிருந்து உண்மையை கிரகிப்பதற்காக ஏதாவது கொடுமையான முறையைக் கையாடினாலும், அதற்கும் போலீஸாருக்கு தண்டனை கிடைக்கிறது. ஆகையால் அப்படிப்பட்ட அயோக்கியர்கள் இல்லாதிருக்க என்னென்ன கண்டனைகள் அவசியமோ அவைகளையெல்லாம் துரைத்தனத்தார் செய்திருக்கிறார்கள். இப்போதைய போலீஸ் பழையகாலத்துப் போலீஸல்ல. ஆகையால் பொன்னுசாமி போலீஸில் இருப்பதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. அவன் இங்கே வேலைக்கு முதலில் வந்தபோது சாதாரண ஜெவானாய் வந்தான். பிறகு சாமர்த்தியமாய் கேஸ்களையெல்லாம் குற்றவாளிகளைப் பிடித்ததற்காக மெய்ச்சி துரைத்தனத்தார் படிப்படியாய் அவனுக்கு உத்தியோக உயர்வு கொடுத்தனர். இப்போது அவன் எல்லா ஜெவான்களுக்குப் மேல் தலைமை ஜெவானாயிருக்கிறான். அவன் இப்போதுகூட ஒரு கேஸில் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறான். அவனுக்கு அநேகமாய் ஒரு மாதத்திற்குள் ஸப்-இன்ஸ்பெக்டர் வேலை கிடைத்துவிடும்.

வந்தவர்:—அப்படியா! பையன் கெட்டிக்காரனாயிருக்கிறானா! அவன் உங்களுடைய வேலைக்கு வந்துவிட்டால், நீங்கள் என்ன செய்வீர்கள்?

சமயசஞ்சீவி:—எனக்கு உடனே சர்க்கிள் இன்ஸ்பெக்டர் வேலை கிடைக்கலாம்; இல்லாவிட்டால் வேறொரு ஊருக்கு என்னையாவது அவனையாவது அனுப்பிவிடுவார்கள்.

வந்தவர் :—அப்படியா! நீங்கள் சொன்ன பிறகுதான் பொன்னுசாமியைப்பற்றி எனக்கிருந்த அச்சம் நீங்கியது. நான் இங்கே இப்போது ஒரு முக்கியமான காரியமாக வந்தேன் நான் இந்த ஊரில் வெள்ளாளத் தெருவில், 30-ம் நம்பர் வீட்டிலிருக்கிறேன். எங்களுக்குப் பூர்விக சொத்து ஏராளமா யிருந்தது. அதுபோல் கடனும் ஏராளமாயிருந்தது. கடனெயெல்லாம் தீர்த்தபிறகு ஆள் தப்புவதே பெரிய பாடாகிவிட்டது. அதனால், என் சொந்த வீட்டிலேயே நான் இப்போது வாடகைக்கு இருக்கிறேன்.

சமயசஞ்சீவி :— (தலையை யசைத்து) அப்படியா! பொன்னுசாமியும் உங்களுடன்தா னிருக்கிறானா ?

வந்தவர் :—இல்லை. அவன் தனியா யிருக்கிறான். நான் இருக்கும் வீடு கந்தசாமி பிள்ளை யென்பவருடையது. அந்த வீட்டில் சென்ற இரண்டு மாதங்களாய் ஒரு விநோதம் நடக்கிறது. விடியற்காலையில் சில தினங்களில் வீட்டிற்குள் முற்றத்தில் பெரிய காகிதப் பொட்டலம் வந்து விழுந்திருக்கிறது. இன்றைய தினம்கூட அம்மாதிரி ஒரு பொட்டலம் விழுந்தது.

சமயசஞ்சீவி :—(வியப்புடன்) அப்படியா! பொட்டலங்களில் என்ன இருக்கின்றன ?

வந்தவர் :—சில சமயங்களில் அவைகளில் ஆழாக்கு அரிசி மாத்திரமிருக்கிறது. சில சமயங்களில் ஆழாக்கு அரிசியும் கொஞ்சம் துவரம் பருப்பும் இருக்கின்றன. சில சமயங்களில் காய்கறிகள், 1 அணுக் காசு ஆகியவைகள் இருக்கின்றன—என்று கூறிவிட்டு உடனே சரேலென்று வெளியில் போய் ஒரு சிறிய பொட்டலத்துடன் திரும்பி வந்தார்.

சமயசஞ்சீவி :—இந்தப் பொட்டலத்தை வெளியிலிருந்து கொண்டுவந்தீர்களே! இதுவரையில் இதை எங்கே வைத்திருந்தீர்கள் ?

வந்தவர் :—இதை வாசற்படிக்கு வெளியில் மாடத்தில் வைத்துவிட்டு வந்திருக்கிறேன்.

சமயசஞ்சீவி :—இப்படி உங்களுடைய வீட்டில் பொட்டலங்களைப் போடுகிறவர் யார் என்பதைப்பற்றி, எவர்மேலாவது உங்களுக்கு சந்தேகம் உண்டாகிறதா ?

வந்தவர் :—இவைகளைப் போடுகிறவரைக் கண்டுபிடிக்க நான் எத்தனையோ யுக்திகளையெல்லாம் செய்து பார்த்தேன். ஆனால், என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. நான் இம்மாதிரியான சம்பவங்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஒருவன் மந்திரவாதியின் மூலமாய் தேவதைகளை ஏவி தன்னுடைய விரோதியின் வீட்டில் பலவிதமான சாமான்களைப் போடச் சொல்லுவது வழக்கம் என்று பெரியவர்கள் சொல்லுகிறார்கள். என்னை பயப்படுத்தவோ, என்னை அந்த வீட்டை விட்டுத் துரத்திவிடவோ அம்மாதிரி யாரோ செய்கிறார்கள் என்னும் சந்தேகம் உதிக்கிறது.

சமயசஞ்சீவி :-அப்படியானால் உங்களுக்கு விரோதி யாராவது இருக்கிறார்களா ?

வந்தவர் :—எனக்குத் தெரிந்தவரையில் எனக்கு விரோதி யாருமில்லை. என்னிடம் பகைமை பாராட்டும்படியாக நான் யாரிடத்திலும் நடந்துகொள்ளுகிறவனன்று.

சமயசஞ்சீவி:—சரி; அந்தப் பொட்டலத்தைக் கொடுங்கள்—என்றார். மற்றவர் உடனே பொட்டலத்தை எடுத்து ஸப்-இன்ஸ்பெக்டரிடம் நீட்டினார். அவர் அதை வாங்கிப் பிடித்தார்.

அத்தியாயம்—4

கோல்லத் தெருவில் ஊசி விற்றவன்

அந்தப் பொட்டலத்தில் இரண்டு வாழைக்காய்களும், ஓர் அணு காசும் காணப்பட்டன. ஸப்-இன்ஸ்பெக்டர் வாழைக்காய்களை நன்ருகத் திருப்பித் திருப்பிப் பார்த்தபிறகு, "இந்தப் பொட்டலம் என்னிடமேஇருக்கட்டும். நான் இதில் விஷம் கலக்கப்பட்டிருக்கிறதா என்று பரீட்சிக்க இதை அனுப்புகிறேன். அதோடு, நான் இந்த விஷயத்தில் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறேன். இனி நீங்கள் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. வீணுக பயந்துகொண்டு அந்த வீட்டைக் காலிசெய்ய வேண்டாம்" என்ருர்.

வந்தவர் உடனே, "நல்ல வேளை, நீங்கள் சொன்னதால், எனக்கு தைரிய மேற்படுகிறது. நான் நாலைந்து நாட்களில் வீட்டைக் காலி செய்துவிட வேண்டுமென்று எண்ணியிருந்தேன். நீங்கள் இப்போது இப்படிச் சொல்லாதிருந்தால் நான் நிச்சயமாய் வீட்டைவிட்டுப் போயிருப்பேன். பாவம்! கந்தசாமி பிள்ளையின் மகன் கஷ்டப்படுவான். நான் கொடுத்துவரும் வாடகை இல்லாமல் போயிருக்கும்" என்ருர்.

சமயசஞ்சீவி:— அப்படியானுல், கந்தசாமி பிள்ளை வாடகையை வாங்கிக் கொள்ளுவதில்லையா? அவருடைய பிள்ளைதான் வாங்கிக்கொள்ளுகிருரா?

வந்தவர்:—கந்தசாமி பிள்ளை இப்போது எங்கேயிருக்கிருர்? அவர் இறந்துபோய் சரியாக நான்கு வருஷங்களாகின்றன. அவருடைய பிள்ளைதானிருக்கிருன்.

சமயசஞ்சீவி :—அப்படியா! உங்களுடைய பெயரென்னவோ ?

வந்தவர் :—என்னை ராமசாமி பிள்ளை என்று சொல்லுவார்கள். நான் வருகிறேன். நான் சொன்னது நினைவிருக்கட்டும். நம்முடைய பையனை நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்.

சமயசஞ்சீவி :— அப்படியே செய்கிறேன்—என்றார். உடனே ராமசாமிபிள்ளை நாற்காலியை விட்டு எழுந்திருந்து வெளியில் போய்விட்டார். அவருடைய தலை மறைந்ததும், சமயசஞ்சீவி ஜெவானை நோக்கி, "நான் வெளியில் ஓர்இடத்திற்குப் போகிறேன்" என்று கூறிவிட்டுப் புறப்பட யத்தனித்தார். உடனே ஜெவான் ஒரு தடவை கனைத்து தொண்டையை சரிப்படுத்திக்கொள்ள முயலவே, அதைக் கண்ட சமயசஞ்சீவி அவன் ஏதோ சொல்ல விரும்புகிறானென்று யூகித்துக்கொண்டு, "என்ன விசேஷம் ?" என்றார்.

ஜெவான் :—ஒன்றுமில்லை ஸார்! பொன்னுசாமி பிள்ளையைப்பற்றி அநேக வதந்திகள் வருகின்றன. அதைப் பற்றி போன வாரமே உங்களிடம் சொல்ல எண்ணியிருந்தேன். ஆனால் அதன்பிறகு பல கேஸ்களைப்பற்றி நான் கவனிக்க நேரிட்டதாகையால் அதை சுத்தமாய் மறந்துவிட்டேன். இவர் வந்து பேசியதைக் கேட்டதில், அந்த விஷயம் நினைவிற்கு வந்தது.

சமயசஞ்சீவி:—பொன்னுசாமியைப்பற்றி என்ன வதந்திகள் வருகின்றன ?

ஜெவான் :—சில நாட்களாய் அவரிடம் பணம் ஏராளமாய்க் காணப்படுகிறதாம் அதை எப்படி செலவழிக்கிறது என்பதை யறியாமல் அவர் தவிக்கிறாராம். அவர்

நாலைந்து சிநேகிதர்களுடன் ஒரு நாளைப்போல ஓட்டல்களுக்கும், சாராயக் கடைகளுக்கும், தேவ்டியாள் தெருவிற்கும் போய் பணத்தைச் செலவுபண்ண முயலுகிறாராம்.

சமயசஞ்சீவி :—அப்படியா! அவனுக்கு மாதம் 28 ரூபாய் சம்பளம்தானே வருகிறது. அப்படியிருக்க, அவ்வளவு தாராளமாய் அவன் செலவுபண்ணுவதற்கு அவனுக்குப் பணம் எங்கிருந்து கிடைக்கப் போகிறது! இந்த உத்தியோகத்தைத் தவிர அவன் வேறு ஏதாவது தொழில் செய்கிறானா?

ஜேவான் :—அவர் வேறு எந்தத் தொழிலும் செய்வதாகத் தெரியவில்லை.

சமயசஞ்சீவி :—இல்லாவிட்டால் சூதாட்டம், குதிரைப் பந்தயம் முதலியவைகளில் பணம் கிடைக்கிறதா?

ஜேவான் :—அவருக்கு சீட்டாட்டமே தெரியாது. சூதாட்டம் என்னவென்பதையே அவர் அறியார். குதிரைப் பந்தயம் நடக்குமிடத்திற்கு அவர் போனதில்லை.

சமயசஞ்சீவி :—நீ அவன்மேல் சுமத்தும் குற்றம் விபரீதமானதாயிருக்கிறது. ஒருவேளை ஏதாவது கேஸ்களைப் பிடித்து லஞ்சம் வாங்கிக்கொண்டு அவைகளைப்பற்றி நடவடிக்கை எடுக்காமல் அப்படியே அமுக்கிவிடுகிறானா?

ஜேவான் :—நானாக அவர்பேரில் குற்றம் சுமத்த வரவில்லை. நான் கேள்விப்பட்ட விஷயத்தைச் சொல்லுகிறேன். அவருக்குப் பணம் எங்கிருந்து கிடைக்கிறதென்பது தெரியவில்லை. இந்த ஊரில் சோமு முதலியார் என்று ஒரு பெரிய மனிதரிருக்கிறார். அவர் ராமநாதனுடைய வீட்டிற்கு அடுத்த வீட்டில்தானிருக்கிறார். அவருடனே இவர் எப்போதும்

இருக்கிறாராம். இப்போது எஜமான் நேராக ஓட்டலுக்குப் போனால் இருவரையும் பார்க்கலாம்.

சமயசஞ்சீவி:— அப்படிச் சொல்லு. அந்த சோமு முதலியார் பெரிய பணக்காரர். இவனுக்கும் அவருக்கும் சிநேகம் உண்டுபோ லிருக்கிறது. அவர் செலவு பண்ணு கிறார்; இவன் அவரிடம் பணம் பறிக்கிறான். இல்லாவிட் டால், இவனிடம் அவ்வளவு பணமேது!

ஜேவான்:—அவ்வளவு பெரிய பணக்காரருக்கும் இவ ருக்கும் எப்படி சிநேகமாயிற்றென்பது ஆச்சரியமாயிருக் கிறது.

சமயசஞ்சீவி:— இருக்கட்டும். இந்த விஷயத்தை நான் கவனிக்கிறேன். இப்போது இந்த விஷயத்தை என்னிடம் சொன்ன மாதிரி இன்னும் யாரிடத்திலாவது சொன்னாயா?

ஜேவான்:—வேறு யாரிடத்திலும் சொல்லவில்லை.

சமயசஞ்சீவி:—நல்ல வேலை செய்தாய். வேறு யாரி டத்திலும் இதைத் தெரிவிக்கவேண்டாம். இரகசியமாக நான் ஆராய்ச்சி செய்கிறேன். பொன்னுசாமி யிடமும் இதைப்பற்றி நேருக்கு நேராய் எதையும் கேட்கவேண்டாம். —என்று கூறிவிட்டு வெளியில் சென்று மோட்டார் சைக் கிலிலிருந்து போர்வையையும், தலைப்பாகைத் துணியையும் உள்ளே கொண்டு வந்து, "இவைகளை ஜாக்கிரதை யாகப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டிவை. யாராவது இங்கேவந்து நானே வாங்கிவரச் சொன்னதாகச் சொன்ன லும், நான் கடிதம் கொடுத்தனுப்பியதாகச் சொல்லி யாரா வது கடிதம் கொண்டு வந்தாலும், நீ இவைகளை யாரிடத்தி லும் கொடுக்கக்கூடாது. யாராவது கடிதம் கொண்டுவந்தால்,

கடிதத்தை சாமர்த்தியமாய் வாங்கி வைத்துக்கொண்டு, அந்த ஆளை நிறுத்தி வைத்துக்கொண்டு எனக்கு உடனே தெரியப்படுத்து. ஆள், கடிதம் இரண்டையும் விடக் கூடாது" என்று ஜவானிடம் கூறிவிட்டு, அவைகளை அவனிடம் ஒப்புவித்தார். அவன் அவைகளைப் பெட்டியில் பூட்டி வைத்துவிட்டு வந்த பிறகே சமயசஞ்சீவி வெளியில் சென்று சிறிது நேரத்தில் தபாலாபீஸை யடைந்தார்.

அது நிற்க, போலீஸ் ஸ்டேஷனிலிருந்து சப்-இன்ஸ்பெக்டர் புறப்பட்டுச் சென்றதை தூரத்திலிருந்தபடி பார்த்துக்கொண்டிருந்த துப்பறியும் ராமநாதனுடைய முகம் உடனே புன்னகையால் மலர்ந்தது. அவர் மோட்டார் சைக்கிள் புறப்பட்டுச் செல்லுவதைப் பார்த்தபடியே நிதானமாக நடந்து, போலீஸ் ஸ்டேஷன் கட்டிடத்தை நெருங்கலானார். ஸப்-இன்ஸ்பெக்டர் அவரை கவனித்ததாய்த் தோன்றவில்லை. மோட்டார் சைக்கிளும் வெகுதூரம் சென்று மறைந்துபோய் விட்டது. துப்பறியும் ராமநாதன் போலீஸ் ஸ்டேஷனில் நுழைந்தார். அப்போதும் டைரி எழுதிக் கொண்டிருந்த போலீஸ் ஜவான் அவரைக் கண்டவுடன் புன்னகை ததும்பிய முகத்துடன், "வாருங்கள். இன்னும் இரண்டு நிமிஷங்களுக்கு முன்பு வந்திருந்தால், ஸப்-இன்ஸ்பெக்டரை நீங்கள் பார்த்திருக்கலாம். அவர் இப்போது தான் புறப்பட்டுப் போனார்" என்றான்.

ராமநாதன் உடனே அங்கிருந்த ஸப்-இன்ஸ்பெக்டரின் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, "நான் தெருக் கோடியில் வந்துகொண்டிருந்த போதே அவர் புறப்பட்டு போனதை நான் பார்த்தேன். தெருக்கோடியிலிருந்து கூப்பிட்டால் அவருடைய காதில் விழாது என்று எண்ணியே நான் பேசாம லிருந்துவிட்டேன். அந்தப் போர்வையைப்

யும், துணியையும் பத்திரமாக வைத்திருக்கிற யல்லவா? அவை ஒரு முக்கியமான கேஸிற்கு உதவக்கூடியவை. ஆகையால் யாராவது வந்து அவைகளை அபகரித்துப் போக ஏதாவது யுக்தி செய்வார்கள். ஆகையால் நீ ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்” என்றார்.

ஜேவான் :—ஆம். ஸப்-இன்ஸ்பெக்டரும் அப்படியே தான் சொன்னார். இந்தப் போர்வை தலைப்பாகை சங்கதி உங்களுக்கூடவா தெரியும்! இவைகளை எதற்காக பந்தோபஸ்து செய்யச் சொல்லுகிறார் என்பதையறிய நான் ஆவல் கொண்டேன். ஆனால் அதைப்பற்றி அவரிடம் கேட்க அஞ்சி சும்மா இருந்துவிட்டேன். எந்தக் கேஸிற்கு இவைகளிரண்டும் உபயோகப்படு மென்கிறீர்கள்?

ராமநாதன் :—நான் உன்னிடம் விஷயங்களைச் சொல்லுவேன். ஆனால் ஸப்-இன்ஸ்பெக்டருக்கு நான் உன்னிடம் சொன்னது தெரியுமானால், அவர் என்ன சொல்லுவாரோ என்று யோசிக்கிறேன். அவைகளிரண்டையும் நீ கவனித்தா யல்லவா?

ஜேவான் :—நான் சரியாகப் பார்க்கவில்லை.

ராமநாதன் :— (வியப்பைத் தோற்றுவித்த முகத்துடன் ஜேவானைப் பார்த்து) என்ன! பார்க்கவில்லையா! நீ சொல்வது விநோதமா யிருக்கிறதே!

ஜேவான் :—நான் நிச்சயமாய் அவைகளை சரியாகப் பார்க்கவில்லை.

ராமநாதன் :—ஏன் பார்க்கவில்லை?

ஜேவான் :—என்ன அப்படிச் சொல்லுகிறீர்களே! அவர் பக்கத்திலேயே நின்றுகொண்டு உடனே பெட்டியில் வைத்துப் பூட்டும்படியாய்ச் சொல்லிவிட்டு, நான் பூட்டி

யதை நேரில் பார்க்க விரும்பி அவர் நின்றுகொண்டிருந்த போது, அவைகளை நான் எப்படி எடுத்துப் பார்க்க முடியும்? அப்படி கவனித்தாலும், அவர் சும்மா விட்டுவிடுவாரா? கோபித்துக் கொள்ளுவா ரல்லவா?

ராமநாதன் :— அப்படியா நடந்தது! சரிதான். அவர் அவ்வளவு ஜாக்கிரதையாக நடந்துகொண்டதால், அவை மிக முக்கியமானவை என்பது தெரிகிறது. ஏமாந்து போகாமல் சாவியை ஜாக்கிரதையாக வைத்துக்கொள்.

ஜேவான் :— அந்த விஷயம் எனக்குத் தெரியாதா! (தன்னுடைய சட்டைப்பையைத் தட்டிக் காண்பித்து) சாவியை ஜாக்கிரதையாக இதோ வைத்துக்கொண் டிருக்கிறேன். அதைப்பற்றிக் கவலை இல்லை. கேஸ் விஷயத்தைப் பற்றி நீங்கள் சொல்லவில்லையே!

ராமநாதன் :— இந்த ஊரில் சில நாட்களாய் ஒரு புதிய குற்றவாளி தோன்றி யிருக்கிறான். அவன் தனக்கு 'குண்டோதரன்' என்று நாமகரணம் செய்துகொண் டிருக்கிறான். அவனைக் கண்டுபிடிக்கும் விஷயத்தில் இவைக ளிரண்டும் உதவப்போகின்றன. எனக்கு நீ ஒரு சிறிய காரியம் செய்யவேண்டுமே. பக்கத்திலிருக்கும் சோடாக் கடையிலிருந்து ஒரு கலர் வாங்கிக்கொண்டு வருகிறாயா?— என்று கூறி, 4 அணு பணமொன்றை அவனிடம் கொடுத்தார். அவன் உடனே புறப்பட்டுச் சென்று அருகிலிருந்த ஒரு வெற்றிலை பாக்குக் கடையிலிருந்து ஒரு கலர் புட்டியை வாங்கி வந்து அவருக்கு முன்னால் வைத்தான். அவர் அதை வாங்கிக்கொண்டு, "அடாடா! நான் மறதியாக வல்லவா சொல்லிவிட்டேன். மறுபடியும் நீ இன்னொரு தடவை கடைக்குப் போகவேண்டும். இன்னொரு கலர் வாங்கிக்

கொண்டு வா" என்றார். ஜெவான் உடனே மறுபடியும் புறப்பட்டு வெளியில் சென்று இன்னொரு கலர் வாங்கி வந்து அவரிடம் கொடுத்தான். அவர் அதையும் வாங்கித் தமக்கெதிரில் மேஜையின்மேல் வைத்துக்கொண்ட பிறகு, "உனக்காகவும் ஒரு புட்டி சேர்த்து வாங்கி யிருக்கிறேன்" என்று கூறிவிட்டு, ஒரு கலர் புட்டியைக் காட்டினார்.

அவன் உடனே, "அடாடா! எனக்காகவா இன்னொன்று வாங்கிவரச் சொன்னீர்கள்! எனக் கெதற்கு." என்றான்.

ராமநாதன், "நானே இரண்டு கலரையும் சாப்பிடுவேனென்று நினைத்தாயா! பேஷ்! உனக்காகத்தான் வாங்கி வரச் சொன்னேன்!" என்று கூறிவிட்டு, ஒரு கலர்புட்டியின் வாயில் கட்டை விரலை வைத்து அழுத்த, கண்ணடி கோலி உள்ளே போய்விட்டது. அதை அவர் அவனிடம் கொடுத்த பின், இன்னொரு புட்டியை இன்னொரு கைக் கட்டை விரலாலேயே அழுத்தி கோலி குண்டைக் கீழே தள்ளி விட்டு அதை மடமடவென்று குடித்தார். ஜெவான் அவர் கொடுத்த புட்டியைக் காலி செய்த பிறகு இரண்டு புட்டிகளையும் வெளியில் எடுத்துக்கொண்டு சென்று கடைக்காரனிடம் கொடுத்துவிட்டு திரும்பி வந்து ராமநாதனிடம் 2 அணவைக் கொடுத்தான்.

ராமநாதன், "நீ டைரி எழுதிக்கொண் டிருந்தாய்போலிருந்தது. நான் வந்ததால் அந்த வேலை தடைப்பட்டது. நான் போகிறேன். நான் இங்கே வந்த விஷயம் ஸப்-இன்ஸ்பெக்டருக்குத் தெரிந்தால், நான் அவருக்குப் போட்டியாய் ஆராய்ச்சி செய்ய இங்கே வந்துவிட்டுப் போனேனென்று நினைத்துக்கொள்ளப் போகிறார். குண்டோதரனைப்பற்றி நீ

என்னிடம் பேசியதைப்பற்றியும் அவர் உன்மேல் கோபம் கொள்வார்.

ஜேவான் :—நீங்கள் அதைப்பற்றி கவலைப்படவேண்டாம். நீங்கள் இங்கே வந்துவிட்டுப் போனதாக நான் அவரிடம் சொல்லமாட்டேன்—என்ருன்.

ராமநாதன் புறப்பட்டு வெளியில் போய்விட்டார். ஜெவான் டைரியை எழுதி முடித்தபின் சோம்பலாய் சுவரில் சாய்ந்தபடி உட்கார்ந்திருந்தான். அவனுடைய தலை சுற்ற ஆரம்பித்துவிட்டது. கண் பார்வை மழுங்கத்தொடங்கியது. அவன் விழித்துக்கொண்டிருக்க முயன்றான். ஆனால் தூக்கம் பலமாய் அழுத்தியது. ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு அவன் சுவரில் சாய்ந்தபடி தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டான்.

இது நிற்க, ஸப் - இன்ஸ்பெக்டர் தபாலாபீஸை யடைந்து, போஸ்ட் மாஸ்டருடன் சிறிது நேரம் பேசிக்கொண் டிருந்த பிறகு, அங்கிருந்து புறப்பட்டு வீட்டை யடைந்து மோட்டார் சைக்கிளைத் தமது வீட்டில் நிறுத்திவிட்டு, கால் நடையாக மறுபடியும் புறப்பட்டு வெளியில் சென்று அந்த ஊரில் கடைத்தெருவில் இருந்த பிரபலமான ஓர் ஓட்டலை யடைந்தார். அப்போது மணி ஏழரையாயிருந்தது. அந்த ஓட்டலின் உட்புறத்தில் அப்போது சொற்பஜனங்களே காணப்பட்டனர். அவர் வாசற்படிக்கு வெளியில்மறைவாக நின்றபடி உள்ளே யாராரிருந்தனர் என்று கவனித்தார். வாசற்படிக்கருகிலேயே இருந்த மேஜையைச் சுற்றிலும் மூன்று பக்கங்களிலுமிருந்த மூன்று நாற்காலிகளில் மூன்று மனிதர்கள் உட்கார்ந்து பலகாரம் சாப்பிட்டுக்கொண் டிருந்தனர். அவர்களில் ஒருவர் சோமு முதலியார், இன்னொருவர் ஹெட்கான்ஸ்டேபிள் பொன்னுசாமிபிள்ளை என்பது தெரிந்தது. அவர்கள் சாப்பிட்டபடியே சம்பாஷித்துக்கொண்

டிருந்தனர். அவர்களுடைய சம்பாஷணை சற்று தணிவான குரலிலேயே நடந்தது. மூன்ருவது மனிதர் சோமு முதலியாருக்குப் பரிச்சயமானவர்.

சோமு முதலியார்:— அந்த முட்டாள் இப்போது எங்கே இருக்கிருன்?

பொன்னுசாமி:—எந்த முட்டாள்? ஸப்-இன்ஸ்பெக்டரா?

சோமு முதலியார்:—நான் முட்டாள் என்று சொன்னவுடன் ஸப்-இன்ஸ்பெக்டரைத்தான் நான் குறிக்கிறேன் என்பது உனக்கு எப்படித் தெரிந்தது?

பொன்னுசாமி:—இதுகூடவா தெரியாது! அவர் எங்கிருந்தால் உங்களுக்கென்ன? அவர் உங்களுடைய ஜோலிக்கே வரமாட்டார்.

சோமு முதலியார்:—அவர் என்னிடம் வரும்படியான ஜோலி எதுவுமில்லை. அப்படி வரும்படியாக நான் இடம் வைத்துக்கொள்ளமாட்டேன். இப்போது உனக்கு எவ்வளவு பணம் வேண்டும்?

பொன்னுசாமி:—25 ரூபாய் வேண்டுமென்று நான் காலைமுதல் சொல்லிக்கொண் டிருக்கிறேன். கொலைக் குற்றத்தைத்தவிர வேறு எந்த விதமான குற்றத்தில் நீங்கள் அகப்பட்டுக் கொண்டாலும் உங்களைத் தப்ப வைப்பதற்கு நான் உத்தரவாதி.

சோமு முதலியார்:—எப்படித் தப்ப வைப்பாய்?

பொன்னுசாமி:— இப்போதிருக்கும் ஸப்-இன்ஸ்பெக்டர் சுத்த முட்டாள் என்பது உங்களுக்கே தெரிந்த விஷயம். அவனுக்கு தான் செய்யவேண்டிய வேலைகள் இன்னின்னவை என்பதே தெரியாது. அவன் என்னிடம் கேட்டுக்

கேட்டு ஒவ்வொன்றையும் செய்கிறான். பெயருக்கு மாத்திரம் அவன் ஸப்-இன்ஸ்பெக்டரே ஒழிய, செய்கையில் நான்தான் அந்த உத்தியோகத்தைப் பார்க்கிறேன்.

சோமு முதலியார்:— அது உண்மையா யிருக்கலாம். குற்றம்செய்கிறவனுக்கு போலீஸாரிடம் அச்சம்; நான்அஞ்ச வேண்டிய அவசியமே யில்லை. நீயாயிருந்தாலும் சரி; அல்லது, உன்னுடைய தாத்தாவா யிருந்தாலும் சரி; நான் யாருக்கும் அஞ்சவேண்டிய அவசியமேயில்லை.

பொன்னுசாமி:— இப்படியெல்லாம் வீருப்பாய்ப் பேசுகிறவர்கள் பின்னல் அவதிப்படுவதை நான் என் கண்ணுல் எத்தனையோ தடவைகளில் பார்த்திருக்கிறேன்.

சோமு முதலியார்:—(சிறிது நேரம் மௌனமாயிருந்த பிறகு) போலீஸாரைப் பகைத்துக்கொள்ளுவது நல்லதல்ல. நீ பணம் வாங்கின சமயங்களில் எனக்கு எழுதிக்கொடுத்த ரசீதுகளை யெல்லாம் ஸப்-இன்ஸ்பெக்டரிடம் காட்டினுல் உன் கதி என்னவாகும்?

பொன்னுசாமி:—(அசட்டுச் சிரிப்புடன்) உங்களுக்கு என்மேல் அவ்வளவு கோபம் ஏற்படும்படி நான் நடந்து கொள்ளமாட்டேன். நீங்கள் மனதாறக் கொடுத்தால் கொடுங்கள். இல்லாவிட்டால் கட்டாயமில்லை.

சோமு முதலியார்:—போலீஸ்காரர்கள் பிணம்பிடுங்கிகளல்லவா! யாராவது பணம் வைத்திருப்பதைப் பார்த்தால், அதை அடியோடு கூஷவரம் செய்தேவிடுவார்கள்.

பொன்னுசாமி:—நீங்கள் என்ன வேண்டுமானுலும் சொல்லிக்கொள்ளுங்கள். அதனுல் எனக்கு உங்களிடம் வருத்தம் ஏற்படப்போவதில்லை. எனக்கு அவசரமாய் 25

ரூபாய் வேண்டும். அதை மாத்திரம் கொடுத்துவிடுங்கள். இனி உங்களிடம் கேட்கவில்லை.

சோமு முதலியார்:—சரி; அப்படியானால் கொடுத்துத் தொலைக்கிறேன்.

பொன்னுசாமி:—நான் ஒரு ரகசிய சங்கதியை உங்களிடம் சொல்லுகிறேன். அதை வெளியிடாதிருப்பீர்களா?

சோமு முதலியார்:—என்ன ரகசியம் அது? நான் இதுவரையில் எதையாவது வெளியிட்டதுண்டா! நீ ஏன் சந்தேகப் படுகிறாய்?

பொன்னுசாமி:—விஷயம் என்னவென்றால், உங்களுக்கும் சபேசனுக்கும் கடுமையான விரோத மிருக்கிற தென்பது சப்-இன்ஸ்பெக்டருக்குத் தெரியாது; அது தெரிந்துவிடுமானால், உங்களைக் கண்காணிக்கும்படி அவர் உடனே என்னை அனுப்புவார்.

சோமு முதலியார்:— ஓஹோ! கொலைக்குற்றத்தில் என்னை மாட்டவைக்கப் பார்க்கிறாயா?

பொன்னுசாமி:—அடாடா! நான் சொல்வதைத் தவறுதலாய் நீங்கள் அர்த்தம் செய்கிறீர்களே! இனிமேல் ஸப்-இன்ஸ்பெக்டர் செய்யப்போகும் காரியத்தை நான் முன்னாலேயே உங்களுக்குத் தெரிவிக்கிறேன். ஏனென்றால், ஸப்-இன்ஸ்பெக்டரின் வேலையை நான் என் வேலையோடு சேர்த்து கவனிக்கிறேனென்று ஏற்கனவே சொன்னேனே!

சோமு முதலியார்:—நீ குசாலாய்க் கண்காணித்துக் கொள்ளப்பா. சபேசனுடைய சரீரம் காணமல் போனபோது முன்புறத்தில் நீ மாத்திரம் தனியா யிருந்ததாய்க் கேள்விப்பட்டேன். அப்போது ஸப்-இன்ஸ்பெக்டரும்,

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரும் கட்டிடத்தின் பின்புறத்தி லிருந்தனராம். அந்த விஷயம் எவ்வளவு விபரீதமான சந்தேகங்களுக்கு இடங்கொடுக்கிறது தெரியுமா?

பொன்னுசாமி:— அப்படியானால் சபேசனுடைய சரீரத்தை நான் மறைத்தேனென்கிறீர்களா? நான் அப்படிச் செய்வதற்குக் காரணமெதுவு மில்லையே!

சோமு முதலியார்:— இப்படி யெல்லாம் என்னிடம் சொன்னால் நான் நம்புவேன்; மற்றவர் நம்பவேண்டுமே. அதிருக்கட்டும். என்னுடைய வாழைத் தோட்டத்தில் தினம் வாழைக்காய்கள் காணாமல் போய்க்கொண்டே இருக்கின்றன. உன் வீடு பின்பக்கத்தி லிருக்கிறது. மரத்தி லிருக்கும் தாறு உன் வீட்டின் பக்கம் சாய்ந்திருக்கிறது. அது நன்றாக முற்றவேண்டுமென்று நான் விட்டு வைத்திருந்தேன். எப்படியோ தினம் இரண்டு காய்கள் காணாமல் போய்க்கொண்டே இருக்கின்றன. என் மரத்துக் காய்களை அறுத்தெடுத்து தினம் வறுவல், பொரியல் முதலியவைகள் செய்துகொள்ளுகிறாயா?

பொன்னுசாமி:—பேஷ்! என்னை வாழைக்காய்த் திருடன் என்று எண்ணிவிட்டீர்களா! நீங்கள் இப்படிச் சொன்னதற்கு அபராதமாய் நான் இன்றையதினம் முழுத்தாறையும் அப்படியே வெட்டி எடுத்துக்கொள்ளப்போகிறேன்.

சோமு முதலியார்:— அந்த விளையாட்டெல்லாம் என்னிடம் வேண்டாம். இன்றையதினம் இரண்டு காய்களை நீ அறுத்தபோது என் வேலைக்காரன் பார்த்தானாம். வேறு ஆசாமியா யிருந்தால் அவன் அங்கேயே பலிபோட்டிருப்பான். அதை நீ செய்தபடியால் அவன் பேசாமல் என்னிடம் வந்து சங்கதியைச் சொன்னான்.

பொன்னுசாமி:—(வியப்புடன்) இது பெருத்த வேடிக்கையா யல்லவா இருக்கிறது. நான்தான் காய்களை யறுத்தேனென்று அவன் பிரமாணம் செய்வானா? என்னை அவன் பார்த்தானா?

சோமு முதலியார்:— உன்னை அவன் நேரில் பார்க்கவில்லை. உன் வீட்டிற்கும் என் வீட்டிற்கும் நடுவில் சுவரொன்று இருக்கிறதல்லவா! அந்தச் சுவரிற்கப்பா லிருந்தபடி நீ கைகளை மாத்திரம் நீட்டி அறுத்தாயாம். சுவரிற்கப்பால் உள்ள உன் வீட்டிலிருந்து அறுத்தால், நீதான் அறுத்திருக்கவேண்டும். வேறு அன்னியன் உன் வீட்டிற்குள் வந்து அறுப்பானா?

பொன்னுசாமி:—காசை எறிந்தால் வாழைக்காய் வீட்டைத் தேடிக்கொண்டு தானே வருகிறது. இருந்திருந்து உங்களுடைய வீட்டிலா நான் திருடவேண்டும்?

சோமு முதலியார்:—சரி. உன்னோடு வீண் வியவகாரம் பேச எனக்கு அவகாசமில்லை. நீ கேட்டபடி 25 ரூபாயைத் தொலைத்துவிடுகிறேன்—என்றார். அந்த சமயத்தில் அவர்கள் மூவரும் காப்பி முதலியன சாப்பிட் டாய்விட்டபடியால் ஓட்டல்காரருக்குக் கொடுக்கவேண்டிய பணத்தை சோமு முதலியார் கொடுத்தார்.

அப்போது தெருவில் மறைந்து நின்றுகொண்டிருந்த போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர் உடனே எதிரிலிருந்த ஒரு வெற்றிலை பாக்குக் கடைக்குச் சென்று, வெற்றிலை பாக்கு வாங்குவதுபோல் நடித்து தமது முதுகுப் பக்கத்தை ஓட்டல் பக்கம் திருப்பிடபடி நின்றார். ஆனால், அவர் கடைக்காரனிடம் வெற்றிலை பாக்கு காலணாவிற்கு வேண்டுமென்று கூறினரே ஒழிய அவருடைய பார்வை ஓட்டல் பக்கம்

சென்றது. மூவரும் ஓட்டலை விட்டுப் புறப்பட்டனர். அவர்கள் ஸப்-இன்ஸ்பெக்டர் நின்றுகொண் டிருந்ததை கவனிக்கவில்லை. ஏனெனில் அப்போது அங்கே ஜன நடமாட்டம் அதிகமா யிருந்தது. அவர்கள் மூவரும் சிறிது தூரம் சென்ற பிறகு ஸப்-இன்ஸ்பெக்டர் கடையை விட்டுப் புறப்பட்டு வெற்றிலை போட்டுக்கொண்டபடியே அவர்களைப் பின்தொடரலானார். சிறிது நேரத்தில் அவர்கள் மூவரும் மிஸ்டர் ராமநாதனுடைய வீட்டிற்கு அடுத்த வீட்டை யடைந்து அதனுள் நுழைந்தனர். ஸப்-இன்ஸ்பெக்டர் ரஸ்தாவை விட்டு விலகி தோப்பிற்குள் நுழைந்து ஒரு மரத்தினடியில் இருளில் நின்றுகொண்டு சோமு முதலியாருடைய வீட்டையும் ராமநாதனுடைய வீட்டையும் மாறி மாறிப் பார்த்தபடி நின்றுகொண் டிருந்தார்.

வீட்டிற்குள் சென்ற மூவரில் ஒருவர் புறப்பட்டு வெளியில் போய்விட்டார். பொன்னுசாமி பிள்ளையும் சோமு முதலியாரும் மாத்திரம் வீட்டிற்குள் ளிருந்தனர். அதே சமயத்தில் எதிரிலிருந்த தோப்பில் யாரோ ஒரு தெலுங்குப் பாட்டைப் பாடிய ஓசை திடீரென்று கேட்டது. உடனே சோமுமுதலியார் வியப்பைக் காட்டிய முகத்துடன்பொன்னு சாமியின் முகத்தைப் பார்த்தார். பொன்னுசாமி, "மறுபடியும் அந்தப் பைத்தியக்காரன் வந்திருக்கிறான்போ லிருக்கிறது! அது நமக்குப் பழக்கமான குரலைப்போல் இருக்கிறதே!" என்றான்.

சோமு முதலியார் :—நாம் பல தடவைகள் தோப்பிற்குள் போய்த் தேடிப் பார்த்தோம். ஆனால் மனிதர் யாரும் அகப்படவில்லை. இது ஒருவேளை பேய், அல்லது, பிசாசின் வேலையா யிருக்குமா?—என்றார்.

உடனே பாட்டு ஓய்ந்தது. அதே சமயத்தில் சோமு முதலியாரின் வீட்டிற்கு எதிர்ப்பக்கத்திலிருந்த ஸப்-இன்ஸ்பெக்டர் அதே இடத்திலேயே நின்றுகொண் டிருந்தார். அவருக்குப் பைத்தியக்காரனுடைய பாட்டு கேட்டதோ, இல்லாவிட்டால் அதை அவர் கவனிக்கவில்லையோ, அல்லது, சோமு முதலியாருடைய வீட்டைப் பார்ப்பதை விட்டு விட்டுப் போய் பைத்தியக்காரனைத் தேட விரும்பவில்லையோ வென்று தோன்றியது.

மறுபடியும் இன்னொரு முறை தோப்பிலிருந்து அதே பாட்டு கேட்டது. உடனே துப்பறியும் ராமநாதன் தமது வீட்டின் மேன்மாடியில் நின்றுகொண்டு தோப்பை கவனித்ததை ஸப்-இன்ஸ்பெக்டர் பார்த்தார். அடுத்த நிமிஷம் ராமநாதனுடைய வடிவம் மறைந்தது. ராமநாதன் இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு ஒரு கையில் ஒரு தடியையும், இன்னொரு கையில் ஒரு ராந்தலையும் எடுத்துக்கொண்டு தெருவை யடைந்தார்.

தோப்பில் மறைந்து நின்ற ஸப்-இன்ஸ்பெக்டர் அவருக்கருகில் நெருங்கி, "அந்தப் பாட்டை கவனித்தீர்களல்லவா? நான் ரஸ்தாவோடு போய்க்கொண்டிருந்தேன்; பாட்டைக் கேட்டுவிட்டுத் தோப்பினுள் புகுந்தேன். உள்புறம் இருளாக இருந்தபடியால் அதிக தூரம் போக முடியவில்லை. மேலே என்ன செய்வதென்பதை யறியாமல் யோசனை செய்துகொண் டிருந்த சமயத்தில் நல்ல வேளையாக நீங்கள் விளக்குடன் வந்தீர்கள். ஆள் அதிக தூரம் போவதற்குள் நாம் போய் அவனைப் பிடித்துவிடவேண்டும்" என்றார்.

உடனே ராமநாதன் ஸப்-இன்ஸ்பெக்டரும் தோப்பிற்குள் நுழைந்து தேடினர். அதற்கு சுமார் கால்மணி

நேரத்திற்குமேல் பிடித்தது. ஆனால் மனிதர்கள் யாரும் தோப்பிற்குள் காணப்படவில்லை. ராமநாதன் ரஸ்தாவை நோக்கி நடந்தபடியே, "ஆம், இது பெருத்த வேடிக்கையா யிருக்கிறது. நான் பாட்டு பாடும் ஓசை உண்டானவுடன் ஓடி வந்தேன். அப்படியிருந்தும் ஆள் அகப்படாமல் போய்விட்டானே!" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர், "நான் உங்களுக்கு முன்னமேயே இங்கே வந்தும், உபயோகம் இல்லையே!" என்றார்.

அதோடு பைத்திக்காரனைப்பற்றிய சம்பாஷணை நின்றது. அவர்கள் சிறிதுநேரத்தில் ரஸ்தாவை யடைந்தனர். உடனே ஸப்-இன்ஸ்பெக்டர் ராமநாதனிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டு சிறிது நேரத்திற்குப் பிறகு மறுபடியும் போலீஸ் ஸ்டேஷனை யடைந்து, உள்ளே நுழைந்தார். ஜெவான் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து தூங்கிக் கொண்டிருந்ததைக் கண்டு வியப்படைந்தவராய் அவனுக் கருகில் போய் நின்று அவனை கவனித்துப் பார்த்தார். அவன் அயர்ந்து தூங்கிக்கொண்டிருப்பவனைப்போல் காணப்பட்டான்.

அவருடைய பார்வை உடனே அவனுக் கெதிரில் திறந்து கிடந்த டைரியின்மேல் சென்றது. அவர் டைரியை உடனே தமது கையிலெடுத்துப் பார்த்தார். அதில் ஒரு வாக்கியம் அரைகுறையாக நிறுத்தப்பட்டிருந்த தாகையால், அவன் டைரி எழுதிக்கொண் டிருந்தபோதே தூங்கிப் போயிருக்க வேண்டுமென்பது விளங்கியது. டைரியை அவர் முன்போலவே வைத்தார். அப்போது மேஜையின் மேல் மஞ்சள் நிறமுள்ள ஜலம்போன்ற வஸ்து காலணு பருமன் இருந்ததைப் பார்த்து அதை கவனித்தார்; ஜெவான் லெம்ஜூஸ் என்னப்படும் பான ரஸத்தை வாங்கிப்

பருகி இருக்கவேண்டுமென்னும் முடிவை யடைந்து புட்டியை ஒருவேளை எங்கேயாகிலும் வைத்திருக்கிருனோ வென்றெண்ணி சுற்றுமுற்றும் பார்த்தார். அங்கே புட்டி எதுவும் காணப்படவில்லை. ஆனால் மேஜையினருகில் தரையில் சிவப்பு நிறமான ஜலம் ஒரு முழ நீளத்திற்கு தரையில் கோடுபோல் காணப்பட்டது. அவர் உடனே குனிந்து பார்க்க ஆரஞ்சுப் பழ வாசனை வீசியது. அது ஆரஞ்சு கிரஷ் என்னப்படும் சிவப்பு நிறமான பானரஸம் என்பது விளங்கியது. தரையில் அது அம்மாதிரி கோடுபோல் விழவேண்டிய காரண மென்னவென்றும், ஒரே சமயத்தில் ஓர் ஆரஞ்சு கிரஷ்ஷும், ஒரு லெம்ஜுலஸும் ஜெவான் சாப்பிட்டிருக்கவேண்டிய காரணமென்னவாக இருக்கலாமென்றும் யோசிக்கலானார். இரண்டுவிதமான கலர்களையும் ஜெவானே சாப்பிட்டிருக்கலா மென்பது அசம்பாவிதமானது என்ற எண்ணம் உண்டாகவே, அங்கே வேறு யாரோ ஒருவர் வந்திருக்க வேண்டுமென்றும், ஜெவானும் அந்த மனிதரும் அவைகளைப் பருகி இருக்கவேண்டுமென்றும் முடிவு செய்துகொண்டு தெருவை யடைந்து, இரண்டு கட்டிடங்களுக் கப்பா லிருந்த ஒரு வெற்றிலே பாக்குக் கடையை யடைந்து கடைக்காரனிடம், "ஏனப்பா! ஜெவான் வீராசாமி சற்றுமுன்பு கலர் வாங்கிக்கொண்டு போனானா ?" என்று விசாரித்தார்.

கடைக்காரன்:—ஆம். எசமானே. அவர் ஒரு லெம்ஜுலஸும், ஒரு ஆரஞ்சு கிரஷ்ஷும் வாங்கிக்கொண்டு போனார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—இரண்டு கலரையும் அவனே சாப்பிட்டிருப்பானா ?

கடைக்காரன் :—இருக்காது ஸார்! அவர் கலர் வாங்கிக்கொண்டு போனதற்கு சற்றுமுன்பு போலீஸ் ஸ்டேஷ

னுக்குள் யாரோ ஒருவர் போனார். அவருக்காக ஒன்றும், ஸ்டேஷனுக்குள் இருந்த இன்னும் யாரோ ஒருவருக்கு ஒன்றும் வாங்கியிருப்பார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— ஸ்டேஷனில் ஜெவானைத் தவிர வேறு யாருமில்லையே. ஆகையால் அவன் தனக்காகவும் புதிதாக வந்தவருக்காகவுமே வாங்கியிருக்கவேண்டும்.

கடைக்காரன் :— அவர் முதலில் ஆரஞ்சு கிரஷ் மாத்திரம் வாங்கிக்கொண்டு போனார்; மறுபடியும் வந்து ஒரு லெம்ஜூஸ் வாங்கிக்கொண்டு போனார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—இரண்டு புட்டிகளையும் இப்படி எடு பார்ப்போம்—என்றார். கடைக்காரன் இரண்டு புட்டிகளையும் எடுத்து அவரிடம் காண்பித்தான். உடனே ஸப்-இன்ஸ்பெக்டர் அவைகளைத் தமது கையில் வாங்கிக் கொண்டு, "நான் இந்த புட்டிகளிரண்டையும் எடுத்துக் கொண்டு போய் சிறிது நேரத்தில் கொடுத்தனுப்புகிறேன்— என்றார்.

கடைக்காரன் வியப்புடன், "காலி புட்டிகளை எதற்காக எடுத்துக்கொண்டு போகிறீர்கள்?" என்று வினவினான்.

அதற்கு ஸப்-இன்ஸ்பெக்டர் பதில் எதுவும் கூறாமல் திரும்பவும் ஸ்டேஷனை யடைந்து, அங்கிருந்த மேஜையின் மேல் இரண்டு புட்டிகளையும் வைத்துவிட்டு ஜெவானுக் கருகில் சென்று கூப்பிட்டுப் பார்த்தார். அவன் எழுந்திருக்கவில்லை. ஆகையால், அவர் அவனுடைய தோளின் மேல் கையை வைத்து அசைத்துப் பார்த்தார். ஆனால் அவன் விழித்துக்கொள்ளவில்லை. அவர் அவனை எழுப்பாமல் அவனுடைய சட்டைப்பையில் கைகளை விட்டுப்

பார்த்தார். ஒரு பையிலிருந்து சாவியொன்று அகப்பட்டது. அவர் உடனே அதை எடுத்துக்கொண்டு அருகிலிருந்த அறைக்குள் சென்று அங்கே ஒரு மூலையில் காணப்பட்ட ஒரு பெரிய மரப்பெட்டியை அந்த சாவியை உபயோகப் படுத்தித் திறந்து பெட்டியின் மேல்மூடியை உயரத் தூக்கிப் பிடித்தபடி உள்ளே பார்த்தார்.

என்ன ஆச்சரியம்! ஜெவானுல் உள்ளே வைக்கப்பட்டிருந்த போர்வையும் தலைப்பாகைத் துணியும் காணப்படவில்லை. அவைகளிரண்டும் எப்படியோ மாயமாய் மறைந்து போயிருந்தன. ஆனால் ஏதோ ஒரு காகிதம் நான்காக மடித்து வைக்கப்பட்டிருந்தது தெரிந்தது. அவர் உடனே அதை எடுத்துப் பிரித்துப் பார்த்தார். அதில் அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது :—

போலீஸ் ஸப் - இன்ஸ்பெக்டருக்கு,

நான் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்திருந்தும், என்னை யாரும் பிடித்துக்கொள்ளவில்லை. நீங்கள் போர்வையையும் தலைப்பாகைத் துணியையும் வைத்துக் கொண்டு, 'அந்த ஊரில் செய்த மாதிரி செய்துவிடுவேன்' என்று வீம்புக்காகவாவது உங்களுடைய நண்பர்களிடம் வீரம் பேசிக்கொண்டிருந்த விஷயத்தை ஒரு குருவிஎன்னிடம்தெரிவித்தது. அவைகளிரண்டும்உங்களுக்கு எந்த விதத்திலும் உதவப்போவதில்லையானலும், நான் என்னுடைய விஷயங்களை ஆரம்பத்திலிருந்து முடிவு வரை ஜாக்கிரதையாகவும் ஒழுங்காகவும் செய்ய வேண்டுமென்று முடிவு செய்துகொண்டு அவைகளிரண்டையும் எடுத்துக்கொண்டு போய்விட்டேன். நீங்

கள் அவைகளுக்காக ஜெவானைக் கோபித்துக்கொள்ளா திருக்கும்படி கேட்டுக்கொள்ளும்.

குண்டோதரன்.

என்று எழுதப்பட்டிருந்தது. அவர் உடனே அதைத் தமது சட்டைப்பையில் வைத்துக்கொண்டு பெட்டியை மூடிப் பூட்டிவிட்டு திரும்பவும் ஜெவானுக்கருகில் வந்து, அவனை கவனித்தார். அவன் அப்போதும் தூங்கிக்கொண் டிருப்பவனைப்போல் காணப்பட்டான். உடனே அவர் அருகிலிருந்த டெலிபோன் யந்திரத்தினருகில் சென்று அதன் மூலமாய் யாரையோ கூப்பிட்டுப் பேசிய பிறகு ரிஸீவரைக் கொக்கியில் மாட்டிவிட்டு ஒரு மூலையில் பெரிய பானையில் வைக்கப்பட்டிருந்த தண்ணீரை ஒரு லோட்டா வில் எடுத்துக்கொண்டு வந்து ஒரு துணியில் நனைத்து ஜெவானுடைய முகத்தில் தடவினார். ஜெவான் மெது வாகக் கண்களைத் திறக்கலானான். அவர் அப்போதும் அவ னுடைய முகத்தில் குளிர்ச்சி யூட்டியபடி இருக்க, அவன் நன்றாக விழித்து உட்கார்ந்துகொண்டு ஸப்-இன்ஸ்பெக்டரைக் கண்டு அவர் எப்போது வந்திருப் பார் என்றும், அவர் ஏன் தன்னுடைய முகத்தில் தண் ணீர் ஒற்றிடம் கொடுத்தார் என்றும் நினைத்து வியப்படைந்த வனாய் சரேலென்று எழுந்திருந்தான். உடனே ஸப்-இன்ஸ் பெக்டர், "ஆரஞ்சு கிரஷ் சுகம் எப்படி இருக்கிறது?" என்றார்.

ஜெவான்:— (வியப்புடன் அவருடைய முகத்தைப் பார்த்து) நான் கலர் சாப்பிட்டது எசமானுக்கு எப்படித் தெரிந்தது?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அதுமாத்திர மல்ல. லேம்ஜ ஸ் வாங்கினதும் தெரியும்.

ஜெவான்:— அப்படியானால் ராமநாதன் வந்ததைப் பார்த்துக்கொண்டிருந்தீர்களா? நீங்கள் மோட்டார் சைக்கிளில் புறப்பட்டுப் போனதை நான் பார்த்தேனே!

ஸப்-இன்ஸ்பெக்டர்:— நான் புறப்பட்டுப் போனாலென்ன! எனக்குவிஷயம் தெரியாமல் போய்விடு மென்று நினைத்தாயா? ராமநாதன் ஆரஞ்சுக் கிரஷ்ஷை உனக்குக் கொடுத்துவிட்டு தாம் லெம்ஜஆஸை சாப்பிட்டதும் எனக்குத் தெரியும்.

ஜெவான்:— நீங்கள் புறப்பட்டுப் போனதைப்போல் போக்குக் காட்டிவிட்டு திரும்பி வந்து நின்றுகொண்டு, இங்கே நடந்த விஷயங்களை கவனித்துக்கொண் டிருந்தீர்கள்போ லிருக்கிறது. அதனால்தான் சங்கதியெல்லாம் உங்களுக்குத் தெரிகிறது.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—நான் உன்னிடம் கொடுத்துப் பெட்டியில் வைக்கச்சொன்ன வஸ்துக்களைப்பற்றி ராமநாதனிடம் எதற்காகப் பேசினாய்?

ஜெவான்:—நானாகப் பேசவில்லை. அவராகத்தான் பேசினார்—என்று கூறிவிட்டு நடந்த விஷயங்களை அவரிடம் கூறினான்.

ஸப்-இன்ஸ்பெக்டர் உடனே, "நீ எழுதிக்கொண் டிருந்தபோதே தூங்கியிருக்கிறாய். அப்போது இங்கே யாரோ வந்து, உன்னுடைய சட்டைப்பையிலிருக்கும் சாவியை யெடுத்துப் பெட்டியைத் திறந்து, போர்வையையும் துணியையும் எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள். நீ இவ்வளவு அஜாக்கிரதைப் பேர்வழி யென்பது முன்பே தெரிந்திருந்தால், நானே பெட்டியின் சாவியை வைத்துக் கொண்டிருப்பேன்.

ஜேவான் :—நான் இந்தயாதிரி எப்போதும் முன்னிர வில் தூங்கினதே இல்லை; இன்றைய தினம் என்ன காரணத் தினலோ என்னையு மறியாமல் தூங்கிவிட்டேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— இது முதல் தடவையாகையால் நான் எச்சரிக்கை செய்வதோடு உன்னை விட்டுவிடுகிறேன். மறுபடியும் இப்படி ஏதாவது நடக்குமானல் நீ பாடுபட்டு சம்பாதித்த இந்த உத்தியோகம் போய்விடும்.

ஜேவான் :- (பயந்து) யார் எடுத்துக்கொண்டுபோ யிருக்கிருர்கள் என்பதை நான் கண்டுபிடித்து சாமான்களைக் கொண்டுவந்து சேர்க்கிறேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:— அது நடவாத காரியம். சாமான் களை எடுத்துக்கொண்டு போனவனைப் பிடிக்க உன்னல் முடி யாது. ஆகையால் நீ ஒரு காரியம் செய். இப்போது இங்கே நடந்த விஷயங்களையெல்லாம் உன்னுடைய டைரி யில் எழுதி வைத்துக்கொள். அது பின்னல் ஒரு சமயத் தில் உதவலாம்.

ஜேவான் :—(தன்னை ஸப்-இன்ஸ்பெக்டர் அதோடு விட்டுவிட்டதை யறிந்து தைரியமடைந்தவனுய்) அப்படியே செய்கிறேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— இதோ உன்னிடமிருந்த சாவி. இதை ஜாக்கிரதையாக வைத்துக்கொள். இனிமேல் நான் இங்கே இல்லாத சமயத்தில் ராமநாதன் வந்தால், அவ ருடன் நீ பேசவேண்டாம். கேஸ் விஷயங்களைப்பற்றி அவ ரிடம் நீ எதையும் சொல்லவேண்டாம்— என்ருர்.

ஜேவான் ஏதோ அலுவலை கவனிக்கலானன். சிறிது நேரத்திற்குப் பிறகு அங்கே ஒரு மனிதர் வந்துசேர்ந்தார். ஸப்-இன்ஸ்பெக்டரும் அவரும் சிறிதுநேரம் பேசிக்கொண்

டிருக்க, அந்த மனிதர் இரண்டு புட்டிகளையும் தம் மோடு எடுத்துக்கொண்டு போய்விட்டார். ஸப்-இன்ஸ்பெக்டர் தாம் புட்டிகளை விலைக்கு எடுத்துக்கொள்வதாய்க் கூறி கடைக்காரனுக்கு அவற்றின் கிரயத்தைக் கொடுத்தபிறகு நேராகத் தமது வீட்டை யடைந்தார்.

மறுநாள் காலை சுமார் 8 மணிக்கு அவர் ராமநாதனுடைய வீட்டை யடைந்தபோது ராமநாதன் காப்பி சாப்பிட்டுக்கொண் டிருந்தார். அவருக் கெதிரிலிருந்த மேஜையின்மேல் ஏராளமான காகிதங்கள் இறைந்து கிடந்தன. அவர் ஒரு கையில் காப்பிப் பாத்திரத்தை வைத்துக் கொண்டு காப்பி சாப்பிட்டபடியே இன்னொரு கையால் பென்சிலால் ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். ஸப்-இன்ஸ்பெக்டரைக் கண்டதும் அவர், "நான் நேற்று நடந்த விஷயத்தைப்பற்றி ஒரு வித முடிவிற்கு வந்துவிட்டேன். நான் இரவெல்லாம் தூங்கவே இல்லை. நீங்கள் காப்பி சாப்பிடுகிறீர்களா?" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர், "பரவாயில்லை. நீங்கள் சாப்பிடுங்கள். நான் காப்பி சாப்பிட்டுவிட்டுத்தான் வீட்டிலிருந்து புறப்பட்டேன். ஏதோ முடிவிற்கு வந்துவிட்டதாகச் சொன்னீர்களே. என்ன முடிவிற்கு வந்தீர்கள்?" என்றார்.

ராமநாதன்:—வேறொன்றுமில்லை. அந்த வீட்டின் கதவு உட்புறத்தில் தாளிடப்பட்டிருந்ததிலிருந்து அவன் தற்கொலை செய்துகொண் டிருக்கவேண்டுமென்பது நன்றாக விளங்குகிறது. சரீரம் என்ன நிலைமையி லிருந்தது என்பதை நீங்கள் தெரிவித்தீர்கள். அதிலிருந்தும், சுவரில் குண்டுகளா லேற்பட்ட இரண்டு துளைகளிலிருந்தும், குண்டு

கள் எப்படி சபேசன்மேல் பாய்ந்திருக்க வேண்டுமென்பதும் நன்ருய் விளங்குகிறது. அவன் சுமார் 5½ அடி உடரமுள்ளவன். இதோ இந்தக் காகிதத்தைப் பாருங்கள். இதில் சபேசன் இருந்த அறையின் வடிவத்தை ஓர் அடிக்கு ஓர் அங்குலமாக வைத்து எழுதியிருக்கிறேன்—என்று கூறிவிட்டு பாதி காப்பியோடிருந்த பாத்திரத்தை மேஜையின் மேல் வைத்துவிட்டு பென்சிலால் எதிரிலிருந்த ஒரு காகிதத்தில் ஓர் இடத்தைத் தொட்டுக் காட்டி, "இந்த இடத்தில்தான் சபேசன் விழுந்திருந்தான். அவனுடைய தலைப் பக்கத்திலிருந்த சுவரில் 3 அடி உயரத்தில் இரண்டு துளைகளும் அடுத்தடுத்து இருப்பதால் சபேசன் நின்றுகொண்டிருந்திருக்கவேண்டும். அந்த அறையில் எதிர்ப்புறத்திலுள்ள சுவரின் பக்கம் உட்கார்ந்திருந்த யாரோ ஒரு மனிதர் சுட்டிருக்கவேண்டும். அல்லது, நான் ஏற்கனவே தெரிவித்தபடி அது தற்கொலையா யிருக்குமானல் அவன் தன் வயிற்றிற்குக் குறிபார்த்து சுட்டுக்கொண் டிருக்கலாம். அப்போது குண்டு முதுகின் வழியாக ஊடுருவிச் சென்று பின்னுலுள்ள சுவரில் பதிந்திருக்கலாம். அவன் விழுந்திருக்கும் நிலைமையிலிருந்து, அவன் உட்கார்ந்துகொண்டு சுட்டுக்கொள்ளவில்லை யென்பது நன்ருகவும் தெளிவாகவும் விளங்குகிறது.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—சாமர்த்தியமாகத்தான் கண்டு பிடித்திருக்கிறீர்கள். ஆனல் நீங்கள் ஒரு முக்கியமான விஷயத்தைத் தெரிந்துகொள்ளாமலே மேன்மேலும் அந்தரக் கோட்டை கட்டிக்கொண்டு போவதுதான் வேடிக்கையா யிருக்கிறது.

ராமநாதன் :—அப்படியா! நான் கற்றுக்குட்டிதானே! எந்த விஷயத்தை நான் கவனிக்கவில்லை ?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—சபேசனுக்கு எந்த இடத்தில் துப்பாக்கிக் காயங்கள் பட்டன வென்பது உங்களுக்குத் தெரியாதே!

ராமநாதன்:—ஆம். வாஸ்தவந்தான். நீங்கள் அதைச் சொல்லுங்கள். நான் அது கொலையா தற்கொலையா என் பதை உடனே சொல்லிவிடுகிறேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:— அவனுக்குக் காயங்களிரண் டும் கால்களில் பட்டிருக்கின்றன. அவன் ஸ்மரணையற்றுக் கிடந்தான். அவன் உண்மையில் இறக்கவில்லை.

ராமநாதன்:—அவன் உண்மையில் இறக்கவில்லையா? அதனால்தான் வாக்குமூலம் கொடுக்க நீங்கள் மறுத்தீர்களா?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அதற்கும், நான் வாக்குமூலம் கொடுக்க மறுத்ததற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. இங்கே சில விஷயங்களை அவசரமாக கவனிக்கவேண்டி யிருந்தபடி யால் அங்கே அநாவசியமாய் நிற்க விரும்பவில்லை. அதோடு அந்த ஸப்-இன்ஸ்பெக்டருக்கும் எனக்கும் ஏற்கனவே கொஞ்சம் மனவருத்த மிருக்கிறது. அவனை அழ வைப்ப தற்காக நான் அப்படிச் செய்தேன்.

ராமநாதன்:—(புன்சிரிப்புடன்) நீங்கள் சபேசன் விஷய மாய் எதையோ தெரிந்துகொண் டிருப்பதால்தான், வாக்கு மூலம் கொடுக்க மறுக்கிறீர்களென்று நான் நினைத்தேன். இப்போதுதான் விஷயம் விளங்குகிறது. சபேசன் எதற்காக எப்படி மறைந்தான்?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—அதைப்பற்றி உங்கள் ஆலோ சனையைக் கேட்கவே நான் இங்கே வந்தேன். உங்களுக்கு என்னைவிட எவ்வளவோ அதிக அநுபவமிருக்கும். இதில்

உங்களுடைய அபிப்பிராயம் என்ன? அவன் எப்படி மறைந்திருப்பான்?

ராமநாதன்:—இந்தக் கேள்வியை சுலபமாகக் கேட்கலாமே ஒழிய இதற்கு பதில் சொல்வது அவ்வளவு சுலபமான காரியமல்ல. நிதானமாக ஆலோசனை செய்யவேண்டும். ஆற அமர அதை ஆராயவேண்டும்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—என்னுடைய அபிப்பிராயமென்னவென்றால், அவனுக்கு ஸ்மரணை தப்பிப் போயிருந்த சமயத்தில் நாங்கள் வீட்டின் பின்புறத்தில் பேசிக்கொண்டிருந்த போது, அவன் சுயநினைவை யடைந்து மெதுவாக எழுந்திருந்து அறையை விட்டு வெளியில் போயிருப்பான். அப்போது பொன்னுசாமி அங்கே இல்லாமல் ஆற்றங்கரைக்குப் போயிருப்பான். தெருவின் கதவு திறந்து கிடந்ததை சபேசன் பார்த்திருப்பான். தற்கொலை செய்துகொள்ள முயன்ற குற்றத்திற்காகத் தன்னைப் போலீஸார் பிடித்துக் கொள்ளுவார்களென்று அஞ்சி அவன் வெளியில் போயிருக்க வேண்டும்—என்றார்.

அப்போது எதிர்ப்பக்கத்துத் தோப்பிலிருந்து யாரோ தெலுங்குப் பாட்டொன்றைப் பாடிய ஓசை உண்டாகவே, அதைக் கேட்டவுடன் ராமநாதன் சடக்கென்று எழுந்திருந்தார். ஸப்-இன்ஸ்பெக்டர், "பாட்டைக் கேட்டவுடன் எழுந்துவிட்டீர்களே! பாட்டைப் பாடும் மனிதனைப் பிடிக்க நான் எத்தனையோ யுக்திகள் செய்து பார்க்கிறேன். அவன் அகப்படவில்லையே?" என்றார்.

உடனே ராமநாதன், "அந்தக் குரல் எனக்கும் பழக்கமான யாரோ ஒருவருடைய குரல்போ லிருக்கிறது. உங்களுக்குத் தெலுங்கு தெரியுமா? அவன் என்ன பாட்டுப் பாடுகிறான்?" என்றார்.

அப்போது பாட்டு நின்றது ஸப்-இன்ஸ்பெக்டர், "எனக்குத் தெலுங்கு தெரியாது" அவன் பாடுவது பாட்டென்று தெரிகிறதே ஒழிய அதன் அர்த்த மின்னதென்பது எனக்கு விளங்கவில்லை. இந்தக் குரல் எனக்கும் அதிகப் பழக்கமான குரலாகத்தான் இருக்கிறது. நான்கு வருஷங்களுக்கு முன்பு—" என்று கூறி மேலே ஏதோ சொல்வதற்குள் ராமநாதன், "நான்கு வருஷங்களுக்கு முன்பு என்ன நடந்தது? நான் அந்தப் பைத்தியக்காரனைத் தேடிவிட்டு வருகிறேன்" என்றார்.

அதே சமயத்தில், எதிரிலிருந்த தோப்பில் ஓர் ஊமைக் கோட்டான் கத்திய ஓசை கேட்டது. ஸப்-இன்ஸ்பெக்டர் உடனே எழுந்திருந்து, "வாருங்கள். நாம் மறுபடி போய்ப் பார்ப்போம்" என்றார்.

ராமநாதன் கையில் தடியொன்றை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். ஸப்-இன்ஸ்பெக்டர் புன்சிரிப்புடன், "நீங்கள் தடியும் கையுமாய்ப் புறப்பட்டு வருவதிலிருந்து ஏதோ பெரிய யுத்தத்திற்குப் புறப்படுகிற மாதிரியிருக்கிறதே" என்றார்.

அதற்கு ராமநாதன் பதிலெதுவும் கூறவில்லை. தெருவை யடைந்தவுடன் ஸப்-இன்ஸ்பெக்டர், "பைத்தியக்காரனைத் தேடித் தேடி எனக்கும் அலுத்துப் போய்விட்டது; நான் இங்கேயே நின்றுகொண் டிருக்கிறேன். நீங்கள் போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள். திரும்பி வரும்போது ஆளைக்கொண்டு வரவேண்டும்" என்றார்.

ராமநாதன் உடனே வேகமாய்த் தோப்பிற்குள் போய்விட்டார். அவர் தோப்பு முழுதையும் சுற்றிப் பார்த்து யாரையும் காணமையால் ரஸ்தாவிற்குத் திரும்பி

வந்தார். அப்போது ஸப்-இன்ஸ்பெக்டரும் பொன்னு சாமியும் ரஸ்தாவில் பேசிக்கொண் டிருந்ததைக் கண்டு, ராமநாதன் அவர்களுக்கருகில் வந்து பொன்னுசாமியை நோக்கி, "ஏனப்பா! எப்போது ஊரிலிருந்து வந்தாய்?" என்று வினவினர்.

பொன்னுசாமி:—நான் வண்டியில் வர என் கையில் காசில்லை. அதனல் நேற்றிரவு சுமார் 10 மணிக்கு அந்த ஊரிலிருந்து புறப்பட்டேன்; இரவெல்லாம் நடந்து இப் போது தான் இந்த ஊருக்கு வந்து சேர்ந்தேன். நான் வீட்டிற்குப் போய் சாப்பிட்டு விட்டு ஸ்டேஷனுக்குப் போகவேண்டும்.

ராமநாதன்:—அடாடா! இரவெல்லாமா நடந்து வந் தாய்! என்னிடம் கேட்டிருந்தால் நான் நேற்று அங்கிருந்து புறப்பட்ட போதே ஏதாவது பணம் கொடுத்திருப்பேனே!

பொன்னுசாமி:— அப்படி யாரிடமும் கை நீட்டிப் பணம் வாங்கும் சுபாவம் என்னிடமில்லை. அதனல் நான் உங்களிடம் கேட்கவில்லை. (ஸப்-இன்ஸ்பெக்டரை நோக்கி) நான் வீட்டிற்குப் போய்விட்டு வருகிறேன்— என்று கூறியபடி புறப்பட யத்தனித்தான்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—சரி; நீ போ—என்றார். தலைமை ஜெவான் உடனே புறப்பட்டுப் போய்விட்டான். ஸப்-இன்ஸ்பெக்டர், "நான் வருகிறேன்" என்று கூறிவிட்டு ராமநாதனிடம் விடைபெற்றுக் கொண்டு இன்னொரு திக் கில் போய்விட்டார். ராமநாதன் தன்னுடைய வீட்டிற்குள் சென்று மறைந்ததையும், ஸப்-இன்ஸ்பெக்டர் புறப்பட்டுப் போய்விட்டதையும் தூரத்தில் ஒரு வீட்டின் முன்புறத்தி லிருந்தபடியே மறைந்து பார்த்துக்கொண் டிருந்த ஹெட்

கான்ஸ்டேபில் பொன்னுசாமி உடனே வேகமாய்த் திரும்பி வந்து, சோமு முதலியாருடைய வீட்டிற்குள் நுழைந்து கொண்டான்.

சோமு முதலியார் அப்போது வீட்டிற்குள் கூடத்தி லிருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். அருகிலிருந்த ஒரு விசுப்பலகையின் மேல் பொன்னுசாமி உட்கார்ந்து கொண்டு புன் சிரிப் புடன், "நான் இங்கே வந்துகொண் டிருந்தேன். அடுத்த வீட்டின் முன் புறத்தில் ஸப்-இன்ஸ்பெக்டர் நின்றுகொண் டிருந்தான். நான் ஊரிலிருந்து நேற்றிரவு புறப்பட்டு இர வெல்லாம் நடந்து சற்று முன்புதான் இந்த ஊருக்கு வந்த தாய் அவுட்டா விட்டேன். அந்த முட்டாள் அப்படியே நம்பினன். அதை நினைக்க நினைக்க எனக்கு சிரிப்புண்டா கிறது. அடுத்த வீட்டிலிருக்கும் ராமநாதனும் அநுதாப மாகப் பேசினர்" என்று கூறிச் சிரித்தான்.

சோமு முதலியார் :—நீ புளுகுவதில் கெட்டிக்காரனு யிருக்கிருயே! ஏன் அப்படிப் படுமோசமாய்ப் பொய் சொன் ஞய் ?

பொன்னுசாமி :— எனக்கும் உங்களுக்கும் சம்பந்த மில்லாததைப் போல் காட்டிக் கொள்ளுவதற்கும், இந்தத் தெருவில் வந்ததற்குக் காரணம் காட்டவும், நிஜமென்று நம்பும்படியாய்ப் புளுகினேன்" என்ருன்.

அவ்வாறு அவர்கள் பேசிக்கொண் டிருந்த சமயத் தில் ஸப்-இன்ஸ்பெக்டர் ஆஸ்பத்திரியை நோக்கிச் சென்று ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு அங்கே போய்ச் சேர்ந்தார். அங்கிருந்த டாக்டரை அவசரமாகப் பார்க்கவேண்டுமென்று அவர் செய்தி சொல்லியனுப்பவே, டாக்டர் அவரை உள்ளே

அழைத்து வரும்படி காவல்காரனுக்கு உத்தரவிட்டார். அவர் உள்ளே போய்ச் சேர்ந்து டாக்டருடன் சிறிது நேரம் பேசிக்கொண் டிருந்த பிறகு மூன்று நோயாளிகளைப் பார்த்துவிட்டு வெளியில் வந்தார். வந்தவர் ஆஸ்பத்திரிக் கட்டிடத்தை விட்டு, வெளியில் வந்த சமயத்தில் உள்ளே இருந்து யாரோ ஒருவர் தெலுங்கு பாஷையில் ஒரு பாட்டைப் பாடிய குரலோசை கேட்கவே, ஸப்-இன்ஸ்பெக்டருடைய முகத்தில் புன்னகை தோன்றியது. அவர் சிறிது நேரத்திற்குப் பிறகு போலீஸ் ஸ்டேஷனை யடைந்து தமது வேலைகளை கவனிக்கலானார்.

அன்றையதினம் மாலை 4-மணி சமயமாயிற்று. அப்போது அவருக்கெதிரி லிருந்த டெலிபோன் யந்திரத்தின் மணி கண கணவென்று ஒலிக்கவே, அவர் ரிஸீவரைக் காதில் வைத்துக்கொண்டு, "ஹலோ யாரது?" என்று வினவினார். மறு பக்கத்தி லிருந்தவர், "நான் ராமநாதன்; நான் சபேசனை என்ன காரியமாக அனுப்பினேனோ அந்தக் காரியம் அவன் காணாமல் போனதனால் தவக்கப்பட்டுப் போய்விட்டது. அந்தக் காரியத்தை கவனிக்கவும், அவன் எங்கே போனானென்பதைக் கண்டுபிடிக்கவும் நான்புறப்பட்டு ஊருக்குப் போகிறேன். நீங்களும் வருகிறீர்களா?" என்று கூறவே, ஸப்-இன்ஸ்பெக்டர், "நான் இப்போது ஒரு முக்கியமான காரியத்தை கவனித்துக்கொண் டிருக்கிறேன். நாளையதினம் காலையில் நான் உங்களுடைய வீட்டிற்கு வருகிறேன். அதன் பிறகு நாமிருவரும் புறப்பட்டுப் போவோம்" என்றார்.

அதற்கு ராமநாதன், "சபேசன் காணாமல் போனதைக் கண்டுபிடிக்காமல் விட்டுவிடுவது பிசகல்லவா! அது உங்களுக்கு முக்கியமான காரியமாய்ப் படவில்லையா?" என்றார்.

சப்-இன்ஸ்பெக்டர், "ஆம். அது முக்கியமான காரியந்தான். அதைத்தான் நான் இப்போது செய்துகொண்டிருக்கிறேன். ஓர் இடத்திற்கு நான் ஒருவனை அனுப்பியிருக்கிறேன். அவன் திரும்பி வந்து என்ன மறுமொழி சொல்லுகிறானென்பதை யறியவேண்டும். அநேகமாய் அவன் சபேசன் இருக்கு மிடத்தைக் கண்டுபிடித்துக் கொண்டு வந்துவிடுவான். அப்படிச் செய்ய முடியாமல் போகுமானால், நான் நாளைய தினம் உங்களோடுவருகிறேன்" என்றார்.

ராமநாதன்:-ஆளை அனுப்பி யிருக்கிறேன் என்று நீங்கள் சொல்வதிலிருந்தே சபேசன் இன்ன இடத்தில்தானிருக்கிறான் என்று ஏற்கனவே தீர்மானித்து விட்டீர்கள்போலிருக்கிறதே!

ஸப்-இன்ஸ்பெக்டர்:— அது இன்னும் தீர்மானமாகத் தெரியவில்லையானாலும், நான் சுமாராக ஒருவித முடிவை யடைந்திருக்கிறேன்.

ராமநாதன்:— என்ன முடிவை யடைந்திருக்கிறீர்கள்?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—காரியம் ஜெயமாவதற்கு முன்பே அதைச் சொல்ல நான் விரும்பவில்லை. ஆகையால் அது பலிக்கிறதா இல்லையா என்பதைப் பார்த்த பிறகே நான் சொல்லவேண்டும்.

ராமநாதன்:—நீங்கள் இன்ன விதமாய் ஆராய்ச்சி செய்கிறீர்களென்பதற்கு கொஞ்சம் கோடி காட்டினால், அதுவே போதும்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:— நாளைய தினம் காலை 8-மணி வரையில் பொறுத்துக்கொள்ளுங்கள். நான் உங்களுடைய

வீட்டிற்கு வந்துசேருகிறேன். வரும்போது உங்களுக்குத் தெரிந்த வேறொருவரையும் நான் அழைத்துவருகிறேன்.

ராமநாதன்:-யாரை? பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரையா?

ஸப்-இன்ஸ்பெக்டர் :— இல்லை. அவர் இன்னாரென்பதை நீங்கள் எவ்வளவுதான் யூகித்தாலும், உங்களால் அறிய முடியாது—என்று கூறி ரிஸீவரைக் கீழே வைத்துவிட்டார். ராமநாதன் அவரை மறுபடியும் கூப்பிட்டுப் பார்த்தும், அதற்கு அவர் பதில் கூறவில்லை. சுமார் ஐந்து நிமிஷங்கள் சென்றன. அவர் அன்றைய காரியங்களைச் செய்துகொண்டு ஸ்டேஷனை விட்டு வெளிப்பட்டு பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரின் வீட்டை யடைந்து அந்த வீட்டிற்குள் நுழைந்தார்.

வீட்டிற்குள் பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரும், ராமநாதனும் பேசிக்கொண் டிருந்ததைக் கண்டார். உடனே ராமநாதன் புன்சிரிப்புடன் ஸப்-இன்ஸ்பெக்டரை நோக்கி, "டெலிபோன் மூலமாய் நான் கூப்பிட்டபோது நீங்கள் ஏன் என்னோடு பேசவில்லை?" என்று வினவினர்.

ஸப்-இன்ஸ்பெக்டர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, "அந்தக் கேள்விக்கு பதில் சொல்ல எனக்கு விருப்பமில்லை. நாளைய தினம் காலை 8-மணி வரையில் பொறுத்துக்கொண் டிருங்கள். அந்தக் கேள்விக்கு பதில் தானகவே தெரிந்துபோய்விடும்" என்ருர்.

ராமநாதன் :—நீங்கள் பதில் சொல்லாவிட்டால் பரவாயில்லை. குண்டோதரனைப்பற்றி என்னென்ன துப்புகள் கண்டுபிடித்திருக்கிறீர்கள் ?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—நீங்கள் எவ்வளவு தூரம் கண்டு பிடித்திருக்கிறீர்கள் ?

ராமநாதன் :—உங்களைப்போல நான் எதையும் மறைக்க விரும்புகிறவனல்ல. அதை நான் சொல்லத் தயாரா யிருக்கிறேன். குண்டோதரன் என்பவன் பெயருக்கு மாத்திரம் குண்டோதரனு யிருக்கவேண்டுமே யன்றி உண்மையில் அவன் சாதாரண மனிதனுகத்தா னிருக்கவேண்டும். அவன் சபேசனைப்பற்றிய முக்கியமான விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறுன். அதனுல் அவனை பயப்படுத்தி வந்தான்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— அதுவரையில் அப்படியே நிறுத்திக்கொள்ளுங்கள். அந்த விஷயத்தில்தான் என்னுடைய அபிப்பிராயம் வேறு விதமா யிருக்கிறது.

ராமநாதன் :— (ஸப் - இன்ஸ்பெக்டரின் முகத்தைப் பார்த்து) அப்படியா! அதையும்தான் சொல்லுங்களேன்; கேட்போம்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— குண்டோதரனுடைய விஷயமெதையோ சபேசன் தெரிந்துகொண் டிருக்கவேண்டும். அதனுல்தான் அவனை குண்டோதரன் பயப்படுத்தி யிருக்க வேண்டும்; அல்லது, சபேசன் இருப்பது ஏதோ ஒரு விதத்தில் குண்டோதரனுக்கு இடைஞ்சலாய் இருந்திருக்க வேண்டும்.

ராமநாதன் :— அந்த வகையில் அவர்களிருவருக்கும் விரோத மிருக்கலா மென்கிறீர்களா?

ஸப்-இன்ஸ்பெக்டர் :— நான் அம்மாதிரி சொல்லவில்லையே!

ராமநாதன் :— (வியப்புடன்) அப்படியானுல் உங்களுடைய அபிப்பிராயம் இன்னதுதா னென்பது எனக்கு விளங்கவில்லையே!

ஸப் - இன்ஸ்பெக்டர் :— குண்டோதரன் சபேசனை விரோதியாக எண்ணிக்கொண் டிருக்கவேண்டுமே யொழிய சபேசன் குண்டோதரனை விரோதியாக நினைக்கவில்லை.

ராமநாதன்:—(சிறிது நேரம் மௌனமாயிருந்த பிறகு) எதனால் அப்படிச் சொல்லுகிறீர்கள் ?

ஸப்-இன்ஸ்பெக்டர் :— எனக்குக் கிடைத்திருக்கும் உளவுகளைக் கொண்டு சொல்லுகிறேன்.

ராமநாதன் :—விஷயமெதையும் வெளியிடாமல் நீங்கள் பூடகமாகவே பேசுகிறீர்களே !

ஸப்-இன்ஸ்பெக்டர் :—நான்தான் நாளையதினம் காலையில் 8 மணி வரையில் பொறுத்திருக்கும்படி சொன்னேனே !

ராமநாதன் :—அவைகளை என்னிடம் தெரிவிக்க ஏன் பயப்படுகிறீர்கள் ? அவைகளை வைத்துக்கொண்டு நான் மேலே ஆராய்ச்சி செய்துவிடுவேன் என்று அஞ்சுகிறீர்களா?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—(புன்சிரிப்புடன்) ஆம். அதனால் தான் உங்களிடம் உண்மையைச் சொல்ல மறுக்கிறேன்.

ராமநாதன் :—சரி. அப்படியானால் அதைப்பற்றிப் பேசுவதை விட்டுவிடுவோம். இந்த வீட்டில் குண்டோதரனால் கண்ணில் குத்தப்பட்ட கிழவியின் நிலைமை எப்படியிருக்கிறது? கண் எப்படியிருக்கிறது? பார்வை போனதுதானே ?

ஸப்-இன்ஸ்பெக்டர் :— அதற்கு எவ்வித சந்தேகமும் கிடையாது.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—நான் டாக்டரைக் கண்டு கேட்டதற்கு, ஆபரேஷன் செய்தால் அநேகமாய்ப் பார்வை உண்டாய்விடுமென்று சொன்னாரே !

ஸப்-இன்ஸ்பெக்டர்:— அவர் என்னிடம்கூடத்தான் அப்படிச் சொன்னார். இப்போது உடம்பு பலஹீனமாயிருப்பதால், இன்னும் ஒரு மாதம் பொறுத்துதான் ஆபரேஷன் செய்யவேண்டுமென்றார்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—அதை என்னிடத்தில் கூடத்தான் டாக்டர் சொன்னார். ஆனால் கண்ணின் பார்வை போய்விடுமென்றே நான் நினைக்கிறேன்.

ராமநாதன்:— பார்வை போய்விடுமானால், அவளிடமிருந்து குண்டோதரன் யாரென்பதை யறிய முடியாமல் போய்விடு மல்லவா?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—ஆம். அதுதான் எனக்கும் கவலையா யிருக்கிறது. (பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரை நோக்கி) அந்தக் கிழவி உங்களுக்கு என்ன ஆகவேண்டும்?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—அந்த அம்மாள் எனக்கு பந்துவல்ல. இந்த வீடு அந்த அம்மாளுக்குச் சொந்தமானது. நான் இங்கே குடிக்கூலிக்கு இருக்கிறேன். அந்த அம்மாளே எனக்கு சமையல் செய்து போட்டுக்கொண்டிருந்தாள். அதற்கும் நான் தனியாகப் பணம் கொடுத்து வந்தேன்.

ராமநாதன்:—குண்டோதரனுக்கும், அந்தக் கிழவிக்கும் என்ன சம்பந்தமென்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லையே?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர்:—அதைக் கண்டுபிடிப்பதற்கு எந்த யுக்தியும் தோன்றவில்லை.

ராமநாதன்:—அதுதான் பெருத்த விநோதமா யிருக்கிறது. அந்த ரகசியம் ஒருவருக்கும் தெரியாமல் மறைந்துவிட வேண்டியதுதான்போ லிருக்கிறது.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—நாமொன்று நினைத்தால் தெய்வ மொன்று நினைக்குமென்று பழமொழி சொல்லுவார்கள். அதுபோல குண்டோதரன் என்னென்னவோ திட்டங்கள் போட்டுக்கொண்டே போனாலும், எப்படியும் அவன் ஒரு நாளாவது தவறுவான்.

ராமநாதன் :—பழமொழியை தூரக் கட்டிவையுங்கள். அநுபவத்தில் அந்தப் பழமொழி பலிக்குமா என்பதுதான் எனக்கு சந்தேகமா யிருக்கிறது.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—நானும் அதைத்தான் சொல்லு கிறேன். அநுபவத்தில் அது பலிக்கிறதாவென்று பார்க்க வேண்டும். பழமொழி இருக்கட்டும். உங்கள் வேலைக் காரியை ஊருக்கனுப்பிவிட்டீர்களா ?

ராமநாதன் :—(சற்று மௌனமாயிருந்தபிறகு) நேற்று காலையிலேயே அவளை நான் ஊருக்கனுப்பிவிட்டேன். அவள் இந்நேரம் தன்னுடைய ஊரில் இருப்பாள்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—அவள் ஊருக்குப் போய்ச் சேர்ந்திருப்பா ளென்பது உங்களுக்கு எப்படி தெரியும் ? நீங்களே அவளுடன்கூட ரயில் ஸ்டேஷன் வரையிலும் போய் ரயிலில் ஏற்றிவிட்டு வந்தீர்களா ?

ராமநாதன் :—ஆம்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—உங்களுக்கு வேறே வேலைக்காரி வேண்டுமானால் நான் அனுப்புகிறேன் ; வைத்துக் கொள்ளு கிறீர்களா ?

ராமநாதன் :—இப்போது வேலைக்காரி எவளும் வேண் டியதில்லை. இன்னும் நான்கு தினங்கள் போனவுடன் அனுப்புவீர்களானால் நான் வைத்துக்கொள்ளுகிறேன். நான்

வருகிறேன்—என்று கூறிவிட்டு நாற்காலியை விட்டு எழுந்திருந்தார். எழுந்தவர் அடுத்த நிமிஷம் போய்விட்டார்.

அவர் புறப்பட்டுப் போன பிறகு இரண்டு மூன்று நிமிஷங்கள் வரையில் பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரும், ஸப்-இன்ஸ்பெக்டரும் மௌனமாயிருந்தனர். ஆனாலும், அதன் பிறகு பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் ஸப்-இன்ஸ்பெக்டரை நோக்கி, "என்ன செய்தி? என்னுடைய வீட்டிற்கு அதிகமாய் நீங்கள் வருவதே கிடையாதே! இப்போது வந்திருப்பதிலிருந்து ஏதோ விசேஷமிருக்கவேண்டுமென்பது நன்றாக விளங்குகிறது. அப்படித்தானே?" என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— உங்களிடம் சில கேள்விகள் கேட்க வேண்டும்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—கேளுங்களேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர் : உங்களுக்கு ஒரு சொந்த வீடு இருக்கும்போது நீங்கள் அதை வாடகைக்கு விட்டு விட்டு, குடிக்கூலிக்கு வேறோர் இடத்தில் இருக்கவேண்டியகாரணமென்ன?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :— அது பெரிய வீடு; நான் ஏகாங்கி ; ஆகையால் அதை வாடகைக்கு விட்டிருக்கிறேன்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—யாருக்கு விட்டிருக்கிறீர்கள்?

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—ராமசாமி பிள்ளை யென்னும் ஒருவருக்கு.

ஸப்-இன்ஸ்பெக்டர் :— இதையெல்லாம் நான் என் கேட்கிறேன் என்று நீங்கள் எண்ணலாம். நாளைய தினம் காலையில் 8-மணிக்கு நீங்கள் ஒரு காரியம் செய்யுங்கள்.

ராமநாதனுடைய வீட்டிற்கு வந்துசேருங்கள். அப்போது விஷயம் உங்களுக்கு விளங்கும். நான் வருகிறேன்—என்று கூறிவிட்டுப் புறப்பட்டு வெளியில் போய்விட்டார்.

அது நிற்க, பிராசிகூடிங் இன்ஸ்பெக்டாது வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்ற ராமநாதன் சிறிது நேரத்திற்குப் பிறகு தமது வீட்டை யடைந்து அதன் முன்புறத்திற்குப் போனபோது, அவருடைய பார்வை தற்செயலாய் அடுத்த வீட்டின்மேல் சென்றது. அங்கே காணப்பட்ட இரண்டு மனிதர்களை அவர் கவனித்து வியப்புடன் ஜன்னலருகில் வேகமாகச் சென்றார். ஏனெனில் உட்புறத்தில் ஹெட்கான்ஸ்டேபிள் பொன்னுசாமி பிள்ளையும் சோமுமுதலியாரு மிருந்ததை அவர் பார்த்தார். அவரைக் கண்டதும் உள்ளேயிருந்த பொன்னுசாமி, "வாருங்கள்; என்ன விசேஷம்? சப்-இன்ஸ்பெக்டர் என்ன சொல்லுகிறார்?" என்றான்.

ராமநாதன்:—அவர் சொல்வதற்கு என்ன இருக்கிறது. சப்-இன்ஸ்பெக்டர் இன்றையதினம் நடந்து கொண்டதை கவனிக்க எனக்கே கவலையா யிருக்கிறது.

பொன்னுசாமி:— அப்படியானால் உங்களுடைய யோசனை யென்ன?

ராமநாதன்:—நாளையதினம் காலையில் புறப்பட வண்டியைத் தயார்ப் படுத்தப் போகிறேன்—என்றார். அதோடு அவர்களுடைய சம்பாஷணை நின்றுபோய்விட்டது.

ராமநாதன் தமது வீட்டை யடைந்து அன்றைய தின மிரவெல்லாம் பல திட்டங்கள் போட்டபடி யிருந்தார். மறுநாள் காலையில் 8-மணிக்குத் தமது மோட்டாரோட்டியைக் கூப்பிட்டு, சிறிது நேரத்தில் வண்டி புறப்பட ஆயத்

தமா யிருக்கவேண்டு மென்று உத்தரவிட்டார். வண்டியோட்டி வெளியில் சென்ற சமயத்தில், ஸப்-இன்ஸ்பெக்டரும் பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரும் அங்கே வந்து சேர்ந்தனர். உடனே ராமநாதன் புன்னகை தவழ்ந்த முகத்துடன் அவர்களை வரவேற்று நாற்காலிகளில் உட்காரச் சொன்னார்.

அத்தியாயம்—௫

கெட்டிக்காரன் புரட்டுக்கு எட்டுநாள் வாய்தா

உடனே அவர்களிருவரும் நாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டனர். அவர்களுக்குப் பலகாரங்கள் தயார் செய்து வைத்திருப்பதாயும், அவைகளை சாப்பிடும்படியும் மிஸ்டர் ராமநாதன் கூறினார். அதே சமயத்தில் அங்கு ராமநாதனுடைய வண்டியோட்டி வந்து நின்று, "மோட்டாரிலிருக்கும் இக்னீஷன் கம்பியை யாரோ அறுத்தெடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். மறுபடியும் புதிய கம்பி வாங்கிப் போட்டாலன்றி வண்டி ஓடாது" என்றான்.

ராமநாதன்:—என்ன! இக்னீஷன் கம்பி போய்விட்டதா. என்ன ஆச்சரியமிது! யார் அடித்துக்கொண்டு போயிருப்பார்கள்! இன்னும் கொஞ்ச நேரத்தில் நாம் புறப்பட்டுப் போகவேண்டுமே! மோட்டாரை சரிப்படுத்த எவ்வளவு நேரமாகும்?

வண்டியோட்டி:—அநேகமாகப் பகல்வரையில் ஆகும். மோட்டார் ரிப்பேர் செய்பவனை அழைத்துவந்து வேறு கம்பி போடச் சொல்லவேண்டும்.

ராமநாதன் :—சரி. நீ போ. அதைப்பற்றி நான் யோசித்துச் சொல்லுகிறேன்—என்றார். வண்டியோட்டி போய் விட்டான்.

ஸப்-இன்ஸ்பெக்டர் :—நான் நேற்றையதினம் முதல் ஒரு சங்கதியை எதிர்பார்த்துக்கொண்டு காத்திருக்கிறேன் என்று சொன்னேனல்லவா? அந்த விஷயத்தை யறிந்து வர ஆள் போயிருக்கிறான். அவன் இப்போது இங்கே வருவான். அதன் பிறகு நாம் சாப்பிடலாம்.

ராமநாதன் :—அப்படியானால் இன்னோர் ஆளுக்குக் காப்பி வேண்டுமே! கொஞ்சம் வரவழைக்கட்டுமா?

ஸப்-இன்ஸ்பெக்டர் :— அதைப்பற்றிப் பரவாயில்லை. இங்கே இருப்பதை ஆளுக்குக் கொஞ்சம் சாப்பிடுவோமே.

ராமநாதன் :—அது நன்றாயிருக்காது. நான் வரவழைக்கப் போகிறேன்—என்றார்.

அப்போது காலில் பூட்ஸ் போட்டுக்கொண்டிருந்த யாரோ ஒரு மனிதர் வீட்டின் நடையில் வந்த ஓசை கேட்கவே, எல்லோரும் கவனித்தனர். அவர் மகம்மதிய ஸப்-இன்ஸ்பெக்டர். அவர் உள்ளே வந்து இன்னொரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு ஸப்-இன்ஸ்பெக்டருடைய முகத்தைப் பார்த்தார். அதன் பிறகு பொன்னுசாமி, ஆஸ்பத்திரி டாக்டர், கண்களில் பெரிய துணிக் கட்டுடனிருந்த கிழவி, சோமு முதலியார், ராமசாமி முதலியார், வேறோர் அன்னிய மனிதர் மற்றும் பலர் ஆகியோர் ஒருவர் பின் னொருவராக வந்துசேர்ந்தனர்.

அவர்களையெல்லாம் காண, ராமநாதன் வியப்புடன் ஸப்-இன்ஸ்பெக்டரை நோக்கி, “இவர்கள் யார்? எல்லோரையும் நீங்கள் அழைத்தீர்களா? எல்லோருக்கும் காப்பி

வரவழைக்கிறேன்" என்று கூறிவிட்டு, வண்டியோட்டியைக் கூப்பிட்டு, அவனிடம் ஒரு ரூபா பணத்தைக் கொடுத்து அவனை ஓட்டலிற்கு அனுப்பினார். அவன் ஐந்தே நிமிஷங்களில் காப்பியுடன் வந்துசேர்ந்தான். அப்போது உட்புறத்தில் ஏற்கனவே தயாராயிருந்த காப்பியையும் ராமநாதனே எடுத்துவந்து, வண்டியோட்டி வாங்கிக் கொண்டு வந்திருந்த காப்பியுடன் கலந்து வைத்து விட்டு, "எல்லோரும் முதலில் காப்பி சாப்பிடலாம்" என்று கூறிவிட்டு, ஸப்-இன்ஸ்பெக்டர், பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், டாக்டர், மகம்மதிய ஸப்-இன்ஸ்பெக்டர் ஆகிய நால்வருக்கும் காப்பியை டம்ளர்களில் ஊற்றிக் கொடுத்தார். அதை ஸப்-இன்ஸ்பெக்டரைத் தவிர மற்ற வர்கள் பெற்றுக்கொண்டனர். ஸப்-இன்ஸ்பெக்டர் தமக்குக் கொடுக்கப்பட்ட காப்பியைக் கீழே வைத்துவிட்டு, "நாம் காப்பி சாப்பிடுவதற்கு அதிக நேரம் செல்லாது. (ராமநாதனுக்கு அங்கிருந்த சிலரைக் காட்டி) இவர்களுடைய அடையாளம் உங்களுக்குத் தெரியவில்லையோ!" என்றார்.

ராமநாதன் :—(புன் சிரிப்புடன்) இந்தக் கிழவி இன்னரா யிருக்கலா மென்பதை நான் யூகித்துக்கொண்டேன். இவர் யார்?

ஸப்-இன்ஸ்பெக்டர் :—இவரும் நீங்களும் பேசுவதில்லையா? இவரையே கேளுங்களேன்.

ராமநாதன் :—(அன்னியரை நோக்கி) யார் நீங்கள்?

மற்றவர்:—அடே அயோக்கிய நாயே! நான் யாரென்பது உனக்குத் தெரியவில்லையாடா! உன்னை ஜெயிலுக்கு அனுப்புவதற்காக நான் எமலோகத்திலிருந்து திரும்பி வந்திருக்கிறேனடா! என் பெயர் கந்தசாமி பிள்ளை என்பது கூட உனக்கு மறந்துபோய்விட்டதா!

ராமநாதன் :— இவர் யாரென்பதே எனக்குத் தெரியவில்லையே! இவருக்கு சித்தஸ்வாதீன மில்லேபோ லிருக்கிறதே! முதலில் நீங்களெல்லோரும் காப்பி சாப்பிடுங்கள்—என்றார்.

ஸப்-இன்ஸ்பெக்டர்:—(எல்லோரையும் பார்த்து) யாரும் காப்பியைத் தொடவேண்டாம்.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் :—காரணம்?

ஸப்-இன்ஸ்பெக்டர்:—இந்தக் காப்பியில் விஷம் கலக்கப்பட்டிருக்கிறது. யாராவது சாப்பிட்டால் உடனே இறப்பது நிச்சயம்—என்று கூறியபடி பிராசிகூடிங்இன்ஸ்பெக்டருடைய கையிலிருந்த டம்ளரைத் தட்டிவிட்டு, தமக்கருகிலிருந்த டம்ளரைத் தம்முடைய பூட்ஸ்காலால் உதைத்துத் தள்ளினார். அதே சமயத்தில் பொன்னுசாமியின் கையில் ஒரு ரிவால்வர் தோன்றியது. அவன் ராமநாதனுக் கருகில் போய் நின்றுகொண்டான். அடுத்த நொடியில் ஸப்-இன்ஸ்பெக்டருடைய கையிலும் ஒரு ரிவால்வர் தோன்றியது. அவர் உடனே நாற்காலியை விட்டு எழுந்திருந்தார். அதே சமயத்தில் ராமநாதனும் நாற்காலியை விட்டு எழுந்திருந்து பொன்னுசாமியைப் பிடித்து ஸப்-இன்ஸ்பெக்டரின்மேல் தள்ளிவிட்டபடி பொறிதட்டும் நேரத்தில் வெளியில் போக முயன்றார். ஆனல் அவருடைய உத்தேசம் நிறைவேறவில்லை. அதே நொடியில் ஸப் இன்ஸ்பெக்டர் பாய்ந்து அவருடைய கழுத்தைச்சுற்றித் தமது கையைப் போட்டு இறுகப் பிடித்துக்கொண்டு இன்னொரு கையால் தமது சட்டைப்பையிலிருந்த விலங்கொன்றை யெடுத்து ராமநாதனுடைய கையில் மாட்டினார்.

அதுவரையில் கந்தசாமி பிள்ளையை வியப்போடு பார்த்துக்கொண்டிருந்த பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், “என்ன

இது! இவர் என்னுடைய தகப்பனுரைப்போலல்லவா இருக்கிறார்! இறந்துபோனவர் எப்படிப் பிழைத்துவந்தார். நீங்கள் இருவரும் ராமநாதனை ஏன் இப்படி பயமுறுத்துகிறீர்கள்?" என்றுவினவினர். அதற்குள்பொன்னுசாமியும் ராமநாதனைப் பிடித்துக்கொண்டான். ஸப்-இன்ஸ்பெக்டர் பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரை நோக்கி, "குண்டோதரன் என்னும் ஆசாமி இவன்தான் ஸார். இவனேதான் இந்தக் கிழவியின் கண்ணைக் கத்தியால் குத்தினவன்; சபேசனைக் கொலை செய்ய முயன்றவனும் இவன்தான். இவர் உங்கள் தகப்பனுர்தான்; இவர் உண்மையில் இறந்துபோகவில்லை. இவர் சித்தஸ்வாதீனமில்லாமல் ஊர் ஊராய் அலைந்துகொண்டிருந்தார். இப்போது இவருக்கு சுயநினைவு உண்டாகிவிட்டது. நானும் பொன்னுசாமியும் நான்கு வருஷங்களாய் இராப்பகல் பாராமல் இந்தக் கேஸில் ஆராய்ச்சி செய்துக்கொண்டு வந்தோம். பொன்னுசாமி ராமநாதனுடைய வீட்டிற்கு அடுத்த விட்டிலிருக்கும் சோமு முதலியின் வீட்டிலிருந்தபடியே இவனை கவனித்துக்கொண் டிருந்தான். சோமு முதலி சுத்த அயோக்கிய மனிதன். அவனுக்கும் ராமநாதனுக்கும் இரகசியத்தில் சிநேக முண்டு. நான்கு வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள் சோமு முதலி என்னைத் தன்னுடைய வீட்டிற்கு வரவழைத்துவிட்டு, திரும்பிப் போகும்படி ஒரு கடிதம் எழுதிவைத்திருந்தா னென்று உங்களிடம் சொன்னே னல்லவா! அவன் அப்படிச் செய்ததற்குக் காரணம் உண்டு. நான்கு வருஷங்களுக்கு முன்பு ராமநாதன், சோமு முதலி, கந்தசாமி பிள்ளை ஆகிய மூவரும் நண்பர்களா யிருந்தனர். வடக்கில் தெலுங்கு தேசத்தில் கந்தசாமி பிள்ளை பெரிய உத்தியோகத்திலிருந்து, ஏராளமான பூமியையும் வீடுகளையும் வாங்கி

யிருந்தார். கடைசிக்காலத்தில் தமது பிள்ளையிருக்கு மிடத்திற்கே தாம் வந்துவிட வேண்டுமென்றெண்ணி, இவர் அவைகளை விற்றுவிட்டு, சுமார் 20 ஆயிரம் ரூபாயை ரொக்கமாக எடுத்துக்கொண்டு வந்தார். தாம் இன்ன தேதியில் இந்த ஊருக்கு வரப் போவதாய் சோமு முதலி, ராமநாதன் ஆகிய இருவருக்கும் அவர் தெரிவித்திருந்தார். உடனே இந்த அயோக்கியர்க ளிருவரும் அந்தப் பணத்தை அபகரித்துவிட வேண்டுமென்று முடிவுசெய்து கொண்டனர். அதற்காக இங்கிருந்து 100 மைல்களுக்கு அப்பாலுள்ள ஒரு ஸ்டேஷனில் கந்தசாமி பிள்ளையை சந்தித்துத் தாங்கள் தற்செயலாய் இவரை சந்தித்ததாய்ச் சொன்னார்கள். அங்கிருந்து ரயில் வந்துகொண் டிருந்தபோது, இரவு சுமார் 12-மணி சமயத்திற்கு ரயில் ஓர் ஆற்றைக் கடக்கும் என்பது இவர்களிருவருக்கும் தெரியும். இவர் பணத்தை ஒரு டிரங்கு பெட்டியில் வைத்துக் கொண்டிருந்தா ராதலால், ஆற்றுப் பாலத்தின் நடுவில் ரயில் வந்தபோது கந்தசாமி பிள்ளையை ஆற்றில் தள்ளிவிட்டு, பெட்டியை எடுத்துக்கொண்டு அதற்கடுத்த ஸ்டேஷனிலிறங்கிவிட வேண்டுமென்று இவர்கள் இருவரும் முடிவு செய்துகொண்டு அப்படியே கந்தசாமி பிள்ளையை ஆற்றில் தள்ளிவிட்டனர். அந்த சமயத்தில் அந்த வண்டியில் யாருமில்லாததும், அடுத்த வண்டியி லிருந்தவர்கள் கதவுகளை மூடிவிட்டுத் தூங்கிக்கொண் டிருந்ததும், வெளியில் இருள் சூழ்ந்துகொண் டிருந்ததும் இவர்களுக்கு அநுகூலமாய் முடிந்தன. அதோடு, அந்தப் பாலத்திற்கு கர்டர்களினாலான கைப்பிடிச் சுவர் இல்லாதபடியால் கந்தசாமி பிள்ளை மிக ஆழத்திற்குக் கீழே யிருந்த ஆற்றில்போய் விழுந்துவிட்டார். இவர்களிருவரும் அதன் பிறகு தங்க

ருடைய தைரியத்தை இழக்காமல் அந்த வண்டியிலேயே இருந்துகொண்டு இந்த ஊருக்கு வந்து கந்தசாமி பிள்ளையின் பெட்டியுடன் இறங்கிவிட்டனர். தம்முடைய தகப்பனாரது வருகையை ஆவலுடன் எதிர்பார்த்து பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் ரயில் ஸ்டேஷனுக்கு வந்திருந்தார். அப்போது தற்செயலாய் நானும் அவருடன் ரயில் ஸ்டேஷனுக்கு வந்திருந்தேன். இவர்களிருவரும் வண்டியிலிருந்து இறங்கியதை நாங்கள் பார்த்தோம். பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் இவர்களிடம் தமது தகப்பனாரைப் பற்றி விசாரிக்க, அவரைத் தாங்கள் பார்க்கவில்லை யென்று இவர்கள் சொல்லி விட்டார்கள்.

உடனே நாங்கள் ஊருக்குள் வந்து விட்டோம். பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் தமது தகப்பனா ரிருந்த ஊருக்குத் தந்தியனுப்பி, அவர் ஏன் வரவில்லையென்று கேட்டார். கந்தசாமி பிள்ளையின் நண்பரொருவர், அந்த ஊரிலிருந்து கந்தசாமி பிள்ளை ஒரு டிரங்க் பெட்டியுடன் புறப்பட்டு வந்துவிட்டதாயும், தாமே அவரை ரயிலிலேற்றியதாயும் மறுதந்தி யனுப்பினார். அதை பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் என்னிடம் தெரிவித்தார். அதோடு எந்த ஆற்றில் கந்தசாமி பிள்ளை தள்ளப்பட்டாரோ அந்த ஆற்றின் அருகில் காவல் காத்துக்கொண்டிருந்த காவல்காரன் ரயில் வண்டியிலிருந்து ஏதோ விழுந்ததை தூரத்திலிருந்தபடி தான் பார்த்ததாய் அருகிலிருந்த ரயில் ஸ்டேஷனில் மறுநாள் காலையில் தெரிவித்தான். ஆற்றில் ஜலம் ஓடிக்கொண்டிருந்தபடியால் இருளில் இரவில் அவன் எதையும் செய்ய முடியவில்லை. அந்த வதந்தி பரவி இந்த ஊர் வரையில் எட்டியது. அதைக் கேட்டவுடன் கந்தசாமி பிள்ளையைத் தூக்கி யெறிந்துவிட்டு பணப் பெட்டியை யாராவது அப

கரித்திருப்பார்களோ என்னும் சந்தேகம் உதித்தது. அதனால் நான் உடனே அங்கே போய் காவல்காரனைக் கண்டு விசாரித்தேன். வண்டியிலிருந்து விழுந்தது என்னவென்பதை அவனால் நிச்சயமாய்ச் சொல்ல முடியவில்லை. நான் பாலத்தைத் தாண்டிய பிறகு ரயில் எந்தெந்த ஸ்டேஷனில் நின்றதோ அந்தந்த ஸ்டேஷன்களி லெல்லாம் ஒரு டிரங்க் பெட்டியுடன் யாராவது இறங்கினார்களா வென்று விசாரித்தேன். எந்த ஸ்டேஷனிலும் அந்தமாதிரி பெட்டியுடன் யாரும் இறங்கவில்லை யாகையால், இந்த ஊரில் டிரங்க் பெட்டியுடன் இறங்கிய இவர்களிருவரையும் கவனிக்க வேண்டுமென்று நான் தீர்மானித்துக் கொண்டு இவர்களைக் கண்காணிக்க ஆரம்பித்தேன். சோமு முதலி அயோக்கியனாகையால், பொன்னுசாமியைத் தூண்டி, பெருத்த அயோக்கியன்போல் நடிக்கச்செய்து, அவனோடு சிநேகம் செய்து கொள்ளச் சொன்னேன். பணத்தை பாகம் பிரித்துக் கொள்ளும் விஷயத்தில் சோமு முதலிக்கும் ராமநாதனுக்கும் தகராறு வந்துவிட்டதுபோ லிருக்கிறது. ராமநாதன் வழிக்கு வராமல் பிடிவாதம் பிடிக்கவே, சோமு முதலி போலீஸாரிடம் விஷயத்தைச் சொல்லிவிடுவதாய் பயமுறுத்திவிட்டு, டெலிபோன் மூலம் என்னைக் கூப்பிட்டான். அதை யறிந்துகொண்ட ராமநாதன் சோமு முதலியோடு சமாதானம் செய்து கொள்ளவே, நான் திரும்பிப் போகும்படி சோமு முதலி எனக்கு ஒரு கடிதம் எழுதி வேலைக்காரனிடம் கொடுத்துவிட்டு ஒளிந்து கொண்டான். அது நிற்க, ராமநாதனுடைய வேலைக்காரனான சபேசனும், வேலைக்காரியும், இவர்கள் இருவரும் சேர்ந்து நடத்திய வழிப்பறியை எப்படியோ தெரிந்துகொண்டனர். சமீபத்தில் ஏதோ காரணமாக சபேசனுக்கும் ராமநாதனுக்கும் மனஸ்

தாபம் உண்டாகிவிட, சபேசன் தானறிந்திருந்த விஷயத்தைப் போலீஸாரிடம் சொல்லிவிடப் போவதாய் பயமுறுத்தவே, அவனைக் கொன்றுவிட எண்ணி, குண்டோதரன் அனுப்பியதாய் ஒரு கடிதத்தைத் தானே தன்னுடைய இடது கையால் எழுதி, பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரிடம் ராமநாதன் காட்டினன். பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் தம்முடைய தகப்பனைப் பற்றி என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுகிறார் என்பதை அப்போதைக் கப்போது அறிய அவர் இருந்த வீட்டின் சொந்தக்காரியான இந்த செவிட்டுக் கிழவியை ராமநாதன் சரிப்படுத்தி வைத்தான். ராமநாதனுடைய உண்மையான பெயர் இந்தக் கிழவிக்குத் தெரியாது. இவனை குண்டோதரன் என்ற பெயரால் மாத்திரம் இவள் அறிவாள். இந்தக் கிழவிக்கும் ராமநாதனுக்கும் ஏதோ சம்பந்தமிருக்க வேண்டுமென்று நான் பல விஷயங்களைக் கொண்டு சம்சயித்து இவளைக் கண்காணித்து வந்தேன். அதைக் கண்ட கிழவி குண்டோதரன் மேல் சந்தேகங்கொண்டு, தான் உண்மையை வெளியிட்டுவிடுவதாக இவனிடம் சொன்னாள். அதனால் ராமநாதன் அச்சம் கொண்டு இவளுடைய கண்களைக் குத்திவிட்டான். அப்படிச் செய்துவிட்டால், இவளால் தன்னை அதற்கு மேல் காட்டிக் கொடுக்க முடியாதென்பது இவனுடைய எண்ணம். அதன் பிறகு இவன் சபேசனைத் தொலைப்பதற்கு ஏற்பாடு செய்து, மோட்டாரி லேறிக்கொண்டு இன்னொரு வீட்டினருகில் சென்று வண்டியை நிறுத்திவிட்டுக் கால் நடையாக வீட்டினுள் போயிருக்கிறான். சபேசன் அங்கே போகும் விஷயம் எனக்கு ஏற்கனவே தெரியுமாதலால் நான் பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரை அழைத்துக்கொண்டு போனேன். இவன் வீட்டிற்குள் போய் தன்னிடமிருந்த துப்

பாக்கியை ஓர் அறையிலுள்ள ஒரு காற்றுவாரியின் குறுக்கே யிருந்த கம்பியில் ஒரு கயிற்றினால் கட்டியிருக்கிறான். அந்த அறையின் கதவைத் திறந்துகொண்டு யாராவது உள்ளே சென்றால், உடனே அது தானாகவே வெடிக்கும்படி இவன் தந்திரம் செய்துவிட்டு வெளியில் வந்து கதவைப் பூட்டி வைத்துவிட்டு மறைந்திருந்தான்.

சபேசன் வந்தவுடன், உள்ளே போய்க் கதவைத் தாளிட்டுக்கொண்டான். வெளியில் வந்த ராமநாதன் தெருவுக் கதவைப் பூட்டிவிட்டு சைக்கிளில் ஏறிக்கொண்டு போய்விட்டான். உடனே வீட்டிற்குள் ஓசை உண்டா யிற்று. நாங்கள் ராமநாதனைத் துரத்திக்கொண்டு ஓடினோம். பாதி வழியில் ராமநாதன் ஸ்மரணையற்றுக் கிடப்பவன்போல் பாசாங்கு செய்துகொண்டு படுத்திருந்தான்; நாங்கள் கேட்ட தற்கு, குண்டோதரனைப்பற்றி ஏதேதோ புளுகுகளை யெல் லாம் புளுகினான். ஏற்கனவே, நான் போஸ்ட் மாஸ்டருடன் பேசி சபேசன் பெயருக்கு வரும் கடிதங்களைப் பிரித்துப் பார்த்து நகல் எடுக்கும்படி சொல்லியிருந்தேன். ராமநாதன் குறிப்பிட்டிருந்த தினத்தில் சபேசனுக்கு ஒரு கடிதம் தபால் மூலமாய் வந்திருந்ததானாலும், அது சொந்தக் கடிதமாயிருந்தது. ராமநாதன் தனது மோட்டார் வண் டியை ஊருக்கனுப்பி, தான் வரும் வரையில் காத்திருக்கும் படி திட்டப்படுத்தி இருந்திருக்கவேண்டும். அதன் பிறகு எங்களோடு வீட்டிற்கு வந்தான். சபேசனைக் கொலை செய்ய முயன்றவன் அவன் இறக்காம லிருந்ததைக்கண்டு ஏதாவது சேஷ்டைகள் செய்வானென் றெண்ணியே நான் இவனை அந்த ஊர்ப் போலீஸாரை யழைத்துவர அனுப்பினேன். ராமநாதன் தான் காற்றுவாரியில் கட்டியிருந்த பிஸ்டலை எடுத்துக்கொண்டான் என்பதும் விளங்கியது. பிறகு நான்

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரை வீட்டின் பின்புறத்திற்கு அழைத்துக்கொண்டு போனேன். அந்த சமயத்தில் பொன்னுசாமி சபேசனைக் கொண்டுபோய், ஆற்றில் மீன் பிடிப்பவனைப்போல் நடித்து அந்த வீட்டைக் கண்காணித்துக்கொண்டிருந்தஇன்னொருஜெவானிடம்ஒப்புவித்துவிட்டு ஆற்றின் எதிர்க் கரையிலிருந்த ஊரில் கொண்டுபோய் சேர்க்கச் சொல்லிவிட்டேன். ஆகவே, சபேசனை நாங்கள் மறைத்தோமே யன்றி, அவன் தானாக மறையவில்லை. நாங்களெல்லோரும் அந்த ஊரை விட்டுப் புறப்பட்ட சமயத்தில் பொன்னுசாமி பின் தங்கி சபேசனை இந்த ஊருக்கு அழைத்துவந்து ஆஸ்பத்திரியில் சேர்த்தான். அவனுடைய காயங்களெல்லாம் இப்போது அநேகமாய் ஆறிவிட்டன. அதோடு ஜுந்தக் கிழவிக்குக் கண் ஆபரேஷன் நேற்றே நடந்துவிட்டது; கண் தெரிகிறது. ஆபரேஷன் நடக்க இன்னும் ஒரு மாதகாலமாகுமென்று பொய் சொல்லும்படி நான் டாக்டரிடம் சொல்லி இருந்தேன். அதுவன்றி, தனது வேலைக்காரியால் தனக்கு அபாயம் நேருமென்று பயந்து அவளை நேற்றைய தினத்திற்கு முந்திய தினம் அவளுடைய ஊருக்கு ராமநாதன் அனுப்பிவிட்டான். அவள் ஊர் போய்ச் சேரும்வரையில் ஜாக்கிரதையாக அவளைப் பார்த்துக் கொள்ளும்படி திட்டம் செய்து நான் ஒரு ஜெவானை அதே ரயிலில் அனுப்பினேன்.

போர்வையையும் தலைப்பாகைத் துணியையும் ராமநாதன் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து திருடிக்கொண்டு வந்தான். அவைகளிரண்டும் இப்போது இங்கேதா னிருக்கின்றன. போலீஸ் ஸ்டேஷனில் தரையில் ஆரஞ்சு கிரஷ்

கோடுபோலப் பட்டிருந்ததாலும், அந்த புட்டி ராமநாத னிடம் அவர் தனியாக இருந்தபோது இருந்தமையாலும் அவர் ஜெவான் லெம்ஜூஸ் வாங்கி வருவதற்குள் அதை உடைத்துத் திறந்து அதனுள் மயக்கமருந்தைக் கலந்துவிட்டு புட்டியை உதறயிருக்கிறார். அதனால் கொஞ்சம் ஆரஞ்சு கிரஷ் தரையில் கோடுபோல் கீழே விழுந்திருந்தது. அவர் அம்மாதிரி செய்ததால் கண்ணாடிகோலி முன்போல் அடைத் துக்கொண்டது. ஜெவான் இன்னொரு புட்டியை வாங்கிக் கொண்டவுடன், முதல் புட்டியை அப்போதே உடைப்பவர் போல் ராமநாதன் பாசாங்கு செய்து, ஜெவானிடம் கொடுக்க, அவன் அதைக் குடித்தபின் மயங்கிச் சாய்ந்து விட்டான். உடனே ராமநாதன் சால்வையையும் தலைப் பாகையையும் எடுத்துக்கொண்டு போய்விட்டான். அது நிற்க, ஆற்றில் விழுந்த கந்தசாமி பிள்ளை எப்படியோ தப் பிப் பிழைத்துக்கொண்டார். ஆனால் மூளையின் ஒரு முக் கியமான பாகத்தில் அதிர்ச்சி ஏற்பட்டதால், இவர் சித்த ஸ்வாதீனமற்றவரா யிருந்து, ஊரூராய் அலைந்து தற்செய லாய் இந்த ஊருக்கு வந்தார். ஜெயிலிலிருக்கும் ஒரு பழைய கேடி சாதாரணமாகப் பாடிக்கொண்டிருக்கும் ஒரு தெலுங்குப் பாட்டை இவர் தெலுங்கு தேசத்தில் ஏற் கனவே தெரிந்துகொண் டிருந்தாராதலால், அந்தப் பாட் டின் ஓர் அடியைமட்டும் இவர் திருப்பித் திருப்பிப் பாடிக் கொண்டிருந்தார். அதைப் பாடியபடி இவர் சில சமயங் களில் வீதியில் அலைந்துகொண் டிருந்தார். யாரோ ஒரு பைத்தியக்காரன் ஒரு தெலுங்குப் பாட்டைப் பாடுகிற னென்பதை நான் கேள்விப்பட்டவுடன், ஒரு பழைய கேடி

அந்தப் பாட்டைப் பாடுவது வழக்கம் என்பது என் நினைவிற்கு வந்தது. ஒருவேளை ஜெயிலிலிருந்து அவன் தப்பி வந்துவிட்டானோவென்று எண்ணி நான் உடனே அந்தப் பைத்தியக்காரனைப் பிடிக்கத் தேடி உடனே பிடித்துக் கொண்டு பார்க்க, அது இந்தக் கந்தசாமி பிள்ளை என்பது தெரிந்தது. நான் இவரை உடனே பொன்னுசாமியின் வீட்டிற்கு அழைத்துக் கொண்டுபோய் அங்கே மறைத்து வைத்திருந்தபடி வைத்திய சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்தேன். அப்போது, ஒருநாள் இவர் அந்த வீட்டிற்குப் பின்புறத்தில் சுவருக்கப்பாலிருந்த சோமு முதலியாருடைய வாழை மரத்திலிருந்து இரண்டு வாழைக்காய்களை அறுத்தெடுத்துக்கொண்டு வீட்டை விட்டு வெளியில் போய் தமது வீட்டையடைந்தார். அங்கே தமது பிள்ளை இருப்பதாயும், அவருக்கு சாப்பாட்டிற்கு ஏதாவது வேண்டுமென்றும்எண்ணி அவைகளையும், எப்படியோ சம்பாதித்த 1 அணு துட்டையும் எடுத்து அந்த வீட்டிற்குள் போட்டார். இவர் இந்த ஊருக்கு வந்து பல தினங்களானபோதிலும் நான்கு நாட்களுக்கு முன்பு தெருவில் அதிகமாய் இவர் அலைந்தபடியால், ஒரு பைத்தியக்காரன் இந்த ஊருக்கு வந்திருப்பதாய் ஜனங்கள் தெரிந்துகொண்டனர். சில சமயங்களில் அரிசி முதலியவற்றைப் பொட்டலமாகக் கட்டி அந்த வீட்டிற்குள் இவர் போட்டிருக்கிறார். நாங்கள் எதற்காக இவரைப் பொன்னுசாமி பிள்ளையின் வீட்டிற்குள் வைத்திருந்தோமென்றால், ராமநாதனும், சோமு முதலியும் இவர் உயிருடனிருக்கிறாரென்பதை அறியாமலிருப்பதற்கே. பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரிடம் சங்கதியைச் சொன்னால், அப்போதும்

இந்தச் செய்தி வெளியாகிவிடுமாதலால், அதைக் கேட்டு ராமநாதனும், சோமு முதலியும் ஓடிவிடுவார்கள் என்று நினைத்தே நான் இவரை மறைத்துவைத்தேன். இவர் வீட்டை விட்டு ஓடியபிறகு மறுபடியும் இவரைப் பிடித்து ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் வைத்துக்கொண்டு வைத்தியம் செய்ய, இவருக்குப் பூர்த்தியான குணம் ஏற்பட்டுவிட்டது. நான்கு நாட்களுக்கு முன்பே இவரைப் பிடித்துவிட்டோமானலும், தோப்பில் அடிக்கடி பாட்டு கேட்டதன் காரண மென்னவென்ருல், அந்தப் பாட்டை நானும் பொன்னுசாமியும் பாடம் செய்துகொண்டு, இவர் பாடியது போல் பாடக் கற்றுக்கொண்டோம். நான் தோப்பிலிருந்து அந்தப் பாட்டைச் சொன்னல், சோமு முதலியார் அந்தப் பாட்டைக் கேட்டுவிட்டு என்னசெய்கிருர் என்று பொன்னுசாமி அவருடனிருந்து கவனித்தான். அவன் பாடியபோது நான் ராமநாதனுடனிருந்து இவன் என்னசெய்கிருனென்று கவனித்தேன். நான் அப்படி ஆராய்ந்துகொண்டிருக்கும் சமயத்தில் தான் வந்துவிட்டதாய் எனக்குத் தெரியப்படுத்துவதற்கு பொன்னுசாமி ஊமைக்கோட்டான் போல் சத்திசைகை செய்வான். நான் உடனே புறப்பட்டுப் போய்விடுவேன். அவன் இருவர்களையும் கவனிப்பான். இப்படியெல்லாம் செய்து விஷயங்களை நாங்கள் கண்டுபிடித்தோம். இதுவரையில் தகுந்த ஆதாரங்களை சேகரிக்க முடியாமையால் நான் இவர்களிருவரையும் பிடிக்கவில்லை. இப்போது கந்தசாமி பிள்ளை, கிழவி, சபேசன் ஆகிய மூவரும் இவர்களுடைய ரகசியங்களை வெளியிடத் தயாராயிருக்கிருர்கள். நாங்கள் இன்னும் சில சாக்ஷிகளுக்

கும், ஆதாரங்களுக்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம்—என்று கூறிவிட்டு ராமநாதனைப் பொன்னுசாமியிடம் ஒப்புவித்து விட்டு, சோமு முதலிக்கு விலங்கு மாட்ட அவனுக்கருகில் சென்றார்.

கந்தசாமி பிள்ளை, "நான் செய்த பைத்தியக்கார வேலையைக் கண்டு என் வீட்டில் குடியிருக்கும் ராமசாமி பிள்ளை பயந்துவிட்டாரா! அடாடா!" என்றார். ஸப்-இன்ஸ்பெக்டர் உடனே, "உங்களுக்கு சுய்அறிவு இருந்தால் அப்படியெல்லாம் செய்வீர்களா! சரி; இந்தத் துப்பறியும் புலியையும், சோமு முதலியையும் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோவோம்" என்றபடி சோமு முதலியின் கைகளை பிடிக்க முயன்றார். அப்போது சோமு முதலி தன் வலது கையை முஷ்டி செய்துகொண்டு சமயசஞ்சீவி ஐயருடைய மோவாயில் ஒரு குத்து விட, அதை எதிர்பார்க்காத ஐயர் தமக்குப் பின்னலிருந்த ராமநாதன்மேல் விழுந்தார். பொறித்தட்டும் நேரத்தில் சோமு முதலி அங்கிருந்து ஒரே பாய்ச்சலாய் நடைக்குப் பாய்ந்து கதவை மூடி வெளியில் தாளிட்டுவிட்டு ஓட்டம் பிடித்தான்.

சமயசஞ்சீவி உடனே எழுந்து, "ஏய்! ஓடாதே, நில்லு நில்லு" என்று கூறியபடி துரத்தினாலும் கதவு தாளிடப்பட்டுப் போகவே, அவர் அப்படியே நின்றுவிட்டார். ராமநாதனின்மேல் திடீரென்று சமயசஞ்சீவி விழவே, பொன்னுசாமி அவரைப் பிடித்திருந்த பிடி நழுவியது. ராமநாதன் ஓடி அருகிலிருந்த ஒரு கதவைத் திறந்துகொண்டு அப்பால் சென்று மூடி உட்புறம் தாளிட்டுக்கொண்டார். வீட்டின் முன்புறத்திலிருந்த வழியைத் தவிர அந்த

வீட்டை விட்டு வெளிப்பட வேறு வழியில்லையென்பதை சமயசஞ்சீவி யறிவாராதலால், அவர் தெருக்கதவின் சமீபத்தில் சென்று கதவிடுக்கால் தெருப்பக்கம் பார்த்தார். அதே சமயத்தில் தெருப்பக்கம் ஒரு போலீஸ் ஜெவான் போகவே, சமயசஞ்சீவி ஐயர் அவனைக் கூப்பிட்டுக் கதவைத் திறக்கச் செய்து, வெளியில் தெருவின் இரண்டு பக்கங்களிலும் ஓடிப் பார்த்தார். சோமு முதலி எங்கேயும் காணப்படவில்லை. உடனே அவர் அடுத்த வீட்டை யடைந்து பார்க்க, அதன் தெருக்கதவு மூடப்பட்டு உட்புறத்தில் தாளிடப்பட்டிருந்தது. அதனால் சோமு முதலி உட்புறத்திலிருக்க வேண்டுமென்று அவர் முடிவு செய்துகொண்டு அந்த வீட்டின் அமைப்பு எப்படி யிருந்ததென்பதை அறிய பொன்னுசாமி பிள்ளையைக் கூப்பிட்டார். அவன் ராமநாதன் புகுந்துகொண்ட அறையின் கதவை வெளிப்புறம் தாளிட்டுவிட்டு புதிதாக வந்த ஜெவானைக் காவலுக்கு வைத்தபிறகு சமயசஞ்சீவி இடம் வந்துசேர்ந்தான். பிராசிகூடிங் இன்ஸ்பெக்டரும் மற்றவர்களும் தெருவுப் பக்கத்தையடைந்து அடுத்த வீட்டை கவனித்தனர்.

சமயசஞ்சீவி தெருவுக்கதவைத் தட்டிப் பார்த்தார். அதற்கு எவ்வித மறுமொழியும் கிடைக்கவில்லை. 'கதவை யாரும் திறக்கவுமில்லை. ஆகையால் கதவை உடைத்துத் திறந்துகொண்டு செல்வதைத் தவிர வேறு வழியில்லையென்றறிந்து அவர் அதற்கு வேண்டிய ஆயுதங்களைக் கொண்டுவரச் சொன்னார்.

சில நிமிஷங்களில் அங்கு ஏராளமான ஜனங்கள் கூடிவிட்டனராதலால், பலர் பலவித ஆயுதங்களை எடுத்து வந்

தனர். உடனே கதவு உடைக்கப்பட, சமயசஞ்சீவி முதலி யோர் உள்ளே புகுந்தனர். ஒரு ஜெவான் வாசற்படியில் நின்றுகொண்டு ஜனங்கள் உள்ளே புகாதபடி பார்த்துக் கொண்டான். அப்போது ராமநாதனுடைய வீட்டைக் காவல் காத்துக்கொண்டிருந்த ஜெவானும் அங்கே வந்து சேர்ந்து ஜனங்களை விரட்டிய பிறகு நடையில் காணப்பட்ட இரண்டாவது கதவை மூடி வெளிப்புறம் தாளிட்டுவிட்டு "நான் இங்கே யிருந்து பார்த்துக்கொள்ளுகிறேன். நீ போய் அடுத்த வீட்டிலிருக்கும் ராமநாதனை கவனித்துக் கொள்" என்றான்.

உடனே அந்த ஜெவான் புறப்பட்டுப் போய் ராமநாத னுடைய வீட்டை யடைந்து, உள்ளே நுழைந்து, ராமநாதன் இருந்த அறைக் கதவினருகில் சென்று, அவர் அப்போது என்ன செய்துகொண்டிருந்தார் என்பதை கவனித்தான். அப்போது திடீரென்று கதவு திறந்துகொண்டது. ராம நாதன் ஜெவானுடைய கைகளைப் பிடித்துக்கொண்டு அவ னுடைய கால்களை எற்றிவிட, அவன் மல்லாந்து கீழே விழுந் தான். அவனை ராமநாதன் உள்ளே இழுத்து அவனது கைகால்களைக் கட்டி வாயில் ஒரு துணியை யடைத்துவிட் டார். கீழே விழுந்ததனால் ஜெவானுடைய தலையில் அடி பட்டு பொறிக்கலக்கம் ஏற்பட்டுவிடவே, அவன் அசையா மல் படுத்திருந்தான்.

பிறகு ராமநாதன் அந்த அறையின் ஒரு மூலையி லிருந்த ஓர் அலமாரிக் கதவைத் திறந்து அதற்குள்ளிருந்த ஒரு சீசாவை யெடுத்து, அதிலிருந்த மயக்க திராவகத்தை ஜெவானது நாசித்துவாரத்திற்கெதிரில் கொஞ்சநேரம் பிடித்

துக்கொண்டிருக்க, அவன் பிணம்போல் நீண்டுவிட்டான். அதன்பிறகு அவனுடைய கட்டுகளை அவிழ்த்து, அவனுடைய உடுப்பைக் கழற்றிவிட்டு தான் கழற்றி வைத்திருந்த தனது விலங்கை அவனுடைய கைகளில் மாட்டிவிட்டு தன்னிடமிருந்த சாவியால் பூட்டி, அவனுடைய உடுப்புகளை யெடுத்தணிந்துகொண்டு, அறைக்கு வெளியில் வந்து, அறைக் கதவை நன்ருகத் தாளிட்டு ஒரு பூட்டால் பூட்டியபிறகு வேகமாகத் தெருவையடைந்தான். தெருவிலிருந்த ஜனங்கள் அடுத்த வீட்டினுள் போலீஸார் சென்று என்ன செய்கிருர்களென்பதை கவனித்துக்கொண்டிருந்தனராதலால், ராமநாதனே ஜெவான் வேஷத்தில் வந்திருக்கிருனென்றுஎவரும் சந்தேகிக்கவில்லை. சிலர் அவனைப்பார்த்தனராலும், அவன் உண்மையான ஜெவானென்றே அவர்கள் நினைத்துக்கொண்டனர். அவன் அடுத்த தெருவையடைந்த சமயத்தில் சோமு முதலி அவனைக் கண்டு அஞ்சி ஓடமுயல, ராமநாதன் குரல் கொடுத்து தான் இன்னுன் என்பதைத் தெரிவித்தான். உடனே சோமு முதலி அவனுக்கருகில் சென்ருன். ராமநாதன், “நாம் இங்கே நிற்பது அபாயகரமானது. இந்த ஊரை விட்டு ஓடிப் போய்விடவேண்டும். பிறகு பேசிக்கொள்ளுவோம். உன்னிடம் பணம் எவ்வளவு இருக்கிறது?” என்ருன். சோமு முதலியார், “பணமா! என்னிடம் பணமேது. ஆள் தப்பினுல் அதுவே போதாதா! பணத்தை எடுத்துவர அவகாசமேது. நான் என் வீட்டிற்குள் புகுந்து உட்புறம் தாளிட்டுக்கொண்டு பின்னுலிருந்த ஒரு சுவரில் ஏறிக் குதித்து, பொன்னுசாமி பிள்ளையின் வீட்டி னுட்புறத்தால் வெளியில் வந்தேன். நாம்

போவோம். எந்த நிமிஷத்திலும் அவர்கள் இங்கே வரலாம்" என்றார். இருவரும் உடனே அங்கிருந்து ஓட்டமும் நடையுமாகச் சென்று அடுத்த தெருவை யடைந்து, ஊருக்கு வெளியில் போய்க்கொண்டிருந்தனர். அப்போது ராமநாதன், "அடாடா! நானும் பணம் எடுத்து வரவில்லையே! நாம் செலவுக்கு என்ன செய்கிறது?" என்றார்.

சோமு முதலி:—(நடந்தபடியே) எனக்கு ஒரே குழப்பமாயிருக்கிறது. கையில் காசிருந்தால் நாம் ரயில்மூலம் அதிக தூரம் போய்விடலாம். நாம் நடந்தே போனால் மிக சீக்கிரத்தில் போலீசார் நம்மைப் பிடித்துக்கொள்வார்கள்.

ராமநாதன்:— மெய்தான். நானாவது என்னுடைய சுயரூபத்தை மறைத்துக்கொண்டு ஜவானைப்போல் இருக்கிறேன். நீதான் அப்படியே யிருக்கிறாய். அதனால் நமக்கு சீக்கிரம் அபாயம் உண்டாகும். பணமில்லாவிட்டாலும் பரவாயில்லை. நாம் தந்திரமாய் நடந்துகொண்டால்தான் தப்பலாம். நான் சொல்லுகிறபடி நீ செய்கிறாயா?

சோமு முதலி:—நான் என்ன செய்யவேண்டும்?

ராமநாதன்:—உன்னை நான் கைதியாக்கிக் கொண்டு போவதைப்போல் நடித்து, பஸ்களிருக்கும் இடத்தை யடைவோம். அருகிலுள்ள ஊருக்கு உன்னை அழைத்துக் கொண்டு போகவேண்டுமென்றும், வண்டிக்கூலி ஸப்-இன்ஸ்பெக்டர் கொடுப்பார் என்றும் சொல்லி ஒரு பஸ்ஸை அமர்த்தி அதில் ஏறிக்கொள்ளலாம். வண்டி ஊரைத்தாண்டி சிறிது தூரம் போனவுடன் வண்டியோட்டியைக் கீழே தள்ளி

விட்டு நாம் வண்டியை ஓட்டிக்கொண்டு வெகமாய்ப் போய் விடலாம்.

சோமு முதலி:—ஆம். அது நல்ல யுக்திதான்—என்ருர். உடனே போலீ ஜெவான் சோமு முதலியைப் பின்கட்டு மாருகக் கட்டி, கைதியை அழைத்துச் செல்லுவது போல் அழைத்துக்கொண்டு பஸ்கள் நிற்குமிடத்தை யடைந்து, பஸ்ஸொன்றைப் பிரத்தியேகமாய் அமர்த்தி அதிலேறிக்கொண்டனர். வண்டி புறப்பட்டது. ஊரைக் கடந்து சுமார் நான்கு மைல்கள் சென்றவுடன் வண்டி நின்றது. கண்டக்டர் இறங்கி சுமார் கால் பர்லாங்கு தூரத்திலிருந்த குளத்தை நோக்கிச் சென்ருன். அவனுடைய தலை மறைந்தவுடன் ராமநாதனும், சோமு முதலியும் வண்டியோட்டியின் கைகால்களைக் கட்டி அவனுடைய வாயில் துணியை யடைத்து ரஸ்தாவின் ஓரத்தில் காணப்பட்ட சப்பாத்துப் புதருக்கப்பால் படுக்கவைத்துவிட்டுச் சென்று, வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டனர். தூரத்திலிருந்த ஒரு வயலிலிருந்து அங்கே நடந்தவற்றை கவனித்துக்கொண்டிருந்த நான்கு குடியானவர்கள் கூச்சலிட்டுக்கொண்டு ஓடிவரத் தொடங்கினர். ஆனல் பஸ் அதற்குள் புறப்பட்டு நெடுந்தூரம் சென்று மறைந்துவிட்டது. ராமநாதன் வண்டியை ஓட்டிக்கொண்டு சென்ருன். அடிக்கடி இருவரும் பின்புறம் திரும்பித் திரும்பி பார்த்தவண்ணமிருந்தனர். எவரும் பின் தொடர்ந்து வந்ததாய்த் தெரியவில்லை. சோமு முதலி தைரியமடைந்தவனுய் ராமநாதனை நோக்கி, "நீ எப்படித் தப்பித்துக்கொண்டு வந்தாய்?" என்ருன்.

ராமநாதன்:— சுலபத்திலேயே தப்பித்துக் கொண்டேன். நான் அந்த அறைக்குள் புகுந்து கதவை மூடி

தாளிட்டுக் கொண்டேன்—என்று கூறி மேலே ஏதோ கூறுவதற்குள் ரஸ்தாவின் ஓரத்தில் நின்றுகொண் டிருந்த ஒரு மனிதன் ராமநாதனைப்பார்த்து கோபத்துடன் கையைத் தட்டிக் கூப்பிட்டு, “வண்டியை நிறுத்தப் போகிறாயா? இல்லையா? என் கோழியின்மேல் வண்டி ஏறிவிட்டது. அதன் கிரயத்தை நீ கொடுக்க வேண்டும்” என்றான். ராமநாதன் தன் காலடியில் காணப்பட்ட ஒரு காலி பெட்ரோல் தகர டப்பாயை யெடுத்து அந்த மனிதனின் மேல் எறிந்தான். அது அவன் மேல் விழுந்தது. ஆனால் வண்டியும் அந்த மனிதனைக் கடந்து சிறிது தூரம் செல்வதற்குள் நாலைந்து மலைப்பிஞ்சுகள் வண்டியினுள் வந்து விழுந்தன. தகரடப்பாவை எறிந்ததற்காக அந்த மனிதன் கற்களை எறிகிறான் என்று உணர்ந்த ராமநாதன் வண்டியின் வேகத்தை அதிகப்படுத்தி ஓட்டினான். அவ்வளவு வேகத்தில் அந்த பஸ்வண்டி எப்போதும் ஓட்டப்பட்டதில்லையாதலால் அது அதிர்ந்தது கீழே குப்புற விழுந்துவிடுமோ வென்ற அச்சத்தை உண்டாக்கியது. ராமனாதன் மறுபடியும் பேசத்துடங்கி, “நான் அந்த அறைக்குள் புகுந்து கதவைத் தாளிட்டுக்கொண்டு வெளியில் என்ன நடந்தது என்பதை கவனித்தேன். ஒரே ஒரு ஜெவானை மாத்திரம் காவலுக்கு வைத்துவிட்டு எல்லாரும்வெளியில் போய்விட்டனர். அப்போது தெருவில் ஜனக்கும்பல் ஏராளமா யிருந்திருக்க வேண்டுமென்பது அவர்களுடைய கூச்சலினால் விளங்கியது. காவல் காத்துநின்ற ஜெவான் எதற்காகவோ வெளியில் போய்விட்டான். நான் அங்கே அறைக்குள்ளிருந்த ஒரு சுரட்டினால் உட்புறத்தில் கதவில் மடக்கப்பட் டிருந்த

வெளிப்புறச் சங்கிலியின் கம்பியைப் பிரித்து நீட்டிவிட்டு கதவை இழுக்க, அது திறந்துகொண்டது. இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு யாரோ வந்த காலடியோசை கேட்கவே, நான் உடனே கதவை முன்போல் மூடிவிட்டு கதவிடுக்கால் கவனித்தேன். வேறொரு ஜெவான் வந்து கதவினருகில் நின்றுகொண்டு அறையினுள் நான் என்ன செய்தேனென்று கவனித்தான். நான் கதவை சடக்கென்று திறந்து அவனை உள்ளே இழுத்து, உடுப்புகளைக் கழற்றிக்கொண்டு கை கால்களைக் கட்டிப்போட்டு விட்டு ஜெவானுடைய உடுப்புடன் வெளியில் வந்து பக்கத்துத் தெருவில் உன்னை சந்தித்தேன். அடுத்த வீட்டின் முன் புறத்தில் ஜனங்கள் இருந்தபடியால் நீ வீட்டிற்குள் போயிருக்க வேண்டுமென்பது விளங்கியது. நீ இன்ன விதமாகத் தப்பித்துக்கொள்வாய் என்பது எனக்கு உடனே விளங்கியது. அதனால் உன்னை சந்திக்கவே அடுத்த தெருவிற்கு வந்தேன்" என்றான்.

பஸ்வண்டி அப்போது ரஸ்தாவில் எதிரில் வந்துகொண்டிருந்த ஒரு கட்டைவண்டியில் மோதி அதைத் தள்ளிவிட்டு சென்றது. வண்டியிலிருந்தவர்கள் எழுந்து கூச்சலிட்டு பஸ்ஸை நிறுத்தச் சொன்னார்களானாலும் ராமநாதன் முன்னிலும் அதிக விசையாக வண்டியை ஓட்டிக்கொண்டு சென்றான். சிறிது தூரத்திற்கப்பால் ரஸ்தாவின் இரண்டு பக்கங்களிலும் ஓலை வீடுகள் காணப்பட்டன. வீதியில் பல நாய்கள் நின்று வண்டியைப் பார்த்துக் குலைத்தன. சில நாய்கள் வண்டியைத் துரத்திக்கொண்டு அதன் பின்னாலேயே ஓடிவந்தன. ஆனால் அவைகள் வண்டியோடு

வரமுடியாமல் சிறிது நேரத்தில் பின்தங்கி விட்டன. ஷெ வீடுகளில் காணப்பட்ட பல மனிதர்கள் பஸ்வண்டி அவ் வளவு வேகமாய்ச் சென்றதைப் பற்றி ஆச்சரியத்தோடு ஒரு வரோடொருவர் பேசிக்கொண்டனர். தெருவில் நின்று கொண்டிருந்த இரண்டொருவர் பஸ்ஸைக் கண்டு அஞ்சி துள்ளி அப்பால் குதித்தனர்.

அந்த ஊரைக் கடந்து மேலும் இரண்டுமைல் தூரம் சென்றதும், ராமநாதன் உட்கார்ந்திருந்த இடத்தின் அடியி லிருந்து அனல் வீச ஆரம்பித்தது. ராமநாதன் உடனே, "அடாடா! எல்லாம் இந்த சமயத்தில்தானு வந்து சேர வேண்டும்; எஞ்சின் கொதித்துப்போய்விட்டது. தண்ணீர் எடுத்து ஊற்ற வேண்டும்" என்றான். சோமு முதலி, "தண்ணீர் எடுத்து வருவதற்காகத்தான் காலி டின்னை வைத் திருந்தார்கள். அதை நீ தூக்கி எறிந்துவிட்டாய். இப் போது எப்படித் தண்ணீர் எடுத்து வருகிறது?" என்றான். சிறிது தூரத்தில் ஒரு குளத்தினருகில் வண்டி செல் லவே ராமநாதன் அதை நிறுத்திவிட்டு, "அது தான் எனக்கும் விளங்கவில்லை" என்று கூறிவிட்டு, குளத்தின் கரையில் நின்றபடி யோஜனை செய்தான். அப்போது எதிர்த் திசையி லிருந்து பிரயாணிகளுடன் வந்த ஒரு பஸ் குளத் தின் கரையில் இன்னொரு பஸ் இருந்ததைப் பார்த்தவுடன் நிறுத்தப்பட்டது. அந்த வண்டியிலிருந்த வண்டியோட்டி சோமு முதலியை நோக்கி, டிரைவரும் கண்டக்டரும் எங்கே போயிருக்கிறார்கள்?" என்றான்.

சோமு முதலி:— இருவரும் வயல் பக்கம் ஒதுங்கப் போயிருக்கிறார்கள்—என்றான். உடனே வண்டியோட்டி,

"இருவரும் ஒரே காலத்தில்தானா போகிறது! அவர்களுக்கு இவ்வளவு அஜாக்கிரதையா! வரட்டும். அவர்களைக் கண்டித்துவிட்டுத்தான் போக வேண்டும்" என்று கூறியபடி வண்டியை விட்டுக் கீழே இறங்கினான். அப்போது ராமநாதனுடைய மனதில் ஒரு விபரீத சந்தேகமுண்டாயிற்று. ஷை இரண்டு பஸ்களும் ஒருவருக்கே சொந்தமானவை என்பதைக் காட்டிய விலாசம் இரண்டிலும் இருந்ததை அவர் பார்த்தாராதலால், எதிர் வண்டியில் வந்தவன் ஒரு கால் முதலாளியா யிருக்கலாமென்று நினைத்தார். அப்போது, வண்டியோட்டி பேசத்துடங்கி, "இவர்கள் இவ்வளவு முட்டாள்களென்பது இப்போதுதான் தெரிகிறது" என்றான். ராமநாதன் தந்திரமாகப் பேசத் துடங்கி, "இதெல்லாம் முதலாளிக்கு எப்படித் தெரியப் போகிறது. ட்ரைவரும் கண்டக்டரும் இப்படி நடு ரஸ்தாவில் வண்டியை விட்டு விட்டுப் போய்விடுவார்கள் என்று அவர் எதிர்பார்க்க வழியேயில்லை" என்றார். வண்டியோட்டி, "ஆமாம் ஸார். நான் அம்மாதிரி நினைக்கவேயில்லை. இது முன்பே தெரிந்திருந்தால் இவர்களை நான் வேலைக்குவைத்துக்கொண்டிருக்கவே மாட்டான்" என்றான். ராமநாதன், "நீங்கள் பேசும் விதத்திலிருந்து இந்த இரண்டு வண்டிகளும் உங்களுடையவை என்று விளங்குகிறது. அப்படித்தானே?" என்றார். வண்டியோட்டி, "இந்த இரண்டு வண்டிகள் மாத்திரமில்லை. இன்னும் இரண்டு வண்டிகள் எனக்கிருக்கின்றன" என்றான்.

அதைக் கேட்ட ராமநாதன், "நீங்கள் வருவதை அறிந்து, உங்கள் கண்ணில் படக்கூடாதென்று மறைந்து

விட்டார்களோ என்னவோ!" என்று கூறிவிட்டு, "அடேய் கைதீ, நட; நாம் போவோம்" என்றார்.

உடனே இருவரும் வண்டியை விட்டிறங்கி நடக்கத் தொடங்கினர்.

சொந்தக்காரன் கையமர்த்தி, "பொறுங்கள். நீங்களிருவரும் வண்டியில்தானே வந்தீர்கள்? நீங்கள் கொடுக்க வேண்டிய சில்லரையைக் கண்டக்டர் வாங்கிக்கொண்டானா இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லையே" என்றான்.

ராமநாதன் :—நீ பேசுவது வேடிக்கையா யிருக்கிறதே! நாங்களிருவரும் இந்த வண்டியில் வந்தோமென்று நானாவது இவனாவது சொல்லவே யில்லையே. அப்படியிருக்க நாங்கள் எதற்காகப் பணம் கொடுக்கவேண்டும்? நாங்கள் நடந்தல்லவா வந்தோம்.

வண்டிக்காரன் :— நீங்கள் வண்டியில் வந்தீர்களோ இல்லையோ. அந்த விஷயம் எனக்குத் தெரியாது. (சோமு முதலியைச் சுட்டிக் காட்டி) இவன் இப்போது வண்டியில் தானே உட்கார்ந்திருந்தான். நீங்கள் வண்டியில் வராமல் நடந்து வந்த வழிப்போக்கர்களா யிருந்தால் இந்த வண்டியில் இவன் ஏன் உட்கார்ந்திருந்தான்?

ராமநாதன் :— நாங்களிருவரும் ரஸ்தாவோடு வந்து கொண் டிருந்தோம். இங்கே குளமிருப்பதைப் பார்த்து தண்ணீர் குடித்தோம். வண்டியோட்டி இங்கே வண்டியை நிறுத்திவிட்டு, "நீங்கள் இருப்பீர்களா?" என்று விசாரித்தான். நாங்கள், எதற்காக அவன் அப்படி கேட்கிறானென்பதை யறியாமல் தலையை யசைத்தோம். அவனும் கண்டக்

டரும், "அப்படியானல் நாங்கள் அவசரமாய் வயல் பக்கம் போய் வருகிறோம். அதுவரையில் வண்டியைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டுப் போனார்கள். நான் உடனே, "நாங்கள் இங்கே அதிகநேரம் இருக்கமுடியாது. நீங்கள் சீக்கிரம் வராவிட்டால் நாங்கள் போய்விடுவோம்" என்றேன். அவர்கள் அதற்கு இணங்கிப் புறப்பட்டுப் போனார்கள். அவர்கள் வர நேரமாய்விட்டபடியாலும், வண்டியின் சொந்தக்காரனை நீயே வந்துவிட்டபடியாலும் நாங்கள் புறப்பட்டுப் போகிறோம்.

வண்டியோட்டி :— அப்படியானல் அவர்கள் போய் அதிக நேரமாய்விட்டதா ? அவர்கள் எந்த திக்கில் போனார்கள் ?

ராமநாதன் :—அவர்கள் போய் கால் மணி நேரமாகிறது. அதோ அந்தப் பக்கம் போனார்கள்— என்று கூறியபடி குளத்தின் எதிர்க்கரைப் பக்கம் கையைக் காட்டினன்.

அந்த திக்கில் பார்த்தபடி நின்ற வண்டிக்காரன் அவர்களைப் போக விடலாமா கூடாதா என்று எண்ணமிடலானன். அந்த நிலைமையில் அவனுக்கு சில விஷயங்கள் அசம்பாவிதமாகத் தோன்றின. எந்த ஊரும் அருகில் இல்லாததான அந்த இடத்தில் வண்டியை விட்டுவிட்டு டிரைவரும் கண்டக்டரும் போனது ஒன்று. இரண்டாவது ஒரு பிரயாணியைக்கூட ஏற்றிக்கொள்ளாமல் வண்டி காலியாக வந்திருந்தது.

ஆகையால் அவன் சற்று ஆலோசித்த பிறகு ஒருவித முடிவை யடைந்தவனாய், "டிரைவரும் கண்டக்டரும் வரட்

டும். அதற்குப் பிறகு நீங்கள் போகலாமே" என்றான். ராமநாதன் அதிகார தோரணையில், "அது முடியாத காரியம். நீயா எனக்கு உத்தரவிடுகிறது" என்று கூறிவிட்டு நடக்கலானான். சோமு முதலி பின்தொடர்ந்தான்; வண்டிக்காரன் விழித்துக்கொண்டு பேசாமல் நின்றான். ராமநாதனும் சோமு முதலியும் ரஸ்தாவிலேயே நெடுந்தூரம் சென்று மறைந்துபோயினர்.

வண்டிக்காரன் குளத்தின் எதிர்க்கரைப் பக்கம் பார்த்தபடி காத்திருந்தான். பஸ் இருந்த இடம் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தவுடன் ராமநாதன், "நம்முடைய வண்டியும் போய்விட்டது. இனிமேல் என்ன செய்வதென்பது தெரியவில்லை" என்றான். அதற்கு சோமு முதலி மறுமொழி கூறாமல் மௌனமாக அவருடன் நடந்தான்.

மேலும் சிறிதுதூரம் நடந்தபடி ராமநாதன் சோமு முதலியை நோக்கி, "நீ இப்படியே இருந்தால் உனக்கு அபாயம் நேருவது நிச்சயம். ஆகையால் உன் அடையாளத்தை யாரும் கண்டுகொள்ளாதபடி நீ உருமாறிவிட வேண்டும்" என்றான். சோமு முதலி, "எந்தமாதிரியாக மாறுகிறது? அதைச் சொல்லாமல் மாறவேண்டும், மாறவேண்டுமென்று திருப்பித் திருப்பிச் சொல்லுவதில் என்ன பலன்?" என்றான். ராமநாதன் சற்றுநேரம் வரையில் எண்ணமிட்டபடியே நடந்து, "எனக்கு ஒரு யுக்தி தோன்றுகிறது. நாம் ஒரு காரியம் செய்வோம். இந்த ரஸ்தா இன்னும் அரை மைலுக்கப்பால் மூன்றாகப் பிரிகிறது. நாம் இதே ரஸ்தாவில் போனால் யாராவது பின் தொடர்ந்து வந்தால், நம்மைப்

பிடித்துக்கொள்வார்கள். ஆகையால், கிளை ரஸ்தாக்களி லெதிலாவது புகுந்துவிடுவோம். பக்கத்தில் ஊர் இருந்தால் ஊருக்கு வெளியில் தூரத்திலேயே ஓர் இடத்தில் உன்னை உட்கார வைத்துவிட்டு நான்மாத்திரம் அந்த ஊருக்குள் போய் உனக்கு ஒரு ஷர்ட்டும், ஒரு தலைப்பாகைத் துணியும் சம்பாதிக்கிறேன். நீ இடுப்புத் துணியோடு இருப்பது எல்லோரும் உன்னை கவனிக்க இடமேற்படுகிறது. ஷர்ட்டைப் போட்டுக்கொண்டு தலைப்பாகையைக் கட்டிக்கொண்டால், அப்போது உன் அடையாளம் தெரியாது" என்றான். சோமு முதலி அதை ஆமோதித்தான்.

பத்து நிமிஷங்களுக்குப் பிறகு, ரஸ்தா மூன்றாய்ப் பிரிந்த இடம் வந்தது. வலது பக்கத்தில் சென்ற ஒரு கிளையில் அவர்கள் விசையாகச் சென்று மறைந்துவிட்டனர்.

இது நிற்க, சோமு முதலியின் வீட்டில் நுழைந்த சமயசஞ்சீவி உட்புறத்தை ஆராய்ந்து பார்த்ததில், சோமு முதலி காணப்படவில்லை யாகையால், அவர் அந்த வீட்டிற்கும், பொன்னுசாமி பிள்ளையின் வீட்டிற்கு மிடையிலிருந்த சுவரைப் பார்த்துவிட்டு, அதன் வழியாகவே சோமு முதலி அப்பால் போயிருக்க வேண்டுமென்று அநுமானித்துக் கொண்டு பொன்னுசாமி பிள்ளையுடன் சுவரின்மேலேறி அப்பாலிறங்கி, அவனுடைய வீட்டிற்குள் சென்று பார்க்க, அந்த வீட்டின் தெருக்கதவு வெளிப்புறத்தில் பூட்டப்பட்டிருந்ததானாலும், குப்பைக்காரி கக்கூஸிற்கு வருவதற்காக வைக்கப்பட்டிருந்த ஒரு கதவு திறந்திருந்ததைக் கண்டு அதன் வழியாகவே சோமு முதலி தெருவிற்குப் போயிருக்க

வேண்டுமென்று அறிந்துகொண்டு, அந்த வழியாகத் தெருவைப் பார்க்க, தெருவில் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் சோமு முதலி காணப்படவில்லை. ஆகையால் பொன்னுசாமியைத் தெருவிற்கு அனுப்பி, சோமு முதலியைத் தேடும்படி செய்துவிட்டு அவர் கதவை மூடிக்கொண்டு சுவரிலேறிக் குதித்து சோமு முதலியின் வீட்டையடைந்தார்.

அந்த வீட்டை சோதனை போட்டதில் அந்த வழக்கிற்கு உபயோகப்படக் கூடிய பல கடிதங்கள் அகப்பட்டன. அவர் அவைகளை எடுத்துக்கொண்டு தெருக்கதவை இடிக்க, தெருவில் நின்றுகொண்டிருந்த ஜெவான் கதவைத் திறந்தான். உடனே சமயசஞ்சீவி வெளியில் வந்தார். அவர் ஜெவானைப் பார்த்ததும் வியப்புடன், "உன்னைப் பக்கத்து வீட்டி லல்லவா காவலிருக்கச் சொன்னேன். நீ இங்கே எதற்காக வந்தாய்? ராமநாதனைத் தனியாகவா விட்டுவிட்டு வந்தாய்? அவன் இந்நேரம் ஓடிப்போய்விட்டானோ என்னவோ தெரியவில்லையே!" என்றார். ஜெவான் உடனே, "இல்லை ஸார்; 634 இங்கேயே இருந்தானல்லவா. அவனால் கூட்டங்களை சமாளிக்க முடியாது. இங்கே கூட்டம் கூடியிருப்பதைப் பார்த்தவுடன், அவனை அங்கே நிறுத்திவிட்டு நான் இங்கே வந்தேன்" என்றான்.

அதைக் கேட்ட சமயசஞ்சீவிக்கு மூச்சு நன்றாக வந்தது. அங்கேயே காவல் காத்திருக்கும்படி அவர் அவனிடம் கூறிவிட்டு ராமநாதனுடைய வீட்டிற்குள் சென்று பார்க்க, அங்கு எவரும் காணப்படவில்லை. அவர் வியப்படைந்தவராய் ராமநாதன் அடைக்கப்பட்டிருந்த அறை

யைப் பார்க்க, அது வெளிப்புறம் ஒரு பூட்டினல் பூட்டப் பட்டிருந்தது. ஜெவான் கதவைப் பூட்டிக்கொண்டு எங்கே யாவது போயிருப்பான் என்று அவர் தமக்குத்தாமே சமா தானம் செய்துகொண்டார். அப்போது தற்செயலாய் அவ ருடைய பார்வை வாசற்படியின் மேல்பக்கத்திலிருந்த நாதாங் கியில் தொங்கிக்கொண்டிருந்த சங்கிலியில் சென்றது. அவர் உடனே திடுக்கிட்டார். ஏனெனில் சங்கிலி கதவோடு சம் பந்தப்படாமல் விலகி நின்றது.

ஜெவான் கதவைப் பூட்டிக்கொண்டு போன பிறகு ராமநாதன் அதைத் திறந்திருக்க முடியாதாகையால் அதற்கு முன்பே திறந்திருப்பானென்று நினைத்தார். உள்ளே ராம நாதன் அப்போது இருந்தானு இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள எண்ணி கதவில் காணப்பட்ட இடுக்கின் வழியாக உட்புறத்தை கவனித்தார். உட்புறத்தில் யாரோ ஒருவர் தரையில் படுத்திருந்தது தெரிந்தது. அதைக் கண்டவுடன், ராமநாதன் விஷத்தைத் தின்று தற்கொலை செய்துகொண்டிருப்பானேவென்று எண்ணியபடி, அந்த மனிதனை உற்றுப் பார்க்க, அவன் ராமநாதனுய்க் காணப்பட வில்லை. ஆனல் அந்த மனிதன் யார் என்பது மாத்திரம் தெரியவில்லை. ஏனெனில் அந்த மனிதனுடைய முகம் கதவிற்கு எதிர்ப்புறத்தில் திரும்பியிருந்தது. அந்த வாசற் படியைத் தவிர அந்த அறைக்குள் செல்ல, வேறு வழி ஏதுவுமில்லை யென்பதை, அவர் அந்த வீட்டிற்கு பல தடவைகள் வந்து பார்த்ததனல் அறிந்திருந்தா ராதலால் ராமநாதனைத் தவிர இன்னெருமனிதர் எப்படி வந்திருப்பா ரென்று யோசித்தார். வேறொரு மனிதர் உள்ளே கிடந்த

தாலும், சங்கிலி அம்மாதிரி தொங்கிக்கொண்டிருந்ததாலும் அங்கே ஏதோ ஒரு விநோதமான காரியம் நடந்திருக்க வேண்டுமென்பது நன்றாக விளங்கியது. ராமநாதன் கதவி லிருந்த சங்கிலியைப் பிரித்துவிட்டு வெளியில் வந்து வேறு யாரையோ உள்ளே தள்ளி மூடியிருக்க வேண்டுமென்று உடனே அநுமானித்துக்கொண்டு அந்தக் கதவைத் திறக்க என்ன ஏற்பாடு செய்யலாமென்று அவர் யோசித்தார்.

கதவின் நடுவில் ஒரு நாதாங்கியில் ஒரு வளையம் மாட்டப்பட்டு பூட்டப்பட்டிருந்ததாகையால் ஒரு கடப்பாரையை நாதாங்கியினுள் கொடுத்து நெம்பினால் அது கதவை விட்டு வந்துவிடுமென்று உடனே முடிவு செய்துகொண்டு அந்த வீட்டினுள் கடப்பாரை ஏதாவது இருக்கிறதா என்று அவர் தேடிப் பார்த்தார்; நல்ல வேளையாக ஒன்று அகப்படவே, அதை உபயோகப்படுத்திக் கதவைத் திறந்துவிட்டு உள்ளே சென்று பார்த்தார். உள்ளே தரையில் ஜெவான் கைவிலங்குடன் கிடந்ததைப் பார்த்து விலங்கைத் தம்மிடமிருந்த சாவியால் கழற்றிவிட்டு கால்கட்டு முதலியவைகளை அவிழ்த்துவிட்டு அந்த அறையினுள் ஜெவானுடைய உடுப்புகளிருக்கின்றனவா வென்று பார்த்தார். ஏற்கனவே கடப்பாரைக்காக அவர் வீடு முழுதும் தேடினபோது ஜெவானுடைய உடுப்பு எங்கும் காணப்படவில்லையாகையால், அது அப்போது அங்கில்லை யென்பதையும், அதை ராமநாதன் அணிந்துகொண்டு தப்பித்துப் போயிருக்க வேண்டுமென்றும் யூகித்துக்கொண்டு ஜெவானுடைய மயக்கத்தைத் தெளிய வைத்தார்.

அவன் தெளிவடைந்தவுடன், நடந்த விஷயங்களை அவரிடம் கூறினான். அடுத்த வீட்டில் அப்போது காவல்

காத்துக்கொண்டு நின்ற ஜெவான் அஜாக்கிரதையாக அந்த இடத்தை விட்டுவிட்டுப் போனதனுலேயே அந்த மோசம் நடந்துவிட்ட தென்பதை யறிந்துகொண்டா ராஞலும் அவர் அதைப்பற்றி பிரஸ்தாபம் செய்யாமல் அவனை அந்த வீட்டிற்குக் காவல் வைத்தபிறகு தெருவை யடைந்து அங்கிருந்த பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், கந்தசாமி பிள்ளை, டாக்டர், மகம்மதிய ஸப்-இன்ஸ்பெக்டர் முதலியோரைப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் காத்திருக்கும்படி அனுப்பி விட்டு, ராமநாதனுடைய வண்டியோட்டியை நோக்கி, "ஏனப்பா! மோட்டார் புறப்பட்டுப் போகத் தயாராயிருக்க வேண்டுமென்று ராமநாதன் சொன்னனே! இந்த ஊரை விட்டு ஓடிவிடவேண்டு மென்பதுதானே அவனுடைய உத்தேசம்?" என்றார். வண்டியோட்டி, "ஆம்" என்றான். உடனே சமயசஞ்சீவி தெருவிலிருந்த ராமநாதனுடைய மோட்டாரை யடைந்து, ஏற்கனவே அதிலிருந்து வெட்டி எடுத்து அதுவரையில் தமது சட்டைப்பையில் வைத்திருந்த இக்னீஷன் கம்பியை சாமர்த்தியமாய் மறுபடி சேர்த்து விட்டு, "நீ வண்டியிலேறி எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொள்" என்றார். வண்டியோட்டி அவருக்கருகில் முன் புறத்தில் உட்கார்ந்துகொள்ளவே, அவர் அதைப் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி விட்டுக்கொண்டு சென்று, வண்டியையும், வண்டியோட்டியையும் ஸ்டேஷனிலிருந்த ஜெவான்களிடம் ஒப்புவித்த பிறகு தமது மோட்டார் சைக்கிளிலேறிக் கொண்டு, ராமநாதனுடைய வீடிருந்த தெருவு, அதற்கடுத்தாற்போல இரண்டு பக்கங்களிலும் இருந்த நாலைந்து தெருவுகள் ஆகியவற்றின் வழியாக வண்டியை விட்டுக்கொண்டு

சென்று, ராமநாதனாவது சோமு முதலியாவது காணப்படு கின்றனராவென்று பார்க்க, அவர்கள் எங்கும் காணப்பட வில்லை; ஆனால் ஒரு தெருவில் பொன்னுசாமி பிள்ளை நின்ற தைக் கண்டு அவர் அவனை வண்டியில் ஏற்றிக்கொண்டார். அவன், தன் கண்களிலும் அவர்கள் படவில்லையென்று கூறவே, ஸப்-இன்ஸ்பெக்டர் உடனே பஸ்கள் நின்ற இடத்தை யடைந்து, ஒரு போலீஸ் ஜெவானாவது அல்லது வேறொரு மனிதனாவது (சோமு முதலியின் அடையா ளத்தைக் கூறி) வண்டியில் சென்றார்களா வென்று அங் கிருந்த வண்டிக்காரர்களிடம் விசாரிக்க, அங்கிருந்த ஒரு காவர்காரன் நிகழ்ந்த விஷயத்தைக் கூறினான்.

அதைக் கேட்க, அவர் ராமநாதனும், சோமு முதலி யும் எப்படியோ சந்தித்து வண்டியில் ஏறிக்கொண்டு போய் விட்டதாய் யூகித்துக்கொண்டு பஸ் சென்ற வழியைக் கேட் டுக்கொண்டு, அதே வழியில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் செல்லலானார்.

சென்றவர் ஊரைக்கடந்து சிறிதுதூரம் போக, ரஸ் தாவில் காணப்பட்ட ஒரு மனிதன் கையமர்த்தி, வண்டியை நிறுத்தும்படி சைகை செய்ய, அவர் வண்டியை நிறுத்தி, “ என்ன சங்கதி ?” என்றார்.

மற்றவன் :— ஒன்றுமில்லை.

சமயசஞ்சீவி :— அப்படியானால் எதற்காக வண்டியை நிறுத்தச் சொன்னாய் ?

மற்றவன் :— ஒன்றுமில்லை. சற்றுமுன்பு ஒரு ஜெவான் ஒரு பஸ்ஸை ஓட்டிக்கொண்டு போனான். அவன் அதை என்

கோழியின்மேல் ஏற்றிவிட்டான். வண்டியை நிறுத்தும்படி நான் சொன்னேன். அவன் ஒரு பெட்ரோல் டப்பாவை எடுத்து, என்மேல் அடித்துவிட்டுப் போய்விட்டான். நான் பிரியாது கொடுப்பதற்கு உங்களிடம் வந்துகொண் டிருக்கிறேன். நீங்களே நல்ல வேளையாக இந்தப் பக்கம் வந்தீர்கள். இதோ பார்த்தீர்களா? இந்த டப்பாவைத்தான் என்மேல் எறிந்தான் — என்றான். உடனே சமயசஞ்சீவி, "சரி. நீ போய் ஸ்டேஷனில் இரு. நான் இப்போது அவசரமாய் ஓர் இடத்திற்குப் போகிறேன். திரும்பி வந்து விசாரிக்கிறேன்" என்று கூறிவிட்டு வண்டியை ஓட்டினர்.

உடனே பொன்னுசாமி பிள்ளை, "ராமநாதன்தான் வண்டியோட்டுகிறான்போ லிருக்கிறது!" என்றான்.

சமயசஞ்சீவி:—"ஆம். அதுதான் நன்றாய்த் தெரிகிறதே!" என்றார். சிறிது நேரத்திற்குப் பிறகு அவர்கள் இரண்டு பஸ்கள் நிறுத்தப்பட்டிருந்த குளக்கரையை யடைந்து மோட்டார் சைக்கிளை நிறுத்தி அங்கே காணப்பட்ட வண்டியோட்டியைப் போலிருந்த ஒருவனிடம், "ஏனப்பா! இந்த வழியாக சற்றுமுன்பு ஒரு பஸ் வந்ததா?" என்றனர்.

வண்டியோட்டி:—(அருகில் நின்ற வண்டியை சுட்டிக் காட்டிவிட்டு) இந்த வண்டிதான் வந்திருக்கிறது. இதைத் தவிர வேறு எதுவும் வரவில்லை. என்?

சமயசஞ்சீவி:—இதுவா வந்தது? அப்படியானல் இந்த வண்டியில் ஒரு ஜவானும் இன்னொரு ஆளும் வந்தார்களே! அவர்களை நீ பார்த்தாயா?

வண்டியோட்டி :— (வியப்புடன்) அவர்களிருவரும் இந்த வண்டியிலா வந்தார்கள்! வண்டியிலேயே வரவில்லையென்றும், தாங்கள் நடந்தே வந்ததாகவு மல்லவா சொன்னார்கள். அவர்கள் போய் கால் மணி நேரம் ஆகிறதே!

சமயசஞ்சீவி :— (இரண்டு வண்டிகளுக்கும் அவன் சொந்தக்கார னென்பதை யறிவாராதலால் உடனே) அவர்கள் இந்த பஸ்ஸை இங்கே விட்டுவிட்டுப் போகவேண்டிய காரணமென்ன?—என்றார்.

வண்டியின் சொந்தக்காரன் நடந்த விஷயங்களைக் கூறினன். அதை கேட்டுக்கொண்ட சமயசஞ்சீவி, "சரி; நீ வயல் பக்கம் போய்த் தேடிப்பார்" என்று கூறிவிட்டுத் தமது வண்டியை ஓட்டிக்கொண்டு ரஸ்தாவோடு சென்று சிறிது நேரத்தில் கிளைப்பாதைகள் இருந்த இடத்தை யடைந்தார். அப்போது அங்கே எவரும் காணப்படவில்லை யாதலால், ராமநாதனும், சோமு முதலியும் எந்த வழியில் சென்றனர் என்பதையவர்கள் அறிய முடியவில்லை. ஆனல் சமயசஞ்சீவி ஐயர் கவலைப்படாமல், பொன்னுசாமி பிள்ளையை நோக்கி, "எந்த வழியில் போயிருப்பார்கள் சொல் பார்க்கலாம்?" என்றார்.

பொன்னுசாமி :— (சற்று யோசித்தபிறகு) பெரிய ரஸ்தாவிலேயோ போக அஞ்சி வலதுகிளைப் பாதையிலாவது, இடது கிளைப் பாதையிலாவது போயிருக்கலாம். ஆகையால் நீங்கள் ஒரு கிளையிலும், நான் ஒரு கிளையிலும் போவோமானல் அவர்கள் அகப்பட்டுவிடுவார்கள்.

சமயசஞ்சீவி :—(புன் சிரிப்புடன்) நீ சொன்ன வரையில் சரியே. ஆனல், இன்னம் அதிக புத்திசாலித்தன

மாய் நாம் ஒரு காரியம் செய்யலாம். அது உன் புத்திக்கு எட்டவில்லையே—என்ருர்.

பொன்னுசாமி பிள்ளை அவருடைய முகத்தைப் பார்த்தான்.

சமயசஞ்சீவி மறுபடியும் பேசத்துடங்கி, “ அவர்களிருவரில் எந்த காரியங்களுக்கும் முன் நிற்பவன் ராமநாத னல்லவா ?” என்ருர்.

பொன்னுசாமி பிள்ளை :— ஆம். அது தெரிந்தது தானே.

சமயசஞ்சீவி :—அது தெரிந்திருந்தும், உன்னால் அவர்கள் எந்த ரஸ்தாவில் சென்றிருக்க வேண்டு மென்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லையே! ராமநாதன் எதற்கும் சாதாரணமாய் எந்தக் கையை அதிகமாய் உபயோகப் படுத்துவான் ?

பொன்னுசாமிப் பிள்ளை :—வலது கையைத்தான் உபயோகப் படுத்துவான்.

சமயசஞ்சீவி :—இந்தமாதிரி சந்தர்ப்பங்களில் வலது கையை உபயோகிப்பவர் வலது பக்கத்திலும், இடதுகையை உபயோகிப்பவர் இடது பக்கத்திலும் திரும்ப உத்தேசிப்பார்கள். ஏனெனில் இந்த சமயத்தில் வலது பக்கமோ இடது பக்கமோ அவரவருடைய பழக்கப்படி உடம்பு தானுகவே திரும்பும்; மனதும் அதை ஆமோதிக்கும். இதை துப்

பறிய உபயோகப்படுத்தும் ஒரு யுக்தியாக வைத்துக்கொள். வேண்டுமானல் இன்னேர் உதாரணம் சொல்லுகிறேன். ஒருவனைக் கண்ணை மூடிக்கொள்ளச் சொல்லிவிட்டு, தன்னுடைய கையாலேயே ஒரு கண்ணைத் தொடும்படி சொல். அவன் வலது கையை உபயோகப்படுத்துகிறவனு யிருந்தால் வலது கண்ணையும், இடது கையை உபயோகிக்கக்கூடியவனு யிருந்தால் இடது கண்ணையும் உடனே தொடுவான். ஏனெனில் அவரவர்களுடைய பழக்க மெதுவோ அதேபோல வலது பக்கமோ இடது பக்கமோ அவசர சமயங்களில் மனதில் தோன்றுகிறது.

பொன்னுசாமி பிள்ளை :—அப்படியானல் நாமிருவரும் வலது பக்கத்திலிருக்கும் ரஸ்தாவிற்குப் போவோம்—என்றார். உடனே சமயசஞ்சீவி சந்தோஷ முகமலர்ச்சியுடன் வலது கிளைப்பாதையில் மோட்டார் சைக்கிளை விடுத்தார்.

இது நிற்க முன்னல் சென்றுகொண் டிருந்த ராமநாதனும், சோமு முதலியும் சிறிது நேரத்தில் எதிரிலிருந்த ஊரை யடைந்தனர். ராமநாதன் சோமு முதலியை வழியில் இருந்த ஒரு மரத்தினடியில் உட்கார வைத்துவிட்டு, ஊரை நோக்கிச் சென்றன். சென்றவன் பணம் இல்லாமல் ஷர்ட்டு முதலியவைகளை எப்படி வாங்குவது என்று யோசிக்கலானன். அப்போது அவனுக்கு ஒரு யுக்தி தோன்றியது. அவனுடைய கையில் ஒரு மோதிரமிருந்தது. அதை விற்று அந்தப் பணத்தைக் கொண்டு ஷர்ட்டு முதலியவைகளை வாங்கவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு

தட்டாருடைய வீடுகள் இருந்த இடத்திற்குச் சென்றான். அது பட்டிக்காட்டு ஊராதலால், அங்கு தட்டார் வீடுகளோ, ஜவுளிக்கடையோ காணப்படவில்லை. ஆகையால் என்ன செய்வதென்பதை யறியாமல் ராமநாதன் யோசனை செய்யலானான். ஒரு வண்டியை யமர்த்திக்கொண்டு அந்த ஊரைவிட்டு அப்பால் போய் வேறோர் ஊரில் மோதிரத்தை விற்று, வண்டிக்காரனுக்குக் கூலி கொடுத்துவிடலாமென்று தீர்மானித்துக்கொண்டு, அவன் வண்டி அகப்படுமாவென்று விசாரித்தான். ஒரு குடியானவனிடம் கட்டை வண்டியொன்றிருந்த தென்பதும், அதனுடைய கடையாணிகளில் ஒன்று ஒடிந்துவிட்டதனால் அந்த ஊரிலிருக்கும் ஒரு கொல்லனிடம் அதைச் செய்யக் கொடுத்திருப்பதாகவும், அதை வாங்கப் பணமில்லாம லிருப்பதால் ராமநாதன் பணம் கொடுத்து அதை வாங்கிக் கொடுத்தால் வண்டியை விடுவானென்பதும் தெரியவே, அவர் உடனே குடியானவனுடைய வீட்டிற்குச் சென்று, வண்டியில் ஆணிக்கு பதிலாக ஒரு குச்சியைப் போட்டுக்கொண்டு வண்டியை விடும்படியாயும், தாங்கள் போகவேண்டிய இடத்திற்குப் போனவுடன் கூலியோடு இன்னும் கொஞ்சம் பணம் அதிகமாய்ச் சேர்த்துக்கொடுப்பதாயும் கூற, அவன் அதற்கு ஒப்புக்கொண்டு வண்டியை வீட்டின் முன் புறத்தில் கொண்டுவந்து நிறுத்திவிட்டு ஒருமூளைசிவி கடையாணிக்கு பதில் போட்டான். அது இரட்டைமாட்டு வண்டியாகையால் அவன் இரண்டு மாடுகள் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யலானான். அவனுடைய மாடுகளிரண்டும் அன்றையதினம் காலையில் ஏர் உழுவதற்காகப்

போய்விட்டனவாகையால் அடுத்த வீட்டிலிருந்த ஒரு காளை மாட்டை அவர்களிடம் வெகு நேரம் கெஞ்சிப் பல்லைக் காட்டி வாங்கி வந்தான். அதன் பிறகு இன்னொரு மாட்டைத்தேட வாரம்பித்தான். ஊரிலிருந்த மாடுகளெல்லாம் வயல்களுக்குப் போயிருந்தமையால் அவனுக்கு வேறெங்கேயும் காளைமாடு அகப்பட வில்லை யானாலும் ஒரு வீட்டிலிருந்த ஓர் எருமைக்கடாவைக் கண்டுபிடித்து, அதைக் கொண்டுவந்து சேர்த்தான். காளைமாடும், எருமைக் கடாவும் வண்டியில் பூட்டப்பட்டன. அந்த விநோத வண்டியைக் கண்ட ராமநாதன், "ஏனப்பா! இந்த ஊரில் ஒரு வண்டி மாட்டுக்குக்கூட பஞ்சமாய்விட்டதா! இன்னொரு காளைமாடு அகப்படவில்லையா ?" என்றார். குடியானவன், "மாடுங்க வயலுக்கு போயிருக்குதுங்க. இல்லாட்டி இப்பிடி ஊடோ தூந்து நானு இன்னைத்துக்கு மாடுதேடப் போறேனுங்க. நம்புளுக்கு ரெண்டுமாடு இருக்குதுங்க. அப்பிடி மாட்டுக்குப் பஞ்சம் வந்துடல்லீங்க" என்றான். ராமநாதன், "என்னுடைய சிநேகிதர் இன்னொருவர் இருக்கிறார். அவர் ஊருக்கு வெளியில் இருக்கிறார். அவரையும் நான் அழைத்து வருகிறேன். வண்டியை இங்கேயே நிறுத்திவை" என்று கூறிவிட்டு சோமு முதலியிடம் வந்து, "நான் ஷர்ட்டு முதலியவை வாங்க முடியாவிட்டாலும் ஒரு வண்டியை அமர்த்தி வைத்துவிட்டு வந்திருக்கிறேன். அதிலேறிக்கொண்டு நாம் போவோம். வேறு பெரிய ஊர் எதிலாவது தான் துணிகள் வாங்கவேண்டும். ஏனென்றால், இந்த ஊரில் கடைகளும் இல்லை, நம்மிடம்

பணமும் கிடையாது" என்றான். சோமு முதலி எழுந்திருந்து அவனோடு நடக்கலானான். இருவரும் ஊரையடைந்து குடியானவனுடைய வீட்டினருகில் சென்று பார்க்க, குடியானவன் காணப்படவில்லை. அவன் வீட்டிற்குள் இருந்தானா என்று விசாரிக்க சிலர் உள்ளே சென்றார்கள். அப்போது குடியானவன் உட்புறத்தில் கூழ் குடித்துக்கொண் டிருந்தானென்பது தெரியவே, எல்லோரும் வெளியிலேயே நின்று குடியானவனுடைய வருகையை எதிர்பார்த்துக்கொண் டிருந்தனர்.

அப்போது அங்கு குடியானவனுடைய மனைவி வந்தாளாதலால், அவள் அவர்கள் நின்றதைப் பார்த்துவிட்டு, "ஏஞ்சாமீ நிக்கிறீங்க? உள்ளற வந்து குந்துங்களேன்" என்றாள். உடனே ராமநாதனும் சோமு முதலியும் வீட்டின் முன்புறத் திண்ணையில் சோளத்தட்டைகளும், புல்லும் வைக்கப்பட்டிருந்தன வாகையால், உட்காருவதற்காக வீட்டிற்குள் சென்று, உட்புறத்தில் குடியானவ ஸ்திரீ கொண்டுவந்து போட்ட ஒரு பனைஓலைத் தடுக்கில் உட்கார்ந்துகொண்டு காத்திருந்தனர். சுமார் கால்மணி நேரம் சென்றது.

அதே சமயத்தில் தெருப்பக்கத்தி லிருந்து யாரோ தப தபவென்று வரவே, அவர்களிருவரும் கவனித்தனர். அவர்கள் தங்களுக்கு நேரவிருக்கும் அபாயத்தை உணருமுன் சப்-இன்ஸ்பெக்டர் சமயசஞ்சீவி ராமநாதனையும், பொன்னுசாமி சோமு முதலியையும் பிடித்துக்கொண்ட

னர். உடனே இருவருக்கும் விலங்குகள் மாட்டப் பட்டன. அந்த ஊருக்கு வந்தவுடன் சமயசஞ்சீவி ஊரிலுள்ளவர்களிடம் அவர்கள் இருந்த இடத்தைத் தெரிந்து கொண்டார். ஊராரில் சிலர் அவரை அந்த வீட்டிற்கு அழைத்து வந்தனர். போலீஸார் இருவரும் விலங்குகளை மாட்டவே, அவர்கள் திமிறினாலும் அந்த ஊர் ஜனங்களும் அவர்களுடைய உதவிக்கு வந்து சேர்ந்தனர். சிறிது நேரத்திற்குப் பிறகு கைதிகள் இருவரும் அதே கட்டைவண்டியில் வைக்கப்பட்டு ஊருக்குத் திரும்பி வந்தனர். அவர்களோடு மோட்டார் சைக்கிளில் வண்டியை மெதுவாக விட்டபடி போலீசார் தொடர்ந்துவந்தனர்; வந்து போலீஸ் ஸ்டேஷனை அடைய, அங்கு பஸ்ஓட்டி, கண்டக்டர், முதலாளி முதலிய பலர் ஏற்கனவே வந்திருந்தனர். போலீஸார் அவர்களிடம் வாக்குமூலம் வாங்கிக் கொண்டனர். சில நாட்களுக்குப் பிறகு அந்த கேஸ் விசாரிக்கப்பட்டது. ராமநாதன் சோமு முதலி ஆகிய இருவர்மீதும் பல குற்றங்கள் சுமத்தப்பட்டன. பெரிய குற்றங்களுடன் பல சில்லரைக் குற்றங்களும் துணையாகச் சேர்ந்துகொண்டன. குற்றவாளிகளிருவருக்கும் தகுந்த தண்டனை கிடைத்தது. நீதிபதி சமயசஞ்சீவி ஐயரும், பொன்னுசாமி பிள்ளையும் செய்த சாமர்த்திய காரியங்களை மெச்சி அவர்களுக்கு உத்தியோக உயர்வு கிடைக்கும்படி தமது தீர்ப்பில் சிபார்சு செய்தார்.

ராமநாதன், சோமு முதலி ஆகியவர்களுடைய சொத்துகள் ஏலம் போடப்பட்டு, கந்தசாமிப் பிள்ளைக்குச் சேரவேண்டிய பணத்திற்கு ஈடுசெய்யப் பட்டன.

கிழவிக்கு நன்றாகக் கண் தெரிந்தது. சபேசனுக்கும் காயங்க ளாறிவிட்டன. சமயசஞ்சீவிக்கு ஸர்க்கில் இன்ஸ்பெக்டர் உத்தியோகமும், பொன்னுசாமி பிள்ளைக்கு சப்-இன்ஸ்பெக்டர் உத்தியோகமும் கிடைத்திருப்பதாக வதந்தி உலாவுகிறது. பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் தமது தந்தையுடன் தமது சொந்த வீட்டில் இருந்து வருகிறார். கந்தசாமிப் பிள்ளை தமது கடைசி காலத்தைத் தமது பிள்ளையுடன் ஆநந்தமாய்க் கழித்து வருகிறார்.

முற்றிற்று